ஐயரவர்களின் ஆசியின்பலமும், அடியேனுக்கு ஞானாசிரியரான உரையாசிரியச்சக்கரவர்த்தி ஸ்ரீ.உ.வே. வை மு. கோபாலகிருஷ்ண மாசாரியர் ஸ்வாமி அவர்களின் அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரைஎழுதத்துணிந்தேன்.

இந்தப்பருவங்களினுரையில் பலஅரியவிடயங்கள், இலக்கண நுணுக்கங்கள், உரைவிசேடங்கள், கதைக்குறிப்புக்கள் முதலியன காட்டியுள்ளேன். மற்றும் பயில்வோர்க்குப்பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் முதலிரண்டு பருவங்கட்கு அபிதானசூசிகையகராதி, அரும்பதவகராதிமுதலியன, செய்யுண்முதற்குறிப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய விஜய் பிரிண்ட் ஸர்விஸெஸ் அச்சகத்தார்க்கும், அடியனை இந்நற்பணியிற்கூவி யேவல் கொண்ட ஸ்ரீ. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும் என்றும் நன்றியறிதலுடையேன்.

திருமகள்கொழுநனுன திருமால் தனதுசரிதையாகிய இப் பாரதத்தில் அடியேனுக்கு மனம்பதியுமாறுசெய்து இந்நூலின் இந்த ஐந்து பருவங்கட்கும் நல்லுரைவெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத் தோன்றுத்துணையாய்நின்று உதவிய கருணைத்திறத் திலீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

"அண்ட முறநிமிர்ந்த ஆயன்றன் சீர்பாதம்
கண்டு தொழுவார் கருத்ததனின் - மிண்டி
அடர்ந்தவினை தீர்த்தங் கதன்பின்னே சொர்க்கந்
தொடர்ந்தடைவார் நெஞ்சே தொழு".

அக்ஷய ஞூ
மார்கழி மீ
26-12-1986

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசார்யர்
உரையாசிரியர் - பதிப்பாசிரியர்.

பதினேன்காவது

# அசுவமேத பருவம்.

தருமன் தனக்கேற்பட்ட பாவத்தை விலக்கும் விதத்தைக் கேட்க, வியாசபகவான் சொற்படி பாவங்களைப் போக்கிக்கொள்ள அசுவமேதயாகஞ் செய்ததைக்கூறும்பருவம் இது. இந்தப் பருவத்தை அமிருதத்திற்கு ஒப்பான பழரஸம் என்பர். - அசுவமேதம் - குதிரையைக்கொண்டு செய்யும் யாகம்: Horse-sacrifice. இது ஓராண்டு நிகழ்த்த வேண்டிய வேள்வியென்ப. இப்பருவம் ஐந்துசருக்கங்களைக்கொண்டது, அவையாவன:- (1)மருத்துயாகச் சருக்கம், (2) பரீட்சித்துற்பவ சருக்கம் (3) பரிவலம்வந்த சருக்கம் (4) வேள்விச் சருக்கம் (5) நகுலோபாக்கியான சருக்கம் என்பன. அவற்றுள்

முதலாவது

## மருத்துயாகச் சருக்கம்.

மருத்தன் என்னும் மன்னன் யாகஞ்செய்ததைக் கூறும் சருக்கம் என்பது பொருள். இந்த மருத்தராஜன் மனுவமிசத்தில் பிரசித்திபெற்ற கரந்தமனென்பவனுக்கு மகனான அவிக்ஷித் என்பவனுடைய புத்திரன், இவன்செய்த யாகத்தில் மிஞ்சிய பொருளைக்கொண்டுவரச்சொல்லி வியாசர் தருமனை அசுவமேதம் செய்யச் சொன்னார். மருத்து - மருத்தன் என்பதன் குறுக்கல்.

வேறு.

**1. தெய்வவணக்கம் - கிருஷ்ணஸ்துதி.**

கவள வாரண முறுந்துதிக் கையும்வெண் கோட்டுத்
தவள வாரணத் தலைவன்சேய் தளர்வுமா தரிப்பான்
பவள வாரணக் குருதிபாய்க் களனிடைப் பகைஞர்
துவள வாரணந் தொனித்தரு டோன்றலைத் துதிப்பாம்.



டாக்டர் ஐயரவர்கள்
**1855 - 1942**

(இ-ள்) கவளம் வாரணம் - சோற்றுத் திரளையையுண்ணும் யானைகஜேந்திரன், உறும் - பட்டதுன்பத்தால் செய்த, துதிக்கையும் - தொழுகையையும், வெண்கோட்டு - வெள்ளிய தந்தங்களைக்கொண்ட, தவள வாரணம் - வெள்ளையானையாகிய ஐராவதத்தின், தலைவன் - யஜமானனாகிய இந்திரனின், சேய் - மகனாகிய அருச்சுனனின், தளர்வும் - சோர்வினையும், ஆதரிப்பான் - தான் ஏற்று ரட்சித்தவனும், பவளம் வாரணம் - சிவந்த கடல் போல, குருதி பாய் - இரத்தம் பெருகப்பெற்று அலைபாய்கின்ற, களனிடை - குருக்ஷேத்திரப்போரிடத்து, பகைஞர் துவள - பகைவராகிய கௌரவர் வாடும்படி, வாரணம் - தனது (பாஞ்சசன்னியம் என்னும்) சங்கினை, தொனித்தருள் - (ஊதிப்) பேரொலிசெய்த, தோன்றலை - ஆடவரிற்சிறந்தவனும் ஆகிய கிருஷ்ணனை, துதிப்பாம் - போற்றுவோம்; (எ.று.)

''தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே'' என்றார் நம்மாழ்வாரும் (திருவாய் : 3-1-9) துதிக்கை - தொழுதல்; தொழிற்பெயர். துதிக்கை ஆதரித்தலாவது - தொழுததையேற்று ரட்சித்தல். தளர்வு ஆதரித்தலாவது - சோர்வினையேற்றுப்போக்கி ரட்சித்தல், கஜேந்திரன் உற்றதுயர் - முதலைவாயிடைப்பட்டு அழுங்கியமை. துதித்தது - ஆதிமூலமே! 'என்று கூப்பிட்டுத் தொழுதது. அருச்சுனன் தளர்வு - போர் தொடங்குமுன் ஏற்பட்ட சோகம். சங்கினைத் தொனித்தருள்தோன்றல் என்றவிடத்து ''பாரதத்துக் கந்தார்களிற்றுக்கழல்மன்னர்கலங்கச்சங்கம் வாய் வைத்தான்'' என்றார் திருமங்கை மன்னனும், (பெரியதிரு : 6.7 8) 'வாரணம்' என்ற ஒரே சொல் - யானை, கடல், சங்கு என்ற பொருள்களில் வந்தது, கவளம் - யானைக்கு அளிக்கும் உணவு : ''கவளயானைக்கொம்பொசித்த'' (பெரியதிரு ; 4-8-1).

இதுமுதல் ஒன்பதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும்ஐந்தாஞ் சீரும் மாச்சீர்களும் மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிவந்த கலிநிலைத்துறைகள். (1)

**2. செனமேசெயன் வினவிட வைசம்பாயனன் மேல் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறலுறல்.**

சான விச்சுதன் தருமனுக் குணர்த்துமிச் சரிதம்
தானு ணர்ந்தவர் தவிர்ந்திடா சார்வர்வீ டென்று
ஞான மாமுனி நவின்றிட நரேசனு மகிழ்ந்து
மேன டந்ததை வினவிட மேலவ னெடுத்தான்.

(இ-ள்)சானவி சுதன்-கங்காபுத்திரனுகிய வீடுமன், தருமனுக்கு-, உணர்த்தும் - கூறிய, இ சரிதம் தான் - இந்த உமாமகேசுவர சம்வாத சரிதத்தை, உணர்ந்தவர் - கேட்டறிந்தவர், தவிர்ந்திடா - தவருமல், வீடு சார்வர் - மோட்சத்தை யெய்துவர், என்று —, ஞானமுனி நவின்றிட - வைசம்பாயனமுனிவன் சொல்ல, நரேசனும் மகிழ்ந்து - செனமேசெய ராஜனும் சந்தோஷித்து, மேல் நடந்ததை வினவிட - மேல் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றிக்கேட்க, மேலவன் - வைசம்பாயனன், எடுத்தான் - கூறுவானுயினுன்; (எ.று.) தான் - அசை,

சானவி - ஜாஹ்நவீயென்ற வடசொல்லின் திரிபு : பகீரதசக்கர வர்த்தியின் பின்சென்ற கங்கை வழியிடையே ஜஹ்நுமுனிவரின் வேள்வியையழிக்க, அவர்பருகி அந்தப்பகீரதனது வேண்டு கோளினுல் தமது காதின்வழியாக விட்டதனுல், கங்கைக்குச் சான்வியென்று பெயர். (2)

**3. தருமனைக் கிருஷ்ணன் அத்தினபுரிசென்று அரசேற் கச்சொல்ல, அவன் மறுத்துக் கலுழ்தல்.**

கங்கை நந்தனன் கதிபுகக் கடனெலா மியற்றி
அங்க ணங்கினுற் சிறபக லமர்ந்தவே லரசைச்
செங்கண் மானக ரடைகெனச் செப்பலும் தருமன்
எங்க ணெய்துவ தென்னரசு சென்னவாழ் வினிமேல்.

(இ-ள்) கங்கை நந்தனன் - கங்காபுத்திரனுகிய வீடுமன், கதி புக - சுவர்க்கம் புகும்படி, கடன் எலாம் இயற்றி - கிரியைகளை யெல்லாம் செய்து முடித்து, அங்கு - அந்தக்கங்கைக் கரையிலேயே, அணங்கினுல் - சோகத்தால், சிற்பகல் - சிலநாட்கள், அமர்ந்த - தங்கியிருந்த, வேல் அரசை - வேலேந்திய தருமனை, செங்கண் மால் - அழகிய கண்களையுடைய கிருஷ்ணன், நகர் அடைக என செப்பலும் - அத்தினபுரம் செல்வாய் என்றுசொல்லவும், தருமன் -, என் அரசு எங்கண் எய்துவது? - என் அரசை எப்படியேற்பேன்? இனிமேல் - [எல்லாரையும் கொன்ற பின்பு] இனிமேல், என்ன வாழ்வு - என்ன பிழைப்பு வேண்டியுளது? (எ.று.)

பீஷ்மரையும் துரோணரையும் கர்ணனையும் கொன்றதை நினைத்துத் தருமன் துயரப்பட்டு, 'என்னஅரசு, என்ன வாழ்வு வேண்டியிருக்கிறது' என அலமந்தான். அடைகென - அகரவீறு தொகுத்தல். (3)

**4. எல்லாக் காரியங்களும் கடவுள் கட்டளையாலே செய்யப்படுதலால், அவை உனக்குத் தோஷத்தைச் செய்யா வென்று வியாசன் தருமனுக்குச் சொல் லுதல்.**

தாயி னும்மினி தாயமூ தாதையைத் தடிந்து
தீய னாகயான் றீவினைச் செய்ததென் றயர்ந்தான்
ஆய காலையி லடுபவ நினக்கிலை யரசே!
மாய னுக்கயர் வொழிகென வியாதனும் வகுத்தான்.

(இ-ள்) தாயினும் இனிதாய மூதாதையை - தாயைக்காட்டிலும் போற்றத்தக்க பாட்டனாராகிய வீடுமனை, தடிந்து - கொன்று, யான் - நான், தீயனாக - பாபிஷ்டனாக, தீவினை - கொடிய பாவங்களை, செய்தது - செய்துள்ளேன், என்று - என்று கூறி, அயர்ந்தான் - தளர்ந்தான் : ஆய காலையில் - அச்சமயத்து, வியாதனும் - வியாசமுனிவனும், அரசே! - தருமராசனே ! அடு பவம் - (பகைவர்களைக்) கொன்றபாவம், நினக்கு இலை - உனக்குக் கிடையாது ; (எல்லாம்) மாயனுக்கு - கிருஷ்ணனுக்கு ; (எனவே) அயர்வு ஒழிக - தளர்ச்சி நீங்குவாயாக, என - என்று சமாதானங் கூறி, வகுத்தான் - சொல்லிமுடித்தான் ; (எ.று.)

மனிதனுடைய காரியங்கள் கடவுளின் ஆஞ்ஞையாலேயே செய்யப்படுதலால் அவை அவனுக்குத்தோஷத்தையுண்டாக்கா என்று வியாசர்சொல்லி, அப்படித்தோஷமிருந்தால் அது கடவுளாகிய கிருஷ்ணனைச்சேரும் என்றுகூறித்தருமனைத்தளர்வு போக்கிச்சமா தானஞ்செய்தார். பூபாரந்தீர்க்கப் பிறந்தானாதலின், கிருஷ்ணனுக் குத்தோஷம் தட்டாதென அறிக. தாயினும், உம்மை - உயர்வுச் சிறப்பு, ஒழிகென - அகரவீறு தொகுத்தல். (4)

**5. அப்படி ஏதாவது தோஷமிருந்தால் அது நீங்கு மென்று சொல்லி வியாசர் தருமனை அசுவமேத யாகஞ்செய்யப்பணித்தல்.**

இறைவன் செய்கையீ தெனக்கொளி லென்னையிவ் வுலகில்
அறையும் வெம்பழி யால்வினைக் கையமே தென்ன

மறைய வர்க்குபொன் மணிகளும் வழங்குமா மேதங்
கறைகொள் வேலினு யியற்றிடிற் கழியுமப் பவமே.

(இ-ள்) (தருமன்) இறைவன் செய்கை ஈது என கொளின் - கடவுளின்காரியம் இது என்று கொண்டாலும், என்னை - , இ உலகில் - இந்த உலகத்தில், வெம்பழியால் - கொடியபழியின்காரணமாக, அறையும் - தூற்றுவர் : (எனவே) வினைக்கு - பாவகாரியஞ் செய்துள்ளமைக்கு, ஐயம் ஏது - சந்தேகம் ஏது? , என்ன - என்று கூறிவருந்த, (வியாசன் தருமனை நோக்கி) கறைகொள் வேலினுய் ! இரத்தக்கறை தோய்ந்த வேலாயுதத்தையுடையவனே ! 'மறையவர்க்கு- பிராம்மணர்களுக்கு, பொன் மணிகளும் வழங்கி - பொன்னையும் இரத்தினங்களையும் தட்சிணையாகக்கொடுத்து, மா மேதம் - அசுவமேதயாகத்தை, இயற்றிடின் - செய்வாயானுல், அ பவம் கழியும் - அந்தப் பாவமும் நீங்கும்'; (எ.று.)'என்று வியாதனுமியம்பிட' என மேலைக்கவியில் தொடரும்.

கடவுளின் காரியம் என்ருலும் உலகில் பழியெனக்குத்தானே ஏற்பட்டுள்ளது என்று தருமன்கூறி அங்கலாய்க்க, வியாசன் அப் பழிபாவம்நீங்கும்படி அசுவமேதயாகம் செய்யப் பணித்தான் என்க. (5)

**6. கிருஷ்ணனும் அங்ஙனமே அசுவமேதம் செய்யச் சொல்ல, தருமன் கூறலுறல்.**

என்று வியாதனு மியம்பிட யாவரு மஃதே
நன்று நன்றென நாரணன் நரேசனை நோக்கி
வென்றி மாமகம் வேந்தநீ விளைக்கிலெவ் வினையும்
அன்று போமென வகமகிழ்ந் தரசிதை யறைவான்.

(இ-ள்) என்று வியாதனும் இயம்பிட - என்று வியாசரும் கூறிட, யாவரும் - அனைவரும், அஃதே - அங்ஙனம் அசுவமேதம் செய்தலே, நன்று நன்று என - மிகவும் நல்லது என்று இசைய, (அப்போது)நாரணன் - கிருஷ்ணன், நரேசனை - தருமனை, நோக்கி - பார்த்து, 'வேந்த - அரசனே ! நீ - , வென்றி மா மகம் விளைக்கில் - வெற்றிபொருந்திய சிறந்த அசுவமேதயாகத்தைச் செய்வாயானுல், எ வினையும் - எல்லாப் பாவங்களும், அன்று போம் என -

அற்றைப்பொழுதே தொலைந்துபோகும்' என்றுகூற, அரசு - தருமன், அகம் மகிழ்ந்து - மனங்களிப்புற்று, இதை அறைவான் - இந்த வார்த்தைகளைச் சொல்லலானான்; (எ.று.)

நன்றுநன்று - அடுக்கு, உடன்படற்குறிப்பு. நர + ஈசன் = நரேசன் : குணசந்திபெற்ற வடமொழித்தொடர். (6)

**7. தருமன் போதுமான பொருளின்மை தெரிவித்தல்.**

தக்க விம்மகந் தான்செயிற் சதுமறை யவர்க்குத்
தெக்க ணைத்தர நிதியிலை செய்வதியா தெனவே
அக்க ணத்தரி சிறுநகை செயமறை யமைத்தோன்
மிக்க வேந்தபொன் குறையென்கொ லெனவவன்
விளம்பும்.

(இ-ள்) தக்க - தகுதியுடைத்தான, இ மகம் - இந்த அசுவமேதத்தை, தான் செயின் - தான் செய்யவேண்டுமானால், சதுமறையவர்க்கு - நான்கு வேதங்களிலும் வல்ல பிராம்மணர்களுக்கு, தெக்கணை தர - தட்சிணை கொடுக்க, நிதி இலை - செல்வம் இல்லை, (எனவே) செய்வது யாது - எப்படிச்செய்வது? என - என்று தருமன் சொல்ல, அ கணத்து - அந்தப்பொழுதில், அரி - கிருஷ்ணன், சிறு நகை செய - புன்னகை புரிய, மறை அமைத்தோன் - வேதம் வகுத்த வியாசன், 'மிக்க வேந்த ! - சிறந்த அரசனே ! பொன் குறை என்கொல்? - செல்வம் குறைந்திருப்பதற்குக்காரணம் என்ன? ', என - என்று வினவ, அவன் விளம்பும் - அந்தத்தருமன் கூறுவான்; (எ.று.) தருமன் - கூறியதை மேலைக் கவியிற்காண்க.

செய்வதியாது - குற்றியலிகரம் : அலகுபெறவில்லை, விளம்பும் - செய்யுமென்முற்று. (7)

**8. நிதி குறைந்ததற்குத் தருமன் காரணம் கூறல்.**

வெற்றி பெற்றிடும் விழைவினாற் சுயோதன னிதியம்
இற்ற லத்தவர் வயப்பட வீந்துமே யொழித்தான்
மற்ற தியாமிறந் தவர்க்குளோர் வருந்தல்கண் டிரங்கிக்
குற்ற மற்றிடக் கொடுத்தலாற் குறைவுபட் டதுவே.

(இ-ள்)வெற்றி பெற்றிடும் விழைவினுல் - ஜயம் அடைய வேண்டுமென்ற விருப்பினுல், சுயோதனன் - துரியோதனன், நிதியம் - செல்வத்தை, இ தலத்தவர் - இந்த நிலத்துமக்கள், வயப்பட - தன்வசப்படும்படி, ஈந்துமே - கொடுத்துக்கொடுத்து, ஒழித்தான் - போக்கினுன் : மற்றது - மிகுந்ததை, யாம் - நாம், இறந்தவர்க்கு - (போரில்)மாண்டுபோனவர்களுக்கு, உளோர் - சுற்றமாயிருப்பவர், வருந்தல் கண்டு - துயரப்படுதலைப்பார்த்து, இரங்கி - இரக்கமுற்று, குற்றம் அற்றிட - போரினிற்கொன்ற பாவம் ஒழியும்படி, கொடுத்தலால் - வழங்கியதால், குறைவுபட்டது - குறைந்துபோயிற்று; (எ.று.), ஏ - ஈற்றசை.

போரில் வெற்றிபெறும்நோக்கோடு துரியோதனன் மாந்தரைத் தன்வசப்படுத்தப் பெருநிதியம் வழங்கியொழித்தான். நானே போரில் இறந்தவர் சுற்றம் வருந்துதல்கண்டு அச் சுற்றத்தார்க்கு வழங்கிக் குறைவுபடுத்தினேன். இருவகையிலும் நிதி குறையலாயிற்று எனத்தருமன் காரணம் கூறியவாறு. துட்டசுயோதனன் நோக்கம் பழிக்கத்தக்கது, நல்ல தருமன்நோக்கம் போற்றத்தக்கது, 'இத்தலத்தவர்' என்பது 'இற்றலத்தவர்' என எதுகைக்காக ஆயிற்று. இனி 'இத்தலத்தவர்' எனவே பாடங்கொண்டு இனவெதுகை என்னலுமாம். மற்றதியாம் - குற்றியலிகரம். பட்டதுவே - வகரவுடம்படுமெய் பெற்று வந்தது. (8)

**9. வியாசர் யாகத்திற்கு வேண்டிய நிதியைப்பெறும் வகை கூறல்.**

என்ன மன்னவ னியம்பிட வியாதன்மன் னிதயத்
துன்னி பொன்பெறு முபாயமு முதிட்டிரற் குரைப்பான்
முன்ன மேழ்பரி மூரிதேர் முளரிநா யகற்குத்
தன்னைத் தானிகர் மனுவெனுந் தனயன்வந் துதித்தான்.

(இ-ள்)என்ன மன்னவன் இயம்பிட - என்று தருமராசன் சொல்லிட, வியாதன்மன் - வியாசமுனிவன், இதயத்து உன்னி - மனத்தினுல் ஆலோசித்து, பொன்பெறும் உபாயம் - நிதிபெறும் வகையை, உதிட்டிரற்கு உரைப்பான் - தருமனுக்குக் கூறலானுன் : முன்னம் - முற்காலத்து, ஏழ்பரி - ஏழுகுதிரைகள் கட்டிய, மூரி தேர் - வலிய தேரினை, முளரி நாயகற்கு - தாமரைக்கணவனுகிய சூரியனுக்கு, தன்னைத்தான்நிகர் - தனக்குத்தானே நிகரான (வேறுநிகரற்ற), மனு எனும் தனயன் - மனுவென்னும் மகன், வந்து உதித்தான் - வந்து பிறந்தான்; (எ.று)

'ஆதித்தன் குலமுதல்வன் மனு' என்றார் கம்பரும்(பால : குலமுறை : 1) ,சூரியனது தேர் ஒற்றைச்சக்கரமுடையது. அத் தேர்க்குக்குதிரைகள் ஏழென்றும், காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகதீ என்ற ஏழுசந்தசுகளுமே அக் குதிரைகளாக அமைந்துள்ளன வென்றும், அக்குதிரைகளின்நிறம் பசுமையென்றும் புராணம் கூறும். முளரி - தாமரை. சூரியனைத் தாமரைநாயகன் என்றது - நாயகன்வந்தமை கண்டு நாயகிக்கு முகம்விகசிப்பதுபோல, சூரியன் உதயமானவுடனே தாமரை மலரும் என்பதுகொண்டு: "செங்கமலம், அந்தரம்சேர்வெங்கதி ரோற்கல்லால் அலராவால்" என்றார் குலசேகரரும். (9).

வேறு.

**10-19. பத்துக்கவிகள் - ஒருதொடர் : மருத்தன்கதை வியாசன் கூறுதல்.**

**10. மருத்தன் வேள்விசெயப் பிருஹஸ்பதியை வரிக்க, அஃதுணர்ந்த இந்திரன் தன் குருவைத்தடுத்தல்.**

அந்தமனு தனக்கெட்டாம் பேர ஞனன்
அவனியெலா மொருகுடைக்கீழ் அண்டர் வாழ்த்த
வந்திகலோ ரடிபணியப் புரக்குஞ் சீர்த்தி
மருத்தென்னும் பெயருடைய மன்னன் வேள்வி
சந்தமுறச் செயவங்கி ரசுசேய் வியாழன்
தனைவரித்தா னஃதுணர்ந்து சசிம ணாளன்
புந்திபொரு தெமக்கன்றி மனிதர்க் கியாகம்
புரிதறகா தெனத்தடுத்தான் பொன்னை மன்னே.

(இ-ள்) அந்த மனுதனக்கு - [சூரியன்மகனாகிய] அந்தமனு வுக்கு, எட்டாம் பேரன் ஆனான் - எட்டாவது பேரனாகத்தோன்றிய, அவனியெலாம் - பூமியைமுழுவதும், ஒரு குடைக்கீழ் - ஒரே வெண் கொற்றக்குடையின்கீழ், அண்டர் வாழ்த்த - தேவர்களும் வாழ்த் தும்படி, வந்து - தன்னிடம்வந்து, இகலோர் - பகைவர்கள், அடி பணிய - பாதங்களில் வணங்கும்படி, புரக்கும் - பாதுகாக்கின்ற,

சீர்த்தி - மிக்கபுழையுடைய, மருத்து என்னும் பெயருடைய மன்னன் - மருத்தன் என்னும் பேரையுடைய அரசன், வேள்வி - யாகத்தை, சந்தம் உற செய - (நன்கு) அழகு பெறும்படிசெய்ய, அங்கிரசு சேய் வியாழன் தனை - அங்கிரஸின் [மூத்த] மகனாகிய பிருஹஸ்பதியை, வரித்தான் - புரோகிதராக [இருந்து நடத்தி நிறைவேற்றிக்கொடுக்கும்படி] நியமித்தான் : அஃது - அதனை, சசிமணாளன் - சசிதேவிக்குக்கணவனாகிய இந்திரன், உணர்ந்து - அறிந்து, புந்திபொறாது - மனம் பொறுக்காமல், 'எமக்கு அன்றி - தேவர்களாகிய எங்களுக்கல்லாது, மனிதர்க்கு - மானிடர்களுக்கு, யாகம் புரிதல் - வேள்வி செய்வித்தல், தகாது - முறையாகாது, என - என்று கூறி, பொன்னை - பிருஹஸ்பதியை, தடுத்தான் - தடை செய்தான் : (எ.று.). மன், ஓ - ஈற்றசை.

இந்திரன் தன்குரு பிருஹஸ்பதியிடம் வந்து "நான் ஒருவனே மூவுலகங்களுக்கும் தேவர்களுக்கும் இந்திரனாக இருக்கிறேன் ; மருத்தனோ பூமிக்குமட்டும் அதிபதியாக இருக்கிறான் : மரணமில்லாத எனக்குப்புரோகிதனாக இருந்துவிட்டு மரிக்குந்தன்மையுள்ள மருத்தனுக்குப் புரோகிதனாயிருக்க இசையலாமா, கூடாது" எனக் கூறித்தடுத்தான் என விவரங்காண்க, பொன் - பிருஹஸ்பதி : வியாழன், [சுக்கிரன் வெள்ளியெனப்படுவன் : அவன் அசுரர்களுக்குக்குரு], சீர்த்தி - மிகுபுகழ் : (தொல் : உரி ; 16)

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுள்ள பத்துக்கவிகளும் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றையநான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (10)

**11. மருத்தனுக்கு நாரதன் உபாயங் கூறல்.**

அக்குருபான் மருத்தெய்தி யெந்தைக் குந்தை
அரியமக மியற்றிடலா லடியன் வேள்வி
இக்கணம்வந் தியற்றிடுக வேண்டு மென்ன
இந்திரன் சொற்கொண்டு குருவெய்தே னென்ன
துக்கமடைந் தரசுபுவிக் கெய்தித் தன்னேர்
தோன்றியநா ரதன்வினவச் சொற்றான் முற்றுந்
தக்கவன்கேட் டரசேநீ யஞ்சேல் வேள்வி
தபுதலிலாப் புரிவிற்குச் சாற்றக் கேண்மோ.

(இ-ள்) அ குரு பால் மருத்து எய்தி - அந்தப் பிருகஸ்பதி யிடத்து மருத்தன் வந்து, 'எந்தைக்கு - என் தந்தையாகிய அவிக்ஷித் என்பவர்க்கு, உந்தை - உன் தந்தையாகிய அங்கிரஸுமுனிவர், அரிய மகம் இயற்றிடலால் - செய்தற்கரிய யாகத்தைச்செய்து கொடுத்ததால், அடியன் வேள்வி - என்னுடைய யாகத்தையும், (நீர்) இ கணம் வந்து - இப்போதே வந்து, இயற்றிடுக வேண்டும் - செய்துகொடுக்கவேண்டும்,' என்ன - என்று கூறிப் பிரார்த்திக்க, குரு - பிருஹஸ்பதி, இந்திரன் சொல் கொண்டு - இந்திரனது வார்த்தையைக்கேட்டு, எய்தேன் என்ன - வரமாட்டேன் என்று மறுத்துச்சொல்ல, அரசு - மருத்தன், துக்கம் அடைந்து - மனவருத்தமுற்று, புவிக்கு எய்தி - பூவுலகத்திற்கு வந்து, (அப்போது) தன் நேர் தோன்றிய நாரதன் - தனக்கு நேராக வந்து நின்ற நாரதமுனிவன், வினவ - துக்கத்திற்குக் காரணம் கேட்க, முற்றும் சொற்ருன் - நிகழ்ந்தவையனைத்தும் கூறினுன்: தக்கவன் கேட்டு - நாரதன் செவியேற்று, அரசே! - மன்னனே!, நீ —, அஞ்சேல் - பயப்படாதே: வேள்வி தபுதல் இலா புரிவிற்கு - யாகம் பிழையுருதபடி நடப்பதற்கு உபாயம், சாற்ற - நான் சொல்ல, கேண்மோ - கேட்பாயாக; (எ.று.).

தபுதல் - தவறுதல், கெடுதல், பிழைபடுதல்: தொழிற்பெயர், புரிவு - தொழிற்பெயர்: நான்கனுருபு தகுதியுடைப்பொருளது, எந்தை, உந்தை - மரூஉ. அஞ்சேல் - முன்னிலைவியங்கோள். (11)

**12-13. நாரதர் பிருஹஸ்பதியின் தம்பி சம்வர்த்தனரைப் புரோகிதராகக்கொண்டு யாகம் செய்துகொள்ளச் சொல்லுதல்.**

**இரண்டு கவிகள் - ஒரு தொடர்.**

வருமாங்கி ரசுமைந்த ரிருவர் முன்னேன்
வானவரா ரியன்பின்சம் வர்த்த னன்னேன்
ஒருநாண்முன் னவன்முனிய வதனு லியாவும்
ஒழிந்துதிகம் பரனுகி யுறுவான் காசி

தெரிவானீ யொருபிணங்கொண் டவண்போந்
தியாரும்
திளைக்குநதி துவாரமிடை சேர்ந்தி ருத்தி
பெரியோன்வந் துனைநோக்கிச் சீறி யோடும்
பித்தனைப்போன் மற்றவன்பின் பெயர்தி நீயும்.

(இ-ள்) ஆங்கிரசு மைந்தர் - அங்கீரஸுமுனிவன் புத்திரர், இருவர் - இரண்டுபேர் : வரும் முன்னோன் - தமையனாய்ப்பிறந்தவன், வானவர் ஆரியன் - தேவர்க்குக் குருவான பிருஹஸ்பதி : பின் - பின்பிறந்த தம்பி, சம்வர்த்தன் - சம்வர்த்தர் என்பவன்; அன்னோன் - அந்தச் சம்வர்த்தர், ஒருநாள் - ஒருதினம், முன்னவன் முனிய - பிருஹஸ்பதி கோபிக்க, அதனால் - அதன் காரணமாக, யாவும் ஒழிந்து - எல்லாப்பொருள்களையும் போட்டுவிட்டு, திகம்பரனாகி - ஆடையின்றி, காசி உறுவான் - காசிக்குச் சென்றுவிட்டான் : நீ —, தெரிவான் - அவனை (யாவன் என்று) அறியும் பொருட்டு, ஒரு பிணம் கொண்டு - ஒரு பிணத்தைக்கொண்டு, அவண் போந்து - அந்தக் காசிக்குச்சென்று, யாரும் திளைக்கும் நதி துவாரமிடை - அனைவரும் நீராடும் கங்கையின் துறைவாயிலில், சேர்த்து - போகட்டு, இருத்தி - உட்கார்ந்திரு : பெரியோன் வந்து - சம்வர்த்தர் வந்து, உனைநோக்கி - உன்னைப்பார்த்து, சீறி - கோபித்து, ஓடும் - ஓடிப்போவான் : அவன் பின் - அவனுக்குப் பின்னால் தொடர்ந்து, பித்தனைப்போல் - பைத்தியம் பிடித்தவன் போல, நீயும் பெயர்தி - நீயும் போவாய்; (எ.று).

பிருஹஸ்பதியின் தம்பி சம்வர்த்தரைக்கொண்டு யாகம் நடத்தவெண்ணமிட்டு நாரதன் மருத்தனுக்கு அந்தச் சம்வர்த்தர் வரலாறு கூறுகின்றார் என்க. பின் – பின்பிறந்தவனுக்கு ஆகுபெயர். இருத்தி, பெயர்தி - முன்னிலையேவல். ஓடும் - செய்யுமென்முற்று. அதனாலியாவும் - 'தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்' என்பது விதி (நன் : மெய்யீற் ; 3) போந்தியாரும்- குற்றியலிகரம், சேர்ந்திருத்தி - ''உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'' (நன் : உயிரீற் : 14) (12)

13. வைதிடினும் அடித்திடினும் முனிந்திட் டாலும்
மனஞ்சலியா துடன்மேவின் மற்றோன் நின்பால்
எய்திடுநின் கருமமெலாம் இயம்பிப் போற்றில்
இரங்கியெனைத் தெரித்தவர்யா ரென்னும் நாதஞ்
செய்திடும்யாழ் முனியவைசொற் றழலிற் பாய்ந்தான்
சேர்ந்தனன்யா னிவணென்றே செப்பில்
வேந்தே !
உய்திடுவை கருதுமக முற்று மென்றே
யுரைத்தகன்றான் அரசுமுனி யுரைத்த
வண்ணம்.

(இ-ள்) வைதிடினும் - (அந்தச் சம்வர்த்தர்) நிந்தித்தாலும், அடித்திடினும் - நையப்புடைத்தாலும், முனிந்திட்டாலும் - கோபித்தாலும், மனம் சலியாது - மனவூக்கம் குன்றாமல், உடன் மேவின் - கூடவே தொடர்ந்து போவாயானால், மற்றோன் - அந்தச் சம்வர்த்தர், நின்பால் எய்திடும் - உன்னிடம் வந்துசேர்வார் : நின் கருமம் எல்லாம் இயம்பி - உன்னுடைய நினைத்த காரியங்களையெல்லாம் சொல்லி, போற்றில் - பாராட்டுவாயானால், இரங்கி - மனமிரங்கி, 'எனை தெரித்தவர் யார்' - என்னை உனக்குச்சொன்னவர் யார்'', என்னும் - என்று வினவுவன் ; (அதற்குவிடையாக நீ)'நாதம் செய்திடும் யாழ்முனி - இசைபாடும் யாழில்வல்லமுனிவன் நாரதன், இவை சொற்று - இந்த உன் சரிதத்தைச்சொல்லி, அழலிற் பாய்ந்தான் - நெருப்பினில் புகுந்தான் ; (பிறகு)யான் - நான், இவண் சேர்ந்தனன் - இவ்விடம் வந்தேன்','என்று செப்பில் - என்று சொல்வாயானால், வேந்தே - அரசனே ! உய்திடுவை - ஈடேறுவாய் ; கருதும் மகம் முற்றும் - (நீ) எண்ணிய யாகமும் நிறைவேறும், என்று உரைத்து - என்று சொல்லி, அகன்றான் - போயினான் (நாரதன்) : (பின்னர்) அரசு - மருத்தன், முனி உரைத்த வண்ணம் - நாரதன் கூறியபடியே; (எ.று.)''... அவைகளொலாம் இயற்றி''என மேலைக்கவியிற்றொடரும்.

சம்வர்த்தர் எது செய்தாலும் மனஞ்சலியாது பின்தொடர்வா யாயின், அவன் மனமிரங்கி நீ கருதும் யாகம் செய்துமுடிப்பான் என்று நாரதன் உபாயங்கூறி யகன்றான் என்க. உய்திடுவை - முன்னிலைவினை முற்று, (13)

**14. பிருஹஸ்பதி செய்யும் இடையூற்றுக்கு அஞ்சா திருப்பின் யாகம் செய்வித்துக் கொடுப்பேன் என்று சம்வர்த்தர் கூறுதல்.**

வழுவாம லவைகளெலாம் இயற்றி யச்சம்
வர்த்தனைக்கண் டடிபணிய மகிழ்வுற் றன்னேன்
ஒழுகாமல் வருங்கரும முரைத்தி யென்ன
உற்றதெலா முற்றுமெடுத் துரைப்ப வொன்னார்
தொழுமாண்போய் ! மகஞ்செய்போ தென்முன் வீண்கொள்
துன்பியற்றும் அதற்கஞ்சாத் துணிவை யேலியான்
பழுதாகா மகமுடிப்ப னெனவேந் தைய !
பயந்திலனென் றுறுதிபல பகர்ந்திட் டானே.

(இ-ள்) வழுவாமல் - ஒன்றும் பிசகாமல், அவைகள் எல்லாம் இயற்றி - (நாரதன் சொன்னபடியே) அந்தச் செயல்களையெல்லாம் செய்து, அ சம்வர்த்தனைக்கண்டு - அந்தச் சம்வர்த்தரைப் பார்த்து, அடி பணிய - பாதங்களில் வணங்க, அன்னோன் - அந்தச் சம்வர்த்தர், மகிழ்வுற்று - சந்தோஷமடைந்து; '(நீ) ஒழுகாமல்-மழுப்பாமல், வரும் கருமம் உரைத்தி - வந்த காரியத்தைச் சொல்வாய்,' என்ன - என்றுகூற, (மருத்தன்) உற்றதெலாம் முற்றும் எடுத்து உரைப்ப - நேர்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் (விடாது) முழுவதும் நன்கு தெரியும்படி சொல்ல, (அதனைக் கேட்ட சம்வர்த்தர்) 'ஒன்னார் தொழும் மாண்போய் ! — பகைவர் பணியும்படியான மாட்சிமை யுடைய வேந்தே ! மகம் செய்போது - யாகம் செய்யும்போது, என் முன் - என்னுடைய தமையன் பிருஹ்ஸ்பதி, வீண்கொள் - வீணாக, துன்பியற்றும் - இடையூறுகளைச் செய்வான்: அதற்கு அஞ்சா - அவைகளுக்குப் பயந்து பின்வாங்காமல், துணிவையேல் - தைரியமாயிருப்பாயானால், யான் - நான், பழுதாகா - பழுதுபடாமல், மகம் முடிப்பன் - யாகத்தைச் செய்து நிறைவேற்றுவேன், என - என்று கூற, வேந்து - மருத்தன். 'ஐய!—பெரியோனே! பயந்திலன் - நான் அஞ்சினேனில்லை' என்று முற்படக் கூறி, (பின்) பல உறுதி - பல திடமொழிகளை, பகர்ந்திட்டான் - கூறினான்; (எ.று.) ஏ - ஈற்றசை.

பிருஹஸ்பதி யாகத்திற்குத் தடைகள் செய்வான் : அவற்றுக்கு அஞ்சாது உறுதிகொண்டு காப்பையேல், நான் யாகம் முடித்துக் கொடுப்பேன் என்று சம்வர்த்தர் கூறினரென்க. முடிப்பன், பயந்திலன் - தன்மையொருமை முற்றுக்கள். ஏலியான் - ''தன் ஞெழிமெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்'' என்பதுவிதி. (நன் : மெய்யீற் : 3) (14).

**15. சிவபிரானீந்த நிதியைக்கொண்டு சம்வர்த்தர் மருத்தனுக்கு யாகஞ்செய்விப்பேனெனல்.**

அம்மொழிகேட் டிருடிமகிழ்ந் தரசே நின்னை
அமரர்கோன் வாழ்வினுமே லாக்கிப் பின்னர்
இம்மகஞ்செய் குவன்செம்பொன் பெறுமா றென்பின்
எய்தெனக்கொண் டுத்தரதிக் கெய்தித் தேவர்
செம்மலுக்குங் காணரிய முஞ்சு வந்தச்
சிலம்பிடைவாழ் அரனடியைத் தெரிசித்
தவன்பால்
தம்மனத்தின் செயலுரைத்தவ் வோங்கற் சாரற்
றயங்குறும்பொன் சம்புவந்து தரக் கொண்
டானே.

(இ-ள்) அ மொழி கேட்டு - அந்த வார்த்தைகளைக்கேட்டு, இருடி மகிழ்ந்து — சம்வர்த்தர் களிப்புற்று, அரசே ! - மருத்தராஜனே ! நின்னை - உன்னை, அமரர்கோன் வாழ்வினும் மேலாக்கி - தேவேந்திரனின் வாழ்ச்சியினும் மேலான வாழ்வுடையவனுக்கி, பின்னர் - அதற்குப்பின், இ மகம் செய்குவன் - இந்த யாகத்தைச் செய்திடுவேன் : செம்பொன் பெறுமாறு - அந்த யாகத்திற்கு வேண்டிய சிறந்த நிதியைப்பெறும்படி, என்பின் எய்து - என் பின்னேதொடர்ந்து வருவாயாக, எனக்கொண்டு - என்று உடன் கொண்டு, உத்தரதிக்கு எய்தி - வடதிசையையடைந்து, தேவர் செம்மலுக்கும் - இந்திரனுக்கும், காணரிய - பார்த்தற்கு இயலாத, முஞ்சுவந்தம் சிலம்பிடை - முஞ்சவான் என்கிற மலையிடத்து, வாழ் - வாசஞ்செய்கின்ற, அரன் அடியை - சிவபெருமானின் பாதங்களை, தெரிசித்து - கண்டுவணங்கி, அவன் பால் - அந்தச்சிவபெருமானிடம், தன் மனத்தின் செயல் உரைத்து - தன் மனத்திலெண்ணிவந்த கருத்தைச்சொல்லி, அ ஓங்கல் சாரல்

தயங்குறும் - அந்த மலையின் பக்கத்தில் விளங்குகின்ற, பொன் - நிதியை, சம்பு வந்து தர - சிவபிரான் வந்துகொடுக்க, கொண்டான் - பெற்றுக்கொண்டான்; (எ.று.) ஏ - ஈற்றசை.

முஞ்சவான் என்றமலை இமயமலைச்சாரலில் உள்ளது, அங்குச் சிவபெருமான் எப்பொழுதும் தவம் புரிகிறார். அவரைத்தரிசித்து வணங்கி, உத்தமமான தனத்தை யடைந்தான் என்றறிக. சம்பு - சிவபெருமான் ; சுகத்தைத்தருபவன் என்ற பொருளது. (15).

**16. சிவபிரான் கொடுத்த நிதியைக்கொண்டு மருத்தன் யாகம் தொடங்கல்.**

ஒட்டகமுஞ் சகடும்வெங் களிறு மெண்ணில்
உயர்தவத்தோன் வருவிப்ப வுலகாள் வேந்தன்
மட்டிறந்த மணங்கேமம் அவைமே லேற்றி
வந்திடம்பார்த் துயரிமைய வரைக்குத் தெற்காய்
வட்டமுறச் சாலையமைத் தவண்பொன் மேரு
வந்ததென நிதிகுவித்து வருவார்க் கொற்றர்
விட்டிரப்போர் வேண்டுவமேற் கொடுப்பே னென்ன
விருதணிந்து தொடங்கினனவ் வேள்வி
செய்வான்.

(இ-ள்)எண் இல் - கணக்கற்ற, ஒட்டகமும் - ஒட்டகங்களையும், சகடும் - வண்டிகளையும், வெம்களிறும் - கொடிய ஆண்யானைகளையும், உயர்தவத்தோன் - சம்வர்த்தமுனிவன், வருவிப்ப - வரவழைக்க, உலகு ஆள் வேந்தன் - நிலவுலகத்தைமுற்றும் ஆளுகின்ற மருத்தன், மட்டு இறந்த - அளவற்ற, மணங்கு ஏமம் - மணங்குகள் எடையுள்ள பொன்னை (நிதியை), அவைமேல் ஏற்றி - அவைகளின்மீது ஏற்றி, வந்து - கொண்டுவந்து, உயர் இமைய வரைக்கு தெற்காய் இடம் பார்த்து - உயர்ந்த இமயமலைக்குத் தெற்கில் இடத்தைக்கண்டு நிர்ணயித்து, வட்டமுற சாலை அமைத்து - வட்டவடிவமாக யாகசாலை ஏற்படுத்தி, அவண் - அந்தச் சாலையிடத்து, பொன்மேரு வந்தது என - பொன்னுலாகிய மேருமலையே வந்திருந்தது என்னும்படி, நிதி குவித்து - தனங்களைக்குவித்துவைத்து, வருவார்க்கு - யாகம் காணவருபவர்க்கெல்லாம், ஒற்றர் விட்டு - தூதுவர்களையனுப்பி, 'இரப்போர் - யாசிப்

பவர்க்கு, வேண்டுவமேல் கொடுப்பேன் - அவர்கள் விரும்புவதற்கு மேலே நிதியைக்கொடுப்பேன்', 'என்ன - என்று, விருது அணிந்து - விரதம்பூண்டு, அ வேள்வி செய்வான் தொடங்கினன் - அந்த யாகத்தைச் செய்யும்பொருட்டு ஆரம்பித்தான்; (எ.று.)

மேருமலையைப் பொன்மலையென்பர், என - உவமவுருபு. வருவார், இரப்போர் - வினையாலணையும்பெயர், ஒற்றர் - இங்கே தூதரைக்காட்டியது, விருது - விரதம் : சங்கற்பம். செய்வான் - வானிற்று வினையெச்சம், கொடுப்பேன் - தன்மையொருமை முற்று. (16).

17. இந்திரன் வெகுண்டு யாகத்தைக்கெடுக்க முயலுதல்.

மருத்துமகந் தொடங்கல்குரு தெரிந்தே தென்னை
வலாரிகெடுத் தனனெனவே வருந்த வச்சிரந்
தரித்தவன்கேட் டுனையன்றி வேள்விசெய்யாத்
தகைபுரிது மெனத்தேற்றித் தழலை யேவிப்
பொருத்தமல வியற்றன்மகங் குரவ னன்றிப்
புகழரசே ! அவனைக்கொடு புரிதி யென்றே
தெரித்திடலும் அவன்மறுப்பச் சுனசி மீட்டுஞ்
சினந்தவனைக் கொலக்குலிசஞ் செலுத்தி
னனல்.

(இ-ள்)மருத்து மகம் தொடங்கல் - மருத்தன் யாகம் ஆரம்பித்தலை, குரு - பிருஹஸ்பதி, தெரிந்து - அறிந்து, ஏது - என்ன இது : என்னை வலாரி கெடுத்தனன் - என்னை இந்திரன் இழிவாக்கினான், என - என்று கூறி, வருந்த - கவலையுற, வச்சிரம் தரித்தவன் கேட்டு - வச்சிராயுதத்தையுடைய இந்திரன் செவியுற்று, 'உனை அன்றி - உன்னை விடுத்து, வேள்வி செய்யா தகைபுரிதும் - யாகஞ்செய்யாத வகையில் செய்வோம்', என தேற்றி - என்று சமாதானப்படுத்தி, (பின்பு) தழலை ஏவி - அக்னியையனுப்பி, (அவன்மூலம்) 'புகழ் அரசே ! - புகழ்பெற்ற மருத்தராஜனே ! குரவன் அன்றி - குரு பிருஹஸ்பதியைக் கொள்ளாமல், மகம் இயற்றல் - யாகஞ்செய்தல், பொருத்தம் அல - தகுதியுடையதாகாது : (எனவே) அவனைக்கொடு - அந்தப் பிருஹஸ்பதியைக் கொண்டு, புரிதி - யாகஞ்செய்வாய்,' என்று தெரித்திடலும் -

என்று தெரிவித்தவுடன், அவன் மறுப்ப - அந்தமருத்தன் மறுக்க, சுஞசி - இந்திரன், மீட்டும் சினந்து - மறுபடியும் கோபங்கொண்டு, அவனைக் கொல - அந்த மருத்தனைக்கொல்லுவதற்கு, குலிசம் செலுத்தினான் - வச்சிராயுதத்தை விடுத்தான்; (எ.று.)ஆல் - ஈற்றசை.

வலாரி - பலாரி யென்ற வடசொல் திரிந்தது. வலனை இந்திரன் கொன்ற கதை:- சிவபெருமானைக்குறித்து அரியதவஞ்செய்து போரில் யாவரையும் வெல்லும் ஆற்றலையும், தான் இறப்பின் தன்னுடைய உடம்பிலுள்ள தாதுக்கள் நவரத்தினமாதல்வேண்டு மென்பதையும் வரமாகப்பெற்ற **பலாசுரனென்பவன்**, இந்தி ரனைப்போருக்கு அழைக்க இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது; அப்போரில் முன்நிற்கமாட்டாது தோற்ற இந்திரன், பின்பு அவனை வஞ்சனையால் வெல்லக்கருதிச்சென்று புகழ்ந்து குறையிரந்து வேண்டி யாகபசுவாக வரித்து உடன்பட்டுவந்த அவனை யூபஸ்தம்பத்திற்கட்டிக்கொன்றான் என்பது கதை. புரிதும் - தன்மையொருமைமுற்று. புரிதி - முன்னிலையேவல். (17)

**18. சம்வர்த்தர் யாகத்தை மருத்தனுக்கு நிறைவேற்றிக் கொடுத்தல்.**

மன்னனைக்கோ றிடக்குலிச மெதிர்போ தச்சம்
வர்த்தனதை மந்திரத்தான் மாற்ற வேந்தன்
என்னுயிரின் றளித்தனைதொண் டடிகட் கியானென்
றேத்தமுனி கேட்டவர மீய்து மென்ன
பொன்னகரோ ரவிகொள்வா னருட்செய் கென்னப்
புகன்றபடி யளித்தும்பர் புகுவான் தூயோன்
முன்னருமந் திரஞ்செபித்து வேள்வி யும்பர்
முனிவகன்றுற் றவிகொளவே முடித்திட்
டானால்.

(இ-ள்)மன்னனைக் கோறிட - மருத்தராஜனைக்கொல்லுதற்கு, குலிசம் எதிர்போது - வச்சிரப்படை எதிர்த்து வந்தபோது,

அ சம்வர்த்தன் - அந்தச் சம்வர்த்த முனிவர், அதை - அந்தப் படையை, மந்திரத்தால் மாற்ற - மந்திரத்தையுச்சரித்துப் பயனில வாக்க, வேந்தன் - மருத்தன், (அவரைநோக்கி) 'என் உயிர் இன்று அளித்தனை - எனது உயிரை இன்றைக்குக் காப்பாற்றினீர்: (இனி என்றைக்கும்) அடிகட்கு - சுவாமியாகிய உமக்கு, யான் - நான், தொண்டு - அடியவன்,' என்று ஏத்த - என்று கூறித் துதிக்க, முனி - சம்வர்த்தர், (நீ)'கேட்டவரம் ஈய்தும்' என்ன - கேட்டவரத்தைக்கொடுப்பேன் என்றுசொல்ல, (அதற்கு மருத்தன்) 'பொன்னகரோர் - தேவர்கள், அவி கொள்வான் - [நாம்செய்யும் யாகத்தில்] அவியுணவு ஏற்றுக்கொள்ளும்படி, அருள்செய்க - செய் விப்பாராக' என்ன - என்றுவேண்ட, (சம்வர்த்தர்) புகன்றபடி - தான்சொன்னபடியே, அளித்து - வரமளித்து, (பின்னர்)தூயோன்- அம் முனிவர், உம்பர் - தேவர்கள், புகுவான் - வரும்படி, முன்ன அருமந்திரம் செபித்து - நினைத்தற்கரிய மந்திரத்தை உச்சரித்து, உம்பர் - அத் தேவர்கள், முனிவு அகன்று (தமது)கோபம் நீங்கி, உற்று - (யாகசாலைக்கு) வந்து, அவிகொள - அவியுணவு பெற்றுக் கொள்ள, (இங்ஙன்)வேள்வி முடித்திட்டான் - யாகத்தை நன்கு நிறைவேற்றினான்; (எ.று) ஆல் - ஈற்றசை.

இந்திரன் விடுத்த வச்சிராயுதத்தைத் தடுத்து மருத்தனுயிரைக் காப்பாற்றியதோடு. இந்திரனையும் அனுகூலனாக்கித் தேவர்களோடு வந்து அவிபெற்றுக்கொள்ளும்படிசெய்து யாகத்தைச் சம்வர்த்தர் நன்குநிறைவேற்றிமுடித்தார் என விவரம் காண்க. அளித்தனை - முன்னிலைவினைமுற்று, ஈய்தும் - தன்மையொருமை. கொள்வான், புகுவான் - வினையெச்சங்கள், அருட்செய்கென்ன - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல், முன்னரு - நிலைமொழியீற்று அகரம் கெட்டது, புகுவான்செபித்து என்றும், வேள்வி முடித்திட்டான் என்றும் இயையும். (18).

**19. வியாசர் அந்தயாகத்தில் மிகுந்த நிதியைக்கொணர்ந்து அசுவமேதம் செய்யும்படி தருமனுக்குக் கூறல்.**

முற்றிமக முற்றவர்க ளுவப்பான் செம்பொன்
முதலியசோ டசதான முழுது நல்கி
மற்றநிதி புவிமறைத்து நெடுநாட் பின்னர்
வந்துலகாள் வேந்தர்க்கா வைத்துப் போந்தார்

கொற்றவவோர்ந் தனையிமையச் சாரல் வைகுங்
கொழுநிதிநின் வழிக்கிலக்காங் கொணர்ந்து மாபாற்
பெற்றமக முற்றுகென வியாத னோதப்
பெருமான்கேட் டிசைந்திருந்தான் பெட்பி னம்மா.

(இ-ள்) மகம் முற்றி - யாகத்தைச் செய்துமுடித்து, உற்றவர்கள் - யாகத்திற்கு வந்திருந்தவர்கள், உவப்பான் - மனமகிழும்படி, செம் பொன் முதலிய சோடசதானம் முழுதும் நல்கி - சிறந்தபொன் முதலான பதினறுவகை தானங்களையும் முற்றும் கொடுத்து, மற்ற நிதி - (பின்னர்) எஞ்சியுள்ள திரவியத்தை, புவி மறைத்து - பூமியில் புதைத்து, நெடுநாள் பின்னர் - பலநாள்கழித்து, வந்து உலகாள் வேந்தர்க்கா - வந்து பூவுலகத்தையாள்கின்ற மன்னர்க் காக, (பயன்படும்படி) வைத்துப்போந்தார் - வைத்துப்போயினர்; கொற்றவ! - தருமராசனே! ஓர்ந்தனை - இப்போது தெரிந்துகொண் டாய்: இமையச்சாரல் வைகும் கொழுநிதி - இமயமலைச்சாரலில் (முஞ்சவான் மலையில்) புதைந்திருக்கும் மிக்கதிரவியம், நின் விழிக்கு இலக்காம் - உன்னுடைய கண்ணுக்குத்தென்படும்; கொணர்ந்து - அதனைக்கொண்டுவந்து மா பால் பெற்ற மகம் - அசுவமேத யாகத்தை, முற்றுக என - செய்துமுடிப்பாயாக என்று, வியாதன் ஓத - வியாசன் சொல்ல, பெருமான் கேட்டு - தருமன்செவியேற்று, பெட்பின் - விருப்பத்தோடு, இசைந்திருந்தான் - உடன்பட்டிருந் தான்; (எ.று.) அம்மா - ஈற்றசை.

மருத்தன்சம்வர்த்தர் முதலானோர் யாகம் செய்துமுடித்தபின் எஞ்சிய நிதியை முஞ்சவான் மலையிடத்திலேயே புதைத்து வைத்துப்போயினர் என உணர்க, சோடசதானம் - பதினறு வகைப்பட்ட கொடை. மா - குதிரை; மாபாற்பெற்ற மகம் - குதிரை யைக்கொண்டு செய்யவேண்டிய யாகம்: அசுவமேதம். பகல் - ஏழனுருபு. முற்றுகென - அகரவீறுதொகுத்தல், உவப்பான் - வினையெச்சம், ஆ - ஆக; ஈறுகெட்டது. இலக்காம் - வினைமுற்று. (19)

மருத்துயாகச்சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

# பரீட்சித்துற்பவ சருக்கம்.

பரீட்சித்துப்பிறந்ததைக்கூறும் சருக்கம் என்பது பொருள், உற்பவம் - பிறப்பு. அபிமன்யுவுக்கும் விராடன்மகள் உத்தரைக்கும் பரீட்சித்து பிறந்தான். இவன் கர்ப்பத்தினின்று இறந்தே பிறக்கக் கிருஷ்ணன் பாதம்பட்டதனுல் அந்தச்சிசுவுக்கு உயிர்உண்டா யிற்று, 'குலமெல்லாம் பரிக்ஷீணமானபின் இவன் பிறந்ததனுல், இவனுக்குப் 'பரிக்ஷித்து' என்பது பெயர் என்று சுபத்திரை பெயரிட்டாள்.

இந்தச்சருக்கத்தின் முதல்பத்துப்பாடல்களில் - தருமன்அத் தினபுரியில் அரசாளுகையும், அருச்சுனனும் கிருஷ்ணனும் இந்திரப் பிரத்தம்வந்து சிலநாள்தங்கிப் பின்னர் துவாரகை செல்ல விரும்பித் தருமனிடம் விடைபெறும்படி கிருஷ்ணன் அருச்சுனனேடு அத்தினபுரி வந்ததும், தருமன் தான் அசுவமேதம்புரியும் முன் கிருஷ்ணனை வரவேண்டும் என்று பிரார்த்தித்து விடையீந்ததும், கிருஷ்ணன் வரும்வழியிடை உதங்கமுனிவர் ஆச்சிரமத்தில் அவ ரைக்கண்டதும் கூறப்பட்டுள்ளன. இனி அவரோடு சம்வாதம் நிகழ்த்தியமையும், பின் துவாரகைசார்ந்து சிலநாள்தங்கி யாகத்துக்காகப் பலராமர் சுபத்திரைமுதலியவரோடு அத்தினபுரி வந்ததும் அப்போது பரீக்ஷித்து மரித்தே பிறந்ததும் அவனை உயிர்ப்பித்ததும் விடுபட்டுள்ள 18 செய்யுட்களில் கூறப்படுள்ள பொருளாகும்.

---

குறிப்பு:- இந்தச் சருக்கத்தின் முதல் பத்துப்பாடல்களே சுவடியில்காணப்படுகின்றன, மேலுள்ள பதினெட்டுப்பாடல்கள் விடுபட்டுள்ளதாகத்தெரிகிறது, மற்றும் அடுத்த 'பரிவலம்வந்தசருக் கத்தில்' முதலிலுள்ள 33பாடல்கள் விடுபட்டுள்ளதாகத்தெரிகிறது, 34 - ஆம்பாடலிலிருந்துதான் காணப்படுகிறது, ஆகமொத்தம் விடுபட்டுள்ள செய்யுட்கள் 51. இந்த 51 பாடல்களும் அடங்கி யுள்ள ஆறுஏடுகள் சுவடியின் இடையில் காணப்படவில்லை, எனவே கதைத்தொடர்ச்சியிடையீடுபடாமலிருப்பதற்காக அடி யேன் விடுபட்டபகுதிகளின் கதைச்சுருக்கத்தை உரைநடையில் காட்டியுள்ளேன்.

### வேறு.

**1. தருமன் அத்தினபுரிவந்து செங்கோலோச்சுதல்.**

மாதவ ருடனே வேத
வாதரா யணனுஞ் சூழற்
போதவே விடைதந் தாங்குப்
பொருந்தியே சிலநாள் மீட்டுந்
தாதையை முதலோர் சூழத்
தருமனு நகரி சார்ந்து
தீதற வுலக முற்றுஞ்
செலுத்தினன் செங்கோல் மன்னே.

(இ-ள்)மா தவருடன் - சிறந்த தவசியருடன், வேதவாதராயணனும் - வியாசனும், சூழல் போத - தங்கள் ஆச்சிரமம்செல்ல, விடை தந்து - அனுமதிகொடுத்து, ஆங்கு - அந்தக்கங்கையிடத்தே, சிலநாள் பொருந்தி - சிலநாட்கள் தங்கியிருந்து, மீட்டும் - மறுபடியும், தாதை - பெரிய தந்தையாகிய திருதராட்டிரன், ஐயை - தாயாகிய குந்தி காந்தாரி, முதலோர் சூழ - முதலியவர்கள் உடன்வர, தருமனும் —, நகரி சார்ந்து - அத்தினபுரியையடைந்து, உலகம் முற்றும் தீது அற - பூவுலகமுழுவதும் தீமைகள் அகலும்படி, செங்கோல் செலுத்தினன் - அரசு புரிந்தான்; (எ.று.)மன், ஒ - ஈற்றசை.

தாதை + ஐயை = தாதையை : நிலைமொழியீற்று ஐகாரம் கெட்டது.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள பத்துக்கவிகள் - பெரும்பாலும் ஒன்றுநான்காஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிவந்த கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1).

**2. அருச்சுனனும் கிருஷ்ணனும் இந்திரப்பிரத்தம் வருதல்.**

தந்திமா நகரிற் சின்னுள்
 தங்கிப்பின் னரனும் மாலும்
இந்திரப் பிரத்தஞ் செல்வான்
 இறையுழி விடைபெற் றஞ்சொற்
பைந்தொடி மாரும் தேரும்
 பரிகரி பதாதி மொய்ப்பச்
சிந்துவி னியங்க ளார்ப்பச்
 சென்றனர் தேரி னம்மா.

(இ-ள்) தந்திமா நகரில் - அத்தினபுரியில், சில்நாள் தங்கி - சிலநாட்கள் தங்கியிருந்து, பின் - பிறகு, நரனும் மாலும் - அருச்சுனனும் கிருஷ்ணனும், இந்திரப்பிரத்தம் செல்வான் - இந்திரப் பிரஸ்தம் செல்வதற்காக, இறை உழி - தருமனிடம், விடைபெற்று அனுமதிபெற்று, அம் சொல் பைந்தொடிமாரும் - இனியபேச்சினை யுடைய பெண்டிரும், தேரும் - தேர்களும், பரி - குதிரைகளும், கரி - யானைகளும், பதாதி - காலாட்படையினரும், மொய்ப்ப - (தம்மை) நெருங்கிவர, (மற்றும்) இயங்கள் - வாச்சியங்கள், சிந்துவின் ஆர்ப்ப - கடல்போல ஒலிக்க, தேரின் சென்றனர் - தேரிலேறிப் போயினர்; (எ.று.) அம்மா - அசை.

இந்த்ப்ரஸ்தம் என்ற வடமொழி, தமிழில் இந்திரப்பிரத்த மென விகாரப்பட்டது. ப்ரஸ்தம் என்ற வடசொல் - தங்குமிட மென்று பொருள்படும், இந்நகரம் அமைத்தற்கு இந்திரன் ஏவுதற் கருத்தாவாயினனுதலால், அவன்பெயரால் இதற்கு இந்திரப்பிரஸ்த மென்று பெயரிடப்பட்டதென்க. செல்வான் - வினையெச்சம் : பைந் தொடி - பண்புத்தொகை. பரிகரிபதாதி=உம்மைத்தொகை. இன் - உவமவுருபு. (2)

**3. இருவரும் இந்திரப்பிரத்தத்தில் தங்கியிருத்தல்.**

காண்டவப் பிரத்த மேவிக்
 கனகநற் றவிசி னேறி

ஈண்டிமே வலர்க டாழ
இருடியர் மறையோர் வாழ்த்தச்
சேண்டலத் தும்ப ரம்பொன்
தேன்மலர் மாரி பெய்ய
பூண்டவின் னரனும் மாலும்
பொருந்தியே யிருந்தார் மன்னே.

(இ-ள்) காண்டவப்பிரத்தம் மேவி - இந்திரப்பிரத்த நகரை யடைந்து, கனகம் நல் தவிசின் ஏறி - பொன்னாலாகிய நல்ல ஆதனத்தில் ஏறியிருந்து, மேவலர்கள் ஈண்டிதாழ - பகைவர்கள் திரண்டு வந்து பாதங்களில் வணங்க, இருடியர் - ரிஷிகளும், மறையோர் - அந்தணர்களும், வாழ்த்த - ஆசீர்வாதஞ்செய்து வாழ்த்த, சேண் தலத்து உம்பர் - விண்ணுலகத்துத்தேவர்கள், அம் பொன் தேன்மலர் மாரி பெய்ய - அழகியபொன்போன்ற தேன்துளிக்கும் பூமழையைப்பொழிய, வில் பூண்ட நரனும் - காண்டீபம் என்னும் வில்லைத்தரித்த அருச்சுனனும், மாலும் - கிருஷ்ணனும், பொருந்தி இருந்தார் - தங்கியிருந்தார்கள்; (எ.று.) மன், ஒ - ஈற்றசை.

காண்டவன் என்பது - இந்திரனதுபெயர்களுள் ஒன்றென்று சப்தார்ணவமென்னும் வடமொழிநிகண்டிற் கூறியிருத்தலால், காண்டவப்பிரத்தம் என்பது இந்திரப்பிரத்தத்திற்காகியது. மேவலர் - பொருந்தாதவர் : பகைவர். தவிசு - சிம்மாதனம் எனவுமாம், உம்பர் - மேலிடம் : தேவர்க்கு இடவாகுபெயர், மலர்மாரி - உருவகம். (3).

4. அருச்சுனனுக்குக் கிருஷ்ணன் மீண்டும் முன் உணர்த்திய தத்துவங்களையுணர்த்தல்.

இருந்திடு நாளி லோர்நாள்
எந்தையை விசய னேக்கித்
தெரிந்திட வமரி லெற்குத்
தெரித்ததத் துவங்க ளென்கோ

பொருந்தலர் கோல்வீழ் சோபப்
புணரியாழ்ந் திழந்தேன் மீட்டும்
பரிந்துணர்த் தெனமான் முன்போற்
பகர்ந்தனன் கருணை கொண்டே.

(இ-ள்) இருந்திடும் நாளில் - இந்திரப்பிரத்தத்தில் தங்கியிருந்த போது, ஓர் நாள் - ஒரு தினம், எந்தையை - கிருஷ்ணபகவானை, விசயன் நோக்கி - அருச்சுனன் பார்த்து, "அமரில் - குருக்ஷேத்திரப் போர் தொடங்குமுன், எற்கு - எனக்கு, தெரிந்திட - அறியும்படி, தெரித்த - கூறியருளிய, தத்துவங்கள் என்கோ - தத்துவப்பொருள் கள் என்னவோ? பொருந்தலர் - பகைவர்களது, கோல் - அம்பு களால், வீழ் சோபப்புணரி ஆழ்ந்து - விழுந்த துயரக்கடலில் மூழ்கிப் போய், இழந்தேன் - நீர் கூறிய தத்துவங்களையெல்லாம் மறந்திழந்து போனேன்: மீட்டும் - மறுபடியும், பரிந்து - என்மேல் இரக்கங்கொண்டு, உணர்த்து - சொல்வாயாக,' என - என்று பிரார்த்திக்க, மால் - திருமாலாகிய கிருஷ்ணன், கருணை கொண்டு- கிருபை வைத்து, முன்போல் பகர்ந்தனன் - முன்போலவே சொல்லினான்; (எ. று.)

தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் போர் தொடங்குமுன் அருச்சுனன் சோகித்து 'வில்லெடேன்' என்று கைவாங்க, கிருஷ்ணன் பல தத்துவங்களை யுபதேசித்துத் தெளிவிக்க, அவன் "கரிஷ்யே வசனம் தவ" என்று போர் தொடங்கினான். இத் தத்து வங்கள் பகவத் கீதையென்றும் யோக சாஸ்திரம் என்றும் போற்றப் படுகின்றன. போர்முடிந்தபின் அருச்சுனன் 'கிருஷ்ணா! நீ போர் தொடங்குமுன் என்னவோ கூறினாயே, அவையென்ன' என்று சொன்னபோது அவன் பதறிப்போனான்: இதனை நம்பிள்ளை ஈடு வெகுரசமாகத் தெரிவிக்கிறது. (திருவாய்மொழி: 3-4-6-) "மால் என்கோ — ஆச்ரித விஷயத்தில் வ்யாமுக்தனென்பேனோ........" திரௌபதி குழலை விரித்துக் கிடக்கையாலே அது முடிக்கைக்காக, செய்வதறியாமையாலே மூலையில் கிடந்தாரை முற்றத்தேயிட்டான்: பின்னை அர்த்தத்தின் சீர்மையை அநுஸந்தியா 'ஆர் அதிகாரி களாகச் சொன்னோம்? கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே யிட்டோம்" என்று பதண் பதண் என்றான் காணும்" என்று பட்டர் நஞ்சீயருக்கு அருளிச்செய்தார். (பதண்பதண் என்றான் - தபித் தான் என்றபடி).

சோபப்புணரி - உருவகம். உணர்த்து - வியங்கோள். (4)

5. அருச்சுனன் கிருஷ்ணனைத்தோத்தரித்தல்.

தத்துவ நிலைகள் மாயோன்
சாற்றிடப் பார்த்தன் ஓர்ந்தே
இத்தகை யொன்று நாயேற்
கிறப்பொடு பிறப்பின் மார்க்க
முத்தியை யுணர்த்தி யாண்ட
முராரியே ! அராவிற் றுஞ்சும்
அத்தனே ! என்று பல்கால்
அடிபணிந் தேத்தி னுல்.

(இ-ள்) தத்துவநிலைகள் - கர்ம பக்தி ஞானபிரபத்தியாகிய தத்துவங்களின் பண்புநிலைகளை, மாயோன் - கிருஷ்ணன், சாற்றிட- மீண்டும் சொல்ல, பார்த்தன் - அருச்சுனன், ஓர்ந்து - அறிந்து, 'நாயேற்கு - நாய் போறக்கடைப்பட்டவனுகிய எனக்கு, இ தகை ஒன்று - இப்படிப்பட்ட (மேன்மையான) தத்துவங்களை யுபதேசித்து (அவற்றின் மூலம்) இறப்பொடு பிறப்பு இல் மார்க்கம் - மரண ஜன்மங்களில்லாத உபாயத்தைக்கூறி, (இறுதியில் அடைய வேண்டிய) முத்தியை - மோட்சத்தை, உணர்த்தி - (யான்) தெளிய அறிவித்து, ஆண்ட - (அடியனை) ஆட்கொண்டருளிய, முராரியே! - விட்டுணுவே! அராவில் துஞ்சும் அத்தனே - ஆதி சேடனுகிய பாம்பின்மேல் யோகநித்திரை செய்யும் திருமாலே! என்று—, பல்கால் - பலதடவை, அடி பணிந்து-பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ஏத்தினுன் - துதித்தான்; (எ. று.) ஆல் - ஈற்றசை.

இறப்பொடு பிறப்பில் மார்க்கமாவது - மரணமிலாப் பெரு வாழ்வுக்கான உபாயம்; அதாவது- "மாமேகம் சரணம் வ்ரஜ" என்றது, முக்தியை உணர்த்தியதாவது - 'அஹம்த்வா ஸர்வபா பேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாச:' என்றது. அடிபணிந்தது - தேருக்குக் கீழே நாற்றிய திருவடிகளைக் காட்டினனுதலின்? "சரண மாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானுல் வைகுந்தங் கொடுக்கும் பிரான்," என்ருர் நம்மாழ்வாரும் (திருவாய்: 9-10-5...). முராரி - முரன் என்னும் அசுரனையழித்தவன் என்ற காரணம் பற்றி விஷ்ணுவைக் குறிக்கும். இவ்வசுரன் நரகாசுரனுக்கு மந்திரி. கிருஷ்ணன் நரகாசுரனைக் கொன்ற காலத்திலேயே இவனும் கொல்லப்பட்டான். கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரம். (5)

**6. கிருஷ்ணன் துவாரகை செல்ல எண்ணமிடல்.**

இவ்வணம் துதித்துப் பார்த்தன்
இருள்வண னுடனவ் வூரிற்
செவ்வண நெறிக டாங்கிச்
சிலதுநா ளிருப்ப மாயோன்
மைவண விசைய னேக்கி
வளம்பெறு துவரை யுள்ளார்
எவ்வண மிருக்கின் றுரோ
எய்தியோர்ந் திடுதல் வேண்டும்.

(இ-ள்) பார்த்தன் - அருச்சுனன், இ வணம் துதித்து - இந்த வகை தோத்திரஞ்செய்து, இருள் வணனுடன் - கரியகிருஷ்ண னுடன், அ ஊரில் - அந்த இந்திரப்பிரத்தத்தில், செவ்வணம் - செவ்வியமுறையில், நெறிகள் தாங்கி - அரசதர்மங்களைக் கடைப் பிடித்தொழுகி, சிலதுநாள் இருப்ப - சிலநாட்கள் தங்கியிருக்க, மாயோன் - கிருஷ்ணன், மை வண விசயன் நோக்கி - கருநிறம் பொருந்திய அருச்சுனனைப் பார்த்து, "வளம் பெறு துவரை உள்ளார் - வளப்பம் பொருந்திய துவாரகையிலிருப்போர், எ வணம் இருக்கின்றுரோ?, - எவ்வகை நிலையிலுள்ளாரோ? எய்தி – நான் சென்று, ஓர்ந்திடுதல் வேண்டும் - அறிந்திடுதல் வேண்டும்; (எ.று.) "ஆதலால் தருமன்பாற்போய்" என மேலைச் செய்யுளில் தொடரும்.

அருச்சுனன் கருநிறமுடையனுதலின், கிருஷ்ணன் என்னும் பெயர் உண்டு. துவரை - துவாரகை யென்பதன் மரூஉ. சிலது நாள் - ஒருமைப்பன்மை. (6)

**7. கிருஷ்ணர்ச்சுனர் அத்தினபுரி யடைதல்.**

ஆதலாற் றருமன் பாற்போய்
அறித்திதை விடைபெற் றெய்தல்
நீதியாம் வருதி யென்று
நேயனே டிரத மீக்கொண்

டோதையி னியுங்க ளார்ப்ப
உம்பன்மா நகரி யுள்ளார்
ஆதரத் தெதிர்கொண் டேத்த
அந்நகர் துன்னி னுனல்.

(இ-ள்) ஆதலால் —, தருமன்பால் போய் - தருமபுத்திர னிடத்துச் சென்று, இதை-(துவாரகைபோய் வரும்) இந்தச் சங்கதியை, அறித்து - தெரிவித்து, விடைபெற்று எய்தல் - அனுமதிபெற்று வருதல், நீதியாம் - முறைமையாகும், வருதி - (உடன்) வருவாயாக, என்று - என்று கூறி, நேயனேடு - சிநேகிதனுகிய அருச்சுனனேடு, இரதம் மீக்கொண்டு - தேரிலேறிக்கொண்டு, இயங்கள் - வாச்சியங்கள், ஓதையின் ஆர்ப்ப - பேரொலியெழுப்பி ஆரவாரிக்க, உம்பல் மா நகரி உள்ளார் - அத்தினபுரியில் உள்ளவர்கள், ஆதரத்து - மிக்க அன்புடன், எதிர் கொண்டு ஏத்த - எதிர் கொண்டழைத்துப் போற்ற, அ நகர் - அந்த அத்தினபுரியை, துன்னினுன் - அடைந்தான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

அறித்து - அறிவித்து என்றதன் சிதைவு. எய்தல் - தொழிற்பெயர். வருதி - முன்னிலேயேவல். உம்பல் - யானை, அத்தி; எனவே அத்தினபுரியை உம்பல் மாநகரி என்றுர், குருதிக்கோட்டுக் குஞ்சர நகரம் என்பது போல. (7)

**8. கிருஷ்ணன் துவாரகை சென்றுவரத் தருமன் விடையீதல்.**

ஆசிசொற் றவரைப் போற்றி
அடிபணிந் தவரை வாழ்த்தி
வாசமாந் துவரை சென்று
வருதுமென் றரச னேடு
கேசவ னுணர்த்த சாபக்
கிரீடிபா லவன்கேட் டைய!
பேசிய வேள்வி செய்முன்
பெயர்கென விடைதந் தானே

(இ-ள்) ஆசி சொற்று - (எதிர்கொண்ட) நகரமாந்தர்க்கு ஆசீர் வாத மொழிகளைச் சொல்லி, அவரைப் போற்றி - அவர்களைப் பாராட்டி, (மேலும்) அடிபணிந்தவரை - தமது பாதங்களில் வணங்கியவரை, வாழ்த்தி - (மங்களமுண்டாகும்படி) வாழ்த்துக் கூறி, (பின்பு) அரசனோடு - தருமனோடு, 'வாசமாம் - வசிக்குந்தான மாகிய, துவரை - துவாரகைக்குப்போய், வருதும் — (பின்) வருகின் றேன்', என்று கேசவன் உணர்த்த - என்று கிருஷ்ணன் [குறிப் பால்] தெரிவிக்க, அவன் - அத் தருமன், சாபக் கிரீடிபால் கேட்டு- (காண்டீபம் என்னும்) வில்லையேந்திய அருச்சுனனிடத்து அதனைப் பற்றிக் கேட்டுத் தெளிந்து, 'ஐய! - கிருஷ்ண! பேசிய வேள்வி செய் முன் - பேசி நிர்ணயித்த அசுவமேதத்தைச் செய்யும் முன்னரே, பெயர்க என - நீர் திரும்பி வருவீராக என்று, விடை தந்தான் - அனுமதியீந்தான்; (எ.று.) ஏ - ஈற்றசை.

வருதும் - தனித்தன்மைப்பன்மை. பெயர்கென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (8)

**9. கிருஷ்ணன் தேரேறி நால்வகைப்படையோடு துவாரகைக்குப்புறப்படுதல்.**

நிணங்கமழ் வேலா னுய்ப்ப
நெடியவ னிளைஞ னோடுஞ்
சுணங்குபூத் தொளிருங் கொங்கை
சுபத்திரைக் கொடியி னோடும்
கணங்கொண்மா மணித்தே ரியானை
கந்துகங் காலா ளோடும்
வணங்கித்தா ரகன்றே ரூர
மாநகர் கடந்து போந்தான்.

(இ-ள்) நிணம் கமழ் வேலான் - தசை நாற்றம் வீசும் வேலா யுதத்தையேந்திய தருமன், உய்ப்ப - விடை கொடுத்தனுப்ப, நெடி யவன் - கிருஷ்ணன், இளைஞனோடும் - தம்பியாகிய சாத்தகி யோடும், சுணங்கு பூத்து ஒளிரும் கொங்கை - அழகுத் தேமல் படர்ந்து விளங்கும் முலையிணையுடைய, சுபத்திரை கொடியினோடும்- மெல்லிய கொடிபோல் ஒசியுந்தன்மையுள்ள சுபத்திரையோடும்,

கணம் கொள் - கூட்டமாயுள்ள, மா - பெரிய, மணி தேர் - மணிகள் கட்டியுள்ள தேர்கள், யானை - யானைகள், கந்துகம் - குதிரைகள், காலாளோடும் - பதாதிகள் ஆகிய நாற்படையினோடும், தாரகன் - தாரகன் என்னும் பெயரையுடைய சாரதி, வணங்கி - பணிந்து, தேர் ஊர - தேரினைச்செலுத்த, மா நகர் கடந்து - சிறந்த அத்தினபுரியை நீங்கி, போந்தான் - சென்றான்; (எ.று)

காலாளோடும் - உம்மை முன்னருங் கூட்டிக்கொள்க. (9).

**10. வழியிடையில் கிருஷ்ணன் உதங்கனாச்சிரமத்தில் அவரைக்கண்டு வணங்குதல்.**

பிரிவினுக் கிரங்கி நீங்காப்
பின்வரு விசையன் றன்னைப்
பரிவினிற் றழீஇக்கொண் டின்சொற்
பலசொலி நிறுவிச் செல்லும்
அருநெறி யிடையு தங்க
னாசிர மஞ்சென் றந்தத்
திருமுனி தன்முன் னெய்தத்
தேரிழிந் திறைஞ்சி னானால்.

(இ-ள்)பிரிவினுக்கு இரங்கி - கிருஷ்ணன் (தன்னைப்)பிரிந்து போதலுக்கு வருந்தி, நீங்கா பின்வரும் விசையன் தன்னை - விட்டுநீங்காமல் பின்னாலேயே தொடர்ந்துவரும் அருச்சுனனை, பரிவினில் - அன்போடு, தழீஇக்கொண்டு - கட்டியணைத்து, இன் சொல் பலசொலி - இனியசொற்கள் பலவற்றைச் சொல்லி, நிறுவி - அவனை நிறுத்தி, செல்லும் - மேலே தேரூர்ந்துபோகும், அருநெறி யிடை - அரியவழியின் நடுவில், உதங்கன் ஆசிரமம் சென்று - உதங்கமுனிவன் ஆச்சிரமத்தைப் போயடைந்து, அந்தத் திருமுனி - அந்தச்சிறந்த முனிவன், தன் முன் எய்த - தனக்கு முன்னே எதிர்கொண்டுவர, தேரிழிந்து - (தான் ஏறியிருந்த) தேரினின்று இறங்கி, இறைஞ்சினான் - (அம் முனிவனை) வணங்கினான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

தழீஇக்கொண் - அளபெடை அலகுபெறவில்லை. (10).

[இனி,மேல்வரும்கதைச்சுருக்கம் - உதங்கர் கிருஷ்ணனை நிந்தித்துக் கௌரவர் நாசத்துக்காகச் சபிப்பதாகச் சொல்ல, கிருஷ்ணன் உண்மையை அவருக்குச்சொல்லி, தம் மகிமையை உதங்கருக்குத்தெரிவித்துத் தம்சொல்லைக்கேளாமையால் துரியோதனாதியர் அழிந்தனரென்றுகூறினார், மேலும் அவருக்குத் தமது விசுவரூபத்தைக்காட்டி, அவருக்கு நீர்வேட்கைவருந்தோறும் தீர்த்தம் கிடைக்கும்படி வரமளித்து, இந்திரனை உதங்கருக்கு அமிர்தம் கொடுக்கச்சொன்னார். இந்திரன் சண்டாளவடிவத்துடன் அமிர்தம் கொடுக்கவர, உதங்கர் ஏற்கமறுத்தார். பின் கிருஷ்ணன் பாலைநிலத்திலும் ஜலம்கிடைக்கும்படி உதங்கருக்கு வரமளித்தார். வரத்தைக்கொடுத்துவிட்டுச் சாத்தகியுடன் துவாரகையடைந்தார்.

[குறிப்பு:-இந்த உதங்கர்தான் ஜனமேஜயனைச் சர்ப்பயாகஞ் செய்யத் தூண்டியவர். இவர் வரலாறு முன்னர் ஆதிபருவத்து உதங்கச்சருக்கத்தில் கூறப்பட்டது].

துவாரகையில் கிருஷ்ணன் பெற்றோரை வணங்கிப்பின் தந்தை வசுதேவர்முதலானவர்களுக்குப் பாரதயுத்தத்தைச்சொல்ல, அபிமன் இறந்தமைகேட்டு வசுதேவர் மூர்ச்சையடையக்கிருஷ்ணன் தெளிவித்துத்தேற்றினார்; இஃது இங்ஙனாக.

அத்தினபுரியில், தருமர் வியாசரின்சொற்படி யாகத்துக்குத் திரவியம்கொணர்தற்குத் தம்பியருடன் இமயமலைச்சாரல் சார்ந்து ஆங்குச்சிவபிரான் அருளினால் மருத்தனுடைய திரவியம்பெற்று வரச்சென்றிருந்தார். அச்சமயத்து, கிருஷ்ணன் சுபத்திரை பலராமர்முதலியவருடன் யாகத்திற்காக அத்தினாபுரம் வந்தார். திருதராட்டிரனும் விதுரனும் முறைப்படி வரவேற்றனர். அங்குத் தங்கியிருக்கையில் உத்தரைக்குப் பரீக்ஷித்துப்பிறந்தான். அச் சிசு மரித்தேபிறந்தது. அதுகண்டு குந்தியுள்ளிட்ட அனைத்துப்பெண்டிரும் அழ, அக்குரல்கேட்டுக் கிருஷ்ணன் அங்குச்செல்ல, சுபத்திரை கிருஷ்ணனைத்துதித்துப் பரீக்ஷித்தைப்பிழைப்பிக்கும்படி வேண்டினள். கிருஷ்ணன் உத்தரையின் பிரஸவ அறையில் நுழைந்ததும், உத்தரை புலம்பிக்குழந்தையைப் பிழைப்பிக்கும்படி அவரைவேண்ட, கிருஷ்ணன் எல்லா உலகத்திற்கும் கேட்கும்படி பின்வருமாறு பிரதிஜ்ஞைசெய்தார்: — "உண்மையும் தர்மமும்என்னிடத்தில் எப்பொழுதும்நிலைபெற்றிருக்குமானால், எனக்குத்தர்மத்திலும் பிராம்மணரிடத்திலும் அதிகமான பிரியம் இருக்குமானால், ஒருபொழுதும் அர்ஜுனனிடத்தில் விரோதத்தை எண்ணாமையிருப்பது உண்மையானால், நான் கம்சனையும்கேசியையும்தர்ம

மாகக்கொன்றது உண்மையானல், பிரமசரியமெனும் விரதந்தினமும் எனதகத்தே விளங்குந்தகைமை மெய்யானுல், மரித்த இந்தக் குழந்தை ஜீவிக்கட்டும்'' என்று! இங்ஙனஞ் சபதஞ்செய்து குழந்தையைத்தமது பாதத்தால் கால்முதல் தலைவரையில் தட விஞர். கிருஷ்ணர் தொட்டவுடன் குழந்தை உயிர்பெற்றது. அப்போது அவர், ''அபிமன்யுவின்புத்திரஞன இந்தக்குழந்தை, குல மானது பரிக்ஷீணமானபோது பிறந்ததால் இவனுக்குப்பெயர் ''பரிக்ஷித்''என்றுசொல்லிப்பெயரிட்டார், இவன்பிறந்து ஒருமாதம் ஆனவுடன், தருமன்தம்பியரோடு திரவியத்தை எடுத்துக்கொண்டு வந்தார், கிருஷ்ணன் அந்தப் பாண்டவரை எதிர்கொண்டழைத்தான். பிறகு வியாசர் அசுவமேதத்தைச் செய்யச்சொல்லி, யாகக் குதிரையைச்சுற்றவிடும்படி தருமனுக்குக்கூறிஞர், அவர் குதிரையைக்காக்க அர்ஜுனனை நியமித்தார்.]

பரீட்சித்துற்பவ சருக்கம் முற்றிற்று.

மூன்ருவது

# பரிவலம்வந்த சருக்கம்

யாகக்குதிரை பூமியைச்சுற்றிவந்தமையைப்பற்றிய சருக்கம் என்பது பொருள்.

[இச்சருக்கத்தின் தொடக்கத்தில் விடுபட்டுள்ள முப்பத்து மூன்றுசெய்யுட்களின் கதைச்சுருக்கம் பின்வருமாறு;— அர்ச்சுனன் அக்குதிரையைத் தொடர்ந்து முதலில் வடதிசையில்சென்ருன் ; அங்கே எதிர்த்த அரசர்களை வென்ருன் ; பிறகு திரிகர்த்தர்களை வென்று மகத நாட்டுப் பிராக்ஜோதிஷநகர் சென்று அதன் அரசனாகிய பகதத்தகுமாரன் யஜ்ஞதத்தனை ஜெயித்து, அடுத்து வரப்போகும்சித்ராபூர்ணிமையில் நடக்கப்போகும் அசுவமேதத்திற்கு வரவேண்டுமென்று அழைத்தான், பிறகு அருச்சுனன் சிந்துதேசம் சென்று ஸைந்தவர்களுடன் போர்புரிகையில், அவர்கள் சரமாரியாகப்பொழிய அந்தப் பாணஸமூகத்தாற் சூழப்பட்ட அருச்சுனன்கையிலிருந்து காண்டீபமும் கையுறையும்கீழே விழுந்தன, அப்போது தேவரிஷிகளின் ஜபத்தால் அர்ச்சுனன் மறுபடியும் புதியபலம்பெற்றுப் போர்புரிந்தான், அப்போது துச்சளை [சயத்திரதனின் மனைவி]தனது பேரனாகிய பாலனையழைத்துவந்து அருச்சுனனைநோக்கி 'இவன்தந்தையாகிய ஸுரதன் தன்தந்தையாகிய சயத்திரதன் உன்னாற்கொல்லப்பட்டமைகேட்டுத் துக்கத்தில் ஆழ்ந்திருந்தான். இப்போது நீர் குதிரையைத்தொடர்ந்து யுத்தத்திற்குவந்திருப்பதைக்கேட்டு உயிர்துறந்தான் : ஆகையால், துஷ்டனும் கொடியவனும் மிக்கதீங்கிழைத்தவனும் இவனுடைய பாட்டனுமான சயத்திரதனை மறந்து, இவனை அனுக்கிரஹம்செய்ய வேண்டும்' என்று வேண்டினாள். அப்படியே அருச்சுனன் கருணை புரிந்தான்.

இவ்விதம் ஸைந்தவவீரர்களை வென்று மேலும்குதிரையைப்பின் தொடர்ந்துசென்ருன், பிறகு கலிங்கம் குலிங்கம்கடந்து விந்திய மலைக்குத்தென்புறம்வந்து நீலன் என்னும் அரசனை வென்று **மணலூரபுரம்** அடைந்தான் அருச்சுனன். ஆங்கு அவன்மகன் **பப்ருவாஹனன்** (சித்திராங்கதைக்குப்பிறந்தவன்) தந்தைவந்திருப்பதைக்கேட்டுமரியாதையோடு காணவர, அருச்சுனன் அவனை நோக்கி 'உன்னுடைய தேசத்தின் எல்லையில் வந்திருக்கும்

என்னுடன் போரிடாமல் யுத்தத்திற்கு வந்திருக்கும்என்னைப் பெண் பால்போல் நல்வார்த்தையுடன் வரவேற்றாய் : ஆதலால் நீஜீவித் திருப்பதால் பயனில்லை ; நான் ஆயுதமில்லாமல் உன்னிடம்வந் திருந்தால் அப்பொழுது இந்தக்காரியம் உனக்கு ஏற்றதாகும்' என்று சொன்னான். அதுகேட்டிருந்த பப்ருவாஹநனை நாககன்னி கையும் அருச்சுனனின்மற்றொருமனைவியுமாகிய உலூபி போரிடத் தூண்ட, அவள் தூண்டுதலால் பப்ருவாஹநன் பாணந்தொடுக்க அர்ச்சுனன் விழுந்தான் ; பிறகு பப்ருவாஹநன் துக்கத்தால் மயக்கமடையத் தாய் சித்திராங்கதை கேட்டுப் போர்க்களம்வந்து தரையில் விழுந்துகிடக்கும் கணவனையும், தனயனையும் கண்டு புலம்பி மயங்கிவிழுந்தாள் ; பின்பு தெளிந்து உலூபியைப் பலபடிநிந்தித்துநிற்ப, பப்ருவாஹநன் நினைவுவந்து தன்னை நொந்து பிராயோபவேசம் செய்ய நினைத்தான் : பிறகு பிதாவைக் கொன்ற படுபாவிக்கு என்ன பிராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது என்று கேட்டு அதனை மேற்கொள்ள நிச்சயித்தான் என்பது.] (33)

**34. பிதாவின்கொலைக்குப் பிராயச்சித்தமேயில்லையெனப் பப்ருவாஹனன் வருந்துதல்.**

ஈராறு வருட மீன்றோன்
கபாலத்திற் பலியேற் றுண்டும்
தீராது தந்தை கொன்ற
தீவினை யிஃதோ ராமற்
போராடி வதைத்த தெந்த
புந்திகொண் டென்ன மைந்தன்
ஆராய்ந்து பார்க்கி றந்தை
படுபவ மகற்றொ ணாதே.

(இ-ள்) ஈராறு வருடம் - பன்னிரண்டாண்டுகள், ஈன்றோன் கபாலத்தில் - பெற்றெடுத்த பிதாவின் மண்டையோட்டில், பலி யேற்று - பிச்சையெடுத்து, உண்டும் - புசித்தும், தந்தை கொன்ற தீவினை தீராது - பிதாவினைக்கொன்ற பாவம் ஒழியாது ; இஃது ஓராமல் - இதனைத் தெரிந்துகொள்ளாமல், போராடி - என் பிதா வோடு போர்செய்து, வதைத்தது - அவரைக்கொன்றது, எந்த புந்திகொண்டு - எந்த புத்தியைக்கொண்டு, என்ன - என்றுகூறி,

மைந்தன் - பப்ருவாஹனன், 'ஆராய்ந்து பார்க்கில் - யோசித்துப் பார்த்தால், தந்தை படு பவம் - பிதாவைக்கொன்ற பாவம், அகற்ற ஒண்ணாது - நீக்கவேமுடியாது; (எ.று.) "...."யான் நனிவாழேனென்று" என் மேலைக்கவியிற்றொடரும்.

பிதாவைக்கொன்ற மிகக்கொடிய பாவியானஎனக்கு என் பிதாவினுடைய தோலையுடுத்து அவருடைய மண்டையோட்டி லேயே பிச்சையெடுத்துண்டு பன்னிரண்டுவருஷம் கஷ்டப்பட்டுச் சஞ்சரிப்பது இந்தக்கொலைக்கு இப்பொழுது பிராயச்சித்தமாகும். இப்போது வேறுபிராயச்சித்தமில்லை : ஆராய்ந்துபார்க்கின், பிதா வின் கொலைப்பாவம் அகற்றவே முடியாது எனப் பப்ருவாஹனன் வருந்தினனென்க. படுபவம் - கொன்றபாவம்.

இச்செய்யுள் - பெரும்பாலும் முதற்சீர் காய்ச்சீரும் நான்காஞ்சீர் விளச்சீரும் ஏனையநான்குசீர்கள் மாச்சீருமாய்வந்த அறுசீராசிரிய விருத்தம். (34)

**35. பப்ருவாஹனன் உயிர்விடத்துணிய, உலூபி தடுத்தல்.**

அன்னைவந் துய்த்த வாற்றல்
அத்தனைச் செற்றேன் மற்றோன்
இன்னிலத் துய்ந்தி டானேல்
யானனி வாழே னென்று
தன்னையீன் றவளோ டாவி
தணந்திடத் துணிய நாகக்
கன்னிமுன் தடுத்தங் கீன்றோன்
கழலுளங் கருதி னாளால்

(இ-ள்) அன்னைவந்து - உலூபியாகிய தாய் வந்து தூண்டிய வகையால், அத்தனை - தகப்பனாராகிய அருச்சுனனை, செற்றேன் - கொன்றேன்; மற்றோன் - அந்த அருச்சுனனாகிய பிதா, இந்நிலத்து- இந்தப்பூமியில்(இப்போது), உய்ந்திடானேல் - உயிர்பிழைக்காமற் போனால், யான் - (அவரைக்கொன்ற பாவியாகிய) நான், நனி வாழேன் - நன்கு உயிர்வாழமாட்டேன், என்று - என்று கூறி வருந்தி, தன்னை ஈன்றவளோடு - தன்னைப்பெற்ற தாயாகிய

சித்திராங்கதையோடு, ஆவி தணந்திடத் துணிய-உயிரைவிடுத்தற்கு முடிவுசெய்ய, (அப்போது), நாகக்கன்னி - உலூபி, முன் - முன்னே வந்து, தடுத்து—, அங்கு - அவ்விடத்து (அப்போது) ஈன்றோன் - தன்னைப்பெற்ற தந்தையாகிய நாகராசனின், கழல் - திருவடிகளை, உளம் கருதினாள் - மனத்தில் தியானித்தாள்; (எ.று.)ஆல்-ஈற்றசை.

'இந்நிலத்து' என்பது 'இன்னிலத்து' என எதுகைநோக்கி வந்தது. நனி - உரிச்சொல். ஈன்றோன் - வினையாலணையும்பெயர்.

இச்செய்யுள் - முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீரும், ஏனைய நான்கும் மாச்சீருமாய்வந்த **அறுசீராசிரியவிருத்தம்.** (35)

வேறு.

**36. ஸஞ்சீவனமணியால் அருச்சுனன் உயிர்பெற்றெழுதல்.**

சிந்தித்திடு முனமீன்றவன் சிந்தாமணி யுய்ப்ப
வந்தங்கது கரமேறிட மகனுக்கவ ணல்கி
உந்தைத்திரு வுரம்வைத்திதை யுயிர்மீட்குதி யெனச்சேய்
அந்தப்படி செயமன்றுயில் அகல்வாரினெ ழுந்தான்.

(இ-ள்)சிந்தித்திடும் முனம் - உலூபி தியானித்தவுடனே, ஈன்றவன் - நாகராசன், சிந்தாமணி - ஸஞ்சீவனம் என்னும் மணியை, உய்ப்ப - செலுத்த, அது - அந்த மணி, வந்து - (உலூபியிடம்)வந்து, கரம் ஏறிட - கையில் அமர, (அதனை) மகனுக்கு - பப்ருவாஹனனுக்கு, அவண் - அவ்விடத்துக்கொடுத்து, 'இதை - இந்த ஸஞ்சீவனமணியை, உந்தை திரு உரம் வைத்து - உன்பிதாவின் அழகியமார்பின்மேல்வைத்து, உயிர் மீட்குதி-உயிரை மீட்பாயாக,' என - என்று சொல்ல, சேய் - மகனாகிய பப்ருவாஹனன், அந்தப்படி செய - அவள் சொன்னபடியே பிதாவின் மார்பில் வைக்க, மன் - அருச்சுனன், துயில் அகல்வாரின் - தூக்கம் நீங்கியவர்போல, எழுந்தான் – விழித்தெழுந்தான்; (எ.று.)

ஸஞ்சீவனமணியென்பது நாகர்களுக்கு முக்கியகதியான மணி. அது இறந்தவரைப் பிழைப்பிக்கும் சக்திவாய்ந்தது. அதனை இங்கு 'சிந்தாமணி' என்ற சொல்லாற் குறித்தார்; சிந்தாமணியென்பது தேவலோகத்துள்ளதோர் தெய்வீகமணி. மீட்குதி - ஏவல். இன் - உவமவுருபு. ஈற்றடியில் **உவமையணி.**

இதுமுதல்எட்டுக்கவிகள் - பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும் மற்றவைமூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிவந்த கலி விருத்தங்கள். (36)

37. எழுந்த அருச்சுனன் அனைவரும் துக்கித்ததற்குக் காரணம் வினவல்.

அன்பாற்பெய மலர்வானவ ராவிப்பெறும் விசயன்
தன்பாரியர் மகன்வேதியர் தளமும்மிகக் கலுழுந்
துன்பாய்ந்திது வேதென்றடி தொழுசேய்சொல வோர்ந்து
பின்பாகுல முறுவார்மகிழ் பெறவின்சொல் புகன்றான்.

(இ-ள்)வானவர் - தேவர்கள், மலர்-பூக்களை, அன்பால் பெய - விசுவாசத்தோடு பொழிய, ஆவிபெறும் விசயன் - உயிர்பெற் றெழுந்த அருச்சுனன், தன் பாரியர் - தன்மனைவியராகிய சித்திராங்கதை உலூபி, மகன் - பப்ருவாஹனன், வேதியர் - அந்தணர், தளமும் - சேனையர் முதலிய அனைவரும், மிகக் கலுழும் துன்பு ஆய்ந்து - மிகுதியாகக் கலங்கியழுகின்ற துயரத்தைப்பார்த்தறிந்து, இது ஏது என்று - இது எதனால் என்றுவினவ, சேய் - மகனாகிய பப்ருவாஹனன், அடி தொழு சொல - (தந்தையின்) பாதங்களை வணங்கிக்காரணம் சொல்ல, ஓர்ந்து - விஷயங்களை யறிந்து, பின்பு - பிறகு, ஆகுலம் உறுவார் - துன்பமடைந்தவர்கள், மகிழ் பெற - மகிழ்ச்சியடையும்படி, இன் சொல் - இனியவார்த்தைகளை, புகன்றான் - சொல்லினான்; (எ.று.)

அனைவரும் வருந்துதற்கு அருச்சுனன் காரணம் வினவ, பப்ருவாஹனன் அறிவிக்க அவன் அறிந்தான் என்றபடி. (37).

38-41- உலூபி தாங்கள் போர்க்களம் வந்ததற்கும் புத்திரனால் அருச்சுனன் வீழ்ந்ததற்கும் மீண்டுஉயிரோடு எழுந்ததற்கும் காரணங்கூறிவிவரம் தெரிவித்தல்.

நான்குகவிகள் - ஒரு தொடர்.

உரகக்கொடி தனைநோக்கியிங் குறுபான்மையும் மைந்தன்
பொரவுய்த்தெனைக் கொல்வித்ததும் பிழைப்பித்ததும்
என்னே

உரைசெய்யென வவள்சொற்றன ளொருநாளறல்
படிவான்
திரைகங்கையி னுற்றேனவண் சேர்ந்தேயெழு வசுக்கள்.

(இ-ள்)(அருச்சுனன்) உரகக்கொடிதனை நோக்கி - நாககன்னிகையாகிய உலூபியைப்பார்த்து, இங்கு - இவ்விடத்துப்போர்க்களத்துக்கு, உறு - வந்துசேர்ந்த, பான்மையும் - வகையினையும், மைந்தன் - பப்ருவாஹனனை, பொர - (என்னுடன்) போரிடும்படி, உய்த்து - அனுப்பி, எனைக் கொல்வித்ததும் - என்னை மாளச் செய்ததும், பிழைப்பித்ததும் - மீண்டுஉயிர்பெற்றெழச் செய்ததும், என் ஓ? - என்ன காரணம்பற்றியோ? உரைசெய் - சொல்வாயாக, என - என்று வினவ, அவள் சொற்றனள் - அந்த உலூபி சொல்லலானாள்: ஒருநாள் - ஒருதினம், அறல் படிவான் - நீராடும்பொருட்டு, திரை கங்கையின் - அலைவீசுகின்ற கங்காநதிக்கு, உற்றேன் - சென்றேன்: (அப்போது) அவண் - அவ்விடத்து, எழு வசுக்கள் சேர்ந்து - ஏழுவசுக்கள் வந்து; (எ.று.) ஏ - அசை "மந்தாகினிதனை நோக்கி" என மேற்கவியிலியையும்.

பெண்டிர் போர்க்களம் வருதல் அரிதாகலின், உலூபியும் சித்திராங்கதையும் வந்தமைகண்டு வினவினனென்க, படிவான - வினையெச்சம். என்னோ, ஓ - அசையெனினுமாம். (38).

**39. வசுக்கள் எழுவரும் கங்காதேவியும் அருச்சுனனைச் சபிப்பதாயிருப்ப, அதையறிந்த உலூபி தன்தந்தை நாகராசனிடம் சொல்ல, அவன் அவர்களிடம் செல்லல்.**

மந்தாகினி தனைநோக்கிநின் மகனைக்கொலும் விசயன்
சிந்தாகுல முறவெஞ்சினஞ் செய்தாயிலை சாபந்
தந்தாகுலஞ் செய்வோமெனத் தரித்தாளுள மதைப்போய்
எந்தாதையொ டறைந்தேனவ னிடருற்றவ ணேகி.

(இ-ள்) (அந்தஏழுவசுக்களும்) மந்தாகினிதனை நோக்கி - கங்காதேவியைப்பார்த்து, நின் மகனைக்கொலும் - உன்மகனாகிய வீடுமனைக்கொன்ற, விசயன் - அருச்சுனன், சிந்தாகுலம் உற - மனம்துயருறும்படி, வெம் சினம் செய்தாய் இலை - கொடிய

கோபத்தை (நீ) கொண்டாயில்லை; (நாம் அனைவரும்) சாபம் தந்து ஆகுலம் செய்வோம் - அவனுக்குச் சாபத்தைக்கொடுத்து வருத்து வோம் என்று கூற, (அதுகேட்டு அக்கங்காதேவி) உளம் தரித் தாள் - மனத்திலேற்றுக் கொண்டாள்; அதை - அந்தச்செய்தியை, போய் - (நான்)சென்று, என் தாதையொடு - எனது தந்தையாகிய நாகராசனிடம், அறைந்தேன் - சொன்னேன்: அவன் - அந்த என் தந்தை, இடர் உற்று - வருத்தங்கொண்டு, அவண் ஏகி - அந்த வசுக்களினிடம் சென்று; (எ.று) "முகமன் சொலி" என மேற்கவியில்தொடரும்.

அருச்சுனன் பீஷ்மரைத் தன்னோடு நேரே யுத்தஞ்செய்யும் போது கொல்லாமல் சிகண்டியை முன்னிட்டு வைத்துக்கொன்றன னாதலின், வசுக்கள் அவனைச்சபிப்போம்என்ன, கங்காதேவியும் 'அப்படியே ஆகட்டும்' என்றுசொன்னாளாதலின் 'உளந்தரித்தாள்' என்றது, [குறிப்பு:- தற்காலத்து கேதார்நாத் அருகில் உற்பத்தி யாகி, ருத்ரப்பிரயாக் என்ற இடத்தில் அலகனந்தாவோடு சேரும் நதிக்கு மந்தாகினியென்று பெயர்' கூறுவர்]. ஆகுலம் - துன்பம், வருத்தம். (39)

**40. வசுக்கள் நாகராசனிடம் மேல்நிகழப்போவதைக்கூறி, அவன் செய்யவேண்டிய செயலையும் சொல்லி யனுப்புதல்.**

முகமன்சொலி யடிதாழ்ந்துற முனிவுற்றெழு வசுக்கள்
மகனம்பினில் பட்டாவிநீ மணியுய்த்திடப் பெறுவான்
புகன்மாறுசெய் யிலையேனரன் புகுவானரகென்றே
அகமன்பொடு சொலியுய்த்தன ரதையெந்தையி
னேர்ந்தேன்.

(இ-ள்)முகமன் சொலி - உபசாரவார்த்தை சொல்லி,அடி தாழ்ந்துற - பாதங்களைவணங்க, (அப்போது)முனிவுற்று - கோபங் கொண்டு, எழுவசுக்கள் - ஏழுவசுக்களும், (நாகராசனை நோக்கி) [அருச்சுனன்], 'மகன் அம்பினில் பட்டு - தன் பிள்ளை விடும் அம்பினால் இறந்து, (பின்) நீ மணி உய்த்திட - நீ ஸஞ்சீவன மணியைக்கொடுத்தனுப்ப, பெறுவான் - (அதனால்) உயிர்மீட்கப் பெறுவான்: புகல் மாறு செய் - நாங்கள் சொன்னபடியே செய்வாய்; இலையேல் - இல்லையானால், நரன் - அருச்சுனன், நரகு புகுவான் -

நரகத்தையடைவான்,' என்று—, அகம் அன்பொடு சொலி - மனப் பூர்வமான அன்போடு சொல்லி, உய்த்தனர் - (அவரை) அனுப் பினர் : அதை - அந்த இரகசியத்தை, எந்தையின் ஓர்ந்தேன் - என்தந்தை நாகராசனால் அறியப்பெற்றேன்; (எ.று.)

வசுக்கள் அருச்சுனனுக்கிட்ட சாபம் நரகுபுகுவான்என்றும். அதேசமயத்தில் அச்சாபம் நீங்குவதற்கு உபாயமும்கூறி நாகரா சனையனுப்பினர் என்க. போர்க்களத்தில் தன்மகன்விடும் அம்பி னால் அடிபட்டுப்பூமியில்விழுந்து உயிர்நீங்குவதன் மூலம் அருச் சுனன் அந்தச்சாபம் விலகியவனாவான்; பின்னர் ஸஞ்சீவன மணிகொண்டு ஆவிமீட்கப்படுவன் என்பது அறியவேண்டுவது, சொலி - சொல்லியென்பதன் தொகுத்தல். மாறு - பரிசு, விதம்: ''விளங்கக்கேட்ட மாறுகொல்'' (புறம், 50) (40)

**41. அதனையுணர்ந்துவந்து உலூபி செயலாற்றியதாக அருச்சுனனிடம் தெரிவித்தல்.**

அதனாலிவ ணீயெய்திட வறிந்தெந்தையி னெய்திச்
சுதனாலமர் பயில்வித்துயிர் தொலைவித்துபி னீன்றோன்
பதனுன்றுதி செய்வித்துயிர் பரித்தான்மணி நளின
வதனா ! வெனச் சொலவாணுதல் மகிழ்வுற்றிதைச்
சொல்வான்.

(இ-ள்) அதனால் - (தந்தையினிடமிருந்து) அறிந்ததனால், நளின வதனா! - தாமரைமலர்போல்முகம் அழகியவனே! இவண் - இம் மணலூரபுரத்துக்கு, நீ எய்திட அறிந்து - நீர் வந்திருத்தலையறிந்து, எந்தையின் எய்தி - என்தந்தையினால் ஏவப்பட்டு (இக் களம்) வந்து, சுதனால் - மகனாகிய பப்ருவாஹனனால், அமர் பயில்வித்து- போரினைச்செய்யவைத்து, உயிர் தொலைவித்து - (உம்முடைய) உயிரைப்போக்கச்செய்து, பின் – பிறகு, நான், - ஈன்றோன் பதன் - என்னைப்பெற்றதந்தையாகிய நாக்ராசனின் திருவடிகளை, துதி செய்வித்து-(பப்ருவாஹனனைத்) தோத்தரிக்கும்படி செய்வித்ததனால் (அவர் உய்த்த) மணி - ஸஞ்சீவனமணியைக்கொண்டு, உயிர் பரித்தான் - உமது உயிரைமீட்டுத்தாங்கவைத்தான், என - என்று, வாள்நுதல் சொல - ஒளிபொருந்தியநெற்றியையுடைய உலூபி சொல்ல, (அருச்சுனன்) மகிழ்வுற்று - சந்தோஷமடைந்து, இதைச் சொல்வான் - இந்த வார்த்தைகளைச் சொல்லலாயினான் ; (எ.று.) அவன் கூறியதை அடுத்தகவியிற்காண்க.

பாரதயுத்தத்தில் பீஷ்மரை அருச்சுனன் அதர்மமாகக் கொன்ற தற்கு இது பிராயச்சித்தமாகச் செய்யப்பட்டது என அறிக. எனவே, உலூபி அவனைச்சாபத்தினின்று விடுவித்தாள். அதனல் அருச்சுனன் மகிழ்வுற்றுன் என்க. பயில்வித்து, தொலைவித்து, துதிசெய்வித்து - பிறவினைகள். பதன் -பதம்: மகரனகரம் மாறிவருஞ் சொல். பரித்தல் - தாங்குதல் : ஈண்டுப் பிறவினைப்பொருளில் வந்தது. நளினவதனம் - உவமைத்தொகை. வாணுதல் - பண்புத் தொகையன்மொழி: அடையடுத்தசினையாகுபெயர் எனினுமாம். (41)

**42. அருச்சுனன் உலூபியின்தந்தைக்கு நன்றிசெலுத்தி, அவளைச் சித்திராங்கதையோடும் பப்ருவாஹன ஞேடும் அசுவமேதத்திற்கு வரும்படி அழைத்தல்.**

கொஞ்சுங்கிளி மொழியாய்குரு குலந்தந்தெனை யுந்தை
அஞ்சும்மளர் புகனீக்கினன் அதையான்மற வேனீ
வஞ்சித்தனெ டடல்சேய்கொடு மகஞ்செய்தினம் வருகென்
றிஞ்சொற்புகன் றுய்த்தேகின னெழில்பற்குனன் பரிபின்.

(இ-ள்) கொஞ்சும் கிளி மொழியாய்! - கிளிபோல் மெல்லிய பேச்சினிமையுடையவளே! குருகுலம் தந்து - (எனது) குரு வமிசத்தை நிலைபெறச்செய்து, எனை - என்னை, உந்தை - உன் தந்தையாகிய நாகராசன், அஞ்சும் அளர் - (அனைவரும்) பயப்படு கின்ற நரகமாகிய சேற்றினில், புகல் - புகுதலை, நீக்கினன் - போக் கினுன்; அதை - அந்த நற்செயலையான் மறவேன் - நான் என்றைக் கும் மறக்கமாட்டேன்: (இனி) நீ - உலூபியாகிய நீ, வஞ்சி தனெடு- சித்திராங்கதையோடும், அடல் சேய்கொடு - வலிய பப்ருவாஹன ஞேடும், மகம் செய் தினம் - அசுவமேதம் செய்கின்ற சித்ரா பூர்ணிமையன்று, வருக - வருவாயாக, என்று—,இன்சொல் புகன்று- இனிய வார்த்தைகளைச்சொல்லி, உய்த்து - அந்த உலூபியை யனுப்பிவிட்டு, எழில் பற்குனன் - அழகிய அருச்சுனன், பரி பின்- (அசுவமேதத்திற்கான) குதிரையின்பின்னே, ஏகினன் - சென்றுன்; (ஏ.று.)

மகம்செய்தினம் - வருகிற சித்ராபூர்ணிமை என்றபடி. கிளி மொழி - உவமைத்தொகை. தன்னையுயிரோடு பிழைப்பித்தனளு தலின், குருகுலம் தழைக்கும் என்றகருத்தினில் 'குருகுலந்தந்து'

என்றது. அளர் - அளறு என்பதன் சிதைவு: அளறு - சேறு, நரகம். புகல் - தொழிற்பெயர். வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ருளுக்கு உவமவாகுபெயர். வஞ்சித்தனேடு - வலிமிக்குவந்தது. வருகென்று - வியங்கோளின் அகரவீறுதொகுத்தல். உந்தை - உன்தந்தையென்பதன் மரூஉ. (42)

43. உலூபி தமிழ்நாட்டிலேயே தங்கியிருக்க, அருச்சுனன் மேலைக்கடல்வழியே வடதிசைசெல்லல்.

அரவக்கொடி சிந்தாமணி யதலம்புக வுய்த்தோ
தருமைந்தனெ டிளையாளொடு தமிழ்நாட்டி னிருந்தாள்
நரன்பற்பல தேயத்தவர் நண்பின்றொழ குடபாற்
பரவைதனை கண்டுத்தரம் படர்ந்தான்பரி யோடும்.

(இ-ள்) அரவக்கொடி - நாககன்னிகையாகிய உலூபி, சிந்தாமணி - ஸஞ்சீவனமணியை, அதலம் புக - நாகலோகத்திற்குச்செல்ல, உய்த்து - அனுப்பி, ஓது அரு மைந்தனொடு - சிறப்பித்துப்பேசப்படுகின்ற அருமையான பப்ருவாஹனனேடும், இளையாளொடு - சித்திராங்கதையோடும், தமிழ்நாட்டின் இருந்தாள் - பாண்டிய நாட்டில் தங்கியிருந்தாள்: நரன் - அருச்சுனன், பற்பல தேயத்தவர் - மிகப்பல தேசத்துமன்னர்கள், நண்பின் தொழ - சிநேகங்கொண்டு வணங்க, (பின்பு) குடபால் - மேற்குத்திக்கிலுள்ள, பரவைதனை கண்டு - சமுத்திரத்தைக்கிட்டி அதன் வழியே, பரியோடும் - அசுவமேதக் குதிரையோடும், உத்தரம் படர்ந்தான் - வடதிசைநோக்கிச் சென்ருன்: (எ.று.)

சித்திராங்கதை பாண்டியமன்னன் சித்திராங்கதன் மகளாதலின், அவளோடுகூடவே உலூபியும் தனது நாகலோகம் புகாமல், அசுவமேதயாகத்திற்கு அத்தினபுரி போவதற்காகத்தங்கிவிட்டாள் என்க. கொடி - உவமவாகுபெயர். 'பரவைத்தனை' என்று வலிமிக்க பாடமும் உண்டு. (43)

## வேறு.

**44 அருச்சுனனை மேகசந்தியெதிர்த்தல்.**

கந்து கம்புக கிரிவிர சப்பதி காற்றின்
மைந்த ஞற்படுஞ் சராசந்தன் மகன்பெறு மேக
சந்தி மாவளைந் தருச்சுனன் தருமன்சொற் றெரித்துஞ்
சிந்தை கொள்கிலா தாண்மைசொற் றெதிர்ந்தனன்
சினத்தே

(இ-ள்) கந்துகம் - [யாகக்] குதிரை, கிரிவிரசப்பதி புக - கிரிவிரசநகரத்துள் செல்ல, காற்றின் மைந்தனுல் - வாயுபுத்திரனுகிய வீமனுல், படும் - கொல்லப்பட்ட, சரர்சந்தன் - சராசந்தனது, மகன்- குமாரனுகிய சகதேவன், பெறு - பெற்ற, மேகசந்தி - மேகசந்தியென் னும் அரசன், மா வளைந்து - அந்தக்குதிரையைக் கைப்பற்றி, அருச் சுனன்—, தருமன் சொல் தெரித்தும் - தருமபுத்திரனுடைய கட்டளை யைத் தெரிவித்தபின்னரும், சிந்தை கொள்கிலாது - மனத்துட் கொள்ளாமல், ஆண்மை சொற்று - வீரம் பேசி, சினத்து எதிர்ந் தனன் - கோபித்து எதிரிட்டான்; (எ.று).

தருமன்சொன்ன சொல்லாவது - ''அர்ச்சுன! உன்னை எதிர்த்து வரும் மன்னர்களுடன் யுத்தமுண்டாகாமலிருக்கும்படி நீ செய்ய வேண்டும்'' என்பது. கிரிவிரசம் - மகதநாட்டுக்குத் தலைநகர்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள எட்டுக்கவிகள் - பெரும் பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், ஏனைய மூன்றும் விளச்சீர்களுமாகி வந்த கலிநிலைத்துறைகள். (44)

**45. அருச்சுனன் மேகசந்தியை வென்று வேள்விக்கு வரும்படி யழைத்தது.**

எடுத்த வில்லொடு இரதமும் வலிமையு மிழந்து
அடுத்து மீட்டுமோ ரிரதமே லணுகிட விசயன்
தடுத்து நண்புகொண் டவன்வலி தனைவியந் தருளால்
விடுத்துச் சென்றனன் வேள்விநாள் வரும்படி விதித்தே.

(இ-ள்) (மேகசந்தி தான்) எடுத்த வில்லொடு - கையிற் பிடித்த வில்லோடு, இரதமும் - தேரையும், வலிமையும் - பலத்தையும், இழந்து - போகவிட்டு, அடுத்து - பின்பு, மீட்டும் - மறுபடியும், ஓர் இரதம் மேல் அணுகிட - ஒரு தேரின்மேலேறி வர, விசயன் தடுத்து- அருச்சுனன் எதிர்த்துநிறுத்தி, (பின்னர்) நண்பு கொண்டு - சிநேகம் செய்து கொண்டு, அவன் வலிதனை வியந்து - அவனது பலத்தைக்கொண்டாடி, அருளால் - கருணையோடு, விடுத்து-அவனை நகருக்குப் போகச்சொல்லி, (மேலும்) - வேள்வி நாள் வரும்படி விதித்து - யாகஞ்செய்யும் சித்ராபூர்ணிமைதினம் வரும்படி ஆணை யிட்டு, சென்றனன் - போயினான்; (எ.று.)

நண்புகொண்டு அருளால் விடுத்தது என்னென்னில் - அரசர் களைக் கொல்லவேண்டாமென்று தருமன் உத்தரவுசெய்திருக்கிறா தலின் என்க. (45)

**46. அருச்சுனன் சேதிநாட்டின் வழியே பலநாட்டவர் தொழும்படி செல்லுதல்.**

முற்ப டுஞ்சிசு பாலன்றன் பாலன்வாழ் மூதூர்
கற்ப டும்புயக் கிராதரூர் கோசலை காசி
நெற்ப டும்வயற் றசான்னவ மெனும்பதி நிடதஞ்
சொற்ப டும்பல நாட்டவர் தொழும்படி சென்றான்.

(இ-ள்) முற்படும் - போரினில் முந்திக்கொண்டு வரும், சிசு பாலன் தன் - சிசுபாலனுடைய, பாலன் - மகனாகிய சரபன் என்ப வன், வாழ் - (அரசாட்சி செய்து) வாழ்ந்து வருகின்ற, மூதூர் - பழைமையான சுக்தியென்னும் தலைநகரம், கல் படும் புயம் - மலையைக் கீழ்ப்படுத்தும் வலிமை பொருந்திய தோள்களைக் கொண்ட, கிராதர் - வேடர்களுடைய, ஊர் —, கோசலை - கோசல நாடு, காசி - காசிநகரம், நெல் படும் வயல் தசான்னவம் எனும் பதி- செந்நெல் விளையும் கழனிகள் சூழ்ந்த தசார்ணவம் என்னும் நாடு, நிடதம் - நிஷத நாடு, (முதலாகிய) சொல் படும் பல நாட்டவர் - புகழ்பெற்ற பல நாட்டு மன்னர்கள், தொழும்படி - தன்னைப் பணிந்து வணங்கும்படி, சென்றான் - (அவர்களை வசப்படுத்திக் கொண்டு) போயினான்; (எ.று.)

சிசுபாலன் சேதி நாட்டரசனுவன்: அவனிறந்தபின் அவன் மகன் சரபன் ஆண்டு வந்தான்: அவன் தலைநகரம் சுக்தி யெனப் படும். கிராதர் ஊர் - ஏகலவ்யனுடைய ஊர்: ஏகலவ்யன் மகன் யுத்தத்திற்குவர அவனை அருச்சுனன் ஜயித்தான். தசான்னவம்-தசார்ணவம் என்னும் தேசம்: எனவே, பதி - தேசத்தைக் காட்டியது. இதன் அரசன் சித்ராங்கதன் என்பவன். படுதல் - கீழ்ப்படுதல், உண்டாதல் என்ற பொருள்களில் வந்தது. அருச்சுனன் பல நாடு நகரங்களை வசப்படுத்திக் கடந்து சென்றுன் என்ற படி. (46).

**47. அருச்சுனன் துவாரகைசென்று, பின்காந்தாரம் அடைதல்.**

மீட்டும் தென்றிசை பரிபுகு மிடனெலாம் வென்று
நாட்டுந் துவாரகை நண்ணியா தவர்தொழ வேள்வி
கோட்டு நாள்வரக் குறித்துப்பின் குடதிசை பாங்கர்
பூட்டும் வெஞ்சிலை விசயன்காந் தாரம்போய்ப் புகுந்தான்.

(இ-ள்) மீட்டும்-மறுபடியும், தென் திசை - தெற்குப் பக்கத்தில், பரி - யாகக்குதிரை, புகும் - செல்லும், இடன் எலாம் - தேசங்களை யெல்லாம், வென்று - ஜயித்து, நாட்டும் துவாரகை நண்ணி - நிலைபெற்ற துவாரகையைச் சேர்ந்து, யாதவர் தொழ - அங்குள்ள யாதவமன்னர்கள் வணங்க, (அவர்களை) வேள்வி கோட்டு நாள் - அசுவமேதம் செய்யும் சித்ரா பூர்ணிமை நாள், வர - வந்து விஜயம் செய்யும்படி, குறித்து - அழைத்து, பின் - பிறகு, குடதிசை பாங்கர் - மேற்குப் பக்கத்தின் வழியாக, வெஞ்சிலை பூட்டும் விசயன் - கொடிய காண்டீபவில்லை வளைக்கும் அருச்சுனன், காந்தாரம் - காந்தாரநாட்டினுள், போய் புகுந்தான் - சென்று சேர்ந்தான்; (எ.று.).

சகுனி காந்தார நாட்டினன் என்பது நினைக. (47)

**48-49. அருச்சுனனோடு சகுனிமகன் போரிட்டுத் தோற்றல்.**
**இரண்டு கவிகள் - ஒரு தொடர்.**

சகுனி மைந்தன்முற் பகைகொடு சமர்செய்திந் திரன்றன்
மகனெய் வாளியால் வார்சிலை தேரழிந் திருகால்
மிகவ யர்த்தலோர்ந் தவனனை விசயன்பா லெய்தி
முகமன் சொற்றுமைத் துனனுயி ரளியென மொழிந்தாள்.

(இ-ள்) சகுனி மைந்தன் - சகுனியின் குமாரன், முன் பகை கொடு - (தன் தந்தையைக் கொன்றதனால்) முன்னிருந்தே கொண்டிருந்த விரோதத்தோடு, சமர் செய்து - போரிட்டு, இந்திரன் தன் மகன் - இந்திரகுமாரனாகிய அருச்சுனன், எய் - விடுத்த, வாளியால் - அம்பினால், வார் சிலை - (தனது) நீண்ட வில்லும், தேர் அழிந்து - தேரும் சிதைந்து, (அதனால்) இருகால் - இரண்டு தடவை, மிக அயர்த்தல் - மிகவும் தளர்ச்சி கொண்டதை, ஓர்ந்து - அறிந்து, அவன் அனை - அவனுடைய தாய், விசயன்பால் எய்தி - அருச்சுனனிடம் வந்து, முகமன் சொற்று - உபசார வார்த்தைகளைச் சொல்லி, மைத்துனன் உயிர் - மைத்துன முறைமையினையுடைய தன் குமாரனது உயிரை, அளி - ஈந்து காப்பாற்றுவாயாக, என - என்று, மொழிந்தாள் - கூறி வேண்டினாள்; (எ.று.)

காந்தாரி தம்பியாகிய சகுனி தனக்கும் மாமனாதலின், அவன் மகனை மைத்துனன் என்று முறைமை கொண்டாடியது. அளி - வியங்கோள். (48)

**49. சகுனிமகன் பணிய அருச்சுனன் அவனைத்தழுவி யாகத்திற்கு அழைத்தல்.**

தம்முன் வார்த்தைகொண் டருச்சுனன் றண்ணளி புரிந்து
அம்ம வஞ்சலென் றயர்வகன் றடிதொழூஉஞ் சகுனி
செம்மலைத்தழீஇ செய்மகஞ் சித்திரை யுவாநாள்
வம்மி னென்றுசொற் றயத்துடன் மச்சநா டடைந்தான்.

(இ-ள்) தம்முன் வார்த்தை கொண்டு - தனது தமையனாகிய தருமனின் உத்தரவினை மனத்துட்கொண்டு, அருச்சுனன் -, தண்ணளி புரிந்து - கருணை செய்து, அம்ம! - தாயே! அஞ்சல்

என்று - பயப்படாதே யென்று அபயமளித்து, (பின்) அயர்வு அகன்று - தளர்ச்சி நீங்கி, அடி தொழும் - தன் பாதத்தில் பணிந்த, சகுனி செம்மலை - சகுனியின்குமாரனை, தழீஇ - தழுவிக்கொண்டு, 'செய் மகம் - (தருமன்) செய்யும் அசுவமேதம், சித்திரை உவா நாள் - சித்திராபூர்ணிமை தினமாகும்; வம்மின் - நீங்கள் வாருங்கள்', என்று சொற்று - என்று அழைப்புச் சொல்லி, அயத்துடன் - (யாக) குதிரையோடு, மச்சநாடு அடைந்தான் - மத்ஸ்யநாட்டினைச் சேர்ந்தான்; (எ.று.)

தருமன் கூறிய உத்தரவாவது - ''யுத்தத்தில் அரசர்களைக் கொல்லவேண்டாமென்பது''. தழீஇ - சொல்லிசையளபெடை. உவா நாள் - பௌர்ணமி (Full-moon), வம்மின் - முன்னிலைப் பன்மை. அயம் - குதிரை, மச்சநாடு - விராடராசனின்தேசம். முன் - முன்பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். (49)

## 50. மச்சநாடுவிட்டு அருச்சுனன் பாஞ்சாலம் சேர்தல்.

அந்த நாட்டினில் விராடன்சேய் அடிதொழ மகநாள்
வந்து றும்படி வகுத்துபின் மன்னிபாஞ் சாலஞ்
செந்த ழற்பிறந் தவன்மகன் தொழமகஞ் செய்நாள்
அந்தி மாநகர்க் குறும்படி சாற்றிப்போந் தனனால்.

(இ-ள்) அந்த நாட்டினில் - அந்த மத்ஸ்யதேசத்தில், விராடன் சேய் - (அதன் அரசனான) விராடன் மகன், அடி தொழ - தன் பாதத்தை வணங்க, (அவனை) மக நாள் வந்து உறும்படி வகுத்து - யாகதினத்தன்று (சித்ராபூர்ணிமைநாள்) வந்து சேரும்படி அழைத்து, பின் - பிறகு, பாஞ்சாலம் மன்னி - பாஞ்சால தேசத்தையடைந்து, (அங்கு) செந்தழல் பிறந்தவன் மகன் - யாகாக்னியில் தோன்றிய திருஷ்டத்யும்நனின் புத்திரன், தொழ - பணிந்து வணங்க, (அவனை) மகம் செய் நாள் - யாகஞ்செய்கின்ற சித்ரா பூர்ணிமை யன்று, அந்தி மாநகர்க்கு உறும்படி - அத்திநாபுரிக்கு வரும்படி, சாற்றி - அழைப்புச் சொல்லி, போந்தனன் - (பாஞ்சாலம்) விட்டுப் போயினான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

அந்தி - அத்தி என்பது எதுகை நோக்கி மெலிந்தது. (50)

**51. அனைவரையும் யாகத்திற்கு வரும்படியழைத்து அருச்சுனன் அத்தினபுரிக்கருகில் வந்துசேர்தல்.**

இத்த ராதலத் தியாரையு மினிதில்வென் றவரைச்
சித்தி ராபரு வத்தினுக் குறும்படி செப்பி
மொய்த்த வேதிய ராகுதி முயன்றிடப் பரிபின்
அத்தி னபுரிக் கருகட லருச்சுனன் அடைந்தான்.

(இ-ள்) இ தராதலத்து - இந்தப் பூமியில், யாரையும் - (எதிரிட்ட மன்னர்) அனைவரையும், இனிதில் வென்று - எளிதாகச் செயித்து, அவரை - செயித்த அந்த மன்னர்களை, சித்திரா பருவத்தினுக்கு - சித்ராபூர்ணிமையன்றைக்கு, உறும்படி - அத்தினபுரிக்கு (யாகம் கண்டுகளிக்க) வரும்படி, செப்பி - அழைப்புச் சொல்லி, மொய்த்த வேதியர் - தன்னைச்சுற்றி நெருங்கிய அந்தணர், ஆகுதி முயன்று இட - வேள்வியில் (மந்திரபூர்வகமாக) ஆகுதியைச் சிரத்தையோடு வழங்கும் பொருட்டு வர, அடல் அருச்சுனன் - பலம் பொருந்திய அருச்சுனன், பரிபின் - குதிரையின் பின்னே, அத்தினபுரிக்கு அருகு - அத்தினபுரிக்குச் சமீபத்தில், அடைந்தான் - வந்து சேர்ந்தான் ; (எ.று.).

தராதலத்தியாரையும் - குற்றியலிகரம். (51)

**பரிவலம் வந்த சருக்கம் முற்றிற்று.**

நான்காவது

# வேள்விச் சருக்கம்

தருமன் அசுவமேதயாகம் செய்ததைப்பற்றிக் கூறும் சருக்கம் என்பது பொருள். வேள்விச் சருக்கம் - வேள்வியைப் பற்றிய சருக்கம் இரண்டனுருபும் பயனுமுடன்றொக்க தொகை.

**1. தருமன் சொற்படி வீமன் யாகசாலையமைத்தலும் சாரணரையேவி அனைவரையும் வரும்படியழைத்தலும்.**

வேறு.

புரவிநகர்க் கருகாய தெனவந் தொற்றர்
புகன்றிடவேந் துணர்ந்தனிலன் புதல்வ
ஞேக்கித்
திரையுலகில் வருமவருக் குணர்த்தி வேள்வி
செயவேண்டும் பொருள்யாவும் சேர்த்தி
யென்ன
அரியுயர்த்தோன் அவ்வண்ண முனிவர் வேதர்
அரசர்புல வோரிரப்போ ராதி யாரும்
வரும்படிநா ருயிரஞ்சா ரணரை யேவி
மகச்சாலைக் கம்மியரை வகுப்பச் சொற்ருன்.

(இ-ள்) ஒற்றர் - சாரணர்கள், புரவி - யாககுதிரை, நகர்க்கு அருகாயது - அத்திஞபுரிக்கு அருகில் வந்துள்ளது, என - என்று, வந்து புகன்றிட - தருமனிடம் வந்து சொல்ல, வேந்து - தருமராசன், உணர்ந்து - அறிந்து, அனிலன் புதல்வன் நோக்கி - காற்றின் மகனுன வீமனைப் பார்த்து, திரை உலகில் - அலை வீசும் கடல் சூழ்ந்த உலகத்தில், வரும் அவருக்கு - யாகத்திற்கு வர விரும்பு மவர்களுக்கு, உணர்த்தி - [சித்ரா பூர்ணிமை தினம் யாகம் நடக்கும் என்பதைத்] தெரிய வைத்து, (மேலும்) வேள்வி செய - யாகத்தைச் செய்வதற்கு, வேண்டும் பொருள் யாவும் - அவசியமாக வேண்டி யிருக்கின்ற பண்டங்கள் அனைத்தையும், சேர்த்தி - கொண்டு வந்து சேர்த்துவிடு, என்ன - என்று கட்டளையிட, அரி உயர்த்தோன் -

சிங்கக் கொடியை உயரத்தூக்கிய வீமன், அ வண்ணம் - அப்படியே, முனிவர் - இருடிகள், வேதர் - பிராம்மணர்கள், அரசர் - மன்னர்கள், புலவோர் - அறிஞர்கள், இரப்போர் - வறியோர், ஆதி - முதலாகிய, யாரும் - அனைவரும், வரும்படி - யாகத்திற்கு வந்து காணும்படி, நூறுயிரம் சாரணரை ஏவி - ஒரு லட்சம் ஒற்றர் களையனுப்பி, (பின்) கம்மியரை - தச்சன் கொல்லன் முதலாய தொழிலாளரை, மகச்சாலை - யாகசாலையை, வகுப்ப சொற்றான் - நிர்மாணிக்கும்படி சொல்லினான்; (எ.று.)

தருமன் வீமனை ஏவ, அவன் யாகத்திற்கு வேண்டிய பொருள் களனைத்தையும் சேகரிக்கவும், அனைவர்க்கும் ஒற்றரையனுப்பி வரவழைக்கவும், யாகசாலையமைக்கவும் சமைந்தான் என்க. சேர்த்தி - முன்னிலையேவல்.

இது முதல் இச்சருக்க முடியுமளவுமுள்ள பதினான்கு கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாக வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (1)

2. **கங்கைக்கரையில் அனைவரும் தங்குதற்கு இருக் கைகள் அமைத்து, யாகத்திற்கான படிக்கலங் களைச்சித்தஞ்செய்தல் கூறும்.**

தப்பின்மறைப் படிசிற்பம் வல்லோர் வேள்விச்
சாலைகளும் மிதமில்வருஞ் சனர்கண் மேவு
செப்பிருக்கை களுமடைப்பள் ளிகளு மெண்ணிற்
செம்பொனவ மணிகளினாற் றீரக் கற்றோர்
இப்படித்தென் றுரைக்கரிதாய்ச் சிலநாட் கங்கை
யெனுநதியின் கரைமருங்கி னிலங்கச் செய்து
விப்பிரர்சொற் படிகலசஞ் சுருவை யாதி
வேண்டுமவை களும்பொன்னால் விளங்கச்
செய்தார்.

(இ-ள்) தப்பு இல் மறைப்படி - பிழைபடுதலில்லாத சிற்பசாத்திரத்தின்படி, சிற்பம் வல்லோர் - சிற்பிகள்; வேள்விச்சாலைகளும்- யாகசாலைகளும்,மிதம் இல் - அளவில்லாதபடி, வரும் சனர்கள் - வருகின்ற மக்கள், மேவு - விரும்பித்தங்கும்படி, செப்பு - புகழப்படுகின்ற, இருக்கைகளும் - விடுதிகளும், மடைப்பள்ளிகளும் - சமயலறைகளும், எண் இல் - கணக்கற்ற, செம்பொன் நவமணிகளினால்- சிறந்த பொன்னினாலும் நவரத்தினங்களினாலும், தீரக் கற்றோர் - முற்றக்கற்ற அறிஞர்கள், இப்படித்து என்று - இப்படிப்பட்ட தன்மையது என்று, உரைக்க அரிதாய் - முடிவுகட்டிச்சொல்லுதற்கு முடியாததாய், சில நாள் - சிலதினங்களுக்குள்ளே, கங்கையெனும் நதியின்கரை மருங்கின் - கங்காநதியின் கரையின்மேல், இலங்கச் செய்து - விளங்கும்படி அமைத்து (மற்றும்) விப்பிரர் சொற்படி - அந்தணர்கள் சொன்னவண்ணம், கலசம் - கும்பங்கள். சுருவை - அகப்பை கரண்டிகள், ஆதி - முதலாய, வேண்டுமவைகளும் - இன்றியமையாத கருவிகளையும், பொன்னால் - தங்கத்தால், விளங்கச் செய்தார் - பொலியுறும்படி செய்தார்கள்; (எ.று.).

'செய்தார்' என்பதற்குஎழுவாய் கம்மியர் என்பது. ''மடைப்பள்ளிகளும்....மணிகளினால் இலங்கச்செய்து'' என இயையும். 'தீரக் கற்றோர் இப்படித்தென்றுரைக்கரிதாய்' — இடைப்பிறவரல். சனர்கள் - பன்மைவிகுதிமேல்விகுதி. (2)

**3. பலவகை உணவுப்பொருள்களையும் மங்கலப்பொருள்களையும் சேர்த்தல்.**

பலவரைபோல் தண்டுலம் மேரு போல
பருப்புகட லெனநெய்முப் பழமுந் தெங்கின்
குலையிளநீ ரதன்கனியுங் கறிகள் பற்பற்
குன்றெனவே குவித்தனபாற் குளிர்சாந் தாதி
மலரிலைபாக் கிமசலம்வா சனைசெய் பண்டம்
மணிக்குடைபா துகைவெண்சா மரைமற் றியாதும்
புலவருங்கண் டதிசயிப்பச் சேர்த்தா ரொற்றர்
புகன்றிடக்கேட் டியாவர்களும் புகுந்தா ரம்மா.

(இ-ள்) பல வரை போல் - பலமலைகளைப்போல, தண்டுலம் - அரிசியும், மேரு போல - மேருமலையைப்போல, பருப்பும் - துவரம் கடலைபருப்புவகைகளும், கடல் என நெய்- சமுத்திரம்போல நெய்யும், முப்பழமும் - மா, பலா வாழையென்ற மூன்றுகனிகளும் தெங்கின் இளநீர் குலை(யும்) - இளநீர்த்தேங்காய்களும், அதன் கனியும் - முற்றினதேங்காய்களும், கறிகள் - காய்கறிகளும், பல் பல் குன்று என குவித்து - பலப்பல மலைகளென்னும்படி குவியவைத்து. (மற்றும்) அளை - தயிர், பால் -, குளிர் சாந்து - குளிர்ந்த சந்தனம், ஆதி - முதலாகியவைகளும், மலர் - புஷ்பங்கள், இலை - வெற்றிலை, பாக்கு-, இம சலம் - பன்னீர், வாசனைசெய் பண்டம் - வாசனைப்பண்டங்கள், மணிக்குடை - மணிகளாலாகிய குடை,பாதுகை—, வெண் சாமரை- வெள்ளிய சாமரம், மற்று யாதும் - வேறுவேண்டிய மங்கலப் பொருள்கள் அனைத்தையும், புலவரும் கண்டு அதிசயிப்ப - தேவர் களும் பார்த்து ஆச்சரியமுறும்படி, சேர்த்தார்- திரட்டிவைத்தார்கள்: (இஃது இங்ஙனாக) யாவர்களும் - (முனிவர், வேதியர், மன்னர், நகர மக்கள் போன்ற) அனைவர்களும், ஒற்றர் புகன்றிட கேட்டு - (யாகத் திற்கு வரும்படி) சாரணர்கள் உரைத்ததைச் செவியேற்று, புகுந்தார்- அத்திருபுரியடைந்தார்கள் ; (எ.று ) அம்மா - ஈற்றசை : வியப்புமாம்.

மேரு பொன்னிறமுடையதாதலின், பருப்புக்கு உவமை கூறப் பட்டது. இமசலம் - குளிர்ந்தநீர் ; பன்னீர். வாசனைப்பண்டம்— "தக்கோலம். தீம்பூத் தகைசா லிலவங்கம், கப்பூரஞ்சாதி யோடைந்து" எனவிவை. மூன்றுமடியில் உம்மைத்தொகை. கேட்டியாவர்களும் – குற்றியலிகரம். (3)

**4. அனைவரும் வந்து திரள, தருமன்உபசாரம் பலவுஞ் செய்தல்.**

செய்தவத்தோ ரிருடிரப்போர் புலவோர் வேந்தர்
திறலமைச்சர் தந்திரிகட் சேனை நான்கும்
பெய்தனங்கொள் வசியர்புவி பாலர் மற்றும்
பேசியவெக் குலத்தோரும் பெயர்ந்து
மொய்த்தார்

பொய்தவிர்வேந் தவரவருக் கெதிர்கொண் டாற்றும்
பூசனைசெய் திறைஞ்சுவர்க்குப் புகன்றங் காசி
பைதலிலா வனமெவர்க்கு மருத்திச் சந்தம்
பாக்கிலைதந் துபசாரம் பலவுஞ் செய்தான்.

(இ-ள்)செய் தவத்தோர் - தவசியர், இருடி - முனிவர், இரப்போர் - வறியவர், புலவோர் - தேவர்கள், வேந்தர் - அரசர்கள், திறல் அமைச்சர் - சாமர்த்தியமுடைய மந்திரிகள், தந்திரிகள் - சேனைத்தலைவர்கள், சேனை நான்கும் - நால்வகைப்படைஞர்கள் இவர்களும், பெய்தனம் கொள் வசியர் - மிகுதியான செல்வம் படைத்த வைசியர்களும், புவி பாலர் - உலகுகாக்கும் பேரரசர்களும், மற்றும் பேசிய எக்குலத்தோரும் - மேலும் (வகைபடுத்திச்) சொல்லப்படுகின்ற எந்தக்குலத்தவரும், பெயர்ந்து - தத்தம் இருப்பிடங்களைவிட்டு, மொய்த்தார் - [அத்தினாபுரிக்குவந்து] திரண்டார்கள்; (அப்போது)பொய் தவிர் வேந்து - சத்தியவிரதனாகிய தருமன், அவரவருக்கு - அவர்களனைவர்க்கும், எதிர்கொண்டு - வரவேற்று, ஆற்றும் - செய்யவேண்டிய, பூசனை செய்து - வழிபாடுகளைச்செய்து, (மேலும்)இறைஞ்சுவர்க்கு - தன்னைப்பணிந்தவர்களுக்கு, அங்கு ஆசி புகன்று - அவ்விடத்து ஆசீர்வாத மொழிகளைச்சொல்லி, (பின்னர்)எவர்க்கும் - அனைவர்க்கும், பைதல் இலா - (பசியால்) வருந்தாதபடி, அனம் - உணவினை, அருத்தி - உண்பித்து, (பின்)சந்தம் பாக்கு இலை தந்து - சந்தனம்பாக்கு வெற்றிலை (இவைகளைக்)கொடுத்து, உபசாரம் பலவும் - பலவகை மரியாதைகளும், செய்தான் - ; (எ.று.)

'வேந்தர்' என முன்னர் அரசரைக்குறித்திருத்தலால், பின்னர் வந்துள்ள 'புவிபாலர்' என்பதற்கு வேளாளர் எனினுமாம்: வைசியரோடு சேரவைத்திருத்தலும் நோக்குக. பைதல் - துன்பம், வருத்தம். சந்தம்பாக்கிலை - உம்மைத்தொகை. (4).

5. **அனைவர்க்கும் உணவிட்டு உபசரிக்கும்போது, தருமனிடம் ஒருவன்வந்து அருச்சுனன் பரியோடு அருகில் வந்திருப்பதாகச்செய்தி சொல்லுதல்.**

கடிமுரச மிலக்கம்பே ரருந்தி லோர்காற்
கறங்குமிடை விடாதஃது கலித்த தென்னின்

முடிவினையோர்ந் தருந்தினபேர் தொகைகண்
டியாவர்
மொழிபவரிவ் வணந்தினமு முயங்கு நாளிற்
படிறில்வேந் திருக்கையடைந் தொருவன் பார்த்தன்
பரியுடனின் னகர்ப்பாங்கர் படர்ந்தான் கங்குல்
விடியிலிவண் வருவலென நினக்குச் சொல்வான்
விடுத்தனனென் றடிபணிந்து விளம்பி னானால்.

(இ-ள்) இலக்கம் பேர் அருந்தில் - ஒரு லட்சம்பேர் உண் பாரானால், கடி முரசம் - அடிக்கப்படும் முரசவாத்தியம், ஓர் கால் கறங்கும் - ஒருதரம் ஒலிக்கப்படும் : (அப்படியிருப்ப) அஃது - அந்த முரசம், இடைவிடாது கலித்தது என்னில் - நிற்காமலேயே ஒலித்ததென்றால், அருந்தின பேர் தொகை கண்டு - சாப்பிட்ட பேர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, முடிவினை ஓர்ந்து - மொத்தமாகிய தொகையினையறிந்து, மொழிபவர் யாவர் - சொல்லு பவர் எவர்? (ஒருத்தருமிலர்); இ வணம் - இந்த வகையே, தினமும் - நாடோறும், முயங்கு நாளில் - செய்துவரும் நாட்களில், (ஒருநாள்), ஒருவன் - ஒரு ஆப்தன், படிறு இல் வேந்து இருக்கை அடைந்து - வஞ்சனையில்லாத தருமனின் இருப்பிடத்திற்கு வந்து, ‘பார்த்தன் - அருச்சுனன், பரியுடன் - (யாக)குதிரையுடன், நின் நகர்ப் பாங்கர் - உனது அத்தினபுரியின் சமீபத்தில், படர்ந்தான் - வந்துள்ளான் : கங்குல் விடியில் - இரவுநீங்கிய பின், இவண் வருவல் - இங்கே(உம்மிடத்து)வருவான், என - என்று, நினக்குச் சொல்வான் - உமக்குக்கூறும்படி, விடுத்தனனென் - (என்னை) அனுப்பியுள்ளான்; என்று —, அடி பணிந்து - பாதங்களில் வணங்கி, விளம்பினான் - கூறினான்; (எ று.) ஆல் - ஈற்றசை.

உணவருந்தினவர் தொகையிவ்வளவென அறுதியிட்டுச் சொல்லமுடியாது என்றபடி. சொல்வான் - வினையெச்சம். விடுத்த னென் - தன்மையொருமை வினைமுற்று. கடிமுரசம் - உரிச்சொற் றொடர், கண்டியாவர் - குற்றியலிகரம், வருவல் - எதிர்காலவினை முற்று. (5).

6. அருச்சுனனை யனைவரும் வரவேற்க அவன் அத்தினபுரி புகுதல்.

அங்கதுகேட் டுதிட்டிரன்மான் முதலோ ரியாரும்
அகமகிழ்ந்து முரசறைவித் தணிசெய் தவ்வூர்
தங்குசனர் கந்துகந்தேர் கரியாண் மொய்ப்பச்
சலதியின்பல் லியமிரைப்பத் தபனன் தோற்றக்
கங்குறுலைத் தெதிர்கொண்டார் அவர்நே ரெய்தல்
கண்டுநரன் விண்டுமுனோன் கண்ணில் வேந்து
புங்கவருக் கிறைஞ்சிதனை தொழுவோர்க் காசி
புகன்றிரத மணுகிநகர் புகுந்தான் மன்னே.

(இ-ள்) அங்கு - அப்போது, அது கேட்டு - (அருச்சுனன்) வருதலைச்செவியேற்று, உதிட்டிரன் - தருமன், மால் - கிருஷ்ணன், முதலோர் யாரும் - முதலிய அனைவரும், அகம் மகிழ்ந்து - மனங் களித்து, முரசு அறைவித்து - முரசம் முழக்கிச்செய்தியறிவித்து, அணி செய்து - நகரை யலங்கரித்து, அ ஊர் தங்கு சனர் - அந்த அத்தினபுரியிலே வசிக்கின்ற மக்கள், கந்துகம் - குதிரை, தேர் - ரதம், கரி - யானை, ஆள் - காலாள் படைஞர்கள், மொய்ப்ப - நெருங்கிவர, பல் இயம் - பலவகை வாச்சியங்கள், சலதியின் இரைப்ப - கடல்போல ஒலிப்ப, தபனன் - சூரியன், கங்குல் துலைத்து தோற்ற - இரவினையொழித்து உதிக்க, (அப்போது) எதிர்கொண்டார் - (அருச்சுனனை) எதிர்கொண்டு வரவேற்றனர்: நரன் - அருச்சுனன், அவர் நேர் எய்தல் கண்டு - அவர்கள் தன்னெதிரில் [வரவேற்க]வருதலைப்பார்த்து, விண்டு - கிருஷ்ணன், முனோன் - தருமன், கண் இல் வேந்து - திருதராட்டிரன், புங்கவருக்கு - முனிவர்முதலியோர்க்கு, இறைஞ்சி - வணங்கி, தனை தொழுவோர்க்கு - தன்னை வணங்கினவர்க்கு, ஆசி புகன்று - ஆசீர்வாதஞ்சொல்லி, இரதம் அணுகி - தேரிலேறிக்கிட்டி, நகர் புகுந்தான் - அத்தினபுரியில் பிரவேசித்தான்; (எ.று.)மன், ஓ - ஈற்றசை.

அருச்சுனன் குதிரையுடன் திரும்பி வர, அனைவரும் அவனை வரவேற்றலைக் கூறியபடி. கந்துகந் தேர் கரியாள்-உம்மைத்தொகை. புங்கவருக்கு, நான்கனுருபு முன்னருங் கூட்டப்பட்டது. சலதியின்,

இன் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது, எய்தல் - தொழிற்பெயர். முதலோரியாரும்-''தன்ஞெழிமெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்'' என்பது விதி (நன்:மெய்யீற்: 3) (6)

**7. அருச்சுனன் அரசவைபுகுந்து ஆசனத்திலமர, பப்ருவாஹனன் தன்தாய்மார்இருவரோடும் அங்கு வருதல்.**

புரசனர்க டனதுவலி புகழ்ந்து போற்றப்
புரம்வலம்வந் திழிந்திரதம் புகுந்தி லாய்மார்
விரைசெய்மல ரடியிறைஞ்சி மாதர் பல்லோர்
விழைவுறச்செய் வித்தவைபால் விசைய
னுற்ருன்
உரைசெய்சடங் குடன்பரியை மறையோர் சாலே
யுறுவித்தார் நரன்மாலோ டுகந்து வேந்த
ரரசுமகிழ்ந் திடத்தவிசி னுற்ரு ேனர்நாள்
அடைந்தனன்பப் புருவாக னனமா ரோடும்.

(இ-ள்) புரம் சனர்கள் - அத்திஞபுரிமக்கள், தனது வலி புகழ்ந்து - தன்னுடைய பலத்தைப் பாராட்டி, போற்ற - துதிக்க, விசையன் - அருச்சுனன், புரம் வலம் வந்து - நகரத்தை வலமாகப் பிரதட்சிணம் பண்ணி, இரதம் இழிந்து - தேரினின்றிறங்கி, இல் புகுந்து - அரண்மனையுள் புகுந்து சென்று, ஆய்மார் - தாய்மார் களுடைய, விரை செய் - வாசனே பொருந்திய, மலர் அடி இறைஞ்சி- பூப்போல் மெல்லிய பாதங்களில் நமஸ்கரித்து, மாதர் பல்லோர் - பல பெண்டிரும், விழைவுற செய்வித்து - தன்னே விரும்பும்படி அன்பு காட்டி, அவைபால் உற்ருன் - அரச சபையினே யடைந்தான்: (அப் போது) மறையோர் - அந்தணர், உரைசெய் சடங்குடன் - சாத் திரத்திற் கூறிய சடங்குகளோடு, பரியை - யாககுதிரையை, சாலே உறுவித்தார் - யாகசாலேக்கு அனுப்பினர்: நரன்-அருச்சுனன், மாலோடு - கிருஷ்ணனோடு, உகந்து - மகிழ்ந்து, வேந்தர் அரசு மகிழ்ந்திட - மன்னர்மன்னனுகிய தருமன் களிக்கும்படி, தவிசின் உற்ருன் - ஆசனத்திலமர்ந்தான்: ஓர் நாள் - ஒரு தினம், பப்ரு வாகன் —, அனேமாரோடும் - (இரு) தாய்மார்களோடும், அடைந் தனன் — வந்து சேர்ந்தான்; (எ.று.)

ஆய்மார் என்றது - குந்தி, காந்தாரியைக் காட்டும் 'அனைமார்' என்றது - சித்திராங்கதை, உலூபியைக்காட்டும். மலரடி- உவமைத்தொகை. (7)

**8. தருமன்சொற்படி மறையோர் கலசம் தாபித்தல்.**

வருசிறுவன் தொழுதைவர் மகிழ்வுற் றேந்தி
வழங்காசி புனைந்திருதாய் மாரோ டந்தப்
புரமணுகி யரசுடன்காந் தாரி குந்தி
புகலைவர் மனைவியர்தாள் போற்றி மற்றோர்
சிரமோந்து வாழ்த்தெடுப்ப விருந்தான் சின்னாட்
சென்றபினர் வேள்விசெயுந் தினம்வந் தெய்தத்
தருமன்மொழிப் படிமுனிவர் மறையோர் வேதி
தனிற்கலசம் மணிபரப்பித் தாபித் தாரால்.

(இ-ள்) வருசிறுவன் - வந்த பப்ருவாஹனன், ஐவர் தொழுது- பாண்டவரைவரையும் வணங்கி, (அவர்கள்) மகிழ்வுற்று - சந்தோஷித்து, ஏந்தி - கையால் தூக்கி, வழங்கு ஆசி புனைந்து - சொன்ன ஆசீர்வாதங்களையேற்று, இருதாய்மாரோடு - இரண்டு தாய்மார்களோடும், அந்தப்புரம் அணுகி - அந்தப்புரத்திற்சென்று, அரசுடன் - திருதராட்டிரனுடன், காந்தாரி-, குந்தி -, புகல் ஐவர் மனைவியர் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற பாண்டவர்களின் மனைவி மார்கள் இவர்களின், தாள் - பாதங்களில், போற்றி - வணங்கித் துதித்து, மற்றோர் - அவர்கள், சிரம் மோந்து - உச்சி முகர்ந்து, வாழ்த்து எடுப்ப - மங்களம் கூற, இருந்தான் - தங்கியிருந்தான்: சில் நாள் சென்ற பினர் - சிலநாட்கள் சென்ற பிறகு, வேள்வி செயும் தினம் வந்து எய்த - யாகஞ்செய்யும் சித்ரா பூர்ணிமை நாள் வந்து சேர, (அன்று) தருமன் மொழிப்படி - தருமராசன் சொன்னபடி, முனிவர் மறையோர் - இருடிகளும் பிராம்மணர்களும், வேதிதனில்- யாக மேடையில், மணி பரப்பி - நவ மணிகளைப் பரவலாக வைத்து, [அவற்றின் மேல்] கலசம் - கும்பத்தை, தாபித்தார் - ஸ்தாபனஞ் செய்தார்கள்; (எ.று) ஆல் - ஈற்றசை.

அசுவமேதம் தொடங்குதற்குக் கலச ஸ்தாபனம் செய்தமை கூறினார். உச்சி முகர்தல் - அன்பினாலாகும். வேதி - வேதிகை: யாகமேடை. (8)

**9. அந்தணர் யாகாக்னியை வளர்க்க, தருமன் திரௌபதியோடும் யாகபீடத்தமர்தல் கூறும்.**

அக்கலசம் பதினாறுக் கலர்சாந் தாடை
அணிந்ததனுட் கங்கைபுன லத்தம் பெய்து
கொக்கிலைதெங் கிளநீருஞ் சூட்டி வேதங்
கூறுவணஞ் சடங்கனைத்துங் குறைவி லாற்றி
முக்கனலும் விளக்கினர்வேற் றருமன் கங்கை
மூழ்கிபுனைந் தாடைகலன் முளரிச் செல்விக்
கொக்குமகச் சேனியுடன் சாலை யெய்தி
யுயர்முனிவர்க் கிறைஞ்சிதவி சுற்றான் மன்னே.

(இ-ள்) அ கலசம் பதினாறுக்கு - அத்தகைய சிறப்புப் பொருந்திய பதினாறு கும்பங்களுக்கு, அலர் சாந்து ஆடை அணிந்து - மலர்கள் சந்தனம், வஸ்திரம் இவற்றைக் கொண்டு அலங்கரித்து, அதனுள்- அவற்றுள், கங்கை புனல் - கங்கா ஜலத்தை, அத்தம் பெய்து - கைகளால் சொரிந்து, கொக்கு இலை - மாவிலையும், தெங்கு இள நீரும் - இளநீர்த்தேங்காயும், சூட்டி - அதன் மேல் வைத்து, வேதம் கூறு வணம் - வேத சாத்திரம் கூறியபடி, சடங்கு அனைத்தும் - எல்லாச் சடங்குகளையும், குறைவு இல் ஆற்றி - குறையில்லாதபடி பிழையறச் செய்து, முக்கனலும் விளக்கினர் - முத்தீயும் கிளர்ந்தெழும்படி செய்தனர்: வேல் தருமன் - வேலாயுதம் ஏந்திய தருமராசன், கங்கை மூழ்கி - கங்கையில் நீராடி, ஆடை கலன் புனைந்து- வஸ்திரம் ஆபரணங்கள் அணிந்து, முளரிச் செல்விக்கு ஒக்கும் - செந்தாமரையிலெழுந்தருளியிருக்கும் இலக்குமியை யொத்திருக்கும், மகச்சேனியுடன் - யாகபத்னியாகிய திரௌபதியுடன், சாலை எய்தி - யாக சாலையையடைந்து, உயர் முனிவர்க்கு இறைஞ்சி - முனிச்சிரேட்டர்களை வணங்கி, தவிசு உற்றான் - யாகபீடத்திலமர்ந்தான்; (எ.று.) மன், ஓ - ஈற்றசை.

கும்பாலங்காரம் செய்தபின், வேதத்தையறிந்தவர்களான ரித்விக்குக்கள் கர்மாக்களைச் செய்தார்கள். சடங்கு - கர்மா: ப்ரவர்க்யம், அபிஷவம், ஸவனங்கள் போன்றவை:

(குறிப்பு:- ப்ரவர்க்யம்- ஸோமயாகத்தில் முதலில் செய்யப்படும் ஹோமம்; அபிஷவம் - 'ஸோமலதையை இடிப்பது; ஸவனம் - ஹோமங்களின் வகைகள்). கனல் விளக்குதல் - தீயோம்புதல், ஹோமஞ் செய்தல். தருமன் கங்கையில் மூழ்கி ஆடைகலன் புனைந் தமை கூறியது - அவர் அச்வமேதத்தைச் செய்வதற்காகத் தீக்ஷை செய்து கொண்டமையைக் குறிக்கும். மகச்சேனி - யாகத்தில் சனித்தவள்: திரௌபதி. தவிசு - வேதிகையிலிட்ட மணை; பீடம். அத்தம் பெய்து - பாதி சொரிந்து எனவுமாம். அத்தம் - அர்த்தம்: பாதி. கொக்கு - மாமரம். அலர்சாந்தாடை, கொக்கிலை தெங்கிள நீர் - உம்மைத்தொகை. (9)

**10. தருமன் வேள்விதொடங்கி ஏழுநாள் செய்தல்.**

புறங்காப்ப யாதவர்கள் கனிட்ட ரேவற்
புரிதரமா தவன்கருணை பொழிய நோக்க
அறங்காட்டு மறைமுனிவன் தவுமி யன்சீர்
அகத்தியனு தியமுனிவ ராற்றுவிக்கத்
திறங்காலன் மகன்வேள்வி தொடங்கி நாளேழ்
செய்துவர யிவ்வண்ணந் தீரவாள் வீமன்
நிறங்காலு மணியுடன்பொன் பற்பல் பண்டம்
நேர்ந்திலன்வேண் டுவர்கொளவே நிகழ்த்தி
னுனல்.

(இ-ள்) யாதவர்கள் புறம் காப்ப - [துவாரகையிலிருந்துவந்த] யாதவ வீரர்கள் (யாகசாலையின்) வெளியிடங்களைக் காப்பாற்றி நிற்க, கனிட்டர் ஏவல் புரிதர - தம்பியர்கள் [தருமன் இட்ட] காரியங்கள் பல செய்ய, மாதவன் - கிருஷ்ணன், கருணை பொழிய நோக்க - கருணையோடு கடாக்ஷிக்க, அறம் காட்டும் மறைமுனிவன்- தர்மங்களைக் கூறும் வேதங்களை வகுத்த வியாசன், தவுமியன் - தௌமிய முனிவன், சீர் அகத்தியன் – சிறப்புப் பொருந்திய அகத் தியன், ஆதிய முனிவர் - முதலாகிய முனிவர்கள், ஆற்றுவிக்க - செய்து வைக்க, திறம் - சாமர்த்தியமுடைய, காலன் - யமதேவனின், மகன் - புத்திரனாகிய தருமன், வேள்வி தொடங்கி - யாகத்தை ஆரம்பித்து, ஏழ் நாள் இவ்வண்ணம் - ஏழுநாட்கள் இந்தப்படியே,

செய்து வர -, தீர வாள் வீமன் - வீரம்பொருந்திய வாளையேந்திய வீமசேனன், நிறம் காலும் - ஒளி விடுகின்ற, மணியுடன் - இரத்தினங்களுடன், பொன் - தங்கத்தையும், பல் பல் பண்டம் - பலப் பல பொருள்களையும், நேர்ந்திலன் - தானே கொடுக்காமல், வேண்டுவர் கொளவே - விரும்பியவர் விரும்பியபடி எடுத்துக் கொள்ளவே, நிகழ்த்தினுன் - செய்தான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

அசுவமேதம் ஏழுநாள் நடந்தது. தருமபுத்திரனால் வீமசேனன் விரும்பியவர்க்கு விரும்பியவற்றைக் கொடுக்கும்படி நியமிக்கப் பட்டிருப்பவும், அந்த வீமன் தானே கொடாமல் வேண்டியவர் தாம் வேண்டியபடியே முகந்து கொள்ள வழங்கினுன் என்ருர். பொன் - தங்கம், ஸ்வர்ணம். காப்ப, புரிதர, நோக்க, ஆற்றுவிக்க என்ற வினையெச்சங்கள் அடுக்கி, 'தொடங்கி' என்ற வினையெச்சத் தோடு இயையும். நேர்ந்திலன் - முற்றெச்சம். வேண்டுவர் - வினையாலணையும் பெயர். (10)

**11. குறைவில்லாதபடி செல்வங்களை நிரம்பக் கொடுத்து, வேள்வியைமுற்றுவித்தல்.**

கொடுத்தல்முடி யாதபல பொருளுஞ் செம்பொன்
குவைகளையும் அவரவர்கள் குறைவிற் ருமே
எடுத்துகொடு வறுமைக்கடற் கடந்து செல்வ
மெனுங்கரைகண் டனரளகை யிறைவன் மாழ்க
அடுத்தும்ப ரவிமாந்த அருத்தி யூபத்
தணவித்த மகப்பரியோ டான்முந் நூறு
முடித்துறுப்பின் அவியிமையோர்க் கருத்தி வேள்வி
முடித்தாசி தருமனுக்கு மொழிந்தா ரம்மா.

(இ-ள்) கொடுத்தல் முடியாத - [ஒருத்தரால் எடுத்துக்] கொடுக்கமுடியாதபடி (மாளாத), பல பொருளும் - பல பண்டங் களும், செம்பொன் குவைகளையும் - நல்ல பொற்குவியல்களையும், அவரவர்கள் - ஒவ்வொருத்தரும், குறைவு இல் - குறைதலில்லாத படி, தாமே எடுத்துக்கொடு - தாமே (சுயமாகவே) முகந்து கொண்டு, (அதனுல்) வறுமை கடல் கடந்து - மிடியென்னும் சாக ரத்தைத்தாண்டி, செல்வம் எனும் கரை - நிதியென்னும் கரையை,

அளகை இறைவன் மாழ்க - குபேரனும் துயருறும்படி, கண்டனர் - அடைந்தனர்; அடுத்து - அடுத்தபடியாக, உம்பர் - தேவர்கள், அவி மாந்த - ஹவிஸ் உணவையுண்ணும்படி, அருத்தி - அளித்து ஊட்டி, யூபத்து அணைவித்த - யாகத் தம்பத்தில் கட்டியிருந்த, மகப் பரியோடு - யாக குதிரையோடு, முந்நூறு ஆன் முடித்து - முந்நூறு பசுக்களையும் பலியிட்டு, (அவற்றின்) உறுப்பின் அவி - அவயவங்களின் அவியுணவையும், இமையோர்க்கு அருத்தி - தேவர்களுக்கு ஊட்டி, வேள்வி முடித்து - அசுவமேதயாகத்தைப் பூர்த்தி செய்து, தருமனுக்கு - தருமராசனுக்கு, ஆசி மொழிந்தார்- ஆசீர்வாதங்களைச் செய்தார்கள்; (எ.று.) அம்மா - வியப்பு.

குபேரனும் தனது செல்வம் குறைபட்டதேயென வருந்தும்படி அவனது நிதியினும் விஞ்சிய செல்வங்களை வழங்கினர் என்றபடி. உயர்வு நவிற்சியணியெனலாம். வறுமைக் கடல், செல்வக்கரை - உருவகம். முதலில் உம்பர் அவி 'மாந்த' என்றது ஸோமரஸத்தை எனலாம். பின்னர் 'அருத்தி' என்றதை வபை போன்றவற்றை எனலாம். [இந்த வபையினுடைய புகையின் வாசனையைத்தான் சாஸ்திரப்படி மோத்தல் வேண்டும்].

யூபம் - யாகத்தில் நாட்டப்படும் கம்பங்கள்: ஆறு பில்வயூபங்கள், ஆறு கருங்காலி யூபங்கள், ஆறு பலாச யூபங்கள், இரண்டு தேவதாரு யூபங்கள், ஒரு சிலேஷ்மாதக யூபம் இவைகளை ரித்விக்குக்கள் சாஸ்திரப்படி அமைப்பர் என்பர். அம்மா - அசுவமேதம் பூர்த்தியானதைப் பற்றிய வியப்பு. ஒரு யாகத்தைப் பண்ணிப்பார், ஒரு கலியாணத்தைப் பண்ணிப்பார்'' என்பது உலகவழக்கு. (11)

**12. தருமன் அனைவர்க்கும் விடைதந்து தன்னிருக்கை சேர்தல்.**

இம்மகம்போ லில்லையெனப் புகழத் தூயோர்
இருபிறப்போர் மகிழ்ந்தாசி யிருக்கி னேதச்
செம்பொன்மலர் பெய்திமையோர் வாழ்த்தக் கற்றோர்
சீர்த்தியினைப் பாடப்பல தேய வேந்தர்

அம்புயத்தா டொழமேலோர்க் கனுசர் பாவை
அரியுடன்றாழ்ந் துளசெம்பொ னாதி யாதும்
உம்பர்புகழ் தரக்கொடுத்து விடைதந் தியார்க்கும்
உதிட்டிரனுந் தனதிருக்கை யுற்றான் மன்னே.

(இ-ள்) 'இ மகம் போல் இல்லை - இந்த யாகத்தைப் போலொன்றும் கிடையாது', என புகழ - என (அனைவரும்) கொண் டாட, தூயோர் - இருடிகள், இரு பிறப்போர் - பிராம்மணர்கள், மகிழ்ந்து - களிப்புற்று, இருக்கின் - வேதமந்திரங்களால், ஆசி ஓத- ஆசீர்வாதங்களை மொழிய, இமையோர் - தேவர்கள், செம்பொன் மலர் பெய்து - ஸ்வர்ணபுஷ்பங்களைச் சொரிந்து, வாழ்த்த—,கற்றோர்- வித்துவான்கள், சீர்த்தியினை பாட - மிக்க புகழினைக் கவியாற்பாட, பல தேய வேந்தர் - பல தேச மன்னர்கள், அம்புயம் தாள் தொழ- தாமரைமலர் போன்ற பாதங்களில் பணிந்து வணங்க, மேலோர்க்கு- தன்னினும் உயர்ந்த சான்றோர்க்கு, அனுசர் - தம்பியரோடும், பாவை - திரௌபதியோடும், அரியுடன் - கிருஷ்ணனோடும், தாழ்ந்து - பணிந்து நமஸ்கரித்து, உள - எஞ்சியிருந்த, செம்பொன் ஆதி யாதும் – ஸ்வர்ணம் முதலிய பல பொருள்களையும், உம்பர் புகழ்தரக் கொடுத்து - தேவர்கள் புகழும்படி கொடுத்து, (மேலும்) யார்க்கும் விடை தந்து -'அனைவர்க்கும் அனுமதி கொடுத்து' உதிட்டிரனும் - தருமனும், தனது இருக்கை உற்றான் - தனது அரண்மனையையடைந்தான்; (எ.று.) மன், ஓ - ஈற்றசை.

புகழ ஓத வாழ்த்த பாட தொழ (தருமன் மேலோர்க்குத்) தாழ்ந்து கொடுத்து தந்து உற்றான் என இயையும். சீர்த்தி - மிகு புகழ்: உரிச்சொல்: அம்புயத்தாள் - உவமைத்தொகை. தந்தி யார்க்கும் - குற்றியலிகரம். (12)

**13. தருமன் அவைப்புறத்திருப்ப ஒரு கீரிப்பிள்ளை அங்குவருதல்.**

என்னவைசம் பாயனெடுத் திசைப்ப யாதும்
எழிற்சனமே செயனுணர்ந்துள் ளின்புற்
றைய !

மன்னவன்செய் மகத்தினுக்கொப் புயர்ந்தோ ராலும்
வகுக்கரிதோ வெனமுனிவன் வகுப்பான்
வேந்தே !
சொன்னமக முடித்தபினர் முனிவ ரோடுந்
தோன்றலவைப் புறத்திருப்பச் சுவர்ணம் பாதி
தன்னியற்கை பாதியுமா முடலோ டாங்குச்
சார்ந்திதனை யொருநகுலஞ் சாற்றிற் றுலோ.

(இ-ள்) என்ன வைசம்பாயன் எடுத்து இசைப்ப - என்று வைசம்பாயனமுனிவன் (வேள்வியைப் பற்றி) சிறப்புறச்சொல்ல, எழில் செனமேசெயன் - அழகு மிக்க ஜெனமேஜயன், யாதும் உணர்ந்து - அனைத்தையும் தெரிந்து கொண்டு, உள் இன்புற்று - மனங் களிப்புற்று, 'ஐய! - பெரியோரே! மன்னவன் செய் மகத்தினுக்கு ஒப்பு - தருமராசன் செய்த வேள்விக்குச் சமானமாவதோர் வேள்வி, உயர்ந்தோராலும் வகுக்க அரிதோ - மேலோராலும் எடுத்துச்சொல்லவியலாதோ?, என - என்று வினவ, முனிவன் - வைசம்பாயனன், வகுப்பான் - கூறுவானானான்: வேந்தே! - அரசனே! சொன்ன மகம் முடித்த பினர் - சிறப்பித்துப் பேசிய அசுவமேதயாகம் பூர்த்தியான பின்னர், முனிவரோடும் - இருடிகளோடும், தோன்றல் - தருமன், அவை புறத்திருப்ப - அரச சபையின் வெளியிடத்திருப்ப, (அப்போது) ஒரு நகுலம் - ஒரு கீரிப்பிள்ளை, சுவர்ணம் பாதி - பொன்னிறமான பகுதி பாதியும், தன் இயற்கை பாதியுமாம் - தன் இயல்பான பகுதி பாதியுமான, உடலோடு - சரீரத்தோடு, ஆங்கு சார்ந்து - அந்தவிடத்திற்கு வந்து, இதனை சாற்றிற்று - இந்த வார்த்தைகளைச் சொல்லிற்று. (எ.று). ஆல், ஓ - ஈற்றசை. கீரி சொன்னவற்றை மேலைக்கவியிலும் அடுத்த சருக்கத்திலும் காண்க.

தன்னுடலிற் பாதி பொன்னிறமாயுள்ள ஒரு கீரி வந்து தருமனிடம் சொல்லிற்று என்றார். தோன்றல் - ஆண்பாற்சிறப்புப் பெயர். வகுக்கரிதோ - வகரவுடம் படுமெய் கெட்டு வந்தது. (13)

**14. வந்த கீரி தருமனுள்ளிட்ட அவையோர்க்கு ஒரு காதை சொல்லத்தொடங்கல்.**

மாதவரை நோக்கியர சியற்றும் வேள்வி
வண்மைபுகழ்ந் தியான்பெரிதாய் மதித்தி லேனென்
ரோதவதைக் கேட்டவர்க ளதனை நோக்கி
யுற்றபிழை யெதனுலென் றுணர்கி லேம்யாம்
தீதறநீ யுரைத்தியெனக் காதை யொன்று
செப்புதுநீ ரதைக்கேட்கி றெரியு மென்றங்
காதரவோ டிருந்தவர்கண் மகிழு மாருய்
அக்கீரிப் பிள்ளையிதை யறையு மம்மா.

(இ-ள்) மா தவரை நோக்கி - முனிச்சிரேட்டர்களைப் பார்த்து, அரசு இயற்றும் வேள்வி வண்மை புகழ்ந்து - தருமன் செய்த யாகத்தில் செய்த தானங்களைப் புகழ்ந்து, யான் - நான், பெரிதாய் மதித்திலேன் - மதிப்புடையதாய் நினைக்க மாட்டேன், என்று—, ஓத - சொல்ல, அதைக் கேட்டவர்கள் - அந்த வார்த்தையைச் செவியேற்ற அவையினர், அதனை நோக்கி - அந்தக்கீரியைப் பார்த்து, 'உற்ற பிழை - நேர்ந்த குறை, எதனுல் - எந்தக் காரணத்தால், என்று யாம் உணர்கிலேம் - என்று நாங்கள் அறிந்தோமில்லை; நீ—, தீது அற - பிழை படாமல், உரைத்தி - சொல்வாயாக' என - என்று வினவ, அ கீரிப்பிள்ளை - அந்தக் கீரிப்பிள்ளையானது, காதை ஒன்று செப்புதும் - ஒரு கதை சொல்லு வேன்: நீர் - நீங்கள், அதனைக் கேட்கின் - அந்தக் கதையினை நன்கு செவியேற்பீராயின், தெரியும் - (நீங்களே) தெரிந்து கொள் வீர்கள், என்று—, அங்கு - அந்தச் சபையில், ஆதரவோடு - ஆர்வத் தோடு, இருந்தவர்கள் - தங்கியிருந்தவர்கள், மகிழும் ஆருய் - மகிழும்படி, இதை - இந்தக் கதையினை, அறையும் - சொல்லலா யிற்று; (எ.று.) அம்மா - ஈற்றசை.

யாகத்திலென்ன குறையென்று கேட்க கீரிப்பிள்ளை அதனை யொரு கதையால் விளக்கலாயிற்றென்க. உரைத்தி - ஏவல். செப்புதும் - தன்மையொருமை. (14)

வேள்விச் சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது

# நகுலோபாக்கியான சருக்கம்

கீரிப்பிள்ளை கூறிய கிளைக்கதையைப் பற்றிய சருக்கம் என விரியும். நகுலம் - கீரி: உபாக்கியானம் - கிளைக் கதை. கிளைக் கதையாவது - ஒரு பெரிய கதையுள் இடையில் புகுத்தப்படும் சிறு கதைகள். உதாரணமாக, நளோபாக்கியானம், குசேலோபாக்கி யானம் என்பன காண்க.

வேறு.

1. குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராம்மணர் இல்லறத்தில் வாழ்ந்துவரும்போது, மழைபொய்த்தல்.

பெருமுனி சத்துப் பிரத்தப்
பெயரினா னொருவன் தூய
குருநிலத் திருந்து பாரிக்
குமரனோ டவனில் லோடு
மருவுமில் லறம்பூண் டன்பால்
வாழுநாண் மழையில் லாமற்
பரவைசூ ழுலகி லியாரும்
பசியினான் முசிப்புற் றாரே.

(இ-ள்) பெருமுனி - பெருமை படைத்த முனிவனாகிய. சத்துப் பிரத்தப் பெயரினான் ஒருவன் - சத்துப்பிரத்தனென்னும் பெயரை யுடைய ஒருவன், தூய குரு நிலத்திருந்து - புனிதமான குருக்ஷேத் திரத்தில் தங்கி, பாரி - (தன்) மனைவியோடும், குமரனோடு - (தன்) புதல்வனோடும், அவன் இல்லோடு - அந்தக் குமரனின் மனைவி யோடும், மருவும் - பொருந்திய, இல்லறம் பூண்டு - மனைவாழ்க் கையை மேற்கொண்டு, அன்பால் - நேயமோடு, வாழும் நாள் - வாழ்ந்து வரும் காலத்தில், மழையில்லாமல் - மழை பெய்யாது

போக, பரவை சூழ் உலகில் - கடல் சூழ்ந்த நிலவுலகில், யாரும் - அனைவரும், பசியினால் - பசியின் கொடுமையால், முசிப்புற்றார் - தளர்ந்து போனார்கள்; (எ.று.) ஏ - ஈற்றசை.

குருக்ஷேத்திரத்தில் சத்துப்பிரத்தன் என்ற ஒரு அந்தணன் தன் மனைவி, மகன், மருமகள் இவர்களோடு வாழ்ந்து வந்தான் என்றபடி. பாரி - மனைவி. உலகில்யாரும் - ''தன்னொழிமெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்'' என்பது விதி. (நன் : மெய்யீற்: 3)

இது முதல் எட்டுக்கவிகள் - பெரும்பாலும் ஒன்று ஐந்தாஞ்சீர் கள் விளச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாக வந்த அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

**2. வயலிற் சிந்திக்கிடக்கும் நெல்லைச்சேகரித்து வருதல்.**

அந்தமா முனியு மில்லோ
டருண்மகன் மருகி யோடும்
வந்துகான் கந்த மூலம்
வாய்த்திலா மையினு லேங்கி
இந்துவார் சடையா னாடல்
ஈதெனச் சென்றங் கோர்சார்
சிந்திடும் புலத்திற் செந்நெல்
சேர்த்துக்கொண் டடைந்து சூழல்.

(இ-ள்) அந்த மா முனியும் - அந்தச்சிறந்த சத்துப்பிரத்த அந்தணனும், இல்லோடு - மனைவியோடும், அருள்மகன் - பெற்ற புதல்வன், மருகியோடும் - மருமகள் இருவரோடும், கான் வந்து - காட்டிற்கு வந்து, கந்தம் - கிழங்கு, மூலம் - வேர், [இவைகள் கூட] வாய்த்திலாமையினால் - கிடைக்காமற் போனமையால், ஏங்கி - துயருற்று, இந்து வார் சடையான் - சந்திரனைத்தரித்த நீண்ட சடையையுடையவனான சிவபெருமானின், ஆடல் ஈது - திருவிளை யாடலாகும் இது, என - என்று அமைந்து, சென்று - வழியே போய், அங்கு ஓர் சார் - அவ்விடத்து ஒரு பக்கத்தில் சிந்திடும் புலத்தில் - நெல் தானியங்கள் சிந்திக் கிடக்கும் ஒரு வயலில், செந்

நெல் சேர்த்துக் கொண்டு - சம்பாநெல்மணிகளைச் சேகரித்துக் கொண்டு, சூழல் அடைந்து - தன் இருப்பிடத்தையடைந்து; (எ.று) "அரிசியாக்கி" என மேலேக்கவியிலியையும்.

காட்டில் உண்பதற்குக் கிழங்கும் வேருங் கூடக் கிடையாமற் போனதால் 'இறைவனுடலாகும் இது' என அமைதி கொண்டான் என்றது. கந்தமூலம் - உம்மைத்தொகை.

[குறிப்பு:- ஒன்றொன்ருய் விழுந்து கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி ஜீவிப்பது - கபோதவ்ருத்தி எனப்படும். உஞ்சவ்ருத்தி யும் இதுவே; ஆனால் கபோதவ்ருத்தி மறுநாளைக்கென்று வைத்துக் கொள்ளாதது]. (2)

**3. அதிதியாக ஒரு பிராம்மணன் அவனிடம் வருதல்.**

புலத்துநெல் லரிசி யாக்கிப்
பொரிமாவு செய்து வைத்துச்
சலத்தினிற் படிந்தங் குச்சித்
தனிக்கட னியற்றி யுண்பான்
இலத்தடைந் தார்க ளாங்கோர்
இருபிறப் பாள னெய்தித்
துலைத்தியென் பசியை யென்றுன்
தூயவ னேய மெய்தி.

(இ-ள்) புலத்து நெல் - வயலிலிருந்து கொணர்ந்த நெல்லை, அரிசியாக்கி - (குற்றி) அரிசியாகச் செய்து, பொரிமாவு செய்து வைத்து - வறுத்துமாவாக அரைத்துவைத்து, சலத்தினில் படிந்து- நீரில் ஸ்நானஞ்செய்து, அங்கு - அவ்விடத்து, உச்சித் தனிக் கடன் இயற்றி - மாத்யான்னிகம் செய்து, உண்பான் - சாப்பிடு வதற்காக, இலத்து - (தம்) வீட்டிற்கு, அடைந்தார்கள் - வந்தார் கள்; (அப்போது) ஆங்கு - அவ்விடத்து, ஓர் இருபிறப்பாளன் எய்தி - ஒரு பிராம்மணன் வந்து, என் பசியைத் துலைத்தி என்றுன்- எனது பசியைப் போக்குங்கள் என்று வேண்டினான்: (அது கேட்டு) தூயவன் - அந்தப் புனித சத்துப்பிரத்தனும், நேயம் எய்தி - அன்புகொண்டு; (எ.று.) 'பதம் தாழ்ந்து' என மேலைக் கவியிலியையும்.

வயலில் விழுந்து கிடக்கும் நெல் தானியங்களைப் பொறுக்கி அரிசியாக்கிப் பின் மாவாகச் செய்து புசிக்கத் தொடங்கும் உச்சி வேளையில் ஒரு பிராம்மணன் அதிதியாக வந்தான் என்றார். (என்ன சோதனை!) இலம் - இல்லம் என்பதன் குறுக்கல். உண்பான் - வினையெச்சம். (3)

**4. அதிதிக்குத் தன்கூறுகொடுத்தும் பசிதீராமை கண்டு முனிவன் கவலையுறல்.**

பூவைநேர் பதந்தாழ்ந் தியான்செய்
புண்ணியம் பலித்த தென்று
மாவைநாற் பாகஞ் செய்து
வழங்கித்தன் கூறு மாந்திக்
காவையா வெனக்கொண் டன்னோன்
களித்ததைப் புசித்து இன்னந்
தேவையா யிருத்த லோர்ந்து
திருமுனி துயரஞ் சார்ந்தான்.

(இ-ள்) பூவை நேர் பதம் தாழ்ந்து - [வந்த அதிதியின்] மலர்போல் மெல்லிய பாதங்களில் வணங்கி, யான் செய் புண்ணியம் பலித்தது என்று - நான் செய்த பாக்கியம் (இன்று) பலனளித்தது என்று கூறி, மாவை நாற்பாகம் செய்து - (தாம் உண்ணவிருந்த) அரிசிமாவினை நாலு பாகமாகப் பிரித்து, தன் கூறு வழங்கி - தனக்குரிய காற்பாகத்தைக் கொடுத்து, (அதிதியை நோக்கி) 'மாந்தி - (இந்த மாவினை), உண்டு, ஐயா! - பெரியோரே! கா - என்னை ரட்சிப்பீராக' என - என்று பிரார்த்திக்க, அன்னோன் - அந்த அதிதி, கொண்டு - வாங்கிக் கொண்டு, களித்து - மகிழ்ந்து, அதைப் புசித்து - அதனையுண்டு, இன்னம் - மேலும், தேவையா யிருத்தல் - (அவனது பசியைப் போக்க மாவு) தேவைப்படுதலை, ஓர்ந்து - அறிந்து, திருமுனி - அந்தச் சிறந்த அந்தணனாகிய சத்துப் பிரத்தன், துயரம் சார்ந்தான் - வருத்தமடைந்தான்; (எ.று)

தன் மனைவி, மகன், மருமகள், தான் என்ற நால்வர்க்குமாக நான்கு பாகம் செய்து, தன் பாகத்து மாவினை அதிதிக்கு ஈந்தான்

என்க. அதனாலும் அவனது பசி தீராமை கண்டு வருந்தினன் என்றபடி, பூவை - இரண்டனுருபு விரி. தாழ்ந்தியான் - குற்றிய லிகரம். என்னு - உடன்பாட்டெச்சம் கா - முன்னிலை வியங் கோள். (4)

5. **தன்மனைவியின் பாகத்தையும் அதிதிக்கு ஈதல்.**

தன்பதி துன்போர்ந் தில்லாள்
 தனதுகூ றளிப்ப லென்ன
நின்பசிக் கருந்தா தீதல்
 நீதியோ வெனக்கேட் டைய !
உன்பசிக் குளதே யெற்கும்
 உறுவரோ அதிதி நாளை
அன்புடன் அளியென் றீந்தாள்
 அவனுங்கொண் டதிதிக் கீந்தான்.

(இ-ள்) இல்லாள் - (அந்த) அந்தணன் சத்துப்பிரத்தனின் மனைவி, தன் பதி துன்பு ஓர்ந்து - தன் கணவனது துயரத்தை யறிந்து தனது கூறு அளிப்பல் என்ன - தன்னுடைய காற்பாகத் தையும் கொடுக்கிறேன் என்று சொல்ல, (கணவன்) 'நின்பசிக்கு- உன்னுடைய பசியைப் போக்குதற்கு, அருந்தாது - உண்ணுமல், ஈதல் - (நீ) கொடுத்திடுதல், நீதியோ - முறைமையாகுமோ? என - என்று சொல்ல, கேட்டு - அதனைக்கேட்டு, (அவன் மனைவி) 'ஐய- பெரியோரே! உன் பசிக்கு - உமது பசிக்கு, உளதே - உள்ள தெதுவோ அதுவே, எற்கும் - எனக்கும் ஆகும்; அதிதி நாளை உறுவரோ - விருந்தினர் நாளைக்கு வருவரோ? (வரமாட்டார் ஆகையால்) அன்புடன் அளி - விசுவாசத்தோடு கொடுங்கள்'; என்று - என்று கூறி, ஈந்தாள் - கொடுத்தாள்: அவனும் கொண்டு - அந்த அந்தணனும் பெற்று, அதிதிக்கு ஈந்தான் - வந்த விருந்தின னாகிய பிராம்மணனுக்குக்கொடுத்தான்; (எ.று.)

முதலடியினால், "ஸ்திரீகளுக்கு ஸத்தியமும் ரதியும் தர்மமும் விருப்பமும் சுவர்க்கமும் பர்த்தாவை அடுத்திருக்கின்றன" என்பது உணரவேண்டுவது. 'உன்பசிக்கு உளதே எற்கும்' - என்றவிடத்து, தர்மமும் அர்த்தமும் கணவன் மனைவியிருவர்க்கும் பொதுவானவை

என்ற சாஸ்த்ரார்த்தம் உணரவேண்டுவது ஒருநாள் மட்டும் விருந்தினனுக வருபவன் அதிதி எனப்படுவன். உறுவரோ, ஓ - விஞு, எதிர்மறை. அளி - வியங்கோள். (5)

**6. மேலும் அதிதியின் பசிதீராமைகண்டு அந்தணன் வருத்தமுற, அதுகண்ட மகன் தன்பகுதி வழங்க முன்வருதல்.**

ஈந்ததை யேந்தி மாந்தி
யிருக்கினுன் பசிதீ ராமை
தேர்ந்தணங் கெய்துந் தந்தை
திருமுக நோக்கி மைந்தன்
மாந்திட வெனது கூறும்
வழங்கென மறுத்துப் பால!
காய்ந்தவெம் பசிக்காற் ருய்நீ
காக்கும்யான் கொளநன் ருமோ.

(இ-ள்) இருக்கினுன் - வேதம்வல்ல அதிதிபிராம்மணன், ஈந்ததை - சத்துப்பிரத்தன் கொடுத்ததை, ஏந்தி - கையில்வாங்கி, மாந்தி - உண்டு, (பின்னும்) பசிதீராமை தேர்ந்து - பசிநீங்கா திருத்தலையறிந்து, அணங்கு எய்தும் - வருத்தமுறும், தந்தை - தகப்பனுரின், திருமுகம் நோக்கி - முகத்தைப்பார்த்து, மைந்தன் - மகன், மாந்திட - அதிதியுண்ணும்படி, எனது கூறும் - என்னுடைய பாகத்தையும், வழங்கு - கொடும், என - என்று கூற, மறுத்து - தந்தை வாங்காதுநீக்கி, 'பால! - சிறுமகனே! காய்ந்த வெம் பசிக்கு- வருத்தும் மிகுதியான பசியினுக்கு, நீ ஆற்ருய் - நீ பொறுத்திருக்க மாட்டாய்: காக்கும் யான் - உன்னைரட்சிக்கவேண்டிய தந்தை யாகிய நான், கொள - (உன்னிடம்) பெற்றுக்கொள்ள, நன்று ஆமோ - நல்லதாகுமோ? (ஆகாது) (எ.று.)

இரண்டாமடியால் அறியவேண்டியது - பிதாவைப் பரிபாலிப்பது புத்திரர்களுடைய கடமை: பிதாவைக் காப்பாற்றுவதால் புத்திரனென்று கருதப்படுகிருன். பால! என்றவிளி ரசிக்கத் தக்கது; "ஆயிரம் பிராயம் சென்றவனுனுலும் பாலனென்பதே பிதாவினுடைய எண்ணம்". புத்திரனை ரட்சித்துச் சான்ருேனுக்குதல் பிதாவினுடைய கடமையாதலின், "காக்கும்யான்" என்ருன்.

இருக்கு - வேதம்: இருக்கினுன் - வேதமோதும் பிராம்மணன். ஈந்தது - வினையாலணையும்பெயர். தீராமை - எதிர்மறைத்தொழிற் பெயர். வழங்கு - வியங்கோள். ஆமோ, ஓ - வினு எதிர்மறை (6)

**7. மகன் தன் பகுதிவழங்கவும் அதிதி பசிதீராமை காட்ட மருமகள் தன்பகுதி யீதல்.**

என்னலு மீட்டுந் தந்தை
இதயமோர்ந் தியற்ரு மைந்தன்
இன்னிலத் திருந்தென் னீதி
யெனத்தர வாங்கித் தந்தான்
அன்னவன் அருந்தி மீட்டும்
அரும்பசிகாட்ட மாமன்
இன்னல்கண் டிரங்கித் தன்கூ
றீந்தனள் மருகி மன்னே.

(இ-ள்) என்னலும் - என்று தந்தை சொல்லவும், மீட்டும்-மறுபடியும், (மகன்), ''தந்தை இதயம் ஓர்ந்து - தகப்பனுரின் மனே விருப்பத்தையறிந்து, இயற்ரு - அதனை நிறைவேற்றிவைக்காத, மைந்தன் - பிள்ளை, இ நிலத்து - இந்தப்பூலோகத்தில், இருந்து என்-உயிரோடிருந்து என்னபயன்? (ஆகவே) ஈதி - (யான்கொடுக்கும்) என் பகுதியை [அதிதிக்கு]க் கொடுப்பாய்,'' என - என்றுகூறி, தர - கொடுப்ப, வாங்கி . தந்தை (அதனைக்) கையேற்று, தந்தான்-அதிதிக்குக்கொடுத்தான்: அன்னவன் - அந்த அதிதி, அருந்தி - புசித்து, மீட்டும் - மேலும், அரும்பசி காட்ட - மிக்கபசியைத்தெரிவிக்க, மாமன் - மாமனுருடைய, இன்னல் கண்டு - துயரத்தைப் பார்த்து, இரங்கி - மனமிரங்கி, தன் கூறு - தன் காற்பகுதியை, மருகி ஈந்தனள் - மருமகள் கொடுத்தாள்; (எ.று.) மன், ஓ - ஈற்றசை.

'ஏவாமக்கள் மூவாமருந்து', 'இங்கிதமறிந்துசெய்' என்பன முதுமொழிகள்: அவற்றிற்கேற்ப தந்தையின் மனக்கருத்தையறிந்து அதற்கேற்ப ஒழுகுபவனே பிள்ளையாவன்: இல்லையேல் அவன் இருந்தும் பயனில்லை ''என்ற உண்மை முதலிரண்டடிகளால் பெற வைக்கப்பட்டது. ஈதி - முன்னிலை வியங்கோள், இயற்ரு - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அரும்பசி - மிக்க பசி. முப்பகுதி

யுண்டும் மிக்கபசிகாட்டியது சோதிப்பதற்கென்க. மாமனுரது இன்னல்கண்டு மருகியீந்தாள் என்றவிடத்து அறிய வேண்டிய உண்மை — மருமகளுக்கு மாமனுரே குருவுக்குக்குருவும் தெய்வத் திற்குத்தெய்வமுமாய் இருப்பவர்; அதனுல், தேவருக்கும் மேலான தேவராவர் என்பது. (7)

**8. அதிதி பசிதீர்ந்து அவர்கள் தருமத்தைக்கொண்டா டிப்போக, தேவர்கள்மலர்மாரி பொழிதல்.**

ஆங்கதை வாங்கி யீந்தான்
அதிதிகொண் டமுதின் மாந்தி
தாங்கிய பசிதீர்ந் துங்கள்
தருமமே தரும மென்று
பூங்கழல் கைவாய் பூசிப்
போந்தபின் புலவர் வானிற்
றேங்கமழ் மலர்க டூவித்
தேவதுந் துபியு மார்த்தார்.

(இ-ள்) ஆங்கு - அப்போது, அதை - மருகியின் அந்தப் பகுதியை, வாங்கி - [அவளிடத்திலிருந்து] பெற்று, ஈந்தான் - அதிதிக்குக்கொடுத்தான்: அதிதி கொண்டு - அதிதிபிராம்மணன் அதைவாங்கி, அமுதின் மாந்தி - தேவாமிருதம் போலச்சுவைத் துண்டு, தாங்கிய பசி தீர்ந்து - வயிற்றிலிருந்த பசி நீங்கி, 'உங்கள் தருமமே தருமம்' என்று- நீங்கள்நால்வரும் செய்த தருமமே தருமம் எனப்படும்' என்று சிலாகித்துக் கொண்டாடி, பூங்கழல் கை வாய் பூசி - வாய் கைகால் இவைகளை (நீரினுல்) அலம்பி, போந்தபின் - சென்றபின்பு, புலவர் - தேவர்கள், வானில் - ஆகாயத்தில், தேம் கமழ் மலர்கள் தூவி - தேன்வாசனை வீசுகின்ற பூக்களைச்சொரிந்து, தேவதுந்துபியும் - தேவதுந்துபிவாத்தியங்களையும், ஆர்த்தார் - ஒலிப்பித்தார்கள்; (எ.று.)

வாய்பூசுதல் - வாயலம்புதல். உஞ்சவிருத்தியந்தணன் குடும்பத் தினரைத்தேவர்களே கொண்டாடி வாழ்த்தினர் என்றபடி. உண்மை யில் இதுதான் தருமம்என்று தருமத்திற்கு இலக்கணம் வகுத்தவாறு, அமுதின், இன் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. (8)

வேறு.

9. **வந்த அதிதி தன்னைத் தர்மதேவதையென்றுகாட்டி, பொரிமாவின் தானத்தாலே அந்தணனைத்தன் குடும்பத்தோடு பிரமலோகம் அடைவாய் எனக்கூறல்.**

மைக்கார்க ளிடித்தார்த்திவ் வுலக மெல்லாம்
மழைபெய்த தெவ்வுயிரும் மகிழ்வுற் றோங்கிற்
றிக்காலை தருமதெய் வதம்வந் தந்த
அருண்முனிபால் முனம்புகுந்த வதிதி யானே
தக்கோய்! நின் பொரிமாவின் தானத் தாலே
சதுமுகனு மகிழ்ந்தானந் தனைதந் துன்னோ
டிக்காரு மொழிமாதர் சுதன்கொண் டெய்தும்
எனச்சுரரை விடவந்தா ரெய்து மென்றான்.

(இ-ள்) மை கார்கள் - கறுத்த மேகங்கள், இடித்து ஆர்த்து- இடியொலிசெய்து ஆரவாரித்து, இ உலகம் எல்லாம் - இந்தப் பூவுலகம்முழுதும் (மழையின்றிவருந்தாதபடி), மழைபெய்தது-மழையைப் பொழிந்தன : (அதனால்) எ உயிரும் - எல்லாப்பிராணிகளும், மகிழ்வுற்று - களித்து, ஓங்கிற்று - செழித்தன : இ காலை - இந்தச் சமயத்தில், தருமதெய்வதம் - தருமதேவதை, அந்த அருள்முனிபால்- கருணையுடைய அந்தப் பிராம்மண சத்துப்பிரத்தனிடம் வந்து —, தக்கோய் - தகுதியுடையவனே! முனம் புகுந்த - முன்னர் உன் வீட்டில் சேர்ந்த, அதிதி - விருந்தினன், யானே - நான்தான் : நின் பொரிமாவின் தானத்தால் - நீ உண்ணக் கொடுத்த பொரிமாவின் தானத்தினால், சதுமுகனும் -பிரமதேவனும், மகிழ்ந்து-சந்தோஷித்து,- ஆனம் தனை தந்து - (தேவ) விமானத்தைக்கொடுத்து, உன்னோடு - தானஞ்செய்த உன்னோடு, இக்கு ஆரும் மொழி மாதர் - கரும்புசாறு போல் இனிக்கும்பேச்சினையுடைய மனைவியையும் மருமகளையும், சுதன் - மகனையும், கொண்டு - கூடவே அழைத்துக்கொண்டு, எய்தும் - வந்துசேருங்கள், என - என்று சொல்லி, சுரரை விட - தேவர்களையனுப்ப, வந்தார் - அவர்கள் வந்துள்ளார்கள் ; எய்தும் - நீர்வாரும்', என்றான் - என்றுகூறினான் ; (எ.று.)

அதிதியாய்வந்த தருமதேவதை பசி நீங்கவே, மழையின்மையால் பிராணிகள் வாடிய துர்ப்பிக்ஷத்தைநீக்கி மழையைப்பொழியச்

செய்தது என்க. மற்றும் தனக்குச்செய்த பொரிமாவின்தானத்தாலே அந்தப் பிராம்மணன் சத்துப்பிரத்தன் தன்குடும்பத்தோடு பிரம்ம லோகம் அடையும்படி செய்தது.[குறிப்பு — ஒரு படிபொரிமாவினால் அழிவற்றதான பிரம்மலோகம் கிட்டியது : இதனால் அன்னதானத் தின் பெருமைநிலைநாட்டப்பட்டது]. மைக்கார் - காளமேகம். ஆனம்- விமானம். இக்கு - கரும்பு : கருப்பஞ்சாறு குறிக்கும்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள ஏழுகவிகளும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகவந்த கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (9)

**10. கீரி தருமன்யாகத்தைப் பெரிதாய் மதிக்காததற்குக் காரணங்கூறல்.**

அன்னதுகேட் டகமகிழா நால்வரும் போய்
அடைந்தாரவ் விமானமிசை யயனு டியானோர்ந்
துன்னரிய வதிதிமுனங் கரங்காற் பூசும்
உதகமதிற் போய்ப்புரண்டேன் உடலம் பாதிப்
பொன்னுருப்பெற் றற்புதமாய் மற்றப் பாதி
பொன்னுமென் றறம்வேள்வி புரிபாங் குற்றும்
மன்னியற்று மகத்தடைந்தும் வாய்த்தில் வாற்றூன்
மதிக்கிலனென் றகன்றதுடன் மறைவுற் றம்மா.

(இ-ள்) அன்னது கேட்டு - (தருமதேவதைசொன்ன) அந்த வார்த்தைகளைச் செவியேற்று, அகம் மகிழா-மனமகிழ்ந்து, நால்வரும் போய் - நான்குபேரும் சென்று, அ விமானம் மிசை - அந்த விமானத்திலேறி, அயன் நாடு அடைந்தார் - பிரம்மலோகத்தை யடைந்தார்கள் : யான் [கீரியாகிய] நான், ஓர்ந்து - இதனையறிந்து, உன்னரிய அதிதி - நினைத்தற்கும் அரிதாகிய அதிதி தருமதேவதை முனம்-முன்னர், கரம் கால் பூசும் உதகம் அதில் - கைகளையும் பாதங் களையும் அலம்பிய நீரில், போய் புரண்டேன் - ஓடிப் புரண்டு புரண்டு நனைத்தேன்; உடலம் பாதி - எனது உடம்பினில் பாதி பாகம், அற்புதமாய் பொன்னுருப் பெற்று - ஆச்சரியமாய்ப் பொன் னிறத்தையடைய, (நான்) மற்றப் பாதி - மற்றைய பாதி உடம்பும், பொன் ஆம் என்று - பொன்னிறமடையுமென்றெண்ணி, அறம் -

தருமங்களையும், வேள்வி - யாகங்களையும், புரி - செய்கின்ற, பாங்கு- இடங்களில், உற்றும் - போய்ச் சேர்ந்து புரண்டும், மன் இயற்றும் மகத்து அடைந்தும் - தருமராசன் செய்த அசுவமேதத்து வந்து புரண்டும், வாய்த்து இல் - எனக்குப் பொன்னிறமாகவில்லை; வாற்றல்-அந்தக் காரணத்தினுல், மதிக்கிலன் - (உமது) யாகத்தைப் பெரியமதிப்புடையதாய் நினைக்கமாட்டேன், என்று - என்று கூறி, உடன் மறைவுற்று அகன்றது - உடனே மறைந்து போயிற்று; (எ.று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

ஈற்றடியில், 'மதிக்கிலன்' என்றது என்னையெனில் -"இந்த அசுவமேதயாகமானது ஒரு படி பொரி மாவுக்கு எவ்விதத்திலும் சமமாகாது" என்றது. அதாவது; ஒரு படிமாவின் சிந்திய துளி களாலும் அந்த மாவையுண்டு வாய் கைகால் அலம்பிய தீர்த்தத்தினு லும் ஸ்வர்ணமயமாகப் பாதியுடம்பு செய்யப்பட்டேன்: ஆகை யால், பெரிதான இந்த யாகமானது மற்றொரு பாதியும் ஸ்வர்ணமய மாக்கும் என்று எண்ணி வந்தேன்: ஆனுல் ஸ்வர்ணமயமாகச் செய்யப்படவில்லை; எனவே, இந்தப் பெரிய யாகம் அந்தப் பொரி மாவின் துளிகளுக்கு ஒப்பாகாது என்று என்னுல் கருதப்பட்டது" என்று சொல்லியது. இங்ஙனம் சொல்லி, உடனே அவர்களின் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்தது என அறிய வேண்டுவது. மகிழா - உடன்பாட்டெச்சம். வாய்த்தில் - வாய்க்கவில்லை: எதிர் மறை வினைமுற்று. வாறு - விதம், காரணம். (10)

**11. கீரியுரைத்ததில் தர்மசூட்சுமம் உள்ளதென்று வியாசர் தருமனுக்கு உணர்த்தத்தொடங்கல்.**

அங்கதைக்கேட் டெம்போல்வா ரியற்றும் வேள்வி
அதிதிதனக் கனதான மன்று வேத
புங்கவன்செய் வதுபோல வாமோ வென்னும்
புரவலனை வாழ்த்திதவம் புரிவோ ரெல்லாந்
தங்கிருக்கை புகுந்தனர்பின் வியாதன் வேந்தன்
தனைநோக்கிப் பொரிமாவின் தான நீசெய்
துங்கமகத் தினுக்குயர்வென் றுரைத்தல் தன்ம
சூக்குமமஃ துணர்தியெனத் தோன்றல்
சொல்வான்.

(இ-ள்) அங்கு - அவ்விடத்து, அதை கேட்டு - அந்தக் கீரி சொன்ன வார்த்தையைக்கேட்டு, 'எம் போல்வார் இயற்றும் வேள்வி - என்னைப்போன்ற அரசர்கள் செய்கின்ற யாகம், அதிதி தனக்கு அனம் தானம் அன்று - வந்தவிருந்தினர்களுக்கு அன்ன தானம் இடுவது அன்று : (அன்னதானத்தில் சேராது) [ஏனெனில்] வேதபுங்கவன் செய்வதுபோல ஆமோ - வேதம்வல்லதூயோன் சத்துப்பிரத்தன் செய்ததுபோல ஆகுமோ? (ஆகாது), என்னும் - என்றுகூறி உள்ளுருகும், புரவலனை - தருமராசனை, வாழ்த்தி - ஆசீர் வதித்து, த்வம் புரிவோர் எல்லாம் - தவஞ்செய்யும் இருடிகள் அனைவரும், தங்கு இருக்கை புகுந்தனர் - தாம்வசிக்கும் ஆச்ரமங் களையடைந்தனர் : பின் - பிறகு, வியாதன் - வியாசமுனிவன், வேந்தன்தனை நோக்கி - தருமனைப்பார்த்து 'பொரிமாவின் தானம் - [சத்துப்பிரத்தன் செய்த] பொரியரிசிமாவின் தானம், நீ செய் துங்க மகத்தினுக்கு - நீ செய்த அசுவமேதயாகத்தினும், உயர்வு என்று உரைத்தல் - மேன்மைவாய்ந்தது என்று சொல்லுதல், தன்ம சூக்குமம் - ஒரு தர்மசூட்சுமமாகும், அஃது உணர்தி - அதனை யறிவாய்', என - என்றுகூற, (அதனைக்கேட்டு) தோன்றல் - தருமன், சொல்வான் - கூறுவான்; (எ.று.) தருமன் கூறியதை மேலைக் கவியிற்காண்க.

தருமன் தான்செய்தவேள்வியில் யாதொரு குறைவுமின்றி அபரிமிதமாக வந்தவரனைவர்க்கும் அன்னதானம் ஏழுநாள் வழங்கினுனுயினும் தான்செய்தது 'அன்னதானமன்று' என்றது - சத்துப்பிரத்த அந்தணனும் அவன்குடும்பத்தாரும்செய்த தியாகரூப மான அன்னதானத்துக்கு ஈடாகாது என்ற கருத்துநோக்கி யென்க. தருமசூட்சுமம் என்றது - தர்மத்தை நிந்தித்தே கீரி தன் சாபத்தினின்றுவிடுபட்டு முன்னையுருப்பெற்றமை, [அஃதுமேலே வரும் விருத்தாந்தத்தால் விளங்கும்], ஆமோ, ஓ - வினு எதிர்மறை, உரைத்தல் - தொழிற்பெயர். (11).

**12-15. வியாசர் தருமனுக்குக்கீரியின் முன்னையவரலாறு கூறி, அதனால் அக்கீரி, 'மகத்தினும் அன்னதானம் மேலானது' எனக்கூறியதெனல்.**

**நான்குகவிகள் - ஒருதொடர்.**

**12. சமதக்னியின் சிரார்த்தத்தில் குரோதம்வந்து பாலைச் சாய்த்தல்.**

ஈண்டணுகித் தோற்றியுருக் கரந்தோர் காதை
யிசைத்தகலும் கீரியியல் பியம்ப வெற்கு
வேண்டுமென வேதமுனி யெடுத்தான் வேந்தே!
விளம்புசெம தக்கினிப்பேர் மேலோ னோர்நாள்
மாண்டபிதுர் தேவருக்குச் சிரார்த்தஞ் செய்வான்
வைத்தபசும் பாலதனை மண்மேற் சாய்த்த
தாண்டணுகிக் குரோதமெனுந் தெய்வந் தூயோன்
அஃதுணர்ந்து வருந்தவதங் கடைந்தீ தோதும்.

(இ-ள்) ஈண்டு - இவ்விடத்து [அவைப்புறத்து], அணுகி - வந்து, தோற்றி - கண்ணுக்குத்தோன்றி, ஓர் காதை இசைத்து - ஒரு கதையினைச்சொல்லி, உருக் கரந்து - (பின்னர்) உருவம் ஒளித்து, அகலும் - போன, கீரி இயல்பு - கீரிப்பிள்ளையினது தன்மை, எற்கு - எனக்கு, இயம்பவேண்டும் - சொல்லவேண்டும், என - என்று (தருமன்)கேட்க, வேதமுனி - வியாசமுனிவன், எடுத்தான் - கூறலானான்: வேந்தே! - தருமனே! ஓர்நாள் - ஒருதினம், விளம்பு செமதக்கினிப்பேர் மேலோன் - சிறப்பிக்கப்படுகின்ற ஜமதக்னி யென்னும் முனிவன், மாண்ட பிதுர்தேவருக்கு - இறந்துபோன பித்ருக்களுக்கு, சிரார்த்தம் செய்வான் - சிரார்த்தம் செய்யும் பொருட்டு, வைத்த - (ஹோமதேனுவைக்கறந்து பாத்திரத்தில்) வைத்திருந்த, பசும்பால் அதனை - பசுவின்பாலை, குரோதம் எனும் தெய்வம் - கோபம் என்கின்ற தேவதை, ஆண்டு அணுகி - அவ்விடத்து வந்து, மண்மேல் சாய்த்தது - தரையின்மேல் கொட்டியது: தூயோன் - ஜமதக்னிமுனிவன், அஃது உணர்ந்து - அதனையறிந்து, வருந்த - வருத்தமடைய, அது - அந்தக் குரோதம், அங்கு அடைந்து - அம் முனிவனிடம்வந்து, ஈது ஓதும் - இதனைச்சொல்லும்; (எ.று.) குரோதம் சொல்லியதை மேலைக்கவியிற்காண்க.

குரோதம் - கோபம். முனிவர் அதனைக்கோபமென்று தெரிந்தும் அதனைக்கோபிக்காது தாம் 'வருந்த' என்றபடி தெய்வம் - ஓர் பிராம்மணவடிவமெடுத்து அவர்க்கு 'ஓதும்' எனக்கொள்க. வேண்டும் - வியங்கோள். செய்வான் - வினையெச்சம். (12)

**13. பிதிருக்கள் குரோதத்தைக் கீரியாகும்படி சபித்தல்.**

நின்கருத்தியா னோர்ந்திடவந் தான்பாற் சாய்த்தேன்
நீயஃது பொறுத்தியென நிகழ்த்த மற்றோன்
தென்புலத்தார் கருமத்துக் கிடரன் றெற்குச்
செய்திலைதீங் ககலெனவத் தெய்வம் போந்த
தன்னபொழு தம்முனிபாற் பிதுர்க்க ளெய்தி
அரிய பிதுர்க் கருமத்துக் காம்பாற் சாய்த்தோன்
துன்பெய்த முனிந்திலைநீ நகில மாகத்
தோற்றுகெனச் சபிப்பவவன் றொழுது
சொல்வான்.

(இ-ள்) நின் கருத்து - உம்முடைய மனத்தெண்ணம், யான் - நான், ஓர்ந்திட வந்து - அறிந்திடும்படி வந்து, ஆன்பால் சாய்த்தேன் - பசுவின்பாலைக்கவிழ்த்தேன்; நீ—, அஃது - அத் தீங்கினை, பொறுத்தி - பொறுத்துக்கொள்வாய், என - என்று, நிகழ்த்த - சொல்ல, மற்றோன் - அந்த ஜமதக்னி, 'தென்புலத்தார் கருமத்துக்கு - பிதிர்க்களின் சடங்கினுக்கு, இடர் அன்று - இடையூறு அன்று; எற்கு - எனக்கு, தீங்கு செய்திலை - தீமை செய்யவில்லை; அகல் - நீ போவாய்?' என - என்று (அருளோடு) விடுப்ப, தெய்வம் போந்தது - குரோதம் செல்லலாயிற்று: அன்ன பொழுது- அச்சமயத்தில், அ முனிபால் - அந்த ஜமதக்னியிடத்து, பிதுர்க்கள் எய்தி - பிதிருக்கள் வந்து, 'அரிய பிதுர்க்கருமத்துக்கு - செய்தற்கரிய பிதுர் சிரார்த்தத்திற்கு, ஆம் பால் - (இன்றியமையாது) வேண்டப் படும் பசுவின்பாலை, சாய்த்தோன் - கவிழ்த்த இந்தக் குரோதத்தை, துன்பு எய்த - வருத்தமடையும்படி, நீ—, முனிந்திலை - கோபித்துச்சபித்தாயில்லை, (நாங்கள் சபிக்கிறோம்: குரோதமே!) நகுலமாக - கீரிப்பிள்ளையாக, தோற்றுக - பிறப்பாயாக' என - என்று, சபிப்ப - சாபமிட, அவன் - அந்தக்குரோதம், தொழுது - வணங்கி, சொல்வான் - கூறுவானானான்; (எ.று.) குரோதம் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

பிருகுகுலத்திற் பிறந்தவர்கள் மிக்க கோபமுள்ளவர்களென்று உலகத்தில் ஒரு வழக்கு உண்டு ; அதனைப்பரீட்சிக்கவேண்டும் என்றுவந்தேன் என்றபொருளில், 'நின் கருத்துயான் ஓர்ந்திட வந்து ஆன்பால்சாய்த்தேன்'' என்றான். அந்தவழக்கு ஜமதக்னியிடத்துப் பொய்யாயிற்றாதலின் 'நீ அஃது பொறுத்தி' என்றான் என விவரம் அறிக. ஆனால், பித்ருக்களுடைய சாபத்தால் அது கீரியாயிற்று. பொறுத்தி - முன்னிலைவியங்கோள். அகல் - முன்னிலையேவல். சாய்த்தோன் - வினையாலணையும்பெயர். தோற்றுகென வியங்கோளின் அகரவீறு தொகுத்தல் : சபித்தற்பொருளில் வந்தது. (13).

## 14. பிதிர்க்கள் கீரிக்குச் சாபவிடை யீதல்.

என்வினையா லிஃதடுத்த தடிக ணாயேற்
கினிசாபப் பரிகார மியம்பு மென்ன
தென்புலத்தோர் நீநகுல மாகிப் பன்னாள்
திரிந்துவுதிட் டிரன்வேள்வி செய்நா ளக்கோன்
முன்பணுகி யதிதிதனக் கன்ன தானம்
முனிசெய்த பான்மைசொலின் மூனம்போ லாவை
என்றியம்பி யகன்றனரவ் வுருப்பெற் றுன்பால்
எய்தியிதை நகுலஞ்சொற் றேகிற் றென்றான்.

(இ-ள்) என் வினையால் - நான்செய்த தீங்கினால், இஃது அடுத்தது - இந்தச் சாபம் ஏற்பட்டது : அடிகள்! - பெரியோர்களே ! நாயேற்கு - நாய்போற்கடைப்பட்ட எனக்கு, இனி - இனிமேல், சாப பரிகாரம் - சாபநீக்கத்திற்கான வழியை, இயம்பும் - சொல்வீர், என்ன - என்றுபிரார்த்திக்க, தென்புலத்தோர் - அந்தப் பிதிர்த்தேவதைகள், 'நீ நகுலமாகி - குரோதமாகிய நீ கீரிப்பிள்ளையாகி, பல் நாள் திரிந்து - பலநாட்கள் சஞ்சரித்து, உதிட்டிரன் வேள்வி செய் நாள் - தருமன் அசுவமேதயாகம் செய்யும் நாளில், அ கோன் முன்பு அணுகி - அந்தத் தருமராசன்முன் சென்று கிட்டி, அதிதி தனக்கு - வந்த(தருமதேவதையாகிய) விருந்தினனுக்கு, அன்னதானம் - அன்னம் வழங்குவதை, முனி - சத்துப்பிரத்தன் என்னும் அந்தணன், செய்த - ஆற்றிய, பான்மை

சொலின் - விதத்தைச்சொல்வாயானுல், முனம் போல் ஆவை - முன்போலவே குரோதவுருப்பெறுவாய்?, என்று இயம்பி - என்று சொல்லி, அகன்றனர் - (அந்தப் பிதிர்க்கள்) போயினர் : அ உரு பெற்று - அந்தப்படி கீரிப்பிள்ளையுருவத்தையெடுத்து, உன் பால் எய்தி - உன்னிடத்து வந்து, இதை - (சத்துப்பிரத்தன்) அன்ன தானம் செய்த இந்த விதத்தை, நகுலம் - கீரி, சொற்று - சொல்லி, ஏகிற்று - (மறைந்து) போயிற்று, என்ருன் - என்று [வியாசன்] கூறினுன் : (எ.று.)

இங்கு அறியவேண்டிய விவரம் பின்வருமாறு:- குரோதமானது 'என்சாபத்திற்குப்பரிகாரம் வேண்டுமென்று அந்தப் பிதிர்த்தேவதைகளைப் பிரார்த்திக்க, அவர்கள், 'நீ தருமனின்யாகத்தில் செய்த தானங்களை நிந்தித்துக்குறைகூறி, சத்துப்பிரத்தன்செய்த ஒருபடி பொரிமாவின் தானத்திற்கு ஈடாகாது என்று தூஷிப்பாயானுல், சாபத்தினின்று விடுபடுவாய் என்று கூறிச்செல்லவே, அதன்படியே தர்மத்தை நிந்தித்துத் தன் சாபத்தின் முடிவையடைந்தது. **இதனுல் அறியவேண்டிய சூட்சுமம் - தர்மமானது யுதிஷ்டிரனுக இருந்ததென்பது.** இந்தத் தர்மசூட்சுமத்தை வியாசமுனிவன் தருமனுக்கு அறிவித்தார் என்க.

ஆவை - ஆகுவை என்பதன் சிதைவு. (14)

**15. யாகஞ்செய்தலினும் அன்னதானம் மேலானது என முடிவு கூறல்.**

ஆதலினுன் மகத்தினுமே லன்ன தானம்
ஆயதெனச் சுகன்ருதை யரசர் வேந்துக்
கோதின்னென் றருண்முனிவன் பரீட்சித் தோன்றற்
குரைத்திடக்கேட் டகமகிழ்வுற் றுலகாள் வேந்தன்
காதலுடன் பரிமேதம் முடித்து மேற்செய்
கருமமுரை யெனமுனிவன் கழற லானுன்
ஏதமிலாப் பரிமேதப் பருவச் செய்யுள்
இசைக்குமொரு நூற்றிருபத் தேழ தாமால்.

(இ-ள்) ஆதலினுல் - இங்ஙனிருத்தலால், மகத்தினும் - அசுவ மேதயாகத்தைக்காட்டிலும், அன்ன தானம் மேல் ஆயது - அன்ன தானம் சிறந்ததானது, என - என்று, சுகன் தாதை - வியாச முனிவன், அரசர் வேந்துக்கு - தருமராசனுக்கு, ஓதினன் - சொல்லி முடித்தான், என்று - , அருள் முனிவன் - வைசம்பாயனன், பரீட்சித் தோன்றற்கு - பரீட்சித்தின் மகனுகிய ஜெனமேஜயனுக்கு, உரைத்திட - சொல்ல, கேட்டு - செவியேற்று, அகம் மகிழ்வுற்று - மன மகிழ்ந்து, – 'உலகாள் வேந்தன் - தருமராசன், காதலுடன் - விசு வாசத்துடன் (சம்பிரமமாக), பரிமேதம்முடித்து - அசுவமேதயாகத் தினைச்செய்து நிறைவேற்றி, மேல் செய் கருமம் - மேற்கொண்டு செய்த செயலைப்பற்றி, உரை - சொல்வீராக', என - என்று பிரார்த் திக்க, முனிவன் - வைசம்பாயனன், கழறலானுன் - கூறலாயினுன், (அவர் கூறியதை அடுத்த சருக்கத்திற்காணலாம்: இது நிற்க) : ஏதம் இலா பரிமேதப் பருவச்செய்யுள் - குற்றமில்லாத அசுவமே தப்பருவத்தின் செய்யுட்டொகை, இசைக்கும் - சொல்லப்படுகின்ற, ஒரு நூற்று இருபத்து ஏழது ஆம் - நூற்றிருபத்தேழாகும்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

மகத்தினும் மேல் அன்னதானம் ஆயது - என்றதன்கருத்து என்னையெனில் - சத்தியம், தானம், தவம் இவைகளாலேயே சுவர்க்கம்முதலியன கிடைத்தலால், ஜீவஹிம்ஸைக்குக் காரண மான யாகம் சிறந்ததன்று என்னும் கீரியின் அபிப்பிராயத்தை வெளியிட்டபடி. உரை - வியங்கோள். இலா - ஈறுகெட்டஎதிர் மறைப்பெயரெச்சம். ஏழது - அது, பகுதிப்பொருள்விகுதி. (15)

நகுலோபாக்கியான சருக்கம் முற்றிற்று.

அசுவமேத பருவம் முற்றிற்று.

சுபம்.

## பதினைந்தாவது

# ஆசிரம வாச பருவம்.

திருதராஷ்டிரன் காந்தாரிகுந்தி இவர்களுடன் வனஞ்சென்று துறவுபூண்டு ஆசிரமவாசஞ்செய்ததைப்பற்றிக் கூறும் பருவம் எனப் பொருள்படும். இந்தப்பருவத்துக்கூறப்படும் சருக்கங்கள்;-

(1) முறைபுரிசருக்கம் (2) திருதராட்டிரன் துறவெய்தியசருக்கம் (3) வனம்புகுசருக்கம் (4) புத்திர சோபந் தீர்ந்த சருக்கம் என்பன. இந்த நான்கு சருக்கங்களே ஏட்டுச்சுவடிகளில் காணப் படுகின்றன. அதனிலும் நான்காவது சருக்கம் பதினேழுபாடல் களோடு நின்றுவிடுகின்றது. (குறிப்பு:- நல்லாப்பிள்ளை பாரதத்தின் படி இந்த ஆசிரமவாசபருவத்தில் இன்னும் ஒரு சருக்கம் உள்ளது. அது (5) திருதராட்டிரன் காந்தாரி குந்திமுத்திபெற்றசருக்கம் என்பது) அவற்றுள்

## முதலாவது

# முறைபுரி சருக்கம்.

தருமபுத்திரன் செங்கோலோச்சி அரசாட்சியை ராஜதர்மத்தின் படி புரிந்ததைக்கூறும் சருக்கமாகும். இரண்டனுருபும்பயனுமுடன் றெக்க தொகை.

### வேறு.

### தெய்வவணக்கம் - கிருஷ்ணன் ஸ்துதி.

1. தழைபுதன் மேய்தலைத் தவிர்ந்தங் கான்கணம்
விழைவுடன் கேட்பகோ விந்தர் நாப்பணிற்
கழைகுழ லிசைசெயுங் கருணை வாரிதி
மழைவண னடியிணை வழுத்து வாமரோ.

(இ-ள்) அங்கு - மேய்ச்சலிடத்து, ஆன் கணம் - பசுக் கூட்டங்கள், தழைபு - குனிந்து, தன் மேய்தலை - தாம் புல்மேயுஞ்

செயலை, தவிர்ந்து - விடுத்து, கோவிந்தர் நாப்பணில் - கிருஷ்ண னின் மத்தியில், விழைவுடன் கேட்ப - விருப்பத்தோடு கேட்கும்படி, கழை - மூங்கிலினாலாகிய, குழல் - புல்லாங்குழலை, இசை செயும் - ஊதிப்பண்ணிசையெழுப்பும், கருணை வாரிதி - தயாசமுத்திரமாகிய, மழை வணன் - மேகவண்ணனாகிய கிருஷ்ணனின், அடி இணை - உபய பாதங்களை,வழுத்துவாம் - போற்றுவோம் ; (எ.று.) அரோ — ஈற்றசை.

"கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது . . . . கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே" (பெரியாழ் : திருமொழி : 3-6-8) என்றும், "மேய்கைமறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழிசோர" (3-6-9) என்றும் குறித்தார் பெரியாழ் வாரும். தழைபு - தாழ்ந்து, குனிந்து : செய்பு என்னும்வினையெச்சம். நாப்பண் - நடு. (middle) கருணைவாரிதி - உருவகம். மழைவணன் - உவமைத்தொகை. அடியிணை - இணையடி : முன்பின்னாகத்தொக்கது. வழுத்துவாம் - உளப்பாட்டுத்தன்மைப்பன்மை.

இந்தச்செய்யுள் - மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும் ஏனையமூன்றும் விளச்சீர்களுமாகவந்த அளவடி நான்குகொண்ட **கலிவிருத்தம்.**

(1)

வேறு.

**2. பப்ருவாஹநன் மதுரை சேர, கிருஷ்ணன் துவாரகை சேர்தல்.**

தப்பில்செய் வேள்விக் குற்ற சனரெலாஞ் சென்ற பின்னர்
பப்புரு வாக னைவர் பதம்பணிந் தாசி யேந்தி
அப்பதி பயந்தாள் வைக வாலவாய் புகுந்தான் மாயோன்
செப்பும்யா தவர்க ளோடுஞ் சென்றுபோய்த் துவரை சேர்ந்தான்.

(இ-ள்) தப்பு இல் - பிழையில்லாதபடி, செய் - செய்யப்பட்ட, வேள்விக்கு - அசுவமேதத்திற்கு, உற்ற - வந்திருந்த, சனர் எலாம் - ஜனங்களெல்லாம், சென்ற பின்னர் - (விடைபெற்றுத்) தத்தம் இடங் களுக்குப்போன பிறகு, பப்புருவாகன் - பப்ருவாஹநன், ஐவர் பதம் பணிந்து - பஞ்சபாண்டவர்கள் பாதங்களில் வணங்கி, ஆசி ஏந்தி -

அவர்களது ஆசீர்வாதத்தைப்பெற்று, அ பதி பயந்தாள் வைக - அந்த அத்திஞபுரியில் தாயாகிய சீத்திராங்கதை தங்கியிருப்ப, (தான்) ஆலவாய் புகுந்தான் - மதுரையை யடைந்தான் : மாயோன் - கிருஷ்ணன், செப்பும் யாதவர்களோடும் - புகழப்படுகின்ற யாதவர்களுடன், சென்று போய் - விரைவாகச்சென்று, துவரை சேர்ந்தான் - துவாரகையை யடைந்தான் ; (எ.று.)

ஆலவாய் - மதுரை : மதுரைநகரத்தின் பழையஎல்லையை அறிவிக்கவேண்டுமென வேண்டிய வங்கியசேகரபாண்டியனுக்குச் சோமசுந்தரக்கடவுள் தம்கையில் ஆபரணமாக அணிந்துள்ள நாகத்தை நோக்கி 'நீ வரையறுத்துக்காட்டு' என்று கட்டளையிட அது தன் வாலும் வாயும் ஒன்றுபடும்படி உடம்புவளைந்து அந்நகரைச்சுற்றி நின்று எல்லையைக்காட்டியதனுல் அந்நகரம் **'ஆலவாய்'** என்று பெயர்பெற்றது. சென்றுபோய் - ஒருபொருட்பன்மொழி : விரைவு குறிப்பது.

இந்தச்செய்யுள் - ஒன்றுநான்காஞ்சீர்கள் விளச்சீர்களும், ஏனையவை மாச்சீர்களுமாகவந்த **அறுசீராசிரியவிருத்தம்.**

(2)

வேறு.

**3. தருமனது ஆட்சிச்சிறப்புக்கூறல்.**

மறையா சிரமம் பிறழாமல்
வருண சிரமம் வழுவாமல்
முறையா முலகி னடைபிசகா
முனைபோர்க் கொன்னர் கிடையாமல்
குறையா மழையு மிகவிளைவும்
குடிக ளழைப்புங் குறையாமல்
நெறியா வுலக மொருகுடைக்கீழ்
நிறுவிப் புரந்தான் தருமனுமே.

(இ-ள்) மறை ஆசிரமம் - வேதத்திற்கூறப்பட்ட நிலைகள், பிறழாமல் - பிழைபடாமல், வருண ஆசிரமம் - வருணநிலைகள், வழுவாமல் - தவறுபடாமல், உலகில் - பூமியில், முறையாம் நடை -

நெறியாகிய ஒழுக்கம், பிசகா - பழுதுபடாமல், முனை போர்க்கு - முனைந்துசெய்யும் யுத்தத்திற்கு, ஒன்ஞர்-பகைவர்கள், கிடையாமல்-அகப்படாமல், குறையா மழையும் - நிரம்பிய மழையும், மிக விளைவும் - மிக்க விளைச்சலும், குடிகள் தழைப்பும் - குடிமக்களுடைய செழித்தவாழ்க்கையும், குறையாமல் - குறைவுபடாமல் பூரணமாய், நெறியாய் - (ராஜநீதி) முறைமைப்படி, உலகம் - நிலவுலகத்தை, ஒருகுடைக்கீழ் நிறுவி - ஒற்றைவெண்கொற்றக்குடையின்கீழ் வைத்து, தருமன் - தருமராசன், புரந்தான் - ஆண்டுவந்தான் : (எ.று.). ஏ - ஈற்றசை.

மறையாசிரமம் - பிரமசரிய கிரஹஸ்த வானப்ரஸ்த சந்யாச நிலைகள். வருணாசிரமம் - பிராமணக்ஷத்ரியவைச்யசூத்ர வருணங்களின் நிலைகள். உலகின்நடை - உலகியல். பகைவரில்லாமை - அனைவரும் நண்பாதலாலும் செங்கோன்மையின் சீர்மையினாலும் என்க. குறையா மழை - கோல் நிலைதிரியாமை காட்டுவது. மிக விளைவு - தள்ளா விளையுள். குடிகள்தழைத்தல் - அச்சமின்மை காட்டுவது. "மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" என்பது நினைக.

இந்தச்செய்யுள் - மூன்றுஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களாகவும், ஏனையவை மாச்சீர்களாகவும் வந்த **அறுசீராசிரியவிருத்தம்.** (3)

வேறு.

4. **தருமன் அரசுபுரிந்த வகை கூறல்.**

அம்பக மிலாத வேந்தன்
அடிபணிந் தவன்சொற் றூங்கித்
தம்பிய ரேவ லாற்றத்
தரணிப ரடியிற் றாழ
உம்பருஞ் சீர்த்தி வாழ்த்த
உதிட்டிரன் புவிம டந்தை
கம்பகந் தீர்த்தங் காசி
கழறிட வரசு செய்தான்.

(இ-ள்) அம்பகம் - கண்கள், இலாத - இல்லாத (பிறவிக் குருடனுகிய)வேந்தன் திருதராட்டிரனது. அடிபணிந்து - பாதங்களை வணங்கி, அவன் சொல் தாங்கி - அவன்சொன்ன வார்த்தையைச் சிரமேற்கொண்டு (அதன்படியொழுகி), தம்பியர் ஏவல் ஆற்ற - வீமன்முதலியதம்பிமார்கள் தானிட்ட கட்டளைகளைநிறைவேற்றிச் செய்ய, தரணிபர் - பிறநாட்டுமன்னர்கள், அடியில் தாழ - தன் பாதங்களில் (முடியிட்டு) வணங்க, உம்பரும் - தேவர்களும், சீர்த்தி - (தனது) மிக்க புகழை, வாழ்த்த - போற்றிசெய்ய, உதிட்டிரன் - தருமன், புவிமடந்தை - பூமிதேவியின், கம் - தலைமேலுள்ள, பரம் - பாரத்தை (சுமையை), தீர்த்து - நீக்கிவைத்து, அங்கு - அவ்விடத்து, ஆசி கழறிட - (அந்தப்பூமிதேவி) ஆசீர்வாதமொழிகளைச்சொல்ல, அரசு செய்தான் - அரசாட்சிபுரிந்தான் ; (எ.று.)

பணிந்து தாங்கி ஆற்ற தாழ வாழ்த்த என்றவினையெச்சங்கள் அடுக்கி 'தீர்த்து'என்ற வினையெச்சத்தோடு முடியும். அம்பகம்-கண், 'சீர்த்திமிகுபுகழ்' (தொல்: சொல். உரி : 16) யுதிஷ்டிரன் - போரில் நிலையாக நிற்பவன் என்று காரணப்பொருள்படும். கம் - தலை, சிரசு. 'பூபாரம் தீர்த்து' என்றபடி.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள ஏழுகவிகள் - பெரும் பாலும் ஒன்றுநான்காஞ்சீர்கள் விளச்சீர்களும், ஏனையவை மாச்சீர் களுமாகவந்த அறுசீராசிரிய விருத்தம்.

(குறிப்பு- மேல்வரும் சருக்கத்தும் தொடர்ந்துமுதல் ஒன்பதுகவிகள் இத்தகைய விருத்தங்களே). (4)

**5. தருமன் விருந்தோம்பல்.**

யாவர்க்கும் விடைதந் தேவி
அவைதணந் தறத்தின் மைந்தன்
மேவரு மனைசார்ந் தன்னை
விழியிலா னவனில் லாடந்
நாவினுக் கிதமாய் வேட்ட
நல்லமு தருத்திப் பின்னர்
மேவினற் றுணைவர் வந்த
விருந்தொடு மருந்து வானல்.

(இ-ள்) அறத்தின் மைந்தன் - தருமபுத்திரன், யாவர்க்கும் விடைதந்து - சபையினர் எல்லோருக்கும் அனுமதிகொடுத்து, ஏவி - அனுப்பி, அவை தணந்து - சபையினைவிட்டுநீங்கி, மேவரு - விரும்பப்படுகின்ற, மனை சார்ந்து - அரண்மனையடைந்து, அன்னை - குந்திதேவி, விழியிலான் - திருதராட்டிரன், அவன் இல்லாள் - அவனுடைய மனைவிகாந்தாரி, தம் - இவர்களுடைய, நாவினுக்கு இதமாய் - நாக்குக்கு உருசியாய், வேட்ட - அவர்கள் விரும்பிய, நல் அமுது அருத்தி - நல்ல உணவினையுண்பித்து, பின்னர் - பிறகு, நல் துணைவர் மேவி - நல்ல தம்பிமார்களோடு பொருந்தி, வந்த விருந் தொடும் - வந்த அதிதிகளோடும், அருந்துவான் - புசித்தான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

வயோதிகர்க்கேற்ற சுவையுணவு யுண்பித்தான் என்றபடி. 'நம்பு மேவு நசையாகும்மே' (தொல் : சொல் : உரி : 33) விருந் தொடு மருந்துவான் - பிராசம். (5)

**6. திருதராட்டிரன் இறந்தோர்க்கெல்லாம் சிரார்த்தம் செய்தல்.**

இவ்வணம் அருந்தி நாளும்
இருநிலம் புரக்கு நாளிற்
செவ்விழி யிலாதான் வீய்ந்த
சிறுவர்கள் கதியிற் சேர்வான்
எவ்வமில் லறங்கள் பற்பல்
லியற்றியே யிறந்தோர்க் கெல்லாம்
ஒவ்விலாச் சிரார்த்த மன்னோர்
ஒழிதின மறிந்து செய்தான்.

(இ-ள்) இ வணம் - இந்தவகையே, நாளும் - தினமும், அருந்தி- விருந்தோடுஉண்டு, இரு நிலம் புரக்கும் நாளில் - பெருநிலவுலகத்தை யாண்டுவரும் நாளில், செவ்விழி இலாதான் - குருடனாகிய திருத ராட்டிரன், வீய்ந்த சிறுவர்கள் - இறந்துபோன (தன்) புத்திரர்கள், கதியில் சேர்வான் - நல்லகதியில் (சுவர்க்கத்தில்) சேரும்பொருட்டு, எவ்வம் இல் - குறைதலில்லாத, பற்பல் அறங்கள் - பலப்பல தருமங்களை, இயற்றி - செய்து, (பின்) இறந்தோர்க்கு எல்லாம் -

மாண்டுபோன சுற்றத்தாரனைவர்க்கும், ஒவ்வு இலா - ஒப்பில்லாத, சிரார்த்தம் - சிரார்த்தச்சடங்கினை, அன்னோர் ஒழி தினம் அறிந்து - அவரவர்கள் இறந்த திதியினையறிந்து, செய்தான்—; (எ.று.)

தானங்கள்பல வழங்கிச்சிரார்த்தமும்செய்தான் திருதராட்டிரன் என்றபடி. இலா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். தினம் - இங்கே திதியைக்காட்டும். சேர்வான் - வினையெச்சம். (6)

**7. திருதராட்டிரன் தருமனைக்கொண்டு அரசு செய்வித்தல்.**

தனையர்க ளிறந்த சோபந்
தருமன்செய் யுபசா ரத்தால்
கனவிலு நினையா னாகிக்
கனிட்டனோ டுயுச்ச னாசான்
முனிவில்சஞ் சயனும் பாங்கர்
மொய்த்துறத் தவிசி னேறி
அனுசன்றன் சுதனாற் செங்கோல்
அனுதினம் நடாத்து வித்தான்.

(இ-ள்) தனையர்கள் இறந்த சோபம் - புத்திரர்கள் மாண்டதனாலாகிய துயரம், தருமன் செய் உபசாரத்தால் - தருமராசன் செய்த மரியாதைகளால், கனவிலும் நினையானாகி - கனவிலுங்கூட நினைக்காதவனாய், கனிட்டனோடு - தம்பியாகிய விதுரனோடு, உயுச்சன் - யுயுத்ஸு, ஆசான் - கிருபன் முனிவு இல் சஞ்சயனும் - கோபமில்லாத சஞ்சயன் இவர்களும், பாங்கர் - பக்கத்தில், மொய்த்துற - நெருங்கியிருப்ப, தவிசின் ஏறி - ஆசனத்திலமர்ந்து, அனுசன் தன் சுதனால் - தம்பியாகிய பாண்டுவின் புத்திரனாகிய தருமனால், அனுதினம் - தினந்தோறும், செங்கோல் நடாத்துவித்தான் - அரசாட்சியைச் செய்வித்தான் (திருதராட்டிரன்) ; (எ.று.)

முதலிரண்டடிகளில் தருமன்செய்த உபசாரத்தின்சிறப்புக் கிளந்தபடி. நடாத்துவித்தல் - பிறவினை. (7)

**8-9. வீமனது நிந்தையைக்கேட்டுத் திருதராட்டிரனும் காந்தாரியும் வருந்துதல்.**

**இரண்டு கவிகள் - ஒருதொடர்.**

அந்தகன் மைந்தர் பேரால்
அறஞ்செயற் காற்று வீமன்
தந்தைகாந் தாரி நேர்போய்ச்
சாற்றுவா னெமக்கு நாளும்
நிந்தைக ளியற்றிச் சூதால்
நிலங்கொணூற் றுவரை வீட்டி
எந்தனுக் கிசையுஞ் சீரும்
ஈந்ததிக் கதையே யாமால்.

(இ-ள்) அந்தகன் - திருதராட்டிரன், மைந்தர் பேரால் - தன் புத்திரர்கள் பெயரால், அறம் செயற்கு - தருமகாரியங்களைச் செய்வதற்கு, ஆற்று - (மனம்) பொறுக்காத, வீமன் - வீமசேனன், தந்தை காந்தாரி நேர் போய் - திருதராட்டிரன் காந்தாரி இவ்விருவரிடமும் நேராகச் சென்று, சாற்றுவான் - கூறுவானாயினன்: 'நாளும் - தினந்தோறும், 'எமக்கு - எங்களுக்கு, நிந்தைகள் இயற்றி - பழிக்கப் படுஞ்செயல்களைச் செய்து, சூதால் - சூதாட்டத்தால் (கவருடுதலால்), நிலம் கொள் - (எங்களுக்குரித்தான) பூமியைக் கவர்ந்து கொண்ட, நூற்றுவரை வீட்டி - (உமது) நூறு புத்திரர்களையும் அழித்து, எந்தனுக்கு - எனக்கு, இசையும் - புகழையும், சீரும் - சிறப்பையும், ஈந்தது - வாங்கிக்கொடுத்தது, இ கதையேயாம் - [சத்துருகாதிநி என்ற] இந்தக் கதையேயாகும்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

துட்டர் பெயராலே அறம் செய்தலை வீமன் விரும்பவில்லையென்க. கொள் + நூற்றுவர் = கொணூற்றுவர்: 'ணள முன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே' என்பது விதி: (நன்: மெய்யீற். 34). வீமன் கதாயுதத்திற்குச் சத்துருகாதிநி என்று பெயர். (8)

9. ஆதலா லெனக்குத் தேவும்
ஆருயிர்த் துணையு மோம்பும்
மோதுமிக் கதையே பூசை
யுஞற்றுவ னாளு மென்றான்
தாதையோ டன்னை கேளா
தனிமுக முகிழ்த்துச் சோர்ந்தார்
ஈதெலாம் தருமற் கோதா
திளைஞர்கள் மறைவு செய்தார்.

(இ-ள்) ஆதலால் - ஆகையினால், எனக்கு—, தேவும் - தெய்வமும், ஆர் உயிர்த்துணையும் - அரிய உயிர்த்துணைவனும், ஓம்பும் - பாதுகாப்பும், மோதும் - தாக்கிப்போரிடுகின்ற, இ கதையே - இந்தச் சத்துருகாதிநியே: (ஆகவே) நாளும் - தினமும், பூசை உஞற்றுவன் - அந்தக் கதாயுதத்துக்குப் பூசனை செய்வேன்; என்றான் - என்று (வீமன்) கூறினான்: தாதையோடு - திருதராட்டிரனோடு, அன்னை – காந்தாரியும், கேளா - கேட்டு, தனி முகம் முகிழ்த்து - தனித்தனியே [தமது] முகஞ்சுருங்கி, சோர்ந்தார் - தளர்ந்தார்கள்: ஈது எலாம் - இச்செய்திகளையெல்லாம், தருமற்கு ஓதா - தருமனுக்குச் சொல்லாமலேயே, இளைஞர்கள் - தம்பிமார்கள், மறைவு செய்தார் - மறைத்து வைத்தார்கள்; (எ.று).

தருமற்குச் சொன்னால் பெரிதும் வருந்துவதோடு வீமனையும் நொந்துகொள்வர் என்பதால் தம்பியர் மறைத்தனரென்க. தனக்கு வாகையீந்ததும் வஞ்சினம் முடித்துவைத்ததுமாகிய கதையை வீமன் ஆயுத பூஜை செய்தானென்க. கேளா - உடன்பாட்டெச்சம். ஓதா - எதிர்மறை வினையெச்சம். (9)

10. திருதராட்டிரன் கானம் செல்லவெண்ணுதல்.

காலத்தி னேது வோர்ந்து
கண்ணிலா னிருந்தங் கோர்நாள்
ஆலத்தின் வீமன் வாய்மை
யகத்தினைச் சுடவங் காற்றான்

ஞாலத்தை நீங்கிக் கானம்
நண்ணுவா னெண்ணி வேந்தர்
காலத்தோ டவைபான் மேவுந்
தருமனுக் கிதனைச் சொல்வான்.

(இ-ள்) காலத்தின் ஏது ஓர்ந்து - காலத்தின் போக்கினை யுணர்ந்து, கண்ணிலான் - திருதராட்டிரன், இருந்து - அமைதியாக விருந்து, அங்கு - அவ்விடத்து, ஓர் நாள் - ஒரு தினம், வீமன் வாய்மை - வீமசேனன் கூறிய வார்த்தைகள், ஆலத்தின் - விஷம் போல, அகத்தினைச்சுட - மனத்தைப் பெரிதும் வருத்த, அங்கு - அப்போது, ஆற்ருன் - பொருதவனுகி, ஞாலத்தை நீங்கி - நாட்டினை விட்டு, கானம் நண்ணுவான் எண்ணி - காட்டினை அடைய நினைத்து, காலத்தோடு - (குறித்த) காலத்திற்கேற்ப, வேந்தர் அவைபால் மேவும் - அரச சபைக்கு வந்து பொருந்தும், தருமனுக்கு —, இதனைச் சொல்வான் - இந்த வார்த்தைகளைச் சொல்லலாயினுன்; (எ.று) திருதராட்டிரன் தருமனுக்குக் கூறிய வற்றை அடுத்த சருக்கத்திற்காண்க. நண்ணுவான் - வினையெச்சம். வேந்தரவை என இயைத்துப் பொருள் கொள்க. (10)

முறைபுரி சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

# திருதராட்டிரன் துறவெய்திய சருக்கம்

திருதராட்டிரன் அரச போகங்களை வெறுத்துத் தவக்கோலந் தாங்கித் துறவு மேற்கொண்டதைக் கூறும் சருக்கம் என்பது பொருள்.

**1-3. திருதராட்டிரன் தருமனிடம் தவஞ்செய்யப்போவ தாகக் கூறுதல்.**

**மூன்று கவிகள் - ஒரு தொடர்.**

துதித்திடும் புகழோ யிந்தத்
தூலமா முடலை மெய்யாய்
மதித்துமிவ் வாழ்க்கை பூண்டு
மறலிகைப் பாசம் புக்கு
விதித்தவாக் கினைக்குட் பட்டு
வினைவழி மீட்டும் பாரில்
உதித்திடுங் கயவர்க் கென்றும்
உன்னிய கதியுண் டாமோ?

(இ-ள்) துதித்திடும் புகழோய்!- (அனைவராலும்) போற்றப் படுகின்ற புகழையுடைய தருமனே! இந்த தூலமாம் உடலை - பாரமாகிய இந்த உடலை, மெய்யாய் மதித்து - சாசுவதமென நினைத்து, இ வாழ்க்கை பூண்டு -இந்த அரச வாழ்வில் தங்கியிருந்து, (பின்பு) மறலி கை பாசம் புக்கு - யமனுடைய கையிலுள்ள பாசக் கயிற்றினில் அகப்பட்டு, (அந்த யமன்) விதித்த ஆக்கினைக்கு உட்பட்டு - நியமித்த தண்டனைக் கட்டளைக்கு உள்ளாகி (அநுபவித்து), மீட்டும் - மறுபடியும், வினைவழி - [செய்துள்ள] கர்மத்தின்படி, பாரில் உதித்திடும் - பூமியில் பிறந்திடும், கயவர்க்கு - பாபிகளுக்கு, என்றும் - எப்போதாயினும், உன்னிய கதி உண்டாமோ? - நினைத்த நற்பேறு உளதாகுமோ? (ஆகாது); (எ.று.)

தூலமாம் உடல் - ஸ்தூலசரீரம்: சுமையாயிருக்கும் இந்த உடல். பொய்யாய உடலை, மெய், என மதிக்கின்றோம். எனவே, உடலை 'மெய்' என்பது மங்கலவழக்கு. 'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது' என்றது மணிமேகலையும். (பளிக்கறை. வரி 113) உன்னிய கதி - சுவர்க்கம், வீடு. உண்டாமோ, ஓ - வினு - எதிர்மறை. (1)

2. மறங்கிளர் மறலி பற்ற
வருமுனர் துறந்தே வுள்ளும்
புறங்கொளும் பற்றுஞ் செற்று
பொருந்துமூ வாசை நீத்துக்
கறங்குமைம் புலனும் வீட்டி
காமமா திகளை வென்று
பிறங்கிடுந் தவஞ்செய் வோரே
பிறவியை நீத்த மேலோர்.

(இ-ள்) மறம் கிளர் மறலி - கொடுமை மிக்க யமன், பற்ற வருமுனர் - உயிரைக் கவர வரும் முன்னே, துறந்து - துறவுபூண்டு, உள்ளும் - அகத்தே கொள்ளும் பற்றும், புறம் கொளும் பற்றும்- புறத்தே கொள்ளும் பற்றும், செற்று - ஒழித்து, பொருந்து மூவாசை நீத்து - வருகின்ற மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்ற மூன்று வகை ஆசைகளையும் விடுத்து, கறங்கும் ஐம்புலனும் வீட்டி- (காற்றாடி போலே) சுழலும் ஐந்து புலன்களையும் அடக்கி காமம் ஆதிகளை வென்று - காமம் முதலாகிய ஆறு உட்பகைகளையும் ஜெயித்து, பிறங்கிடும் - (புகழொடு) விளங்குகின்ற, தவம் செய்வோரே - தவத்தை மேற்கொண்டு செய்பவர்களே, பிறவியை நீத்த மேலோர்- பிறவிப் பிணியை யொழித்த பெரியோராவர்:(எ.று.)

யமபாசம் வருதற்குமுன்னே, அகப்பற்று புறப்பற்றுக்களை யொழித்து, மூவாசைகளை நீத்து, ஐம்புலன்களையும் அடக்கி, காமம் முதலாகிய உட்பகைகளை வென்று தவத்தைச் செய்யும் பெரியோர் களே பிறவியைக் கடந்தவராவர் என்றபடி. ஐம்புலன் - சுவை யொளியூறோசை நாற்றம் என்பன: இவற்றின் ''வகை தெரிவான் கட்டேயுலகு'' என்றார் வள்ளுவர் ''நீத்தார் பெருமை'' என்ற அதிகாரத்தில் (குறள் - 7) உட்பகைகள் ஆறுவன - காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.

இவற்றை 'அரிஷட்வர்க்கம்' என்பர். 'உள்ளும் புறங்கொளும் பற்றும் செற்று' என்றவிடத்து 'உள்ளும் புறமும் கொளும் பற்று செற்று'' என மாற்றிப் பொருள் கொள்க. ஐம்புலனும் பட்டிமேயு மாதலின் 'கறங்கும்' என்று அடைகொடுத்தார். (2)

3 ஆதலா லுலகின் வாழ்க்கை
யவாவினை யொழித்துக் கானின்
மாதவஞ் செய்யு மாறு
மனங்கொண்டேன் மைந்த! இந்தப்
பூதலம் நீயாள் யானும்
போந்திட விடையீ யென்று
ஓதலும் அதனைக் கேளா
உதிட்டிரன் இதனைச் சொல்வான்.

(இ-ள்) ஆதலால்—, உலகின் வாழ்க்கை அவாவினை - உலகில் வாழவேண்டுமென்ற ஆசையை, ஒழித்து - நீக்கி, கானில் மா தவம் செய்யுமாறு - காட்டில் சிறந்த தவத்தைச் செய்யும்படி, மனம் கொண்டேன் - எண்ணியுள்ளேன்: மைந்த - மகனே! இந்தப் பூதலம் - இந்தப் பூமியை, நீ ஆள் - நீ ஆட்சிபுரிவாய்: யானும் - நானும், போந்திட - காட்டுக்குப் போக, விடை ஈ - அனுமதி கொடுப்பாய், என்று., ஓதலும் - சொல்லவும், அதனைக் கேளா - அதனைக் கேட்டு, உதிட்டிரன் - தருமன், இதனைச் சொல்வான் - இந்த வார்த்தையைச் சொன்னான்; (எ.று). தருமன், கூறியதை மேலைக்கவியிற் காண்க.

உலகின் வாழ்க்கை - லோகாயத வாழ்வு. ஆள், ஈ - முன்னிலை வியங்கோள் முற்றுக்கள். கேளா - உடன்பாட்டெச்சம். (3)

4. தருமன் கூறிய வார்த்தை.

எங்கள்பாற் றவறோ நண்ப
ரிடத்தினிற் றூழ்வோ மாதர்
தங்கள்பாற் பிழையோ நீர்கான்
சாருதற் கேது வேதோ

இங்கெடுத் துரைத்தி யென்ன

ஈன்றவ னிசைப்பான் மைந்த!

நங்குலக் குற்றந் தீர்த்த

நின்வயி னவையுண் டாமோ?

(இ-ள்) எங்கள்பால் - எங்களிடத்து, தவறோ - பிழையோ? (அல்லது) நண்பரிடத்தினில் தாழ்வோ?-(என்) சிநேகிதர்களிடத்தில் ஏற்பட்ட மரியாதைக் குறைவோ? (அல்லது) மாதர் தங்கள் பால் - (எனது) ஸ்திரீகளிடத்தில், பிழையோ - குற்றமோ? நீர் - [பேரரசராகியவரும் பெரிய தந்தையாகுபவரும் ஆகிய] நீர், கான்சாருதற்கு - காட்டிற்குப் போவதற்கு, ஏது ஏதோ - எது காரணமோ? இங்கு எடுத்து உரைத்தி - இப்போது விவரித்துச் சொல்வீர், என்ன- என்று வினவ, ஈன்றவன் - திருதராட்டிரன், இசைப்பான் - கூறுவான்; 'மைந்த - மகனே! தம் குலக்குற்றம் தீர்த்த நின்வயின் - நமது குருவமிசத்தின் மாசினைத் துடைத்த உன்னிடத்து, நவை உண்டாமோ?- குற்றம் உளதாகுமோ? (ஆகாது); (எ.று.)

குருகுலத்தின் மாசினையேதுடைத்த அறன்மகனாகிய உன்னிடத்திலோ, உன்னைச்சார்ந்த தம்பியர், நண்பர், மாதர் இவர்களிடத்திலோ எனக்குக் குற்றம் உண்டாகுமோ? எனத் தருமனைப் பாராட்டினான் திருதராட்டிரன் என்க. தவறோ, தாழ்வோ, பிழையோ ஏதோ - ஓகார வினா, விகற்பப்பொருளது. உண்டாமோ, ஓ - வினா எதிர்மறை. உரைத்தி - முன்னிலை வியங்கோள். (4)

5. திருதராட்டிரன் கூறிய பதில்.

துர்க்குண மனிதர் வாழ்க்கை

சுகமிலை துன்ப மென்றும்

நற்கரு மங்கள் வீய்முன்

நடத்திவீ டடைய வென்றும்

சொற்புவி மைந்தர்க் கீந்து

துறந்திடற் பிதா நன் றென்றும்

எற்குள மதனாற் கானம்

எய்திட முயன்ற தென்றான்.

(இ-ள்) துர்க்குண மனிதர் வாழ்க்கை - கெட்ட குணத்தையுடைய மானிடரின் வாழ்வானது, சுகமிலை - இன்பமாகாது, துன்பம் - துன்பமாகும், என்றும்—; வீய்முன் - இறப்பதற்கு முன்னே, நல் கருமங்கள் நடத்தி - நல்ல காரியங்களைச் செய்து, வீடு அடைய-மோட்சம் அடைவாயாக, என்றும்-; புவி - நாட்டாட்சியை, சொல் மைந்தர்க்கு ஈந்து - புகழப்படுகின்ற புத்திரர்களுக்குக் கொடுத்து, பிதா - தந்தையான மன்னன், துறந்திடல் - துறவுபூண்டு தவஞ்செய்தல், நன்று - நல்லதாகும், என்றும்—, எற்கு - எனக்கு, உளம் - மனக்கருத்து: அதனால்—, கானம் எய்திட - காட்டுக்குச் செல்ல, முயன்றது - நிச்சயித்தது, என்ருன் - என்று திருதராட்டிரன் கூறினுன்; (எ. று.)

திருதராட்டிரன் கழிந்ததற்கிரங்கித் தன் உளக்கருத்தை வெளியிட்டான் என்க. (5)

**6. காடுசெல்வதினும் மனையினின்றே புலனடக்கிய வேந்தன் நற்கதிபெறுவான் என்று தருமன் கூறுதல்.**

கேட்டதை வாட்ட மோடு
கிளர்த்துவா னுளத்திற் றூய்மை
நாட்டிய தருமன் கானில்
நற்றவஞ் செய்வோர்க் கேனும்
வீட்டிடை புலன்வென் றுற்ற
வேந்தனே யதிக னுங்கோன்
நாட்டிடைச் சனர்க ளோடு
நற்கதி நண்ணு வானுல்.

(இ-ள்) அதை கேட்டு - திருதராட்டிரன் கூறியதைக் கேட்டு, உளத்தில் தூய்மை நாட்டிய தருமன் - மனத்தில் புனிதநற்குணங்களை நிலையாகப்பெற்ற தருமன், வாட்டமோடு - வருத்தத்தோடு, கிளர்த்துவான் - கூறுவான் : 'கானில் நல்தவம் செய்வோர்க்கேனும்-காட்டில்சென்று நல்லதவஞ்செய்யும் முனிவர்களினும், வீட்டிடை - மனையிலேயே யிருந்து, புலன் வென்றுற்ற -ஐம்புலன்களையும் அடக்கி வென்றுள்ள,வேந்தனே - மன்னனே, அதிகனும் - சிறந்தவனுவான்: (அத்தகைய) கோன் - அரசன், நாட்டிடை சனர்களோடு - தன்

நாட்டிலுள்ள குடிமக்களோடு, நற்கதி - நல்ல சுவர்க்கத்தை நண்ணுவான் அடைவான்' ; (எ.று.) ஆல் - ஈற்றசை. 'ஆதலால் இருத்தல் நன்ரும்' என மேலைக்கவியிற்ருெடரும். (6)

**7. மேலும் தருமன் 'நீர்காடுசென்ருல் உமக்குஉதவ நானும் உடன்வருவேன்' என்ன, திருதராட்டிரன் அதனை ஏற்காது 'நாடு ஆளுவாய்' எனல்.**

ஆதலா லிருத்தல் நன்ரும்
அடைகுவை யென்னி லியானீர்
ஓதிய வழிபா டாற்ற
வுடனடைந் திடுவ லென்ன
தாதைசொற் றிடுநீ யெய்திற்
றராதலம் பாழா மென்மேற்
காதலுண் டேல்கா னுந்தி
காக்குதி ஞால மென்ருன்.

(இ-ள்) ஆதலால் - ஆகையினுல், இருத்தல் - மனையிலேயே யிருந்து (புலனடக்குதல்), நன்று ஆம் - நன்மையாகும் : (அங்ஙனன்றி) அடைகுவை என்னில் - காடுசேர்வாயாளுல், யான்- நான், 'நீர் ஓதியவழிபாடு ஆற்ற - நீர் சொன்ன தொண்டுகளைச் செய்ய, உடன் அடைந்திடுவல் - உம்முடனே (காட்டுக்கு) வந்து விடுவேன்' என்ன - என்றுகூற, தாதை சொற்றிடும் - திருதராட் டிரன் சொல்லிடுவான் : 'நீ எய்தின் - நீ காட்டிற்குவந்தால், தராதலம் பாழாம் - இந்தப்பூமி பாழாய்விடும் : (ஆகையால்) என் மேல் காதல் உண்டேல் - என்மீது உனக்கு அன்பு இருக்குமாளுல், கான் உந்தி - என்னைக்காட்டுக்குச்செல்லவிடுத்து, ஞாலம் காக்குதி- பூமியை ஆட்சிசெய்துரட்சிப்பாய்' ; என்ருன் - என்று கூறிளுன் ; (எ.று.)

'நீயும் உடன்வந்தால், அரசனின்றி உலகம் பாழாகும் : ஆதலின் உடன்வராது உலகை ரட்சிப்பாய்' என்று தருமனுக்குத் திருதராட் டிரன் கூறிளுனென்க. சொற்றிடும் - செய்யுமென்முற்று. காக்குதி - முன்னிலையேவல் என்னிலியான் - 'தன்ருெழிமெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும்' என்பது விதி. (நன் : மெய்யீற் : 3) (7)

**8. திருதராட்டிரனை நாட்டிலேயே இருக்கும்படி விதுரன் முதலோர் வேண்டுதல்.**

விருத்தனீ துரைப்ப மைந்தன்
மிகமெலிந் துயுச்சன் பூமி
பரித்திட விருத்தி யாமும்
படருவ மென்ன சாபந்
தரித்தகை விதுரன் ஆசான்
சஞ்சய னுயுச்சன் வேந்தே!
உரைத்தலென் ஐவ ரேவல்
உஞற்றிட விருத்தி யென்றார்.

(இ-ள்) விருத்தன் - திருதராட்டிரன், ஈது உரைப்ப - இதனைச் சொல்ல, மைந்தன் - தருமன், மிக மெலிந்து - மிகவும் வருந்தி, 'உயுச்சன் - யுயுத்ஸு, பூமி பரித்திட - உலகைத்தாங்கியாளும்படி, இருத்தி - வைத்து, யாமும் - நாங்களும், படருவம் - (கானம்) வருகின்றோம், என்ன - என்றுசொல்ல, (அப்போது) சாபம் தரித்த கை விதுரன் - வில்லைக்கையில் தாங்கியிருந்த விதுரன், ஆசான்-கிருபன், சஞ்சயன் —, உயுச்சன் - யுயுத்ஸுமுதலோர், (திருதராட்டிரனை நோக்கி) 'வேந்தே! - அரசனே! உரைத்தல் என் - (உமக்கு) யாங்கள் சொல்வது என்ன (இருக்கிறது!); ஐவர் ஏவல் உஞற்றிட - பஞ்சபாண்டவர்களும் [உம்முடைய] கட்டளைகளை நிறைவேற்ற, இருத்தி - (நீர்) இங்கேயே (அரண்மனையில்) இரும்' என்றார் - என்று கூறினார்கள்; (எ.று.)

'யாமும்' - தம்பியரையும் உளப்படுத்தியது. விதுரன் தன் கைவில்லைமுன்னர் உடைத்தெறிந்தனனாதலின், ஈண்டு 'சாபம் தரித்தகை' என்பதற்கு 'சாபம் தரித்திருந்த கை' எனப்பொருள் கொள்ளல் நேர். ஐவர் - பாண்டவர்: தொகைக்குறிப்பு. இருத்தி - வியங்கோள். (8)

9. **திருதராட்டிரன் தருமனைத்தெளிவித்திடும்படி காந்தாரிக்குக் கூறுதல்.**

ஆங்கவர் மொழிகேட் டண்ணல்
அயர்ந்துகாந் தாரி மைந்தர்
தாங்கியாங் காற்றத் தேறி
தன்மனை யாளை நோக்கி
மாங்குயில் மொழியாய் ! மைந்தன்
மனந்தெளிந் திடவாற் றென்ன
பூங்கழல் சுபலன் பாவை
புதல்வனுக் கிதனைச் சொல்வாள்.

(இ-ள்) ஆங்கு - அப்போது, அவர்மொழி கேட்டு - அந்த விதுரன்முதலானோர் வார்த்தைகளைக்கேட்டு, அண்ணல் - திருதராட்டிரன், அயர்ந்து - சோர்ந்து, காந்தாரி - காந்தாரியும், மைந்தர்-பாண்டவர்களும், தாங்கி - தங்கள் கைகளால் தாங்கி, ஆங்கு - அவ்விடத்து, ஆற்ற - தேற்றுவிக்க, தேறி - தெளிவடைந்து, தன் மனையாளை நோக்கி - தன்மனைவியாகிய காந்தாரியைப்பார்த்து, மாங்குயில் மொழியாய்! - மாஞ்சோலையிலுள் குயில்போன்ற பேச்சினிமையுடையவளே!, மைந்தன் - தருமனுடைய, மனம் தெளிந்திட - மனம் தெளிந்து அமைதியுற, ஆற்று - (நீ)செய்வர்யாக! என்ன - என்றுகூற,(அதன்படியே) பூம் கழல்- அழகிய வீரக்கழலைக் கட்டிய பாதங்களையுடைய, சுபலன் - சுபலனது, பாவை - மகளாகிய காந்தாரி, புதல்வனுக்கு - தருமனுக்கு, இதனைச் சொல்வாள் - இந்த வார்த்தைகளைக் கூறினாள் ; (எ.று.) அவள் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

குயில்மொழி - இனிமைக்கு எடுத்துக்காட்டு. குயில் - அதன் பேச்சுக்கு ஆகிவந்தது. ஆற்று- ஏவல். கழல் ஆடவரணிதலாதலின் சுபலனுக்கு ஆயிற்று. பாவை - பெண்ணுக்கு உவமவாகுபெயர். (9)

வேறு.

**10. காந்தாரி தருமனைத் தெளிவிக்க முயலுதல்.**

தந்தைமொழி மறையென்பர் தக்கவர்நீ
யஃதுணர்ந்தும் தடுத்த னன்றே
உந்தைதவம் புரிந்திடுவா னுளங்கொண்டான்
அவ்வண்ணம் உவந்து போக்கி
இந்தநில நீபுரத்த லியல்பாகும்
நீவிர்செயு மேவல் யான்போய்
சந்ததமும் புரிந்தளிப்பன் தளரேனீ
மைந்தவெனச் சாற்றி னாளால்.

(இ-ள்) தந்தை மொழி மறை என்பர் தக்கவர் - பிதாவின் வார்த்தை வேதமென்பர் தகுதியுடைய பெரியோர்: நீ அஃது உணர்ந்தும் - நீ அதனைத்தெரிந்திருந்தும், தடுத்தல் நன்றே? - ஏற்காது விலக்குதல் நல்லதாகுமோ? உந்தை - உன் (பெரிய) தந்தையாகிய திருதராட்டிரன், தவம் புரிந்திடுவான் - தவத்தைச் செய்யும்படி, உளம் கொண்டான் - மனத்தில் எண்ணியுள்ளார்: அ வண்ணம் - அவர் நினைத்தபடியே, உவந்து - மகிழ்ந்து, போக்கி- அவரையனுப்பி, இந்த நிலம் - இந்தப் பூமியை, நீ புரத்தல் - நீ ஆண்டு ரட்சித்தல், இயல்பாகும் - நியாயமானதாகும்: நீவிர் செய்யும் ஏவல் - நீங்கள் செய்யுமாறுள்ள பணிகளை, யான் போய் - நான் [உடன்]சென்று, சந்ததமும் - எக்காலத்தும், புரிந்து - மனமுவந்து, அளிப்பன் - செய்வேன்: (ஆகவே) மைந்த! - மகனே! நீ தளரேல் - நீ கவலைப்படாதே, என - என்று, சாற்றினாள் (காந்தாரி) கூறினாள்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

''தந்தைசொன்மிக்க மந்திரமில்லை'' என்பது முதுமொழி. தடுத்தல், புரத்தல் - தொழிற்பெயர்கள். அளிப்பன் - தன்மை யொருமை வினைமுற்று. தளரேல் - முன்னிலையெதிர்மறை.

இதுமுதல் இச்சருக்கமுடிபுமளவுமுள்ள ஒன்பதுகவிகள் - பெரும்பாலும் முதல் நான்குசீர்கள் காய்ச்சீர்களும், ஏனைய இரண்டும் மாச்சீர்களுமாக வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட **அறுசீராசிரிய விருத்தங்கள்.** (10)

11. தருமன் திருதராட்டிரனை உண்ண அழைக்க, அவன் மறுத்தல்.

அன்னைமொழி தனைக்கேளா அறன்மதலை
யீன்றவனுக் கறைவா னாளை
மன்னவரோ டுசாவிகொடு வனம்புகுதற்
குரைப்பனுண வருதி யென்ன
சொன்னமொழிக் கிசையாமற் றூயதவம்
யான்புரியத் துணிவை யாகில்
பின்னுண்பன் வலியிலநீ பேசிலெதிர்
பேசவெனப் பெற்றோன் சொற்றான்.

(இ-ள்) அன்னை மொழிதனை கேளா - காந்தாரி கூறிய வார்த்தைகளைக்கேட்டு, அறன் மதலை - தருமபுத்திரன், ஈன்றவனுக்கு - திருதராட்டிரனுக்கு, அறைவான் - கூறுவான் : நாளை - நாளையதினம், மன்னவரோடு - பிறவேந்தர்களோடு, உசாவிகொடு - ஆலோசித்துக்கொண்டு, (பிறகு) வனம்புகுதற்கு - (நீர்) காடு போவதற்கு, உரைப்பன் - கூறுவேன் ; (இப்போது) உண - உண்பதற்கு, வருதி-வருவீராக, என்ன - என்று, சொன்ன மொழிக்கு - சொல்லி (அழைத்த) வார்த்தைக்கு, இசையாமல் - உடன்படாமல், தூய தவம் - புனிதமான தவத்தை, யான் புரியத் துணிவையாகில் - நான் செய்யும்படி நிச்சயிப்பாயானால், பின் - பிறகு, உண்பன் - புசிக்க வருவேன் : (இப்போது) நீ பேச - நீ சொல்லுதற்கு, எதிர் பேச - பதில் சொல்ல, வலி இல - (எனக்குச்) சக்தியில்லை : என - என்று, பெற்றோன் - திருதராட்டிரன், சொற்றான் - சொல்லினான் : (எ.று.)

திருதராட்டிரன் தவஞ்செய்யத் துணிந்ததைக் கூறும் வகை பாராட்டற்குரியது. 'நீபேசில் எதிர்பேச வலியில' என்றவிடத்து இரக்கம் சொட்டுகிறது. கேளா - உடன்பாட்டெச்சம். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். வருதி - வியங்கோள். (11)

**12. வியாசமுனிவன் வந்து தருமனது மெலிவுக்குக் காரணம் வினவ, தருமன் விடையிறுத்தல்.**

தாதையிவை யுரைத்திடலாற் றருமன்முத
லியரெவருந் தளரு மேல்வை
வாதரா யணனுங்கு வந்தவர்செய்
பூசைகொடு வழங்கு பீட
மீதினிருந் த்றன்மகனை மெலி வென்னே
புகறியென மேலோய் எந்தை
மாதவஞ்செய் திடத்துணிந்தான் வனங்கொள்ள
வயர்த்தனென மற்றோன் சொற்றான்.

(இ-ள்) தாதை - திருதராட்டிரன், இவை- இந்த வார்த்தைகளை, உரைத்திடலால் - சொன்னதனால், தருமன் முதலியர் எவரும் - தருமன் முதலாக எல்லோரும், தளரும் ஏல்வை - வருந்தும் சமயத்து, ஆங்கு - அவ்விடத்திற்கு, வாதராயணன் வந்து - வியாசபகவான் வந்து, அவர் செய் பூசை கொடு - அந்தத் தருமன் முதலானோர் செய்த வழிபாட்டினையேற்றுக்கொண்டு, (பின்னர்) வழங்கு பீடம் மீதின் இருந்து - இடப்பட்ட ஆசனத்தின்மீது எழுந்தருளியிருந்து, அறன்மகனை - தருமபுத்திரனை (நோக்கி), 'மெலிவு என்னே? - என்ன வருத்தம் : புகறி - சொல்வாயாக' என என்று வினவ,, (அதற்குத்) [தருமன்], 'மேலோய்! - பகவானே! எந்தை - திருத ராட்டிரன், மா தவம் செய்திட - பெரிய தவத்தைச்செய்யும்பொருட்டு, வனம் கொள்ள துணிந்தான் - காட்டிற்குச்செல்ல நிச்சயித்துள்ளார்: (அதனால்) அயர்த்தன் - சோர்ந்துவருந்தினேன்', என - என்று சொல்ல, மற்றோன் - வியாசன், சொற்றான் - (இவை) சொல்ல லானான் ; (எ.று.) — வியாசன் கூறியதை மேலைக்கவியிற் காண்க. (12)

**13. வியாசன் தருமனுக்குத்தெளிவுபெற அறிவுறுத்தல்.**

துன்னமரில் வீய்தலன்றித் துறவெய்தி
யிறத்தலெனத் தொன்னூ லெல்லாம்
மன்னவருக் கியல்பென்றே வகுப்பதுணர்ந்
தகல்வாரை மறித்த னன்றோ?

நின்னுளத்தின் மயக்கொழித்து நிருபன்மனப்
படிவிடுத்து நிலமோம் பத்தன்
தன்னுடனீ சென்றேவற் றரநினைத
லொழியறந் தந்தோ யென்றான்.

(இ-ள்) துன் அமரில் - நெருங்கிய போரில், வீய்தல் அன்றி - இறத்தல்அல்லாமல், துறவெய்தி - தவத்தை மேற்கொண்டு (உடலினைவாட்டி), இறத்தல் - மாளுதல்வேண்டும், என - என்று, தொல் நூல் எல்லாம் - பழைய அரசநீதிநூல்களெல்லாம், மன்னவருக்கு - அரசர்களுக்கு, இயல்பு என்று - தகுதியானது என்று, வகுப்பது - கூறியுள்ளது : (அதனை) உணர்ந்து - தெளிய அறிந்து, அகல்வாரை - [மனை நீத்துத்] தவம்செய்யப்போகும் மன்னர்களை, மறித்தல் - தடுத்தல், நன்றோ-நல்லதாகுமோ? (ஆகாது) : (ஆகவே) நின் உளத்தின் - உன் மனத்திலுள்ள, மயக்கு ஒழித்து - மயக்கத்தை விடுத்து, நிருபன் மனப்படி விடுத்து - திருதராட்டிரன் கருத்துப் படியே [காடுபோக] அனுப்பி, நிலம் ஓம்பு - பூமியை ஆண்டு ரட்சிப்பாய் ; (மேலும்) அறம் தந்தோய்! - தருமபுத்திரனே! அத்தன் தன்னுடன் - திருதராட்டிரனுடன், நீ சென்று - நீயும் போய், ஏவல் தர நினைதல் ஒழி - அவரிட்ட பணிகளைச்செய்ய நினைத்தலை விட்டு விடு, என்றான் - என்று வியாசன் கூறினான் ; (எ.று.)

மன்னர் போரில் இறந்தால் வீரசுவர்க்கம் புகலாம் : இல்லையேல் தவம் மேற்கொண்டு சுவர்க்கம் புகலாம் : இது அரசநீதி : ஆகவே திருதராட்டிரன் செயல் அரசநீதிக்குட்பட்டதே : எனவேமறித்தல் நன்றன்று என்று வியாசன் தருமனைத்தெருட்டினானென்க. நன்றோ, ஓ - வினா, எதிர்மறை. ஓம்பு, ஒழி - முன்னிலை ஏவல்கள். தந்தோய்!- விளி. (13)

**14. திருதராட்டிரன் உணவுண்டுதுயின்று மறுநாட்காலை தருமனுக்கு ராஜநீதியை உபதேசங்கள்செய்து காடு செல்லத்துணிதல்.**

அவைக்கிசைந்தான் அறன்மதலை யம்முனியும்
அறைந்தகன்றான் அடைந்தில் வேந்தன்
சுவைக்கறியோ டமுதருந்தி துயின்றுதையத்
தெழுந்துவனந் தொடர்வா னெண்ணிச்

சவைக்கணிருந் துலகாளுந் தன்மைபல
மைந்தனுக்குச் சாற்றி யார்க்கும்
நவைக்கிடனில் மொழிபுகன்று நயந்தெவரும்
மடுத்திடவே நடப்ப தானன்.

(இ-ள்) அவைக்கு - அந்த வியாசன் கூறிய வார்த்தைகளுக்கு, அறன் மதலே - தருமபுத்திரன், இசைந்தான் - உடன்பட்டான்: அ முனியும் - அந்த வியாசனும், அறைந்து - இந்த வார்த்தைகளைச் சொன்ன பின்னர், அகன்ருன் - போய்விட்டான்: வேந்தன் - திருதராட்டிரன், இல் அடைந்து - அரண்மனையுள் வந்து, சுவைக் கறியோடு அமுது அருந்தி - உருசியுடைய கறிகளோடு அன்னமும் உண்டு, (பின்பு) துயின்று - தூங்கி, உதையத்து எழுந்து - சூரியோ தயத்தில் [படுக்கையினின்று] எழுந்து, வனம் தொடர்வான் எண்ணி - காடு போவதற்கு நினைந்து, சவைக்கண் இருந்து - சபையிலே எழுந்தருளியிருந்து, உலகாளும் தன்மை பல - பூமியை [நன்கு] ஆளுதற்குரிய நீதிகள் பலவற்றை, மைந்தனுக்குச் சாற்றி- தருமனுக்குக் கூறி, யார்க்கும் - எல்லோருக்கும், நவைக்கு இடன் இல் மொழி புகன்று - குற்றமொன்றுக்கும் இடமில்லாத [நல்ல செவ்விய] வார்த்தைகளையுபதேசித்து, எவரும் - எல்லோரும், நயந்து - [மனப்பூர்வமாக] விரும்பி, மடுத்திட - நெருங்கிச்சூழ்ந்து வர, நடப்பதானன் - (காடு) செல்வதற்குச் சித்தனுனன்; (எ.று).

திருதராட்டிரன் தருமனுக்குச் சாற்றிய உலகாளுந்தன்மைகளுட் சில முக்கியமானவை பின்வருமாறு:—

(1) எட்டு அங்கங்களுள்ளதும் தர்மத்தை முதன்மையாகக் கொண்டதுமான ராஜ்யத்தில் நீ எவ்விதத்திலும் தவறுதலுள்ளவனுகக் கூடாது. [எட்டு அங்கங்களாவன - தலைவன், அமைச்சன், தேசம், கோட்டை, பொக்கிஷம், துணைவர், படை, நகரவரிசை என்பன],

(2) கற்றறிந்த பெரியோர்களை உபாஸிக்க வேண்டும்.

(3) யந்திரங்களால் ரட்சிக்கப்பட்ட அரண்கள் இருக்க வேண்டும்.

(4) வித்தைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், வணக்கமுள்ளவர்களும் தர்மத்திலும் அர்த்தத்திலும் ஸமர்த்தர்களும் நேர்மையுள்ளவர்களுமான பிராம்மணர்களை மந்திரிகளாகச் செய்து கொள்வாய்.

(5) குற்றம், தண்டனை இவற்றினுடைய அளவையறிந்து தண்டிக்கத்தக்கவர்களுக்குத் தண்டனையை விதிக்க வேண்டும்.

(6) உத்ஸாஹசக்தி, பிரபுசக்தி, மந்திரசக்தி, இவைகளுடன் கூடின அரசன் யுத்தத்திற்குச் செல்ல வேண்டும். இவைகள் இல்லாவிடில் யுத்தத்தை விலக்க வேண்டும்.

(7) படைகளைத் தக்க வியூகங்களாக வகுக்க வேண்டும். (உதாரணம் - சகடம், பத்மம், வஜ்ரம் என்று சுக்ராசாரியர் தமது சாஸ்திரத்தில் கூறியுள்ளார்)

முதலடியில் மோனையழகு காண்க. அவை - சவை: முதற்போலி. (14)

**15. திருதராஷ்டிரன் தவக்கோலம் பூண்டு புறப்பட, குந்தியும் காந்தாரியும் மரவுரிவேய்ந்து உடன்புறப்படல்.**

கொற்றவன்றன் மனைவியொடும் குலவேட
மகற்றிதவக் கோலந் தாங்கி
நற்றவத்துக் கெழும்பொழுது நவிற்குந்தி
துறந்துடனே நண்ண வெண்ணிப்
பெற்றமகார் மருகியர்க்கும் பேசியவர்
துயரகற்றிப் பெருக்கி யின்சொல்
மற்றவர்கண் மகிழ்ந்துய்ப்ப வற்கலைவேய்ந்
தரசனிலாள் மருங்கு சேர்ந்தாள்.

(இ-ள்) கொற்றவன் - திருதராட்டிரன், தன் மனைவியொடும் - தனது மனைவியாகிய காந்தாரியோடும், குலவேடம் அகற்றி - ராஜவேஷத்தை நீக்கி, தவக்கோலம் தாங்கி - தவசியர் வேடத்தை ஏற்று, நல் தவத்துக்கு எழும் பொழுது - நல்ல தவத்தை மேற்கொண்டு செய்வதற்குப் புறப்படும் போது, நவில் - புகழப்படுகின்ற, குந்தி - குந்திதேவி, துறந்து - தானும் துறவுபூண்டு, உடனே நண்ண எண்ணி - (தாமதியாமல்) உடனே காடு செல்ல நினைந்து, பெற்ற மகார் மருகியர்க்கும் - தான் பெற்றெடுத்த மைந்தர்களுக்கும் (தனது) மருமகளிர்க்கும், பேசி - அளவளாவி, அவர் துயர் அகற்றி - அவர்களது வருத்தத்தைப் போக்கி, இன்சொல் பெருக்கி - இனிய சொற்களைப் பேசி, மற்று-பின்பு, அவர்கள்-மகார்மருகியர்கள்,

மகிழ்ந்து உய்ப்ப - சந்தோஷமாக அனுப்ப, வற்கலை வேய்ந்து - மரவுரியைத்தரித்து, அரசன் இ (ல்)லாள் - காந்தாரியின், மருங்கு - பக்கத்தில், சேர்ந்தாள் - வந்து கூடினுள்; (எ.று.)

தவக்கோலம் தாங்கியென்றது - மரப்பட்டையையும் கிருஷ்ணு ஜினத்தையும் உடுத்துக்கொள்ளுதல். வற்கலை - வற்கலா: வட சொல்: மரவுரி. இலாள் - இல்லாள் என்பதன் இடைக்குறை. (15)

**16. நகரவீதியில் செல்லும்போது நூற்றுவர்மனைவியரும் தவக்கோலம் பூண்டு மாமியரைப்பின்தொடர்தல்.**

குந்திதுறந் தமைவாய்மைக் குரிசிலுணர்ந்
தில்லவளாற் குணத்தான் மிக்க
மைந்தனிடாச் செயலென்றே மனங்கொண்டு
சனர்மொய்ப்ப மறுகிற் செல்போ
துந்தரவ கேதுமுத லுரைத்தருணூற்
றுவர்மனையா ருள்ளோ ரெல்லாம்
பந்தமகன் றரியதவப் படிவமொடு
மாமியர்பின் படர்ந்தா ரம்மா.

(இ-ள்) குந்தி துறந்தமை - குந்தி [வற்கலையுடுத்து] தவம் பூண்டதை, வாய்மைக்குரிசில் - சத்திய விரதனுகிய தருமன்; இல்லவளால் உணர்ந்து — திரௌபதியினுல் அறிந்து,- குணத்தான் மிக்க - நற்குணங்களாற் சிறந்த, மைந்தன் - தருமன், இடாச் செயல் என்றே - உடன்படாத செயலாகும் இது என்றே, மனங் கொண்டு - கருதி, சனர் மொய்ப்ப - நகர ஜனங்கள் நெருங்கிச் சூழ,— மறுகில் செல் போது - வீதியில் போகும் போது, உந்து - ஊர்ந்து செல்கின்ற, அரவம் - பாம்பினை, கேது - கொடியிலே எழுதி யேந்திய துரியோதனன், முதல் - முதலாக, உரைத்தருள் - சொல்லப்படுகின்ற, நூற்றுவர் - நூறு பேர்களுடைய, மனையார் உள்ளோர் எல்லாம் - மனைவியராக உள்ளவர்களெல்லாரும், பந்தம் அகன்று - பாசம் நீங்கி, அரிய தவப் படிவமொடு — கொள்ளுதற் கரிய தவவேடத்துடன், மாமியர் பின் படர்ந்தார் - மாமிமார் களாகிய காந்தாரி குந்தி இவர்களின் பின்னே சென்றுர்கள்; (எ.று.) அம்மா - வியப்பிடைச் சொல்: ஈற்றசையெனினுமாம்.

இல்லவளால் உணர்ந்து எள மாறுக. உணர்ந்து மறுகிற் செல்போது என இயையும். குணத்தான் மிக்க......சனர் மொய்ப்ப - இடைப்பிறவரல். உந்து அரவத்தோடியையும். கேது - கேதுடையானுக்கு ஆகுபெயர். ஈற்றிரண்டடிகள் பரிதாபகரமாயுள்ளன. இடா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (16)

**17. சஞ்சயனும் விதுரனும் தவம்பூணல்.**

தண்டகமண் டலந்தாங்கிச் சஞ்சயனும்
விதுரனும்கான் தணந்து செல்லக்
கண்டதனை யறன்மதலை கலுழ்ந்தழகோ
வெனவுந்தை களிக்கக் கானிற்
றொண்டியற்ற யாவருளர் துயரேல்யாம்
புகுதுமெனச் சொலிசெல் போது
மண்டலவேந் தஃதுணர்ந்து மகன்கருணைச்
செயலென்றே மனங்கொண் டானால்.

(இ-ள்) தண்டம் கமண்டலம் தாங்கி - முக்கோலும் குண்டிகையும் கையிற்கொண்டு, சஞ்சயனும் - சஞ்சயமுனிவனும், விதுரனும்—, தணந்துகான் செல்ல - அரண்மனையை நீத்துக் காட்டிற்குப் புறப்பட, அறன்மதலை - தருமபுத்திரன், அதனை கண்டு - அச் செயலைப் பார்த்து, கலுழ்ந்து - வருந்தி, 'அழகோ - நன்றாயிருக்கிறதா? (தக்கதா?)' என - என்று கூற, (அவ்விருவரும்) ''உந்தை - உன் தந்தையாகிய திருதராட்டிரன், களிக்க - மனமுவக்கும்படி, கானில் - காட்டில், தொண்டு இயற்ற - பணிகளைச் செய்வதற்கு, யாவர் உளர் - யார் இருக்கின்றார்கள்? துயரேல் - வருந்தாதே: யாம் புகுதும் - நாங்கள் செல்கிறோம்'', என சொலி - என்று [சமாதானம்] சொல்லி, செல் போது - போகும் போது, மண்டல வேந்து - திருதராட்டிரன், அஃது உணர்ந்து - அந்நிகழ்ச்சியினை யறிந்து [இது] 'மகன் கருணைச் செயல்' - தருமனுடைய அருளின் காரியம், என்றே மனங் கொண்டான் - என்றே கருதினான்; (எ.று). ஆல் - ஈற்றசை.

தனக்குத் தொண்டாற்ற இருவரும் வருதலையறிந்து திருதராட்டிரன், இஃது தருமன் அருள் செய்ததாலேயே ஏற்பட்டதெனக்

கருதினனென்க. அழகோ, ஓ - வினு, எதிர்மறை. துயரேல் - முன்னிலைவியங்கோள். சொலி - சொல்லி : தொகுத்தல். தண்ட கமண்டலம் - உம்மைத்தொகை. (17)

**18. தருமனுக்கு உதவிபுரியக்கிருபனும் யுயுத்ஸனும் துறவுபூணுதபடி யிருத்தி, திருதராட்டிரன் பலர்க்கும் இன்சொற்கூறிக் கானம்செல்லல்.**

அச்சமயத் துயுச்சனெடு ஆரியனுந்
துறந்துடனே யடைதுமென்ன
இச்சுதருக் குதவியெவ ரிருந்திடுமென்
றுரைத்தவரை யிருத்தி மைந்தர்
நச்சுவிழி மாதரொடு நகர்சனர்க்கும்
இன்சொல்பல நவின்று மற்ருேர்
செச்சைமல ரடியிறைஞ்சிச் செலுத்தவவர்
தமைநிறுவிச் சென்ருன் மன்னே.

(இ-ள்) அ சமயத்து - அந்த வேளையில், உயுச்சனெடு ஆரியனும் - யுயுத்ஸுவோடு கிருபனும், துறந்து - தவம் பூண்டு, உடனே அடைதும் என்ன - உடனே புறப்பட்டு வருவோம் என்று சொல்ல, (அப்போது திருதராட்டிரன்) 'இ சுதருக்கு - இந்த மைந்தர்களாகிய பாண்டவர்க்கு, உதவி எவர்!- உதவியாக யாவருளர்? இருந்திடும் - (நீங்கள் இருவரும்) இருங்கள்;' என்று உரைத்து - என்று சொல்லி, அவரை இருத்தி - அவர்களை நிறுத்தி, (பின்பு) மைந்தர் - புத்திரர்கள், நச்சு விழி மாதரொடு நகர் சனர்க்கும் - விரும்புகின்ற கண்ணழகுபடைத்த பெண்டிரோடு நகரஜனங்கள் இவர்களுக்கும், இன்சொல் பல நவின்று - இனிய சொற்கள் பலவற்றைக் கூறி, மற்ருேர் - ஏனையமக்கள், செச்சை மலரடி இறைஞ்சி - சந்தனம் பூசப்பட்ட பூப்போல் மெல்லிய பாதங்களை வணங்கி, செலுத்த - வழியனுப்ப, அவர்தமை - அவர்களை, நிறுவி - (நகரிலேயே) நிற்கச் சொல்லி நிறுத்தி, சென்ருன் - தான் (காடு நோக்கிப்) போயினுன்; (எ.று.) மன், ஓ - ஈற்றசை.

இருத்தி நவின்று செலுத்த நிறுவிச் சென்ருன் என இயையும். அடைதும் - தன்மைப்பன்மை. இருந்திடும் - முன்னிலை வியங் கோள். மலரடி - உவமைத்தொகை. செச்சை - வெட்சிமலர் எனினுமாம். (18)

திருதராட்டிரன் துறவெய்திய சருக்கம் முற்றிற்று.

மூன்றுவது

# வனம்புகு சருக்கம்

திருதராட்டிரன் காந்தாரிகுந்தி விதுரன் சஞ்சயனோடு காடு புகுந்ததைக்கூறுஞ் சருக்கம் என்று பொருள்படும். வனம்புகு = ஏழனுருபு தொக்கது.

வேறு.

**1. திருதராட்டிரன் கங்கைக் கரையில் இரவைக் கழித்ததும், காலையில் குருக்ஷேத்திரம் அடைந்ததும்.**

விதுரன் சஞ்சயன் வேதியர் குந்திகாந் தாரி
மதுர மாமொழி மருகிய ருடனகர் கடந்து
அதிருங் கங்கைபா லன்றிருந் திரவொழித் துதையத்
துதவ வேயின னொழிந்தவண் குருநில முற்றான்.

(இ-ள்) விதுரன் -, சஞ்சயன் -, வேதியர் - அந்தணர், குந்தி -, காந்தாரி -, மதுரம் மா மொழி மருகியர் - இனிமையானசிறந்த பேச்சினையுடைய மருமகளிர், உடன் - இவர்களுடன், நகர் கடந்து - அத்தினபுரியை விடுத்துத்தாண்டி, அதிரும் கங்கைபால் - ஒலிக்கின்ற கங்கா நதியின்கரையில், அன்று இருந்து - அன்றைத்தினம் தங்கியிருந்து, இரவு ஒழித்து - இரவினைக்கழித்து, உதையத்து - விடியற்காலையில், இனன் - சூரியன், உதவவே - (தனது) ஒளி கொண்டு உதவிபுரிய, அவண் ஒழிந்து - அந்தக்கங்கைக்கரையை நீத்து, குருநிலம் உற்றான் - குருக்ஷேத்திரத்தையடைந்தான்; (எ. று.)

திருதராட்டிரன் விதுரன்முதலானுரோடு நகர்கடந்து கங்கைக் கரையடைந்து இரவுகழித்து மறுநாட்காலைபுறப்பட்டுக் குருக்ஷேத்திரம் அடைந்தான் என்றபடி.

இதுமுதல் பன்னிருகவிகள் - ஒன்றுஐந்துமாச்சீர்களாகவும் ஏனையமூன்றும் விளச்சீர்களாகவும் வந்த கலித்துறைகள். (1)

2. சதயூபனுசிரமத்து உபசாரம் செய்யத் தங்குதல்.

குருநி லத்திடை தவம்புரி கைகயர் கோமான்
பொருவி லாச்சத யூபனுங் கடைந்து பூ பதியோ
டரிய சஞ்சயன் விதுரன்வே தியரரி வையரா
சிரம மெய்திட வழைத்துப சாரமுஞ் செய்தான்.

(இ-ள்) குருநிலத்திடை - குருக்ஷேத்திரத்தில், தவம்புரி - தவத்தைச்செய்கின்ற, கைகயர் கோமான் - கேகயநாட்டார்க்கு மன்னனுயிருந்த, பொருவு இலா - ஒப்பில்லாத, சதயூபன் - சதயூபன் என்னும் ராஜரிஷி, ஆங்கு - அவ்விடத்து, அடைந்து - எதிர்கொண்டு வந்து, பூபதியோடு - திருதராட்டிரனேடு, அரிய சஞ்சயன் - ஒப்பரிய சஞ்சயமுனிவன், விதுரன்-, வேதியர்-அந்தணர், அரிவையர் - குந்தி காந்தாரி போன்ற பெண்டிர் (இவர்கள்) ஆசிரமம் எய்திட - தமது ஆசிரமத்திற்கு வரும்படி, அழைத்து—, உபசாரமும் செய்தான் - மரியாதைகளும் செய்தான்; (எ.று.)

சதயூபன் கேகயநாட்டின் சிறந்த அரசன். அவன் தன் புத்திரனை அரசனுக இருக்கச் செய்துவிட்டு வனத்திற்கு வந்தான். எனவே ராஜரிஷியாவன். (2)

3. திருதராட்டிரன் பலரொடும் தவம்பயிலல்.

நற்ற வச்சத யூபனைப் பெற்றிந்த வுலகிற்
சொற்ற விக்குருக் கேத்திரந் தூய்மையென்றுசை
யற்ற மன்னவன் சாலைகள் பற்பல வமைத்துப்
பற்றி லாத்தவம் பயின்றனன் பலரொடு மம்மா.

(இ-ள்) நல் தவ சதயூபனைப் பெற்று-நல்ல தவச்சிரேட்டனுகிய சதயூபனைத் தான் கொண்டு, இந்த உலகில் சொற்ற - இந்தப் பூமியில் புகழ் பெற்ற, இ குருக்கேத்திரம் - இந்தக் குருக்ஷேத்திரம், தூய்மை என்று - புனிதமானது என்று கருதி, ஆசை அற்ற மன்னன் - பற்றுக்களையறுத்த திருதராட்டிரன், சாலைகள் பற்பல அமைத்து - பர்ணசாலைகள் (இலைக்குடில்கள்) பலப்பல நிறுவி, பலரொடும் - தன்னுடன் வந்த பலரோடும், பற்றிலாத்தவம்

பயின்றனன் - ஆசைகளற்ற தவத்தை மேற்கொண்டு செய்தான்; (எ.று.) அம்மா - வியப்பு: இடைச்சொல்.

சதயூபனிஞச்சிரமத்தைக் கொண்டிருத்தலால் குருக்ஷேத்திரம் மிக்க புகழ் பெற்றிருந்தது. வியாசரால் இந்த ராஜரிஷி பாராட்டப் பட்டவன். அவருடைய அனுமதியின் மேல் சதயூபன் திருதராஷ் டிரனுக்கு அரண்யத்தில் செய்யவேண்டிய விதியை முழுதும் சொற்ருன் எனத் தெரியவருகிறது. பர்ணசாலைகள் பல அமைத்த தற்குக் காரணம் - தன்னேடு வந்த காந்தாரி குந்தி மருகியர் போன்ருேர் தங்கித் தவஞ் செய்தற்கென்க. இலா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (3)

4. திருதராட்டிரன் கடுந்தவஞ்செய்தல்.

காயி லைகனி யருந்தியே குந்திகாந் தாரி
நேய மோடுதாம் நிரந்தரம் பணிவிடை நிரப்ப
தூய மாதவர் துணுக்குறத் தோன்றறன் னுடலந்
தேயு மாமதி யாம்படி செழுந்தவஞ் செய்தான்.

(இ-ள்) காய் இலை கனி அருந்தி - காய்களையும் இலைகளையும் கனிகளையும் புசித்து, குந்தி காந்தாரி - குந்தியும் காந்தாரியும், நேய மோடு தாம் - விசுவாசத்தோடு தாங்கள், நிரந்தரம் - இடைவிடா மல் எக்காலத்தும், பணிவிடை நிரப்ப - கைங்கரியங்களைப் பூர்த்தி யாகச் செய்ய, தூய மா தவர் - புனிதமான சிறந்த தவத்தைச் செய்கின்ற முனிவர்கள், துணுக்குற - வெருவும்படி, தோன்றல் - திருதராட்டிரன், தன் உடலம் - தனது தேகம், தேயும் மா மதியாம் படி - குறைந்து கொண்டே வரும் சந்திரனைப் போலாகும்படி, செழும் தவம் செய்தான் - கடுமையான தவத்தைச் செய்தான்; (எ.று.)

திருதராட்டிரன் காயிலை கனிகளை மட்டும் உண்டு தேகம் க்ஷீணிக்கும்படி கோரமான தவத்தை மேற்கொண்டதைக் கண்டு தங்கள் தேகங்களை வாட்டி என்பெழுந்த யாக்கையராய முனிவர் களும் கூட அஞ்சினர் என்க. காயிலைகனி, குந்திகாந்தாரி - உம்மைத்தொகைகள். உடலை வாட்டிக் ''கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் துய்க்கும் வழி'' யாதல் பெறப்பட்டது. (4)

5. நாரதர் சிலமுனிவருடன் சதயூபனுசிரமம் வருதல்.

ஆங்கொ ருத்தினஞ் சிலரொடு நாரத னடைய
பாங்கி ருந்தவ ருடனர செதிர்கொடு பணிந்தே
ஓங்கு சீர்சத யூபன்ற னருளினு லுனது
பூங்க ழற்றுணை வாய்த்தது போற்றவெற் கென்ருன்.

(இ ள்) ஆங்கு - அவ்விடத்து, ஒரு தினம் - ஒரு நாள், நாரதன் - நாரதமுனிவன், சிலரொடு அடைய - சில முனிவர்களோடு வர, அரசு - திருதராட்டிரன், பாங்கிருந்தவருடன் - பக்கத்திலிருந்த பரிசனங்களோடு, எதிர்கொடு - (நாரதரையும் முனிவர்களையும்) எதிர்கொண்டு உபசரித்து, பணிந்து - வணங்கி, 'ஓங்கு சீர் - மிக்கபுகழையுடைய, சதயூபன்தன் - சதயூபமுனிவனுடைய, அருளினுல் - கருணையினுல், உனது - உமது, பூங் கழல் துணை - பூப்போல் மெல்லிய உபய பாதங்களும், போற்ற - துதிப்பதற்கு, எற்கு - எனக்கு, வாய்த்தது - நேர்பட்டது', என்ருன் - என்று முகமன் கூறினுன்; (எ.று.)

சதயூபனுச்சிரமத்திற்கு வந்தனனுதலின், 'அவன்தன் அருளினுல் வாய்த்தது' என்ருன் திருதராட்டிரன் என்க. ஒருத் தினம் - மிகுதல். (5)

6. சதயூபனுசிரமத்தில் தவஞ்செய்வோர் உயர்கதி பெறுவர் என நாரதர் கூறுதல்.

அந்த வாய்மைநா ரதனுணர்ந் தறைகுவா னரசே!
இந்த மாமுனி யிருக்கைபோ லிந்நிலத் திலையிங்
குந்து மாதவ மியற்றினே னுயர்கதி பெறுநின்
தந்தை பேரரு ளானினக் கிசைந்ததித் தலமே.

(இ-ள்) அந்த வாய்மை - திருதராட்டிரன் கூறிய வார்த்தைகளை, நாரதன் உணர்ந்து - நாரதன் கேட்டு, அறைகுவான் - கூறுவான்: 'அரசே! - மன்னனே! இந்த மாமுனி இருக்கைபோல் - இந்த சதயூபனுச்சிரமம் போல, இந்நிலத்து இலை - இப்பூவுலகில் இல்லை: இங்கு - இவ்விடத்து, மா தவம் இயற்றினேன் - சிறந்த தவத்தைச் செய்தவன், உயர்கதி - மேலான முக்தியை,

பெறும் - அடைவான்: இத்தலம் - இந்த ஆசிரமம், நின் தந்தை பேரருளால் - உனது தந்தையாகிய வியாசருடைய மிக்க கிருபை யினுல், நினக்கு இசைந்தது - உனக்குக் கிடைத்தது; (எ.று).

சதயூபஞசிரமத்துத் தவமியற்றிஞேன் முத்திபெறுதல் சரதம் என்றதால் உனக்கும் முக்தியுண்டு என்று பெற வைத்தபடி. பெறும்- செய்யுமென் முற்று. (6)

**7. பழுத்த கிழவஞன எனக்குத்தவத்தால் என்னகதி நேரும் என வினவ நாரதன் சொல்லலுறல்.**

என்று கூறலு மன்னவன் யாருமெய் வலியால்
துன்ற ருந்தவஞ் செய்துநற் கதியினைத் தொடர்ந்தார்
என்றன் காயமும் பழுத்ததா லென்பயன் பெறுவேன்
இன்று ரைத்தியென் றிரந்திட நாரதனிசைப்பான்.

(இ-ள்) என்று கூறலும் - என்று நாரதன் கூறவும், மன்னவன்- திருதராட்டிரன், 'யாரும் - எல்லாரும், மெய் வலியால் - உடல் வலிமையோடே, துன்று அரும் தவம் செய்து - நெருங்கிய கடிய தவத்தைச் செய்து, நற்கதியினை தொடர்ந்தார் - நல்ல முத்தியினை யடைந்தார்கள்: [எனக்கோ] என் தன் - என்னுடைய, காயமும் - உடம்பும், பழுத்தது - (வலிமையின்றிப்) பெரிதும் முதிர்ந்தது: (ஆகவே தவஞ்செய்து) என்பயன் பெறுவேன் - என்ன கதியைப் பெறப்போகிறேன், இன்று - இப்போது; உரைத்தி - சொல்வீராக, என்று இரந்திட - என்று பிரார்த்திக்க, நாரதன் இசைப்பான் - நாரதன் கூறுவாஞயினுன்; (எ று.) நாரதன் கூறியதை மேலைக் கவியிற்காண்க. ஆல் - அசை.

உடல் வலிமையோடிருக்குங்காலத்துத் தவத்தை மேற்கொண்டு உடலை வாட்டி விரதமிருந்து நற்கதி பெற வேண்டுமேயொழிய பழுத்தகிழமாய்ப் போன பின்பு உடலை வாட்டிக் காயிலையுணவு கொள்ளும் எனக்கு என்ன பயன் கிட்டும் என வெறுப்போடு நாரதனை வினவினுனென்க. உரைத்தி - வியங்கோள். (7)

**8. 'உனக்கு நற்கதிகிடைக்கும்' என்றுநாரதன்கூற, திருதராட்டிரன் ஏனையோர் புகும்பதவியும் கூறுக என வினவல்**

தக்க வர்க்கருஞ் சற்கதி யெளிதினிற் சார்வை
புக்கு வெந்துய ரொழிகெனப் புரவல னடியேற்
கெக்க திப்புக ழிளையவன் சஞ்சயற் கியாதோ
மைக்க ணுர்புகும் பதவியு முரையென வகுப்பான்.

(இ-ள்) தக்கவர்க்கு - தகுதியுடைய தவசியர்க்கு, அரும் - கிடைத்தற்கு அரிய, சற்கதி - நல்லகதியை, (நீ) எளிதினில் - விரைவிலே, சார்வை - அடைவாய்: (ஆகவே) புக்கு வெம் துயர் - உன்னிடமுள்ள கொடிய வருத்தத்தை, ஒழிக - நீக்குவாயாக, என - என்று கூற, புரவலன் - திருதராட்டிரன், (நாரதனை நோக்கி) அடியேற்கு - எனக்கு, எக்கதி - என்னபேறு (கிட்டும்); புகழ் இளையவன் - புகழப்படுகின்ற விதுரன், சஞ்சயற்கு - சஞ்சயனுக்கு, யாதோ - என்னபேறு? (மேலும்) மை கணுர் புகும் - கரியகண் களையுடைய பெண்டிர் சேரும், பதவியும் - பேறும் (கதியும்), உரை - சொல்வீராக, என - என்று பிரார்த்திக்க, வகுப்பான் - (நாரதன்) கூறுவானுயினுன்; (எ.று). நாரதன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

எங்களனைவர்க்கும் எத்தகைய கதி கிடைக்கும் எனத் திருத ராட்டிரன் நாரதனை வினவினுனென்க. சார்வை - முன்னிலை யொருமை. ஒழிகென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். உரை - வியங்கோள். (8)

**9. அவரவர்களுக்கு எய்தும்பேறிவையென நாரதன் வகுத்துக்கூறுதல்.**

இயக்கர் கோனக ரெய்துவை யில்லவ ளுடனீ
வியக்கும் பாண்டுபான் மேவுவள் குந்திவிண் ணகர் போய்
அயிற்க ணுரெலா மவரவ ரன்பர்பா லடைவார்
மயக்கில் சஞ்சயன் வானகர் தருமன்பால் விதுரன்.

(இ-ள்) இயக்கர் கோன் நகர் - யக்ஷர்களுக்குத் தலைவனாகிய குபேரனது அளகாபுரியை, நீ இல்லவளுடன் எய்துவை - நீ காந்தாரியுடன் அடைவாய்: குந்தி - குந்திதேவி, விண்ணகர் போய் - அமராவதிக்குச் சென்று, வியக்கும் பாண்டுபால் - அதிசயிக்கும் பாண்டுவினிடத்து, மேவுவள் - அடைவள்: அயில் கணார் எலாம் - வேலாயுதம்போல் கூரிய கண்களையுடைய மருகியரெலாம், அவரவர் அன்பர்பால் - அவரவர்களது கணவர்களிடத்து, அடைவார் - சேருவார்கள்; மயக்கு இல் சஞ்சயன் - அவிச்சையில்லாத சஞ்சயமுனிவன், வான் நகர் - சுவர்க்கம் (அடைவான்); விதுரன்—, தருமன்பால் - தருமனிடத்து (அடைவான்); (எ.று).

அன்பர் - கணவர், பர்த்தாக்கள். அவரவர் பர்த்தாக்களுடைய உலகங்களையடைவர் என்றபடி. அயிற்கண் - உவமைத்தொகை. மயக்கு - அவித்தை, மயக்கம், திரிபுணர்வு. வான் நகர் - சுவர்க்கம். தருமன்பால் விதுரன் என்றது - தருமனுடைய சரீரத்தில் பிரவேசிப்பன் விதுரன் என்றபடி. இது மேலை 21 - ஆஞ் செய்யுளிற் கூறப்பட்டுள்ளது. திருதராட்டிரன், காந்தாரி குபேரலோகமும், குந்தி இந்திர லோகமும், மருகியர் அவரவர்களுடைய பர்த்தாக்கள் உலகமும், சஞ்சயன் சுவர்க்கமும், விதுரன் தருமனுடலில் ஆவேசித்து அவனுடலையும் சேர்வர் என்று அறிய வைத்தபடி. (9)

**10. நாரதனை 'நீ எவ்வாறு உணர்ந்தனை?' எனச் சதயூபன் வினவ, அம்முனிவன் உணர்ந்தவகை கூறிச்செல்லல்.**

என்ன நாரத னிசைத்தவோர்ந் திருஞ்சத யூபன்
இன்ன வாறுணர்ந் திடுஞ்செய லிசையென வினவ
பொன்ன கர்ப்புகுந் தொருதினம் புரந்தர னவைபாற்
பன்ன வோர்ந்ததென் றியாழ்முனி பகர்ந்திடம்
புகுந்தான்.

(இ-ள்) என்ன நாரதன் இசைத்த - என்று நாரதன் சொன்னதை, இரும் சதயூபன் - அங்கிருந்த சதயூபன், ஓர்ந்து - அறிந்து, 'இன்னவாறு உணர்ந்திடும் செயல் இசை - இப்படித் தென்று அறிந்திட்ட தன்மை [எப்படியெனச்] சொல்வாய், என

வினவ - என்று கேட்க, (அதற்கு) யாழ்முனி - நாரதன், ''ஒரு தினம்-ஒரு நாள், பொன் நகர் புகுந்து - அமராவதி சேர்ந்து. புரந்தரன் அவைபால் - இந்திரன் சபையிடத்து, பன்ன - அங்கிருந்தோர் சொல்ல, ஓர்ந்தது - அறிந்தது,'' என்று பகர்ந்து - என்று சொல்லி, இடம் புகுந்தான் - தனதிருப்பிடம் அடைந்தான்; (எ.று).

ஒரு சமயம் நாரதன் தற்செயலாக இந்திரனுடைய சபைக்குச் சென்ருன். அங்கே இந்திரனேடு பாண்டுவையும் கண்டான். அங்கே இந்திரன் நேரில் சொல்லக் கேட்டவிவரம் பின்வருமாறு - திருதராட்டிரனுக்கு ஆயுள் முடிய மூன்று வருடங்கள் மிச்சமிருக்கின்றன. பிறகு காந்தாரியுடன் இஷ்டப்படி செல்லும் விமானமேறிக் குபேரனுடைய உலகத்திற்குச் செல்வான் என்பது. இசை - முன்னிலை வியங்கோள். ஓர்ந்தது - குறிப்பு வினையாலணையும் பெயர். (10)

**11. தருமன் தம்பியருடனும் மாதருடனும் குந்திமுதலியவரைக்காண விரும்புதல்.**

வந்து ளோரொடு முனிசெல மன்னவன் வனத்தீற்
புந்தி யன்புகூர்ந் தருந்தவம் புரிந்தனன் இப்பால்
மைந்த ரைவரும் மாதரும் வனம்புகு மவர்க்காய்ச்
சிந்தை யாற்றிலர் காண்குவான் சிந்தைசெய்
தனரால்.

(இ-ள்) முனி - நாரதன், வந்துளோரொடு - தம்முடன் வந்த இருடியரோடு, செல - போக, மன்னவன் - திருதராட்டிரன், வனத்தில் - காட்டில், புந்தி அன்பு கூர்ந்து - மனத்தில் அன்பு மிகுந்து, அரும் தவம் புரிந்தனன் - அரியதவத்தைச் செய்தான்: இப்பால் - இங்கு அத்தினபுரியில், மைந்தர் ஐவரும் - பாண்டவரைந்து பேரும், மாதரும் - திரௌபதி முதலான பெண்டிரும், வனம் புகும் அவர்க்காய் - காட்டிற்கு வந்த திருதராட்டிரன் குந்தி காந்தாரியிவர்களுக்காக, [அவர்கள் பிரிவினை] சிந்தை ஆற்றிலர் - மனம் பொறுக்க முடியாதவராய், காண்குவான் - அவர்களைக் காணும் பொருட்டு, சிந்தை செய்தனர் - மனத்தில் எண்ணினர்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

புந்தி மனத்திற்காகியது. ஆற்றிலர் - முற்றெச்சம். காண்குவான் - வினையெச்சம். (11)

**12. தருமன் தம்பியர்மாதர் நகரஜனங்கள் இவர்களுடன் நாற்படைசூழக் காட்டிற்கு வருதல்.**

முரசு யர்த்தவ னொருதின முரசினு லுணர்த்திப்
புரமி ருந்திடக் கிருபனே டுயுச்சனைப் பொருத்தி
வருச னம்பினேர் மாதரோ டனிகமு வளையப்
பரவை போலெழப் பல்லியந் தேர்மிசைப் படர்ந்
தான்.

(இ-ள்)ஒருதினம் - ஒரு நாள், முரசு உயர்த்தவன் - தருமன், முரசினுல் உணர்த்தி - முரசறைந்து(நகரெங்கும்) தெரிவித்து, கிருபனேடு உயுச்சனை - கிருபாசாரியரோடு யுயுத்ஸுவையும், புரம் இருந்திடப் பொருத்தி - அத்தினுபுரியிலேஇருந்து பார்த்துக்கொள்ளும்படி நிற்கவைத்து, வரு - (தன்பின்னுல்)வருகின்ற, சனம் - (நகர)ஜனங்கள், பினேர் - தம்பியர், மாதரோடு - (திரௌபதிமுதலான) பெண்டிர் இவர்களோடு, அனிகமும் வளைய - நாற்படைகளும் சூழ்ந்துவர, பல் இயம் - பலவாச்சியங்கள், பரவை போல் எழ - கடல்போல ஒலிக்க, தேர்மிசை படர்ந்தான் - தேரின்மீதேறி வந்தான்; (எ.று.)

தருமன் சுற்றம்சூழ, நகரஜனங்கள் படைகள் இவற்ருேடு குந்திமுதலியவர்களைக் காணக்காட்டுக்கு வந்தானென்பது கூறப்பட்டது. பினேர் - பின்னேர், தம்பியர் : தொகுத்தல், பரவை போல் - உவமையணி. (12)

வேறு.

**13. தருமன் உடன்வந்தஅனைவரோடும் சதயூபாச்ரம வனம் அடைதல்**

அத்தினு புரி யாள் வேந்தன்
அருநெறி யநேகந் தள்ளி
முத்தியைக் கருதிக் கானின்
முனிவர்பாற் றவஞ்செய் கின்ற

அத்தனே டன்னை மார்கள்
அரிவையர் அமருஞ் சூழல்
உத்தமர் காட்ட வீதென்
றுணர்ந்தடை ந் துவந்து கண்டான்.

(இ-ள்) அத்திஞபுரி ஆள் வேந்தன் - அத்தினபுரத்தைத் தலை நகராக்கொண்டு ஆளும் தருமராசன், அநேகம் அருநெறி தள்ளி - பல அரியவழிகளைக்கடந்து, முத்தியைக்கருதி - மோட்சத்தையடைய வெண்ணி, கானில் - காட்டில், முனிவர்பால் தவம் செய்கின்ற - சதயூபன்போன்ற முனிவர்களோடு தவத்தைச்செய்கின்ற, அத்தனோடு - திருதராட்டிரனோடு, அன்னைமார்கள் - குந்திகாந்தாரியும், அரிவையர் - மருகியர்களும், அமரும் சூழல் - தங்கியிருக்கின்ற ஆச்ரமத்தை, ஈதென்று - இதுதானென்று, உத்தமர் காட்ட - மேலான இருடிகள் காட்ட, உணர்ந்து - அறிந்து, அடைந்து - கிட்டி, உவந்து - மகிழ்ச்சியோடு, கண்டான் - (அதனைப்) பார்த்தான்; (எ.று.)

தருமன் திருதராட்டிரனாச்ரமத்தைக்கண்டு உவந்தான் என்றபடி.

இதுமுதல் நான்குகவிகள் - ஒன்றுநான்காஞ்சீர்கள் விளச்சீர் களும் ஏனைய நான்கும் மாச்சீர்களுமாகவந்த அறுசீராசிரிய விருத்தம். (13)

**14. தருமன் அனைவரோடும் சென்று தந்தைதாயரை வணங்கி அவர்களாசியைப் பெறுதல்.**

கண்டருஞ் சூழ லெய்திக்
கனிட்டர்மற் றவர்க ளோடு
நீண்டவேல் விழிய ரோடு
நெடுமுர சுயர்த்த கோமான்
ஆண்டகை யூடு தாய்மார்
அடியிணை முடிமே லன்பாற்
பூண்டவ ரேந்தி யன்பாற்
புகன்றிடு மாசி பெற்றான்.

(இ-ள்) கண்டு - பார்த்து, அரும் சூழல் எய்தி - அரிய [திருதராட்டிர] ஆச்ரமத்தையடைந்து, கனிட்டர் - தம்பியர், மற்றவர்களோடு - நகரஜனங்கள் முதலியவரோடும், நீண்ட வேல் விழியரோடு - நீண்ட வேலாயுதம்போற்கூரிய கண்களையுடைய மாதர்களோடும், நெடு முரசு உயர்த்த கோமான் - பெரியமுரசக்கொடியைத்தூக்கிய தருமராசன், ஆண்டகை - திருதராட்டிரன், ஊடு - நடுவிலேயிருப்ப, [அவனுக்கு இருபக்கத்திலுமுள்ள] தாய்மார் அடியிணை - குந்திகாந்தாரி ஆகிய இரண்டு தாயர்களின் உபய பாதங்களையும், அன்பால் - விசுவாசத்துடன், முடிமேல் பூண்டு - சிரசின்மேல்தரித்து, அவர் - அந்த மூவரும், ஏந்தி - கைகளால் தூக்கிப்பிடித்து, அன்பால் - விசுவாசத்தோடு, புகன்றிடும் - மொழிந்த, ஆசி - ஆசீர்வாதங்களை, பெற்ருன் - ஏற்றுக்கொண்டான்; (எ.று.)

திருதராட்டிரன் நடுவிலேநிற்க, இருபுறமுமுள்ள தாய்மார்களைத் தலையாய்வணங்கினன் என்றதால் அவனைவணங்கியமையும் பெற வைத்தபடி. அடியிணை முடிமேல் பூண்டு - தலையால் வணங்கி என்றபடி. 'கனிட்டர்' என்றதன்பின் 'ஒடு'கூட்டிக்கொள்க. வேல் விழி - உவமைத்தொகை. முரசு - முரசக்கொடிக்கு ஆகுபெயர். (14)

**15. தருமன் விதுரனைப்பற்றி வினவ, சஞ்சயன் கூறலுறல்.**

தழுவிசஞ் சயனை மற்றத்
 தையலார்க் கின்சொல் பேசி
வழுவில்சிற் றத்தன் காணுன்
 வருந்தியெங் குளன்யான் காணும்
விழைவுள னெனலு மந்த
 வேந்தனே டியாருங் கேட்பப்
பழுதில்சஞ் சயன்வி தூரன்
 பான்மைசொற் றிடுவ தானுன்.

(இ-ள்) சஞ்சயனைத்தழுவி - (தருமன்) சஞ்சயமுனிவனை யணைத்து, மற்று - பின்பு, அ தையலார்க்கு - அங்குள்ள மருகியர்க்கு, இன்சொல் பேசி - இனியவார்த்தைகளைச்சொல்லி, வழுவு இல் சிற்றத்தன் - குற்றமற்ற சிறியதந்தைமுறையினனாகிய விதுரனை,

காணுன் வருந்தி - காணுமுடியாமைக்கு நொந்து, 'எங்கு உளன் - (விதுரன்) எங்கே இருக்கின்ருன் : யான் காணும் விழைவுளன்- நான் பார்க்கவேண்டுமென்ற விருப்பமுடையன்', எனலும் - என்று, கூறவும், அந்த வேந்தனோடு - அந்தத் தருமராசனோடு, யாரும் கேட்ப - அனைவரும் கேட்கும்படி, பழுது இல் சஞ்சயன் - குற்றமற்ற சஞ்சயன், விதூரன் - விதுரனின் பான்மை - தன்மையை, சொற்றிடு வதானுன் - சொல்லலானுன் ; (எ. று.)

'யான்காணும் விழைவுளன்' என்றதால், தருமனுக்கு விதுரன் மாட்டுள்ள அன்பும் பெருமதிப்பும் விளங்குகின்றது. நீதிபுனைவிதுரனு தலின், 'பழுவில்சிற்றத்தன்' என்ருன். காணுன் - முற்றெச்சம். விதூரன் - விதுரன் என்பதன் நீட்டல். (15)

**16. விதுரன் திகம்பரனுய்த் திரிகின்ருன்என்று சஞ்சயன் கூற, தருமன் அவனைக்காண எண்ணங்கொண் டிருத்தல்.**

அகம்பரிந் தரசுக் கோராண்
டனுதினம் ஏவ லாற்றித்
திகம்பர ணுகக் கானிற்
றிரிகின்ரு னவன்றன் செய்கை
சகம்புரிந் திடுவோ யோர்ந்து
சாற்றரி தெனக்கேட் டண்ணல்
புகும்பொழு தவனைக் காண்பான்
புந்திகொண் டிருக்குங் காலை.

(இ-ள்) அகம் பரிந்து - மனம்விரும்பி, அரசுக்கு - திருதராட்டி ரனுக்கு, ஓர் ஆண்டு - ஒரு வருடகாலம், அனுதினம் - தினந்தோறும், ஏவல் ஆற்றி - கைங்கரியங்களைச்செய்து, திகம்பரனுக - ஆடை யின்றி நிர்வாணமாக, கானில் - காட்டில், திரிகின்ருன் - சஞ்சரிக் கின்ருன் : சகம் புரிந்திடுவோய் - உலகை ரட்சிக்கும் தருமனே! அவன்தன் செய்கை - அவனுடைய செயல்கள், ஓர்ந்து - (இன்ன வையென) அறிந்து, சாற்ற அரிது' - சொல்லுதற்கு அரியவை, எனக் கேட்டு - என்று (சஞ்சயன்) சொல்லக்கேட்டு, அண்ணல் - தருமன், புகும்பொழுது - அந்த விதுரன் வரும்போது, அவனைக்காண்பான் - அவனைப்பார்க்கலாமென்று, புந்திகொண்டு - எண்ணங்கொண்டு,

இருக்கும் காலை - இருக்கும்போது, (எ.று.) 'ஆண்டு மாதவர்கள் அனேகர்வந்து' எனத் தொடரும்.

விதுரன்செய்கை சாற்றுதற்கு அரிது என்றது என்னையெனில், - அவன் ஜடைதரித்தவனும், வாயில்கல்லைக்கௌவிக்கொண்டிருப்பவனும், இளைத்தவனும், திகம்பரனும், அழுக்கினால் பூசப்பட்ட சரீரமுள்ளவனும், காட்டிலுள்ள புழுதி படிந்தவனும், ஜனக்கூட்டத்தைக்கண்டு தூரத்தில் விலகுபவனும் ஆகத்திரிந்துகொண்டிருந்தான்; மற்றும், ஓரிடத்தில் காணப்பட்டும் ஓரிடத்தில் காணப்படாமலும் இருந்தானாதலினென்க. (வாயில் கல்லைக் கௌவிக்கொண்டிருப்பது - மௌனத்திற்காக என்ப.) சாற்றரிது - வகரவுடம்படு மெய்கெட்டு வந்தது. (16)

## வேறு.

**17. திருதராட்டிரன் தன்னிடம் வந்த தவசியர்க்குத் தருமன்முதலியோரைத்தெரிவிக்கச்செய்தல்.**

ஆண்டுமா தவர்க ளனேகர்வந் தரச
 னாற்றுபூசனை க்குகந் தன்பாற்
காண்டிட வந்தோம் நின்சுத ரவர்கட்
 காதலி மாரையும் உணர்த்த
வேண்டுமென் றுசாவச் சஞ்சயன் தருமன்
 வீமன்பற் குனன்பரி நகுலன்
மாண்டகு மிளையோன் இவர்கள் மற்றவர்கள்
 மனைவிய ரிவரென வகுத்தான்.

(இ-ள்) ஆண்டு-அவ்விடத்து ஆசிரமத்து, மாதவர்கள் அநேகர்-அநேக தவச்சிரேட்டர்கள், வந்து -, அரசன் - திருதராட்டிரன், ஆற்று - செய்த, பூசனைக்கு - உபசாரத்துக்கு, உகந்து - மகிழ்ந்து, 'அன்பால் - விசுவாசத்தோடு, காண்டிட - தரிசிப்பதற்கு, வந்தோம் - : நின் சுதர் - உனது மைந்தர்களாகிய பாண்டவர்கள், அவர்கள் காதலிமாரையும் - அவர்களுடைய மனைவியரையும், உணர்த்தவேண்டும் - (யார்யாரெனத்) தெரிவிக்கவேண்டும்,' என்று உசாவ - என்று கேட்க, சஞ்சயன் - சஞ்சயமுனிவன், - தருமன் வீமன் பற்குனன் பரி நகுலன் மாண் தகும் இளையோன் இவர்கள் - தருமன் வீமன் அருச்சுனன் அசுவசாத்திரத்தில்வல்ல நகுலன்

மாட்சிமையுடைய சகாதேவன் இவர்களையும், மற்று - மேலும், அவர்கள் மனைவியர் - அவர்களின் மனைவிமாரையும், இவர் என - இன்னாரின்னாரென, வகுத்தான் - தெரியப்படுத்திச்சொன்னான்; (எ.று.)

சஞ்சயன் வகுத்தான் என இயையும். வேண்டும் - வியங்கோள்.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள ஏழுகவிகள் - பெரும்பாலும் ஒன்றுமூன்றுஐந்துஆருஞ்சீர்கள் விளச்சீர்களும் ஏனைய மூன்றும் மாச்சீர்களுமாகவந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (17)

**18-19. திருதராட்டிரனும் தருமனும் ஒருவரையொருவர் விசாரித்து அளவளாவுதல்.**

**இரண்டு கவிகள்-ஒரு தொடர்**

மாதவ ரஃதோர்ந் தகமகிழ்ந் திருந்தார்
மன்னவன் தருமனை நோக்கிக்
கோதிலாச் சனர்கட் சுவாகத மோசெங்
கோலினுக் கிடரிலா துளவோ
ஓதெனத் தருமன் நின்றனு ணையினால்
உளதுன துடலுர னுளவோ
ஏதமி றவஞ்செய் திடவென தனைமார்
ஏவன்மெய் யயர்தல்செய் குவரோ.

(இ-ள்) மா தவர் - சிறந்த தவச்சிரேட்டர்கள், அஃது ஓர்ந்து - (சஞ்சயன்கூறியபடி) இவரிவர் என அறிந்து, அகம் மகிழ்ந்து - மனங்களித்து, இருந்தார் - தங்கியிருந்தனர்: [இஃது இங்ஙனாக] மன்னவன் - திருதரார்ட்டிரன், தருமனை நோக்கி - தருமராசனைப் பார்த்து, "கோது இலா சனர்கள் சுவாகதமோ - குற்றமில்லாத குடிமக்கள் வரவேற்கிறார்களா? செங்கோலினுக்கு - அரசாட்சிக்கு, இடர் இலாது உளவோ - துன்பமில்லாது இருக்கின்றதா? ஓது - சொல்வாயாக", என - என்று வினவ, தருமன்—, நின்தன் ஆணையினால் உம்முடைய அதிகாரத்தினால், உளது - (எல்லாம் குறைவின்றி) நன்மையாகவேயுள்ளது: உனது - உம்முடைய, உடல் - சரீரம்,

ஏதம் இல் தவம் செய்திட - தோஷமில்லாத தவத்தைச்செய்திடு மாறு, உரன் உளவோ – வலிமையுடனிருக்கின்றதா? (மற்றும்) எனது அனைமார் - என்னுடையதாயராகியகுந்திகாந்தாரியிருவரும், ஏவல்-உமக்குப்பணிவிடைசெய்தலில், மெய் அயர்தல் செய்குவரோ? - உடல்தளர்வெய்தி வருந்துவரோ? (எ.று.)

சுவாகதம் - வரவேற்கும் மொழி : ''தோழியர் சுவாகதம் போது கீங்கென'' (சீவக : 1021). 'Expression denoting welcome, cordial reception. 'சனர்கள்சுவாகதமோ' - குடிமக்கள் உன் ஆட்சியை ஏற்கிருர்களா என்றபடி. இடரிலாது உளவோ என்றவிடத்து இட ராவது - அரசனுக்குத் தன்பரிசனங்களாலும் பகைவர்களாலும் கள் வர்களாலும் ஏனையஉயிர்களாலும் வருவனவற்றை ஈண்டுக் குறிப்ப தெனலாம். அயர்தல் - தளர்தல். ''அயலார்போல அயர்வேனே'' (திருவாசகம் : 32,9)., (18)

19. தவந்தர மடவா ருடல்பொறுத் ததுவோ
சஞ்சய னுடறளர்ந் தேவல்
உவந்துசெய் பயன்பெற் ருன்கொலோ விதுரன்
உறுவதெங் கோர்வுளம் யாதோ
அவந்துலைத் தறிவின் மாண்பினி னின்ருேன்
அடைந்திடக் காண்பனே வென்ன
பவந்தொலைத் திடுவா னெய்துநீ காண்பை
பால! துன் புறேலெனப் பணித்து.

(இ-ள்) தவம் தர - [கடிய] தவத்தைச் செய்ய, மடவாருடல்-குந்திகாந்தாரியாகிய பெண்டிரின் சரீரம், பொறுத்ததுவோ - தாங்க முடிந்ததோ? சஞ்சயன்—, உடல் தளர்ந்து - சரீரம் சோர்வுற்று, ஏவல் - (உமக்குப்) பணிவிடைகளை, உவந்து - மகிழ்ந்து (வெறுப் பின்றி, செய் பயன் - செய்கின்ற பேற்றை, பெற்ருன் கொலோ - அடைந்தானு? விதுரன் உறுவது எங்கோ? - விதுரன் சென்றிருப் பது எவ்விடத்தோ? உளம் யாதோ - அவன் மனத்தினெண்ணம் எதுவோ? அவம் துலைத்து - கேடுகளை நீக்கி, அறிவின் - மேலான ஞானத்திலும், மாண்பினின் - நீதியிலும், நின்ருேன் - நிலைநின்ற வனுகிய அந்த விதுரன் அடைந்திட - வந்திட, காண்பனே : (யான்) பார்க்கக் கூடுமோ?, என்ன - என்று வினவ, (திருத

ராட்டிரன்) 'பால! - மைந்தனாகிய தருமனே! பவம் தொலைத்திடுவான் - பிறவியையொழிக்கும் பொருட்டு, எய்தும் - வருவன்: நீ காண்பை - நீ பார்க்கப் போகிறாய்; துன்புறேல் - வருத்தப்படாதே,' என - என்று பணித்து - சொல்லி; (எ.று.) ''மீட்டும் அந்தகன் ஈதுரைத்திடும்' என மேலைக்கவியிற்றொடரும்.

உடல் தளர்ந்தால் ஏவல் செய்தலில் உவப்பு நீங்குமாதலின் 'உவந்து செய் பயன்' என்றது. ஓகாரங்கள் - வினா. மாண்பு - மாட்சிமைப்பட்ட குணம்: நீதிபுணைவிதுரனாதலின், நீதியைக் காட்டும். அவம் - கேடு: (Evil): ''அவஞ்செய்வாராசையுட்பட்டு'' என்றது குறள் (27-6), ''எய்திடும் நீ காண்பை'' என்று நிச்சயமாகக் கூறியதற்குக் காரணம் முன்னரே நாரதன் தன்னிடம் கூறியிருத்தலால். (செ;9) எய்தும் - செய்யுமென்முற்று. காண்பை - முன்னிலை வினைமுற்று. துன்புறேல் - முன்னிலையெதிர்மறை வினைமுற்று. (19)

**20. மேலும் திருதராட்டிரன் 'குறையிலை எமக்கு' எனக்கூற, தருமன் ஒருதினம் விதுரனைக் காணுதல்.**

மீட்டுமந் தகனீ துரைத்திடும் மைந்த!
விரிபுகழ் சஞ்சயன் மாதர்
வாட்டமில் ஏவல் தகும்படி செயமெய்
வருத்தமின் மாதவ ரருளாற்
கோட்டிநற் றவமிவ் வனத்திருந் தனனோர்
குறையிலை யெமக்கெனத் தருமன்
கேட்டதை மகிழ்வுற் றிருந்தொரு தினத்திற்
கிடைத்திட விதுரனைக் கண்டான்.

(இ-ள்) மீட்டும் - மறுபடியும், அந்தகன் - குருடனாகிய திருதராட்டிரன், ஈது உரைத்திடும் - இதனைச் சொல்லுவான்: மைந்த!- தருமனே! விரிபுகழ் சஞ்சயன் - பரந்த புகழையுடைய சஞ்சயன், மாதர் - குந்திகாந்தாரி இவர்கள், வாட்டம் இல் - எனக்கொரு தளர்வும் இல்லாதபடி, ஏவல் - பணிவிடைகளை, தகும்படி - தக்கபடியாக, செய - செய்தலால், (நான்) மெய் வருத்தம் இல் - உடம்பு துயருறாதபடி, மா தவர் அருளால் - சிறந்த தவசியர் கருணையினால், நல் தவம் கோட்டி - நல்ல தவத்தைச் செய்து

கொண்டு, இ வனத்து இருந்தனன் - இந்தக் காட்டிடத்து இருக்கின்றேன்: எமக்கு - எங்களுக்கு, ஓர் குறை இலை - ஒரு குறையும் கிடையாது: என - என்று திருதராட்டிரன் சொல்ல, தருமன் —, அதைக்கேட்டு - அந்த வார்த்தைகளைக் கேட்டு, மகிழ்வுற்று - சந்தோஷித்து, இருந்து - (அங்கேயே) தங்கியிருந்து, ஒரு தினத்தில் - ஒருநாள், கிடைத்திட - (தனக்கு எதிரில்) தென்பட, விதுரனைக் கண்டான் - விதுரனைப் பார்த்தான்; (எ.று.)

உரைத்திடும் - செய்யுமென்முற்று. இல் -இல்லாதபடி. (20)

**21. தருமன் விதுரனைக்காணநெருங்க,அவன் இவனுடலில் பிரவேசித்து ஒன்றுதல்.**

கண்டறன் மதலை வண்டணி குழலார்
கனிட்டரோ டவனெதி ரணுகிச்
சண்டன்சே யடியேன் நினதரு ணோக்கஞ்
சாத்திட வேண்டுமென் றிரப்ப
விண்டிரு விழிதன் மைந்தனை நோக்கி
விதுரன்றன் னுடறணந் தருகில்
அண்டிநின் றிடும்வேந் துடலம் புகுந்தொன்
றுயினன் னற்புதத் தம்மா.

(இ-ள்) கண்டு - விதுரனைப் பார்த்து, அறன் மதலை - தரும புத்திரன், வண்டு அணி குழலார் கனிட்டரோடு - கைவளையல்களை யணிந்துள்ள மகளிரோடும் தம்பியரோடும், அவன் எதிர் அணுகி - அவனுக்கு எதிரிலே கிட்டிப்போய், 'அடியேன் - யான், சண்டன் சேய் -யமதேவனின் மகன்: நினது அருள் நோக்கம் - உம்முடைய கருணைகடர்க்ஷத்தை, சாத்திட வேண்டும் - (என்மேல்) பதிய வைக்க வேண்டும்,' என்று இரப்ப - என்று பிரார்த்திக்க, விதுரன்-, இரு விழி விண்டு - (தனது) இரண்டு கண்களையும் அகலவிரித்து, தன் மைந்தனை நோக்கி - தன்னுடைய மகனாகிய தருமனை உற்றுப் பார்த்து, தன் உடல் தணந்து - தனது சரீரத்தை விடுத்து, அருகில்- பக்கத்தில், அண்டி நின்றிடும் - மிக நெருங்கி நின்றிருக்கின்ற, வேந்து - தருமனின், உடலம் புகுந்து - தேகத்தில் பிரவேசித்து, அற்புதத்து - ஆச்சரியமுண்டாம்படி, ஒன்றுயினன் - ஒன்றி ஏகமாயினன்; (எ.று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

ஈண்டறிய வேண்டும் விவரம் பின்வருமாறு:- வனமத்தியில் பரிசுத்தமும் ஏகாந்தமுமான இடத்தில் ஒரு மரத்தில் சாய்ந்து கொண்டு நின்ருர் விதுரன். தருமன் அவரைத் தெரிந்து கொண்டு 'அடியேன் யுதிஷ்டிரன்' என்று சொல்லி அவரெதிரில் நின்ருர். விதுரர் மனத்தை ஒருவழிப்படுத்தி இமை கொட்டாம லிருந்துகொண்டு தம்முடைய கண்ணை அவருடைய கண்ணுேடு சேரும்படி செய்து, தருமனை உற்றுப் பார்த்தார். பிறகு தம்முடைய அவயவங்களை அவருடைய அவயவங்களுடனும் பிராணன்களைப் பிராணன்களுடனும் இந்திரியங்களை இந்திரியங்களுடனும் பிர வேசிக்கும்படி செய்தார். விதுரர் யோக பலத்தை அவலம்பித்து, தருமனுடலில் பிரவேசித்தார். அப்பொழுது தருமன் தம்மைப் பலமடங்கு பலமுள்ளவராக எண்ணிஞர். **தாமும் விதுரரும் ஒரே தர்மத்தின் (யமதேவனின்) அம்சத்திலிருந்து பிறந்த வர்களென்பதையும் நினைத்துக் கொண்டார்** என்பது. வண்டு - கைவளை; bracelet: இனி, வண்டுகள் அணி செய்கின்ற (மொய்க்கின்ற) கூந்தலையுடையவர் எனினுமாம். சண்டன் - யம தேவன். ஒன்ருதல் - ஏகமாதல்: இரண்டறக்கலத்தல். (21)

**22. தருமன் விதுரனுக்குச் சம்ஸ்காரம் செய்யப்புக, (அசரீரியான) வாக்கு தடுக்க,தருமன் அதனைத் திருத ராட்டிரனுக்குத் தெரிவித்தல்.**

தருமன்மெய் பொலிவுற் றிஃதுணர்ந் திருந்தான்
சமாதிபோன் றுறுமவ னுடலை
எரியிட நினைமுன் ஞெருசொலங் கெழுந்த
தெரிக்கவிவ் வுடற்றழல் வலஞே?
உரியதன் றகற்று மென்னவே யஃதோர்ந்
துதிட்டிரன் வெருவிகை குவியா
தெரிவைய ரிளேயோ ருடன்பிதா விபினஞ்
சேர்ந்திது யாவர்க்குந் தெரித்தான்.

(இ-ள்) தருமன் மெய் பொலிவு உற்று – தருமராசன் தனது தேகம் தேஜஸ் பெற்று, இஃது உணர்ந்து - விதுரன் தன் தேகத்துப் பிரவேசித்த இதனை அநுபவித்தறிந்து, இருந்தான் - அசையா திருந்தான்: சமாதி போன்று உறும் அவன் உடலை - இறந்தவன் போல இருந்த அவனது தேகத்தை, எரி இட நினை முன் - அக்னியி

விட எண்ணுவதற்கு முன்னே, ஒரு சொல் அங்கு எழுந்தது.- ஒரு அசரீரிவாக்கு அவ்விடத்து தோன்றியது: (அஃது யாதெனில்) 'தழல் - அக்னி, இ உடல் எரிக்க - இந்தப் (புனித) தேகத்தைச் சுட்டெரிக்க, வலனோ? - வல்லமையுடையவனோ? உரியது அன்று - இத்தேகம் சுடுதற்கு உரியதாகாது; அகற்றும் - உமது எண்ணத்தை நீக்கும்,' என்ன - என்று கூறவே, உதிட்டிரன் - தருமன், அஃது ஓர்ந்து - அதனையாராய்ந்தறிந்து, வெருவி - அஞ்சி, கை குவியா- (தன்) கைகளைக்குவித்து அஞ்சலிசெய்து, தெரிவையர் - பெண்டிர், இளையோருடன் - தம்பியர் இவர்களுடன், பிதா விபினம் சேர்ந்து- திருதராஷ்டிராச்ரமம் அடைந்து, யாவர்க்கும் தெரித்தான் - அனை வருக்கும் (இந்நிகழ்ச்சியைக்) கூறியறிவித்தான்; (எ.று.)

அசரீரி கூறியது பின் வருமாறு - ''தருமராசனே! விதுரரென்று பெயருள்ள இந்தச் சரீரத்தை நீர் இங்குத் தகனம் செய்யவேண்டாம். இவர் ஸநாதனமான தர்மம். இவருக்கு வைகர்த்தனம் என்னும் உலகம் கிடைக்கப் போகிறது. இவர் யதி தர்மத்தையடைந்தவர். இவர் துக்கிக்கப்படத் தக்கவரல்லர்'' என்பது. இது முழுதும் திருதராட்டிரனுக்குத் தருமன் அறிவித்தார். விபினம் - காடு: இங்கே அங்குள்ள ஆசிரமம் எனலாம். வலனோ - ஓ, வினு எதிர்மறை. அகற்றும் – முன்னிலையேவல். குவியா - உடன்பாட்டெச்சம். (22)

**23. தருமன் முதலானோர் திருதராட்டிரனுச்சிரமத்து ஒரு மாதம் தங்கியிருத்தல்.**

தெரித்தலு முனிவ ரற்புத மடைந்தார்
திருதராட் டிரனுநா ரதன்முன்
விரித்தசொற் கருதித் தேறிப்பின் மகாரை
விரும்பிய தருந்திடு நீவிர்
வருத்தமுற் றெம்மோ டருந்தவோ கனிகாய்
வந்துளீ ருளதுநுங் குமினென்
றுரைப்பதுய்த் தன்போ டைவராங் கிருந்தார்
ஒருமதி யளவுமங் கொருநாள்.

(இ-ள்) தெரித்தலும் தருமன் அறிவித்தவுடன், முனிவர் - சதயூபன் முதலான இருடிகள், அற்புதம் அடைந்தார் - ஆச்சரிய

மடைந்தனர்: திருதராட்டிரனும் —, நாரதன் முன் விரித்த சொல் கருதி - நாரதமுனிவன் முன்னர்க் கூறிய வார்த்தைகளை நினைத்து, தேறி - (ஒருவாறு) மனம் தெளிந்து, பின் - பிறகு, மகாரை - மைந்தராகிய பாண்டவரை, (நோக்கி) ''விரும்பியது அருந்திடும் நீவிர் - (அரண்மனையில்) வேண்டியவற்றைச் சுவைத்து உண்ணும் நீங்கள், எம்மோடு - எங்களோடும் [ஒருசேர], வருத்தமுற்று - வருந்தி, காய் கனி அருந்தவோ வந்துளீர் - காய்களையும் கனி களையும் உண்ணுதற்கோ வந்திருக்கிறீர்கள்: உளது - (ஆச்ரமத்தில்) இருப்பனவற்றை, நுங்குமின் - உண்ணுங்கள்;'' என்று உரைப்ப - என்று சொல்ல, துய்த்து - (அங்ஙனமே) உண்டு, ஒருமதி அளவும்- ஒரு மாதகாலம் வரையிலும், ஐவர் - பாண்டவரைந்துபேரும், அன்போடு - விசுவாசத்தோடு, ஆங்கு - அவ்வாச்ரமத்திடத்து, இருந்தார் - தங்கியிருந்தார்கள்: (அப்போது) அங்கு - அவ்விடத்து, ஒரு நாள் - ஒரு தினம்; (எ.று). ''ஆரண வியாதனங் கணுகி'' என மேலைச் சருக்கத்துக் குளகமாய்த் தொடரும்.

மனிதன் எதைப் புசிக்கிறானோ அதையே அவன் அதிதிக்குக் கொடுக்க வேண்டுமென்று கருதப்பட்டிருக்கிறதாதலின், 'உளது நுங்குமின்' என்றான் திருதராட்டிரனென்க. நுங்குமின் - முன்னிலை வியங்கோள். ஐவர் - தொகைக்குறிப்பு. (23)

வனம்புகு சருக்கம் முற்றிற்று.

நான்காவது

# புத்திரசோபந்தீர்ந்த சருக்கம்

திருதராட்டிரன் தன்புதல்வர் நூற்றுவரையும்இழந்ததனாலேற் பட்ட துக்கம் தீர்ந்தமையைத்தெரிவிக்குஞ்சருக்கம் என்று பொருள் படும். இது, புத்திரசோகந்தீர்த்தசருக்கம் என்றும் காணப்படும். புத்திர சோபம் - புத்திரராலேற்பட்ட சோபம் என விரிதலால், மூன்றனுருபும் பயனுமுடன்றொக்கதொகை. சோபம் தீர்ந்த - எழுவாய்த்தொடர். தீர்ந்த சருக்கம் - பெயரெச்சத்தொடர்.

வேறு.

1. வியாசர் திருதராட்டிரனிடம் வருதல்.

ஆரண வியா தனங் கணுகி யாங்கவர்
காரண முணர்ந்துசெய் கடன்கொண் டாசிசொற்
றேரணித் தவிசிருந் திறைவன் மேலருட்
பூரண மாயிதைப் புகறன் மேயினன்.

(இ-ள்) ஆரணம் வியாதன் - வேதவியாசமுனிவன், அங்கு - அந்தத் திருதராட்டிரனிடத்து, அணுகி - கிட்டிவந்து, ஆங்கு - அந்த ஆச்ரமத்திடத்து, அவர் - அங்குள்ளவர்கள், காரணம் உணர்ந்து - (வியாசர்) வந்தகாரணத்தையறிந்து, செய் கடன் கொண்டு - செய்த உபசாரங்களையேற்று, (அவர்களுக்கு) ஆசி சொற்று - ஆசீர்வாதமொழிகளைச்சொல்லி, ஏர் அணி தவிசு இருந்து- அழகுபொருந்திய ஆசனத்தில் அமர்ந்து, இறைவன்மேல் - திருத ராட்டிரன்மேல், அருள் பூரணமாய் - கருணைநிறைந்தவனாய், இதை- இந்த வார்த்தைகளை, புகறல் மேயினன் - சொல்லுதற்குப் பொருந் தினன் ; (எ.று.)

வியாசனுக்குப் புத்திரனுகுமாறு உளனுதலின், திருதராட்டிரன் மேல் வியாசன் பூரணவருள் வைத்தான் என்க. செய்கடன்-வினைத் தொகை. ஏர் - அழகு. புகறல் - தொழிற்பெயர்.

இதுமுதல் பன்னிருகவிகள் - மூன்ருஞ்சீரொன்றுமாச்சீரும் ஏனையமூன்றும் விளச்சீர்களுமாய்வந்த அளவடிநான்குகொண்ட கலிவிருத்தங்கள். (1)

## 2-4. வியாசன் திருதராட்டிரனுக்குக் கூறியவை.

### மூன்றுகவிகள்-ஒரு தொடர்.

உன்னுடற் றவத்தினுக் குரனுண் டாயதும்
பன்னியோ டியாதவர் பாவை சஞ்சயன்
இன்னலின் றேவல்க ளியற்றும் பான்மையும்
என்னவற் புதமிதை யியம்பற் பாலவோ.

(இ-ள்) தவத்தினுக்கு - தவஞ்செய்தற்கு, உன் உடல் - உன்னுடைய தேகம், உரன் உண்டாயதும் - வலிமைபெற்றிருப்பதும், பன்னியோடு - காந்தாரியோடு, யாதவர் பாவை - குந்தியும், சஞ்சயன் - சஞ்சயனும், இன்னலின்று - (யாதொரு) இடையூறுமில்லாமல், ஏவல்கள் - (உனக்குப்)பணிவிடைகளை, இயற்றும் - செய்யும், பான்மையும் - அழகுத்தன்மையும், என்ன அற்புதம் - என்ன ஆச்சரியம்! இதை - இந்த மேன்மையை, இயம்பல் பாலவோ - (அளவிட்டுச்) சொல்லுதல் கூடுமோ? (எ.று.)

வயதுமுதிர்ந்த குருடனுகிய திருதராட்டிரன் தவஞ்செய்ய உடலுரன் பெற்றமையும், வயதுமுதிர்ந்த இருபெண்டிரும் சஞ்சயனும் இன்னலின்றி ஏவல்புரியும் அழகும் என்ன அற்புதம் என்று வியந்தமை - சதயூபன், வியாசனுகியதான், ஏனையரிஷிகள் இவர்களின் பூரணஅருளால் ஏற்பட்டவை எனக்கொள்க. யாதவர் பாவை - குந்தி : யதுகுலத்திற்பிறந்த சூரராசனது மகளாதலின், இங்ஙனம் கூறப்பட்டாள் : "யாதவன் தீதில் குலமகள்" என்ருர் வில்லியும்(ஆதி : வேத்திர ; 45)பன்னி - பத்நீ : மனைவி. உண்டாயது, பான்மை - தொழிற்பெயர்கள், பாலவோ, ஓ - வினு எதிர் மறை. (2)

3. பாண்டவர் வாஞ்சையாற் படர்ந்து ளாரமர்
மாண்ட நின் சுதரினிம் மைந்தர் மிக்கவர்
தூண்டருந் தவத்தினுஞ் சுதர்கள் சோபநீ
பூண்டிடிற் பயனிலே போக்க வேண்டுமால்.

(இ-ள்)பாண்டவர் - தருமன்முதலிய ஐவரும், வாஞ்சையால் - (உம்மிடம்) விருப்பத்தால், படர்ந்துளார் - வந்துள்ளார்கள் : அமர் மாண்ட - போரில் இறந்துபோன, நின் சுதரின் - உன்னுடைய பிள்ளைகளைக்காட்டிலும், இ மைந்தர் மிக்கவர் - இந்தப்பிள்ளைகள் மேன்மையராவர் : (ஆதலால்)நீ —, அரும் தவத்தினும் - செய்தற் கரிய (கடிய)தவத்தின்போதும், சுதர்கள் சோபம் தூண்ட - பிள்ளை களையிழந்த துக்கம் நினைப்பூட்ட(அதனை), பூண்டிடில் - மேற்கொண் டிருந்தால், பயன் இலை - (தவஞ்செய்தலால் யாதொரு) பேறுங் கிடையாது : (ஆதலால்)போக்க வேண்டும் - அச்சோபத்தை யகற்ற வேண்டும்; (எ.று.)ஆல் - ஈற்றசை.

தவஞ்சித்திக்கப் புத்திரசோகம் தவிர்க்கவேண்டு மாதலின், வியாசன் இங்ஙனம் கூறினர், நின்சுதரினும் இம் மைந்தர் மிக்கவர் என்றது - நீ உன்புதல்வர்களுக்குத் துக்கிக்கவேண்டு வதில்லை : இனி இவர்கள்மேல் அன்புகொள் என்றபடி, வாஞ்சை - விருப்பம் : affection, இன் - ஐந்தனுருபு : உறழ்பொருவு : தூண்டு தல் - நினைப்பூட்டுதல், சோபம்தூண்ட என மாறுக. (3)

4. நீங்கினும் நீயனை நீங்க லாற்றுமோ
தாங்கருந் துயரெனச் சாற்றக் கேட்டவன்
ஆங்கிது நிகழ்த்துநின் னருளி னலெமக்
கீங்கொரு குறையிலை யிருந்த வத்தரோ.

(இ-ள்) நீ நீங்கினும் - நீ சோபம் அகற்றினலும், அனை - தாயாகிய காந்தாரி, தாங்க அரும் துயர் - தாங்கமுடியாத துக்கத்தை, நீங்கலாற்றுமோ - நீங்குதலைச்செய்யுமோ?, என சாற்ற - என்று வியாசன் சொல்ல, அவன் கேட்டு - அந்தத் திருத ராட்டிரன் செவியேற்று, ஆங்கு - அவ்விடத்து அப்போது, இது நிகழ்த்தும் - இதனைச்சொன்னன் : 'நின் அருளினல் - உமது கருணையினல், எமக்கு - எங்களுக்கு, இரும் தவத்து - அரியஇந்தத்

தவஞ்செய்தலில், ஈங்கு - இவ்விடத்து, ஒரு குறையிலே - ஒருகுறையும் இல்லை;' (எ.று.) அரோ - ஈற்றசை.

நிகழ்த்தும் - செய்யுமென்முற்று. அனை - அன்னையென்பதன் தொகுத்தல். (4)

**5. திருதராட்டிரன் வியாசனைநோக்கிக் கூறியது.**

அச்செரு மாண்டவ ரைவர் நூற்றுவர்
இச்சுத ரெனக்கொடு விருக்கின் றேனிலாள்
இச்சையு மிவ்வண மிருக்கு மென்பவே
முச்சகம் புகழ்முனி மொழிவ தாயினான்.

(இ-ள்) அ செரு- அந்தக் குருக்ஷேத்திரப் போரில், மாண்டவர்- இறந்து போனவர், ஐவர் - ஐந்து பேர்: நூற்றுவர் - துரியோதனன் முதலான நூறு பேர், இ சுதர் - இந்த மைந்தர்கள், எனக்கொடு - என்ற கருத்தோடு, நான் இருக்கின்றேன் —: இலாள் - என் மனைவி காந்தாரியின், இச்சையும் - விருப்பமும், இ வணம் - இந்தக் கருத்தின்படியே, இருக்கும் - இருக்கின்றது, என்ப - என்று கூறுவள்: (என்ற போது) முச்சகம் புகழ் முனி - மூன்று லோகங்களும் புகழ்கின்ற வியாசமுனிவன், மொழிவதாயினான் - கூறுவானாயினான்; (எ.று.)

போரில் இறந்து போனவர் உயிரோடிருக்கும் இந்தப் பாண்டவராகிய ஐவர் என்றும், இறந்து போன துரியோதனாதியர் முதலியோர் இறவாது இந்த மைந்தர் மூலம் உயிரோடிருக்கின்றார் என்றும் எண்ணியுள்ளோம் யாங்கள்: எனவே எங்களுக்குச் சோபமில்லாது ஆறியிருக்கிறோம் என்றான் திருதராட்டிரனென்க. மாண்டவர் - மாட்சிமைப்பட்டவர் என்பது தொனி. இலாள் - இல்லாள் என்பதன் தொகுத்தல். என்பவே, ஏ - அசை. (5)

**6. வியாசன் திருதராட்டிரனை அவன் மனத்திலுள்ளதோர்விருப்பத்தையியம்பினால் தான் உதவுவதாகச் சொல்லுதல்.**

ஈதலால் நின்மனத் தின்ன மொன்றுள
தோததை யுவந்துயா னுதவு வேனென

மாதவர் திலத! என் மனத்தி னினமலர்ப்
பாதமுன் ருேன்றினும் பற்றி லேனரோ.

(இ-ள்) ஈது அலால் - இதுவல்லாமல், நின் மனத்து - உனது மனத்தில், இன்னம் ஒன்று உளது - இன்னமும் ஒரு எண்ணம் இருக்கின்றது: அதை ஓது - அதனைச் சொல்லித் தெரிவிப்பாய்: யான் உவந்து உதவுவேன் - நான் மனம் மகிழ்ந்து உதவிபுரிவேன், என - என்று சொல்ல, (திருதராட்டிரன்) மா தவர் திலத!- சிறந்த தவத்தினர் திலகமே! என் மனத்தில் - எனது உளத்தில், நின மலர்ப்பாதம் - உன்னுடைய பூப்போல் மெல்லிய திருவடிகள், முன் தோன்றினும் - முற்பட்டுத் தோற்றமளித்தாலும், (நான் அவற்றிடத்தும்) பற்றிலேன் - விருப்பமில்லாதவனுயினேன்: (எ.று.) அரோ - ஈற்றசை.

உன்பாதத் திடத்தும் பற்று நீங்கினவனுயினேன் என்றதால் திருதராட்டிரன், தான் அனைத்திலும் விரக்தி கொண்டிருந்தான் என்பது அறிய வைத்தபடி. ''கூருமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும், மாருநீர் வையக் கணி'' குறள் :(71-1) யென்றதற் கேற்ப, வியாசன் ''நின் மனத்தொன்றுளது ஓது' என்ருனெனக் கொள்க. ஒன்று - ஆகுபெயர். மலர்ப்பாதம்- உவமைத்தொகை. (6)

### 7-8. திருதராட்டிரன் தன் விருப்பத்தைத் தெரிவித்தல்.

#### இரண்டு கவிகள்-ஒரு தொடர்.

ஆயினு மொன்றுள தறைவன் கேட்டியென்
நேயநந் தனர்கடம் நிலப்பொ ருட்டினுல்
தூயநற் பிதாமகன் துரோண னங்கர்கோன்
தேயமன் னவரொடுஞ் செருவிற் பொன்றலால்.

(இ-ள்)ஆ யி னு ம் - பற்றின்மையுடையேனுனலும், ஒன்று உளது - ஒரு விருப்பம் மட்டும் இருக்கின்றது : அறைவன் - கூறுகின்றேன் : கேட்டி - (நீர்)கேட்பீராக : 'என் நேய நந்தனர்கள் - என்னுடைய அன்புக்குரிய மைந்தர்கள் நூற்றுவரும், தம் நிலப் பொருட்டினுல் - தமது இராச்சியத்தின் பொருட்டாக, (இட்ட போரில்) தூய நல் பிதாமகன் - புனிதரான நல்ல வீடுமன், துரோ ணன் - (ஆசிரியனுகிய) துரோணன், அங்கர்கோன் - கர்ணன்,

(இவர்கள்)தேய மன்னவரொடும் - பலதேசத்து அரசர்களோடும், செருவில் - குருக்ஷேத்திரப்போரில், பொன்றலால் - இறந்ததால்; (எ.று.)''துன்றினன் சோபமும்''என மேற்கவியில் குளமாய்த் தொடரும்.

எனது மைந்தர்கள் தமது நிலங்காரணமாகச்செய்த போரில் வீடுமன் முதலாயவர்கள் தங்கள் பிராணனைத்தியாகஞ்செய்தமை யால் அதுகொண்டு 'ஆயினும் ஒன்றுளது' என்றுனென்க, அறைவன் - தன்மையொருமை, கேட்டி - முன்னிலைவியங்கோள். (7)

8. துன்றினன் சோபமுந் துறக்க வாற்றலென்
பொன்றினர் யாவரும் புகுதக் காண்குவான்
என்றலில் வேறிலை யென்ன மன்னவன்
நன்றுரை செயமனை நவிறல் மேயினள்.

(இ-ள்) சோபமும் துன்றினன் - துக்கமும் பொருந்தியுள்ளேன்: துறக்க ஆற்றலென் - துக்கத்தைப் போக்கவும் சக்தியில்லேன்: பொன்றினர் யாவரும் - இறந்து போனவர்கள் எல்லாரும், புகுத - இங்கே [இவ்வுலகு] வர, காண்குவான் - காணவேண்டும், என்றலில் - என்ற விருப்பத்தையன்றி, வேறு இலை - வேறொன்றும் இல்லை, என்ன - என்று தெரிவித்து, மன்னவன் - திருதராட்டிரன், நன்று உரை செய - தெளிவாகச் சொல்ல, (பிறகு) மனை - காந்தாரி, நவிறல் மேயினள் - சொல்லத் தொடங்கினள்; (எ.று.) அவள் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

புத்திரர்களுள்ளிட்டு இறந்துபோன வீடுமன் போன்ற அனைவரை யும் நேரிற்காண விருப்பமொன்றேயிருப்பதாகத் திருதராட்டிரன் தெரிவித்தானென்க. ஆற்றலென் - அல், எதிர்மறையிடைநிலை. பொன்றினர் - வினையாலணையும்பெயர். காண்குவான் - வினை யெச்சம் தொழிற்பெயர்த்தன்மைப்பட்டது. மனை - மனைவி. நவிறல் தொழிற்பெயர். (8)

9. காந்தாரி வியாசனிடம் கூறியது.

மன்னவ னெண்ணமே மாத வத்தினய் !
என்னகத் தில்லைவே றிசைம ணுளரைத்

துன்னிடை மாரெலாம் நோக்க வெண்ணினர்
இன்னல்யா மாறுமா றெய்து விப்பையே.

(இ-ள்) மா தவத்தினேய்! - சிறந்த தவத்தைச் செய்தவரே! மன்னவன் எண்ணமே - ('என் கணவராகிய)ராசன் கருத்தே எனக்கும்; என் அகத்து - என் மனத்தில், வேறு இல்லை - வேறு தனிப்பட்ட எண்ணம் கிடையாது: இசை மணாளரை -புகழ்பெற்ற தமது கணவரை, துன் இடை மார் எலாம் - செறிந்த (குறுகிய) இடையையுடைய மருகியரெல்லாம், நோக்க - கண்டுகளிக்க, எண்ணினர் - கருதியுள்ளனர்: யாம் - நாங்கள், இன்னல் மாறுமாறு - துன்பம் நீங்குமாறு, எய்துவிப்பை - செய்விப்பீராக; (எ.று) ஏ-ஈற்றசை.

துன்னுதல் - செறிதல். எய்துவிப்பை - முன்னிலை வியங்கோள். (௯)

**10. குந்தி தான் கர்ணனைப்பார்க்க விரும்பியதை வியாசனிடம் சொல்லியது.**

ஐயநின் றனக்கிஃ தரிதன் றாரருட்
செய்யென மருகியுஞ் செப்பக் குந்தியான்
உய்யுமா றைவரோ டுகந்து காட்டுதி
வெய்யவன் மைந்தனை விமல வென்பவே.

(இ-ள்)ஐய ! - பெரியோரே ! நின் தனக்கு - உமக்கு, இஃது அரிது அன்று - இந்தச்செயல் செய்தற்கரியதொன்றன்று : (ஆகவே) ஆர் அருள் செய் - பூரணகிருபையைச்செய்யவேண்டும், என - என்று, மருகியும்-காந்தாரியும், செப்ப - சொல்ல, (அப்போது)குந்தி- குந்திதேவி, விமல - புனிதரே ! யான் உய்யுமாறு - நான் பிழைத்திருக்குமாறு, ஐவரோடு - என் மைந்தர் பஞ்சவரோடு, வெய்யவன் மைந்தனை - சூரியகுமாரனான கர்ணனையும் (ஒருசேரநான் பார்க்கும்படி) உவந்து - மனமகிழ்ந்து, காட்டுதி - காட்டுவீராக, என்ப - என்றுகூற; (எ.று.)ஏ - ஈற்றசை. "முனிவரன்'' என மேலைக்கவியிலியையும்.

காந்தாரி வியாசனுக்கு மருகியாவள், காட்டுதி - வியங்கோள். (10)

**11. போரில் இறந்தவர்களைக் காட்டுவதாகச்சொல்லி வியாசர் எல்லோரோடும் கங்கைக்கரையிலுள்ள சோலையில் தங்குதல்.**

வாட்டமுற் றிதைசுதன் மருகி மார்களுங்
கேட்டலும் முனிவரன் கிலேசம் நீங்கிடக்
காட்டுவான் யாரொடுங் கலந்து கங்கைபால்
ஏட்டல ரொருபொழி லெய்தி வைகினுன்.

(இ-ள்)சுதன் - திருதராட்டிரனும், மருகிமார்களும் - காந்தாரி குந்தியும், வாட்டமுற்று - வருந்தி, இதை - இந்தவிருப்பத்தைச் செய்யும்படி, கேட்டலும் - பிரார்த்தித்தலும், முனிவரன் - வியாசன், கிலேசம் நீங்கிட - துயரம் நீங்குமாறு, காட்டுவான் - (இறந்தவர் களைக்)காட்டும்பொருட்டு, யாரொடும் கலந்து - எல்லாரோடும் சேர்ந்து, கங்கைபால் - கங்கா நதியிடத்து, ஏடு அலர் ஒரு பொழில்- இதழ்களோடுகூடியமலர்களைக்கொண்ட ஒரு சோலையிடத்து, எய்தி- வந்து, வைகினுன் - தங்கினுன்; (எ.று.)

வியாசன் திருதராட்டிரன் முதலாக அனைவரையும் அழைத்துக் கொண்டு கங்கைசேர்ந்து தங்கினுன் என்றபடி. கிலேசம் - துக்கம் : grief. (11)

**12. இதனையுணர்ந்து இருடிகள் அரசர்கள் தேவர்கள் அனைவரும் கூடியிருத்தல்.**

ஆண்டிஃ துணர்ந்துபல் லருந்த வத்தவர்
நீண்டவிப் புவியிடை நிருபர் யாவரும்
ஈண்டினர் வானவ ரிருவி சும்பிடை
தூண்டியே விமானங்க டுன்னி னுரரோ.

(இ-ள்) ஆண்டு - அப்போது, இஃது உணர்ந்து - இச்செய்தி யைத்தெரிந்து,பல் அரு தவத்தவர் - பல அரியதவத்தைச்செய்தவர் கள்,நீண்ட இ புவியிடை - பெரியஇந்தப்பூமியிலுள்ள, நிருபர் - அரசர்கள், யாவரும் - அனைவரும், ஈண்டினர் - (இந்தக் கங்கை

யின்கரையில்) கூடினார்கள் : வானவர் - தேவர்கள், இரு விசும்பிடை- பரந்த ஆகாயத்தில், விமானங்கள் தூண்டி - (தங்களது) விமானங் களைச் செலுத்திவந்து, துன்னினார் - நெருங்கியிருந்தார்கள் (எ.று.); அரோ - ஈற்றசை.

நிலவுலகில் ஏதாவது அதிசயநிகழ்ச்சி ஏற்படுமாயின் அதனைக் காணத் தேவர்கள் ஆகாயத்தில் கூடுவர் என்ப. (12)

## வேறு.

**13. வியாசர் போரிலிறந்தவரை அழைத்ததும், இருதிறத் தாரும் தத்தம் வாகனம் முதலியவற்றுடன்வருதல்.**

அப்பொழுது தப்பின்மறை யமைத்த வியாதன்
அறைதரும்பா ரதவமரி லன்று வீய்ந்தோர்
இப்பொழில்வாய் புகுந்திடுமென் றழைக்க முன்னர்
இயங்கறங்க விரதகய மிவுளி காலாள்
செப்படுக்கல் மைப்புயல்சிந் தலைவெஞ் சீயத்
திரளினுடுத் திடபற்பற் றேய வேந்தர்
ஒப்பில்குரு வீடுமனா தவன்சேய் மாமன்
உயிரிளையோ ருடனரவ முயர்த்தோன் வந்தான்.

(இ-ள்) அப்பொழுது - அச்சமயத்தில், தப்பு இல் மறை அமைத்த வியாதன் - பிழைபடாத (தவறுதலில்லாத) வேதத்தை வகுத்தமைத்த வியாசன், அறைதரும் - கூறுவானாயினான்: 'பாரத அமரில் - பாரதப்போரில், அன்று - அந்நாட்களில், வீய்ந்தோர் - இறந்தவர்கள், இ பொழில்வாய் புகுந்திடும் - இந்தச் சோலையிடத்து வந்து சேருங்கள்', என்று அழைக்க - என்று கூப்பிட, (அதன் படியே) முன்னர் - முன்னாக, இயம் கறங்க - வாச்சியங்கள் ஒலிக்க, இரதம் கயம் இவுளி காலாள் - தேர், யானை, குதிரை, காலாள் (ரதகஜதுரகபதாதிகள்), [முறையே] செப்பு அடுக்கல் மைப்புயல் சிந்து அலை வெம் சீயம் திரளின் உடுத்திட - (சிறப்பித்துப்) பேசப்படுகின்ற மலை கரியமேகம் கடலலை கொடிய சிங்கம் இவைகளின் கூட்டம் போலச் சூழ்ந்திட, பற் பல் தேய வேந்தர் - பலப்பல தேசத்து மன்னர்கள், ஒப்பு இல் குரு - ஒப் பில்லாத துரோணாசாரியன், வீடுமன் - பீஷ்மன், ஆதவன் சேய் -

சூரிய குமாரனுன கர்ணன், மாமன் - சகுனி, உயிர் இளையோர் - உயிர் போன்ற தம்பியர்கள், உடன் - இவர்களோடு, அரவம் உயர்த்தோன் - பாம்புக் கொடியையுயர்த்திய துரியோதனன், வந்தான் (எ. று.)

இரதம் அடுக்கல் போலவும், கயம் மைப்புயல் போலவும், இவுளி அலை போலவும், காலாள் சீயம் போலவும் என **முறையே** இயைதலால் **முறைநிரனிறைப் பொருள்கோள்**. அடுக்கல் - மலை. அலைவரிசை போல் பாய்ந்து வருதலால் குதிரைக்கு ஒப்பு. வேதம் வகுத்தவன் வியாசன் ஆதலின் 'மறையமைத்த வியாதன்' என்றார். 'தப்பில்' என்ற அடை வேதத்திற்குக் கொடுத்தது — அஃது என்றும் பிழைபடாதது என்றபடி: ''வேதவாக்கு'' என்று போற்றப் படுதலும் நோக்குக. அறைதரும் - செய்யுமென்முற்று: தா - துணைவினை. வீய்ந்தோர் - வினையாலணையும்பெயர்: இரதகய மிவுளிகாலாள் - உம்மைத்தொகை. செப்படுக்கல்மைப்புயல் சிந்தலைவெஞ்சீயம் - அடையடுத்த உம்மைத்தொகை. சிந்து-கடல். திரளின், இன் - உவமவுருபு. இளையோருடன், உடன் - முன்னருங் கூட்டிக் கொள்க.

இதுமுதல் இச்சருக்கத்துள்ள ஐந்து கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும் ஏனையவை மாச்சீர்களுமாக வந்த கழிநெலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (13)

**14. திருதராட்டிரன் வியாசன் கொடுத்த ஞானக்கண்ணுல் எல்லோரையும் நேரிற் காண, மற்றவர்களும் நேரில் நோக்குதல்.**

இவரடைந்தா ரிவரடையி லெனுஞ்சொ லில்லா
தெவருமடைந் தூர்திதணந் தெய்த வியாதன்
நவமுறவம் பகமருளப் பெற்ற வேந்தும்
நயனபட மொழிக்கவொளி நண்ணு மின்னும்
தவகுந்தி சஞ்சயன்பாண் டவர்பன் மாதர்
தரணிபரா தியரெவருந் தமியி னேக்கா
அவரவர்க டமக்குரியோர்க் கிரங்கி வாழ்த்தி
அடிபணிவா தமைத்தழிக்கொண் டன்பு கூர்ந்
தார்.

(இ-ள்)இவர் அடைந்தார் - இவர்கள் வந்தார்கள், இவர் அடை இல் - இவர்கள் வரவில்லை, எனும் சொல் இல்லாது - என்னும் வார்த்தை இல்லாதபடி, அடைந்து - எல்லாரும் வந்து, ஊர்தி தணந்து - (தத்தமது)வாகனங்களை விட்டிறங்கி, எய்த - (சோலைக்கு)வந்துசேர, வியாதன் - வியாசன், நவம் உற - புதிதாக, அம்பகம் அருளப்பெற்ற வேந்தும் - கண்கள் வழங்கப்பட்ட திரு தராட்டிரனும், நயன படம் - கண்களிற்கட்டியிருந்த பட்டையை, ஒழிக்க - நீக்க, ஒளி நண்ணும் மின்னும் - கண்ணொளிபெற்ற காந்தாரியும், தவ குந்தி - தவமேற்கொண்டு செய்யும் குந்தியும், சஞ்சயன் - சஞ்சயமுனிவனும், பாண்டவர் - பாண்டவர்களும், பல் மாதர் - பல பெண்டிர்களும், தரணிபராதியர் - பூவேந்தர்களும், எவரும் - அனைவரும், தமியின் - தனித்தனியே, நோக்கா - (வந்தவர்களைப்) பார்த்து, அவரவர்கள் —, தமக்கு உரியோர்க்கு இரங்கி- தங்களுக்கு உறவினராக வேண்டினவர்களுக்கு மனமிரங்கி, வாழ்த்தி- அவர்களை ஆசீர்வதித்து, அடிபணிவார்தமை - தங்கள் பாதங்களில் வணங்கியவரை, தழிக்கொண்டு - கட்டித்தழுவிக்கொண்டு, அன்பு கூர்ந்தார் - அன்புமிகுதியாகச்செய்தார்கள்; (எ.று.)

புதிதாகக்கண் அருளப்பெறல் - ஞானக்கண்பெறுதல், திவ்ய நேத்திரம் பெறுதல். அம்பகம் - கண். கணவன் விழியிலானென்று அறிந்து பிறரெவரையும் பாராதவாறு பொற்பட்டத்தினால் காந்தாரி தன் கண்ணை மறைத்துக்கொண்டிருந்தனளாதலின், இப்போது கணவனாகிய திருதராட்டிரன் கண்பெறவே அவளும் தன் கண் பட்டத்தை நீக்கினாள் என்றார். மின் - உவமவாகுபெயர், நோக்கா - உடன்பாட்டெச்சம். உரியோர், பணிவார் -வினையாலணையும்பெயர், மூன்றாமடியில் உம்மைத்தொகை. (14)

**15. மன்னர்களும், பெண்டிரும், திருதராட்டிரனுடன் காந்தாரியும் சோபம் தீர்ந்து மகிழ்தல்.**

தந்தையுடன் மைந்தர்சகோ தரர்பற் சுற்றந்
தனைநோக்கி மகிழ்கூர்ந்தார் தரணிவேந்தர்
பைந்தொடிமார் புருடருடன் துணைவர் மைந்தர்
பலரையுங்கண் டிடரகன்று பரிவு கூர்ந்தார்

அந்தகன்றன் மனைவியுடன் சோபந் தீர்ந்தான்
ஆரியன்வீ டுமன்மைந்த ரவர்கள் மைந்தர்
சிந்துபதி சகுனிசல் லியன்மற் றுள்ள
தேயநிரு பரைநோக்கிச் சிறப்பி னம்மா.

(இ-ள்)தரணி வேந்தர் - பூமன்னர்கள், தந்தையுடன் - (தமது) தகப்பனுரோடு, மைந்தர் - புதல்வர்கள், சகோதரர் - உடன்பிறந்தோர், பல் சுற்றம்தனை - (இன்னமுள்ள)பலசுற்றத்தவர் இவர்களை, நோக்கி - (தமதுகண்களால்) பார்த்து, மகிழ் கூர்ந்தார் - சந்தோஷமடைந்தார்கள் : பைந்தொடிமார் - பசியவளையலையணிந்திருந்த பெண்டிர், புருடருடன் - (தமது)கணவருடன், துணைவர் - தம்பியர், மைந்தர் - புதல்வர்கள், பலரையும் கண்டு - (இன்னமுள்ள)பல சுற்றத்தவர்களையும் பார்த்து, இடர் அகன்று - சோபம் நீங்கி, பரிவு கூர்ந்தார் - அன்பு மிகுந்தார்கள் : அந்தகன் - திருதராட்டிரன், தன் மனைவியுடன் - காந்தாரியுடன், ஆரியன் - துரோணசாரியன், வீடுமன் - பீஷ்மன், மைந்தர் - துரியோதனுதியர், அவர்கள் மைந்தர் - அவர்களுடைய பிள்ளைகள், சிந்துபதி - சயத்திரதன், சகுனி - (மாமன்)சகுனி, சல்லியன்—, மற்றுள்ள தேய நிருபரை - மேலுமுள்ள பலதேசமன்னர்கள் இவர்களை, சிறப்பின் நோக்கி - இன்பத்தோடு பார்த்து, சோபம் தீர்ந்தான் - துக்கம் நீங்கினுன்; (எ.று.) அம்மா - ஈற்றசை : வியப்புமாம்.

இச்செய்யுளில், அந்தகன் சோபந் தீர்ந்தான் எனவந்திருத்தலால், இதனை இச்சருக்கத்திற்கு உயிர்நிலைச்செய்யுள் எனலாம். தரணிவேந்தர் மகிழ்கூர்ந்தார், பைந்தொடிமார் பரிவு கூர்ந்தார், அந்தகன் சோபம் தீர்ந்தான் என்ருர். இதனுல் திருதராட்டிரன் காந்தாரியிவர்களோடு ஒருசேரப் பூவேந்தர்களும் பெண்டிரும் சோபம் தீர்ந்தமை கூறியபடி, [தருமன் குந்திமுதலானோர் சோபந் தீர்ந்தமை அடுத்த செய்யுளிற் கூறப்படும்] சிறப்பின்நோக்கி என மாறுக. சிறப்பு - இன்பம் : (Happiness)"காதலர் செய்யுஞ்சிறப்பு (குறள் : 121-8)பைந்தொடிமார் - துரியோதனுதியர் மனைவியர் : திருதராட்டிரன் மருகியர். (15)

**16. பாண்டவர்களும் குந்தியும் அவரைச்சேர்ந்த பெண்டிரும் அனைவரையும் கண்டு சோபந்தீர்ந்து மிக மகிழ்தல்.**

பாண்டவருந் தாயுமவர் மாதர் யாரும்
பரிதிமக னபிமன்முதற் பாலர்க் காகப்
பூண்டபெருஞ் சோபமகன் ருசான் கங்கை
புத்திரனூற் றுவர்மற்றும் புகுந்து ளாரைக்
காண்டுவகை கடற்படிந்தார் இந்த வண்ணங்
களித்தெவரு மகிழ்ந்திருக்குங் காலை யாங்கே
ஈண்டுமவர் மீண்டுமிடம் புகுவா னெண்ணி
இரதகய குரகதமே லெய்தும் போது.

(இ-ள்) பாண்டவரும் - பாண்டவரைவரும், தாயும் - குந்தி தேவியும், அவர் மாதர் யாரும் - அவரைச் சேர்ந்த பெண்டிர் அனைவரும், பரிதிமகன் - சூரியகுமாரனாகிய கர்ணன், அபிமன் முதல் பாலர்க்காக - அபிமன்யு முதலான சிறுவர்களுக்காக, பூண்ட - கொண்டிருந்த பெரும் சோபம் அகன்று - பெருத்த துக்கம் நீங்கி, ஆசான் - துரோணன், கங்கை புத்திரன் - வீடுமன், நூற்றுவர் - துரியோதனாதியர் நூறுபேர், மற்றும் புகுந்துளாரை - மேலும் வந்துள்ளவர்களை, காண்டு - பார்த்து, உவகை கடல் படிந்தார் - மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்கள்: இந்த வண்ணம் - இந்தப்படி, களித்து - விளையாட்டாகச் செருக்குற்று, எவரும் மகிழ்ந்திருக்கும் காலை - எல்லாரும் சந்தோஷித்திருக்கும் பொழுது, ஆங்கே - அப் பூஞ்சோலையிடத்து, ஈண்டுமவர் - திரண்டு கூடிய அந்த மரித்தோர், மீண்டும் - மறுபடியும் திரும்பி, இடம் புகுவான் எண்ணி - தமது விண்ணிடத்துப் போகும்படி நினைத்து, இரதம் கயம் குரகதம் மேல் - தேர், யானை, குதிரை முதலிய வாகனங்களின் மீது, எய்தும் போது - ஏறியிருக்கும் பொழுது; (எ.று) ......மாதர் அருட்செய் யென்ன'' என மேற்கவியிற்றொடரும்.

குந்தி கர்ணனைக் கண்டும், சுபத்திரை திரௌபதி முதலானோர் அபிமன்யு உபபாண்டவர் போன்ற மைந்தர்களைக் கண்டும் பாண்டவரோடு ஒரு சேரச் சோபம் நீங்கி மகிழ்ந்தனர் என்க. மற்றும் ஆசான் முதலாகப் புகுந்துளாரைக் கண்டும் மகிழ்ந்தனர் என்க.

காண்டு - கண்டு என்பதன் நீட்டல் விகாரம்: மோனைக்காக நீண்டது. உவகைக் கடல் - உருவகம். புகுந்துளார், ஈண்டுமவர் - வினையாலணையும்பெயர் ஈண்டுமவர் மீண்டுமிடம் - பிராசம். புகுவான் - வினையெச்சம். இரதகயதுரகதம் (ரதகஜதுரகம்) - உம்மைத்தொகை. (16)

**17. கணவனையிழந்த அரசமகளிர் அனைவரும் [வியாசனருளால் கங்கைநீரிற்பிரவேசித்து மானிடசரீரத்தை விட்டுத் தத்தம் கணவன்மார்களுடைய உலகங்களையடைதல்.**

அன்பர்செலப் பிரிவாற்ரு மாதர் வியாத
னடிபணிந்தியா முடன்போத வருட்செய் யென்ன
துன்புடன்மந் தாகினிதோய்ந் தகற்றிச் செல்வான்
தூயனரு ளிடவந்நீர் துளைந்து மெய்விட்
டின்பருணு யகருடன்வான் புகுந்தார் மாதர்
இஃதுதவத் தவரிலெவ ரியற்ற வல்லர்
பொன்பயில்மார் பரியிவனென் றுரைக்கும் பான்மை
புரையுமெனச் சுரர்முனியைப் புகழ்ந்தா ரம்மா.

(இ-ள்) அன்பர் செல - கணவன்மார் (வாகனங்களில்) போக, பிரிவாற்ரு - (அவர்களினின்று) பிரிந்திருத்தலையாற்ருத, மாதர் - அரசமகளிர், வியாதன் அடி பணிந்து-வியாச முனிவனின் பாதங்களை வணங்கி, யாம் - நாங்களும், உடன்போத - எங்கள் கணவனுடன் [அவருலகம்] போக, அருள்செய் என்ன - கிருபை பண்ணுவீராக என்று பிரார்த்திக்க, துன்புடன் - துயருடத்துடன், மந்தாகினி தோய்ந்து - கங்கையில் மூழ்கி, அகற்றி - (சரீரத்தை உதறி) நீக்கி, செல்வான் - (கணவன்மாருடன்) போகும் பொருட்டு, தூயன் - வியாசன், அருளிட - சொல்லிட, (அவர் சொற்படியே) அ நீர் துளைந்து - அந்தக் கங்கை நீரில் படிந்து, மெய்விட்டு - சரீரத்தை விடுத்து, இன்பு அருள் நாயகருடன் - (தமக்கு) இன்பத்தைக் கொடுக்கும் கணவருடன், மாதர் - பெண்டிர், வான் புகுந்தார் – [அவரவர் கணவன்மார்களுடைய] உலகத்தையடைந்தார்கள்: இஃது - இத்தகைய செயற்கரிய செயலை, தவத்தவரில் - தவமுனிவர்களில், எவர் இயற்ற வல்லர் - (வியாசரைத் தவிர) வேறு எவர் செய்ய வல்லமையுடையவர்? (வேறு ஒரு முனிவருமிலர்): [ஆகவே]

சுரர் - தேவர்கள், 'பொன் பயில் மார்பு - இலக்குமிதேவி வாழும் மார்பினையுடைய, அரி - விஷ்ணுவாவன், இவன் - இந்த வியாசன், என்று—, உரைக்கும் பான்மை - புகழ்ந்து சொல்லும் தகுதி, புரையும் என - பொருந்தும்' என்று, முனியை - வியாசரை, புகழ்ந்தார்- கொண்டாடினார்கள்; (எ.று.) அம்மா - ஈற்றசை: வியப்புமாம்.

''வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே'' என்றது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம். 'பொன் பயில்மார்பு அரி' என்றவிடத்து, ''அலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா'' (திருவாய்: 6-10-10) என்ற நம்மாழ்வார் வாக்கு அநுசந்திக்கவும். புரைதல் - பொருந்துதல்: ''புறத்தோ ராங்கட் புரைவ தென்ப'' (தொல் : பொருளதி : கற்பியல், 35), செல்வான்- வினையெச்சம். அருட்செய் - முன்னிலை வியங்கோள். (17)

[குறிப்பு:- இந்தச் செய்யுளோடு கிடைத்த சுவடி ஏடுகள் முடிவடைகின்றன. மேலும் செய்யுட்கள் இருந்திருப்பதாகத் தெரிகின்றன] இந்த மகாபாரதச் சுருக்க நூல் பெரும்பாலும் கதைப் போக்கில் நல்லாப்பிள்ளை பாரதத்தைத் தழுவியிருப்பதாலே, இனி, இச்சருக்கத்து மேல் வரும் கதை நிகழ்ச்சியினை நல்லாப் பிள்ளைபாரதத்தினையொட்டி உரைநடையில் சுருங்கக் கூறுவேன்.

வியாசன் திருதராட்டிரனுக்கு ஆசி கூறி, குந்தி காந்தாரியிவர்களுக்கு இனிமை பேசி, பாண்டவர்க்குக் கருணை நல்கித் தனது இருக்கை மீண்டான்.

வியாசன் அகன்ற பின்னர் அனைவரும் முன்னரிருந்த ஆசிரமம் வந்தனர். திருதராட்டிரன் முன்போல் தவத்தை மேற்கொண்டிருந்தான். பின்னர் ஒருநாள் தருமன் முதலானோரை நோக்கித் திருதராட்டிரன் ''நீங்கள் அத்தினபுரியினின்று வந்து ஒரு மாதம் ஆகின்றது: ஆதலின், பார் புரந்திடக் கடிதின் மீளுக'' என்று பணிக்க, தருமன் 'இங்கேயேயிருந்து யான் வழிபாடு செய்வேன்' என்ன, திருதராட்டிரன் அறிவுறுத்தி ''நீ அத்தினபுரி சேறலே அழகு'' என்றான். பின்னர், குந்திகாந்தாரியும் அங்ஙனமே சொல்ல, தருமன் பிரியா விடைபெற்றுத் தம்பியரோடும் பாவையரோடும் பதாதியோடும் மீண்டு வந்து அத்தினபுரியைச் சார்ந்தான் என்பது].

புத்திரசோபந் தீர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஐந்தாவது

# திருதராட்டிரன் காந்தாரி குந்தி முத்திபெற்ற சருக்கம்

மூவரும் முத்திபெற்றதைக் கூறும் சருக்கம் என விரியும், முத்திபெற்ற - இரண்டனுருபு தொக்கது.

இந்தச் சருக்கத்துக் கதைச்சுருக்கம் நல்லாப்பிள்ளை பாரதத் தினையொட்டி உரைநடையில் பின்வருமாறு;—

கிருபனும் யுயுத்ஸுவும் சேனையும் நிருபரும் தருமன் முதலியோரை எதிர்கொண்டனர்; தருமன் பெண்டிரை அரண்மனையில் உய்த்து தான் தன் இருப்பிடம் சேர்ந்தான். அப்போது நாரதன் அங்கு வர, தருமன் அவரையுபசரித்து ஆதனமளித்துப்போற்றினான், பிறகு நாரதன் ''உன்தந்தைதிருதராட்டிரனும் தாய்குந்தியும் காந்தாரியும் செய்யும் தவத்தினில் நிகழ்ந்த தன்மையைச் சொல்ல வந்தேன்'' என்றான். தருமன் 'அத் தவத்தினர் க்ஷேமமா' என்று வினவ, நாரதன் கூறலாயினான்.

திருதராட்டிரன் சதயூபாசிரமவனம் விடுத்து வேற்றிடம் எய்தினான். அவன் சிலபகல் சருகும், பிறகு சருகுநீத்து நீரும், பிறகுஉண்டியை அற நீக்கியேயிருந்தான். குந்தி மாதத்திற்கு ஒரு முறை கையால் நீர்முகந்து அருந்தலானாள். காந்தாரியும் அங்ஙனமே. இவ்வணம் கடுந்தவமியற்றிக் கங்காத்துவாரம்எய்தி, கானில்சேர்ந்து இருந்தபோது, காட்டுத்தீப்பற்றிக்காற்றினால் பரவி மூவரையும் மூடிக்கொண்டது. திருதராட்டிரன் 'நமக்கு உடல்வீழ் தினம் இன்று வந்துவிட்டது, ஆகையால் இத்தீயை வணங்கிக் கிழக்குநோக்கியிருமின்: வியாசனை அடியிறைஞ்சி நினைமின் என்றான்: மேலும் சஞ்சயனை அனலினின்று போகச்சொல்ல, அவன் இமயமலையையடைந்தான். திருதராட்டிரன் குந்தி காந்தாரி ஆகிய மூவரும் தீக்கிரையாயினர். அங்குள்ள வேதியர் அவர்களது புனிதயாக்கையை முச்செகம் உணர்தரத் தீமூருக்கினர் என்று நாரதன் தான் கண்டுவந்ததைச் சொன்னான்.

கேட்ட பாண்டவர்கள் பலபடப் புலம்பி மறுகலுற்றனர். ''தவத்தில் தழல்மாய்ப்பப் புரண்டு மேனி கொத்தி யலகினிற்பருந்து விருந்துண்ணக் கிடந்தனையோ! காரிருந்த காட்டகத்தில் தனிக் கிடந்து விண் கலந்தாயோ! ''யாரிருந்தும் செய்தவினை தன்னை

விடாது'' என்ற உண்மையையுணர்ந்தேன். எம்மையழைத்து நாடளித்துக் கவலை நீக்கி, மேன்மையும் பெருவாழ்வும் அளித்தீர். அப்படிப்பட்ட உம்மைக் காட்டில் தனியே கைவிட்டு, இங்குக் கூடி யின்பமாய் உயிர் வாழ்கின்றோம். நீர் வீடடைதலைக் கேட்ட பின்னும் உயிர்பிழைத்திருக்கின்றோமே. என்ன இரும்பு நெஞ்சோ! என்று தருமன் முதலானோர் வருந்தினர்.

பின்னர் காந்தாரியையெண்ணி, ''கண்ணைப் பொற்பட்டத் தால் மறைத்த கற்புடையோய்! தழலோன் வெருவாமல் நண்ணி யெரித்தனன் கொல்லோ, அவனுடலம் வேவாத நலமென்னேயோ!'' என்று அரற்றினர்.

பிறகு குந்தியை நினைந்து, ''காண்டவ வனத்தைப் பசிக்குண வாக அளித்த காளையை (அருச்சுனனை) ஈன்றவள் என்று கரு தாது அவளையெரித்தபடியென்னே! எரி எதிர்மேவுறும் போது எத்தகை சிந்தித்தாயோ? இந்திரனுக்குக் கவச குண்டலங்களையீந்த கர்ணனைப் பெற்றவளென்று உன்னை இமையோர் எதிர் கொண் டாரோ? உன்னைப் பாண்டுவாகிய எமது தந்தையொடு கூட்டினரோ? ஏதிலர் போன்று அருங்கானில் அகன்று நீங்கள் மாள, புத்திரராகிய யாம் இருந்து புலம்புகின்றோம் என்று இவ் வாருகப் புரண்டு அழுது அரற்ற, மாதர் எலாம் மொய்த்து அழு தனர்.

இப்படியிருப்ப, நாரதமுனிவன் தருமனையெடுத்தணைத்து நறு நீர் வீசி, ''உலகியற்கை யிது: இதனையுணராத பரிசொன்றுண்டோ? ஆகவே, நீ தம்பியரோடு இனி அவர்களுக்கு உத்தரக்கிரியை செய்யக் கங்கைபால் விரைந்தேகு'' என்ன, அங்ஙனமே பன்னி ரண்டு தினங்கள் கடன்முறை தப்பாது செய்தனர். மறுதினம் பசுக்கள், ஆடைகள், பூண்கள், மாமணிகள், ஆடகங்கள் இவைகளை முனிவரர்க்கும் பூசுரர்க்கும் வழங்கி, அமுது நுகர் வித்தனர். பிறகு பல தேய மன்னரும் வந்து 'பிதுர்க்கடன்கள் இவ்வகை செய்தவர் உலகில் இலர்'' எனத் தருமனைப் பாராட்டி மகிழ்வித்தனர். இவற்றையெல்லாம் கண்டிருந்த நாரதன் தருமனுக்கும் பிறர்க்கும் ஆசி கூறி வழிக்கொண்டான். தருமன் அரசு புரிந்திருந்தான்.

திருதராட்டிரன் காந்தாரி குந்தி முக்திபெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆசிரம வாச பருவம் முற்றிற்று.

பதினறுவது

# மௌசல பருவம்.

பிராம்மணசாபத்தால தூண்டப்பட்டு விருஷ்ணிகள் (யாதவ வமிசத்தினர்) அனைவரும் (பலராமகிருஷ்ணர்களைத்தவிர) பிரபாஸ க்ஷேத்திரத்தில் ஒருவரையொருவர் எதிர்த்து உலக்கையாலடித்துக் கொண்டு மிச்சமின்றி மாண்டதைக்கூறும் பருவமாகும் **இது.** முசலம் - உலக்கை ; (club)முசலாயுதத்தாற் செய்யும்போர் **மௌஸலம் ; தத்திதாந்தநாமம்.** **(குறிப்பு :-**அந்தகர்கள் என்பவரும் யாதவவமிசத்தினராதலின், அவர்களும் சாபத்தால் உலக்கையாலடித்துக்கொண்டு, மாள்கின்றனர்)

இந்தப்பருவம் நல்லாப்பிள்ளை பாரதத்தின்படி இரண்டுசருக்கங்களைக்கொண்டுள்ளது (1) கிருட்டிணபலராமநிரியாணசருக்கம், (2) அருச்சுனன் துவரைபோய் மீண்ட சருக்கம் என்பன, அச்சருக்கங்களிற் கூறப்பட்டுள்ள விஷயம் உரைநடையில் சுருக்கமாகக்கொடுக்கப்படும்.

முதலாவது

## கிருட்டிணபலராம நிரியாண சருக்கம்.

கிருஷ்ணனும் பலராமனும் மோட்சமமைந்ததைக்கூறும் சருக்கம். [நிரியாணம் - மரணம், மோட்சம்.] பலராமன் சேஷனாகி (நாகமாகிக்) கடலிற்சென்றார், கிருஷ்ணன் சரீரத்தை விடுவதற்கு யோகத்தோடு படுத்ததும், ஜரன் என்னும் வேடன் மிருகமென்றெண்ணி அவரையடித்துப் பச்சாத்தாபப்பட அவர் அவனுக்கு முத்திகொடுத்துத்தாமும் பரமபதம் அடைந்தார், இனி, இச்சருக்கத்தின் உரைநடைச்சுருக்கம் பெரும்பாலும் நல்லாப்பிள்ளைபாரதத்தைழுவி வருமாறு-:

தருமன் முடிபுனைந்து முப்பத்தாறு வருடங்கள் சென்றன, அதன்பின் கிருஷ்ணன்சரிதம் பின்வருமாறு - துவாரகையில்

பலராமன் வசுதேவர் தேவகி மைந்தர்மாதர் இவர்களோடு கிருஷ்ணன் விளங்கும் நாளில், ஒருநாள் விசுவாமித்திரர், நாரதர், கண்வர் முதலான இருடிகள் துவாரகையடைந்தனர். அப்போது விதிவசத்திற்பட்டு, யாதவர்கள் சாம்பன் என்பவனை ஸ்திரீயைப் போல் அலங்கரித்து, அவர்கள்முன் கொண்டுவந்து, "இவள் பப்ருவாஹனன் மனைவி: இவள் எதைப்பெறுவாள்" என்று கேட்க, இந்தத் துராத்மாக்களால் அவமதிக்கப்பட்ட முனிவர்கள் சீற்றங்கொண்டு "சாம்பன் வயிற்றில் உலக்கை (முசலம்)பிறக்கும்: அது யாதவ குலமுழுவதையும் அழித்துவிடும்: பலராமனும் கிருஷ்ணனும் தவிர மற்றுளோர் அனைவரும் உயிர்மடிவர், பலராமன் ஆதிசேஷனாதலின் நாகமாகிக்கடலில் ஒளிப்பன்: கிருஷ்ணன் வேடுவன்கணையால் உடற்சுமைநீங்குவன் என்று சாபமிட்டனர்: அதன்படியே சாம்பன் வயிற்றில் முசலம் உதித்தது. இதனைக் கேட்டவுடன் யாதவகுலமெலாம் கலங்கியேங்கி, வசுதேவரிடம் முறையிட, அவர் அதனைப்பொடிசெய்து கடலிற்போடும்படி கட்டளை பிறப்பித்தார்: அதன்படியே அந்த முசலத்தைப்பொடி யாக்கிக் கடலிற்சேர்த்தனர்.

இஃது இங்ஙனாக, யாதவர்க்கெலாம் பற்பல உற்பாதங்கள் தோன்றின. கிருஷ்ணன் முன்னம் காந்தாரி சபித்தசெயலை இப்போது மனங்கொண்டான். அதனை உண்மையாக்க விரும்பி, யாதவர்களைத் தீர்த்தயாத்திரை செய்ய முரசறைவித்தான்: அன்றிரவு கனவில் கருமை நிறமுள்ளவளும் வெள்ளிய பற்களை யுடையவளுமான ஒரு ஸ்திரீ நகைத்துக் கொண்டு இரவில் துவார கையில் பிரவேசித்து, மாதர்களின் மங்கலநாண்களைத் திருடிக் கொண்டு ஓடினாள்: அரக்கர்கள் வேந்தரது நவமணிப்பூண் குடை கொடிகள் இவற்றையும் அபகரித்தனர். கிருஷ்ணனுடைய சக்கரம் விருஷ்ணிகளின் கண்ணெதிரில் ஆகாயம் சென்றது. கருடக்கொடியும் பனைக்கொடியும் மேலெழுந்து போயின. கிருஷ்ணனது தேர் வானடைய, மற்றொரு தேரைத் தாருகன் கொணர, அதிலேறித் துவாரகை கடந்து சென்றான்: பலராமனும் வாகனமும் படையுமிலாது நடந்தான்: யாவரும் கடற்கரையை யடைய வண்டிகளில் தசையும் கள்ளும் (மதுவும்) கொண்டு சென்றனர். அங்குத் தெய்வத்திற்கு அவைகளை நைவேத்தியம் செய்து, ஆடவரும் பெண்டிரும் விழா நடத்தலானார்.

பலராமன் பொழுது புலர்வதற்குமுன் எழுந்து, உத்தவர் தவஞ்செய்தலை நோக்கப்போய், ஒரு மரத்தடியின் கீழ்ப் பதுமாசன மிட்டு, பிராணாயாமநெறிமருவச் சமாதியடைந்திருந்தான். அப்

போது யாதவர்கள் கள்ளுண்டு களித்து கன்று சினங் கண்மேற் கதுவப் பொள்ளென்றிரைத்துப் பலபேசிக் கொடும்போர் புரி வதற்குப் புகுந்தார்கள்.

சாத்தகி கிருதவன்மனை இகழ்ந்தான்: "நீ அசுவத்தாமனோடு கூடி பாடிவீடு புகுந்து, தூங்கும் சிறுவர்களான உபபாண்டவரை யும் பிறரையும் உயிர்கொண்ட கொடியோன் இத்தகைய செயலை நீசரும் செய்யார்" என்றான். அதற்கு எதிராகக் கிருதவன்மாவும் சாத்தகியை நோக்கி, "நீ மட்டுமென்ன: அருச்சுனன் பூரிசிரவாவின் கையை வெட்டிய பின்பு அவன் தலையைக் கொய்து உயிர் தப்பினாய்: அதை மறந்துவிட்டு என்னை இகழ்கின்றாயோ" என எடுத்து எதிருரைத்தான். அது கண்டு, உருக்குமிணியின் குமாரனான பிரத்யும்நன் கோபங் கொண்டு தீமைபலபேசி, சாத் தகிக்கு உதவி செய்தான்: நிகழ்ந்த சண்டையில் கிருதவன்மன் மடிந்தான். பிறகு சாத்தகியும் பிரத்யும்நனும் எதிரிகளாகிய போஜர்கள் அந்தகர்கள் ஆகிய யாதவர்களால் கொல்லப்பட்டதைக் கண்டு கிருஷ்ணன் கோபங்கொண்டு கடற்கரையில் காடுபோல் முளைத்துள்ள கோரைகளை (ஏரகங்களை)ப் பிடுங்கிக் கொண்டு கையினாலே ஒருவர்மேலொருவர் அடித்துக் கொள்ளச் செய்தனர்: அந்தக் கோரைகள் அப்பொழுது வஜ்ராயுதம்போல் காணப்பட்டது. மற்றும் அவை உலக்கையாகக் காணப்பட்டது. அங்ஙனமானது பிராம்மண சாபத்தாலாகும். அந்தக் கோரைப்புல்லைச் சுழற்றிச் சுழற்றி ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். தந்தை தமையன் தனது தம்பி மாமன் மைந்தன் என்ற உறவு முறை ஒன்றும் பாராமல் எல்லோரும் அடித்துக் கொண்டு மாய்ந்தனர். இதனைப் பார்த்துக்கொண்டு அகலநின்ற கிருஷ்ணன் தேரோட்டும் தாருகனையழைத்து "நீ அத்தினபுரிசென்று அருச்சுனனிடம் இச்செய்தியைக்கூறி அழைத்து வா" என்றான். மற்றும் பப்ரு (அப்புரு) என்பவனைப் பெண்டிரைப் பத்திரமாக நகரிற் சேர்க்கப் பணிக்க, அப்படியே அவன் போகும்போது ஒரு வேடன் ஒரு கோரையைக் கணையாக எடுத்து அவன் மார்பில் எய்ய அவன் மாய்ந்தான்.

பிறகு கிருஷ்ணன் துவாரகை சேர்ந்து தந்தை தாயரை வணங்கி அவர்களுக்கு நிகழ்ந்தவையனைத்தும் மாறாமல் சொன்னான். பின்பு, பலராமனிடம் சேர்ந்து தவஞ்செய்வேன் என்றான். மற்றும் தந்தையினிடம் தான் தாருகனை அத்தினபுரம் அனுப்பியுள்ள தையும், அவன் அருச்சுனனை அழைத்து வருவதையும் கூறி,

அந்த அருச்சுனனோடு வசுதேவரையும் நகரைக் காத்திடுமாறு புகன்றான் அது கேட்டு வசுதேவர் கண்ணீர் விட்டு 'நீயும் பலராமனும் தவத்தை மேற்கொண்டால், பின்னர் நான் உலகில் பெறும் பேறு என்னோ' என்றான். பிறகு கிருஷ்ணன் மாதர் அனைவரையும் நகரிற் சேர்த்துப்பின் பலராமன் நின்றவிடம் போயடைந்தான். அப்பொழுது அந்தக் கிருஷ்ணனெதிரில் பலராமன் நாகமாக உருமாறிப் பாதலத்தில் புகுந்தான். [பலராமன் ஆதிசேஷனவதாரமாவன்]

இறுதியாக, கிருஷ்ணன் காட்டகத்திற் சென்று அங்கு ஒரு மரத்தின் நிழலில் புலன்களையடக்கி, யோகத்திலிருந்து தன் பாதங்களை நீட்டித் தேகத்தை விட நினைத்திருப்ப, அப்பொழுது ஒரு வேடன் (ஜரன் என்பவன்) ஒரு கணை போக்க அது அவன் உள்ளங்காலில் உருவிப்போயிற்று. வேடன் தான் அம்பால் எய்தது ஒரு மனிதனை எனவறிந்து, கிருஷ்ணன் காலில் விழுந்து வணங்கினான். அவனுக்கும் பெரும்பதம் அளித்துத்தன் பேரொளியாகிய பரமபதத்திற் சேர்ந்தான். பதினெண் தேவகணங்களும், துவாதசாதித்தர் ஏகாதசருத்ரர் அஷ்ட வசுக்கள் முதலானவர்களும் அங்கு அடைந்து தொழுது கைகூப்பித் துதித்தார்கள். இந்திரன், பிரமன் முதலானவர்கள் தொழுதிறைஞ்சிக் கிருஷ்ணனை ஏத்தினர். வானவர்கள் பூமழை பொழிந்தனர். ஞான முனிவர் கணம் நான்மறையால் வாழ்த்தினர். அப்பொழுது கிருஷ்ணன் சிம்மாசனத்தில் இனிதிருந்தான்.

இந்தக் கதையை யார் சொன்னாலும் பாவம் நீங்கிப் பரமபதமெய்துவர்.

கிருட்டிண பலராம நிரியாண சருக்கம் முற்றிற்று.

### இரண்டாவது

# அருச்சுனன் துவரைபோய் மீண்ட சருக்கம்

தாருகன் அத்தினபுரம்வந்து அரசவையில் ''யாதவரனைவரும் மதுவினையருந்தி, வாட்கோரையைக்கையிற்கொண்டு ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு இறந்துபோயினர்: பலராமனும் கிருஷ்ணனும் மாத்திரம் துவாரகையைவிட்டு ஒருமரநிழலில் தவம் புரிந்துஇருந்தனர்: அப்போது கிருஷ்ணன் என்னிடம் இந்தச் செய்தியைச் சொல்லி அருச்சுனனை உடனே அழைத்துவரச் சொன்னான்'' என்று கூறினான். இதனைக் கேட்டவுடன் அந்தப் புரத்தில் இருந்த பெண்டிர் கடல்போல் அரற்றினர். அருச்சுனன் அவர்களைத்தேற்றுவித்து ஆங்குத்தன்னைமறந்து, பின்பு தெளிந்து தருமனிடம் விடைபெற்று, விரைவாகத் தேரில்ஏறித் துவாரகையை யடைந்தான். உடனே வசுதேவனின் அரண்மனைக்குச்சென்றான். அவனை வணங்கிநிற்ப வசுதேவன் அருச்சுனனைத் தழுவிக் கண்ணீர் பெருக்கித் தரையில் சாய்ந்தான். அருச்சுனன் அவனைத் தன் இருகைகளால் ஏந்தித்தேறுதல் கூறினான்; விதியை யார் கடக்கவல்லோர் என்றான். அப்போது வசுதேவன் ''பரீட்சித்துக்கு உயிர்கொடுத்த கிருஷ்ணன் இப்போது உயிர்நீத்தவர்க்கு உயிர் கொடுத்தல் அரிதோ? அவன் மனத்திற்கொண்ட சங்கற்பம் இந்த யாதவரனைவரும் ஒழியவேண்டும் என்று இருத்தலால் நாம் என் செய்வது'' என்றுசொல்லி வருந்த, அருச்சுனன் ''காந்தாரியின் சாபமும் முனிவர்களின் சாபமும் விலக்குதற்கு அரியனவாதலால், ஒருகால் போரை நீக்கியிருந்தாலும், இந்த யாதவர்கள் இருப் பரோ? அனைவரும் மடிந்தேதீர்வர்'' என்று கூறி வசுதேவனை யாற்றுவித்தான். பிறகு வசுதேவன் அருச்சுனனை நோக்கி கிருஷ்ணன் தான் பலராமனோடு தவஞ்செய்யப் போவதாகவும் துவாரகைக்குத் திரும்பி வரமாட்டேனென்பதாகவும் கூறி, மேலும் நீ இங்கு விரைவில் வருவாய்: உன்னோடு சேர்ந்து என்னை இந்த நிலத்தைக் காக்குமாறு சொன்னான். மற்றும் இறந்த யாதவரனைவர்க்கும் ஈமக்கடன்களைச் செய்யச் சொன்னான். இன்னும் ஏழு நாள் தான் துவாரகை யிருக்கும்: அதன்பின் அது கடலுக்கிரையாகி மூழ்கிப் போகும்: உயிரோடுள்ள பெண்டிரனை

வரையும் காக்க வேண்டும் என்றும் சொன்னான்'' என்று கூறி முடித்தார். இவற்றைக் கேட்ட அருச்சுனன், ''கிருஷ்ணனை விட்டு நான் தரிப்பனோ? தருமன் முதலானோரை விட்டு என்னால் இருக்க முடியாது. ஆகவே, எல்லாப் பெண்டிரையும் அழைத்துக் கொண்டு நீங்கள் அனைவரும் இந்திரப்பிரத்தம் வந்து விடுங்கள்'' என்று சொல்லித் தூதுவரைப் போக்கி நால்வருணத்தாரையும் கூட்டி, அவர்களிடம் 'இன்னும் ஏழுதினத்தில் துவாரகை கடலில் முழுகிப் போகும்; ஆகவே உங்கள் எல்லோரையும் இந்திரப்பிரத்தம் சேர்ப்பேன், வாருங்கள்; கிருஷ்ணனின் கொள் பேரன் வஜ்ரனை அங்கு அரசனாக்குவேன்: நீங்கள் அனைவரும் வாகனங்களிலும் கால்நடையாகவும் வாருங்கள்'' என்றான். அருச்சுனன் சொற்படியே எல்லோரும் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கிளம்பலாயினர். இங்ஙனாக, அன்று இரவு வசுதேவன் யோகத்தினால் மரணமெய்த, அந்த அரண்மனையில் அழுகையொலி கடலோசைபோலெழுந்தது. இதனையறிந்த அருச்சுனன் ஓடிப் போய் பெண்டிரின் ஓலத்தை ஒருவாறு நீக்கினான். பிறகு அருச்சுனன் வஜ்ரனைக் கொண்டு வசுதேவனுக்கு அந்திமக்கிரியைகளைச் செய்தான். மனைவியராகிய தேவகி, ரோஹிணி, பத்ரையும் மதிரையும் பார்த்தாவோடு உடன்கட்டையேறினர். இறந்தவர்க்கெல்லாம் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யச் செலுத்துவித்த பின் அருச்சுனன் கிருஷ்ணனைத் தேடிக்கொண்டு அவனிருக்குமிடம் வந்தான். ஜரன் என்னும் வேடன் கணையெய்ததால் உயிரொடுங்கிய கிருஷ்ணனைக் கண்டு கதற, அனைவரும் அவனது மார்பின் மேலும் காலிலும் வீழ்ந்து அரற்றினர். அர்ச்சுனன் கிருஷ்ணனது உள்ளங்காலில் அம்புபட்டதைக் கண்டு, இது துர்வாசமுனி சாபத்தால் ஏற்பட்டது என்று கூறினான்: பின்னர் அருச்சுனன் செய்ய வேண்டிய கடன்முறையெல்லாம் வஜ்ரனைக் கொண்டு செய்வித்தான். [**குறிப்பு:** கிருஷ்ணன் மகன் பிரத்யும்நன்: பிரத்யும்நன் மகன் அநிருத்தன்: அநிருத்தன் மகன் வஜ்ரன்].

பின்னர் பலரும் தங்களுடைய நிதிகளையும் பலபண்டங்களையும் துணிமணிகளையும், வண்டிகளிலும் ஒட்டகங்களின்மேலும் ஏற்றிக் கொண்டு, தாங்கள் யானைகுதிரை தேர் இவற்றின்மீது ஏறித் துவாரகையினின்று இந்திரப்பிரத்தத்திற்குப் புறப்பட்டார்கள், அருச்சுனன் தன் கைவில்லோடு அவர்களைக் காத்துத் தேரினில் வந்தான். போகும்வழியில் இருள்வரப் பஞ்சநதத்தில் வசிப்பவர்களான வேடர்கள் தங்கள் கையில் வில்லம்புகளோடு கொள்ளை

யடிக்க வந்தனர். பெண்டிரின் நகைகளையும் நிதிகளையும் பறித்திடுதல் கண்டு அருச்சுனன் தன் காண்டீபத்தில் அம்புகளை வைத்துச் செலுத்தினான்; எனினும் அவை ஆற்றல் இழந்தன, மந்திரங்கள் பயன்படவில்லை, பிறகு வில்லையெடுத்து நாண் பூட்டவும் திறமையற்றவனானான்: வேடர்கள் பலவற்றையும் கொள்ளை கொண்டுபோயினர். அருச்சுனன் அவமானத்தோடு குருக்ஷேத்ரம் வந்து பின் தருமன் சம்மதத்தின்மேல் யாதவவம்சத்திற்குக் கர்த்தாக்களான குமாரர்களை ஆங்காங்கு ஸ்தாபனம் செய்தான். கிருதவர்மன் மகனை மிருத்திகாவதம் என்னும் நகரத்திலும், அசுவபதியைக் காண்டவவனமென்னும் அந்த ராஜ்யத்திலும், சாத்தகியின் மகனாகிய யுயுதானனை சரசுவதிநதிக் கரையிலும் ஸ்தாபனம் செய்தான், பின்னர் அர்ச்சுனன் வஜ்ரனுக்கு இந்திரப்பிரத்தத்தில் முடிசூட்டி ராஜ்யத்தைக் கொடுத்தான். உருக்குமிணி அனல்பாய்ந்து கிருஷ்ணனோடு சேர்ந்தாள். பலராமன் மனைவியரும் அனவிற் பாய்ந்து அவனைச்சேர்ந்தனர். அருச்சுனன் வியாசருடைய ஆச்ரமத்திற்குவர, அவர் ஒன்றும் அறியாதவர்போல 'ஏன்வாட்டமுற்றிருக்கிறாய்: எதற்காக இங்கு வந்தாய்' என்றுகேட்க, அருச்சுனன் யாதவவமிசம் அழிந்து போனதையும், பலராமனும் கண்ணனும் தவத்திலே உயிர் நீத்தமையையும், துவாரகையிலுள்ள மாதர்களை இந்திரப்பிரத்தத்திற்கு அழைத்து வந்தமையையும், வழியில் வேடுவரால் அவமானப்பட்டதையும் சொன்னான், வேடுவரோடு போரிடும்போது தன் ஆற்றல்குன்றியதையும், வில்லம்புகள் பயனிலவாயினமையையும் கூறி, எப்படியோ ஒரு விதமாக அவர்களை யெல்லாம் இந்திரப்பிரத்தத்திற் சேர்த்து விட்டுத் தான் செய்தி தெரிவிப்பதற்காக வந்ததாகக் கூறி, இறுதியாக, இனி தாங்கள் செய்யவேண்டியது யாது என்றும் வினவினான்.

அதற்கு, வியாசன், "தூய முனிவர்களின சாபத்தால் யாதவ வமிசம் அழிந்து போயிற்று. கிருஷ்ணனும் பூபாரந்தீர்க்க அவதரித்து, அது முடிந்தவுடன் பரமபதம் எய்தினான். உனக்கு வலி குறைந்ததற்குக் காரணம் என்னவெனில், உனது தனுமறைப் பொலிவு ஆற்றலெல்லாம் கிருஷ்ணனோடு அகன்றன. எனவே நீ இனி மயக்குறாதே: இனி, நீங்களும் அவனியாளும் கருத்துவிட்டு, ஐம்புலனையடக்கி, மாதவஞ்செய்யுங்கள்'' என்றான்: வியாசன் சொன்னதைக் கேட்டு அருச்சுனன் வருத்தம் தீர்ந்து மகிழ்ந்து

அவனைப் பணிந்து வணங்கி விடைகொண்டு அத்தினபுரம் வந்து தருமனிடம் சென்று, பலராமகிருஷ்ணர் இருவரும் பரமபதம் போனதன்மையும், வசுதேவர் இறந்தமையும், துவாரகையிலிருந்து மாதர்களை இந்திரப்பிரத்தத்திற்கு அழைத்து வந்தமையும் எடுத்துரைத்தான்.

அருச்சுனன் துவரைபோய் மீண்ட சருக்கம் முற்றிற்று.

மௌசல பருவம் முற்றிற்று.

பதினேழாவது

# மகாபிரத்தானிக பருவம்

இது மகாபிரஸ்தாந பருவம் என்றும் வழங்கப்படும். நல்லாப்பிள்ளை மகப்பிரத்தானிக பருவம் என்றார். மக என்பது 'மகத்' என்பதன் சுருக்கல் எனலாம். பிரஸ்தானம் - புறப்படுகை: Departure. மகாபிரஸ்தானம் - உயிர்நீத்துப் புறப்படுகை: மரணம்: Departing this life; death. பாண்டவர்களும் திரௌபதியும் அத்தின புரியை விட்டு மீண்டும் வாராமல் புறப்படுதல்.

இந்தப் பருவம் நல்லாப்பிள்ளை பாரதத்தின்படி இரண்டு சருக்கங்களைக் கொண்டது. அவையாவன - (1) பாண்டவர் துறவெய்திய சருக்கம். (2) உத்தரதிசையடைந்த சருக்கம் என்பன. அச்சருக்கங்களிற் கூறப்பட்டுள்ள விஷயம் உரைநடையில் சுருக்கமாகக் கொடுக்கப்படும்.

முதலாவது

# பாண்டவர் துறவெய்திய சருக்கம்

தருமன் தன் தம்பியர் நால்வரோடும் அரசு துறந்து மரவுரியுடுத்துத் துறவு பூண்டதைக் கூறும் சருக்கமாகும் இது. துறவாவது - இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறத்தலை மேற்கொள்ளல். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாய வழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும் என்றனர், வடநூற்றுறையும் தென்றிசைத்தமிழும் விதிமுறை பயின்ற நெறியறி புலவன் பரிமேலழகன்.

இனி, இச்சருக்கத்தின் உரைநடைச் சருக்கம் பெரும்பாலும் நல்லாப்பிள்ளை பாரதத்தைத் தழுவி வருமாறு:-

கிருஷ்ணன் பரமபதமடைந்ததைக் கேட்ட தருமன், இனி அவன் திருவடிமேற்காதலால் உயர் வடதிசை செல்வதே கருத்து என்றனன். அப்போது அருச்சுனன் வியாசன் சொன்னபடி தவஞ்செய்தலே தக்கது என்ன, ஐவர் சிந்தையும் ஒருமையின் அமையவே, திரௌபதியை நோக்கி அவள் கருத்தை வினவினர். அவள் உமது கருத்தே எனது என்னலும் 'அங்ஙனமேயாகுக' என்று அவளுக்குச் சொல்லி, பின் சுபத்திரையை நோக்கி இதனைச் சொல்லினர்:- ''உன் பேரனாகிய பரீட்சித்து அத்தினாபுரியில் கௌரவர்களுக்கு அரசனாவன்: யாதவர்களுள் மிச்சமான வஜ்ரன் இந்திரப்பிரத்தத்தில் அவர்களுக்கு அரசனாவன்: இருவரும் உன்னால் ரட்சிக்கப்படத்தக்கவர்கள்: அவர்களுக்குள் முரணிலாது தெருட்ட வேண்டியது உனது பொறுப்பு'' என்று சொல்லி அவளைத் துறவு பூணாது நிறுத்தினர். பின்னர் பரீட்சித்தைக் கிருபனிடம் சீடனாக வொப்படைத்து யுயுத்ஸுவை அமைச்சனாக்கினர். தருமன் பிறகு ஆதுலர்க்கு நிரம்ப நிதி வழங்கி, வேதியர்க்கு லக்ஷக்கணக்காகக் கொடுத்தார். பிறகு, எல்லா ஜனங்களிடம் விடைகொண்டு, மரவுரியுடுத்துப் புறப்படலானார். ஏனையோரும் திரௌபதியும் அங்ஙனமே மரவுரியுடுத்துக் கொண்டார்கள். அவ்வமயம் தருமனிடம் ஒரு வழக்கு வந்தது:- ஒருவன் தன் மனையை விலைக்கு விற்றான்: வாங்கியவன் அதை ஒரு இடத்தில் தோண்டும் போது ஒரு நிதிபுதையல் கிடைத்தது. அவன் அந்தப் புதையலைத் தனக்கு வீட்டை விற்றவனிடம் கொண்டு வந்து கொடுத்தான். அவன் வாங்க மறுத்து ''எப்போது நான் மனையை விற்று விட்டேனோ அப்போதே அதில் உள்ளவையனைத்தும் உனக்குச் சொந்தம்: எனவே, நீயே அதை எடுத்துக்கொள்'' என்றான். அதற்கு வாங்கியவன் ''மனைக்கு நான் சொந்தமேயன்றி, அந்தப் புதையலுக்குஉரியனல்லேன்'' என்றான்: தருமன் இந்த வழக்கை மறுநாள் விசாரிப்பதாக இருந்தான். மறுநாள் அவ்விருவரும் வந்து மாறிப் பேசினர்.வீட்டை வாங்கினவன் அதில் இருக்கின்ற புதையலும் எனக்குத் தான் சொந்தம் என வாதாடினான் : வீட்டை விற்றவன், ''நான் வீட்டை மட்டும் விற்றேனேயன்றி அதிலிருக்கும் புதையலை விற்கவில்லை. எனவே, அது 'எனக்கு உரியது' என்றான். நேற்று ஒரு விதமாகப் பேசி இன்று வேறு விதமாக மாறாடி வாது செய்வதைக் கண்ட சகதேவன் தருமனை நோக்கி ''கலியுகம் வந்து விட்டது; தருமம் நசித்து விட்டது. ஸங்கரம் வந்து விட்டது'' என்று கூறிச் சிரித்தான். இதைக்கேட்ட தருமபுத்திரன் உடனே அரசு துறந்து தம்பியரோடு துறவு பூண்டு வனத்திற்குக் கிளம்பினான். தருமன் அக்னியைத் தௌமிய முனிவனுக்கு வழங்கி, அத்தினபுரியிலிருந்து கிளம்பும்போது தான் ஏழாமவராகப் புறப்பட்டார். அவனுக்கு

முன்னே பீமன் முதலாய நான்கு தம்பியரும் திரௌபதியும் ஒரு நாயும் புறப்பட்டனர். பட்டணத்து ஜனங்களும், அந்தப்புர ஸ்திரீகளும் நெடுந்தூரம் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். தருமன் அவர்களனைவருக்கும் விடை கொடுத்துத் திரும்பச் சொன்னார். நாக கன்னிகையாகிய உலூபி கங்கையில் பிரவேசித்து நாகர் நகர் புக்காள். சித்திராங்கதை மணலூர்புரத்தை நோக்கிச் சென்றாள்.

பாண்டவர் துறவெய்திய சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

# உத்தரதிசையடைந்த சருக்கம்.

பாண்டவர்கள் திரௌபதியோடு உபவாசமிருந்து கொண்டு கிழக்கு திசையை நோக்கிச் சென்ருர்கள். முதலில் தரும புத்திரனும், அவனுக்குப் பின் பீமசேனனும், அவனுக்குப்பின் அருச்சுனனும் அவனுக்குப்பின் முறையே நகுலசகதேவரும் சென்ருர்கள். அவர்களுக்குப் பின் திரௌபதி சென்ருள். வனம் நோக்கிப் புறப்பட்ட பாண்டவர்களை ஒரு நாய் தொடர்ந்து சென் றது. போகும் பொழுது அருச்சுனன் காண்டீபத்தின் மீதும் இரண்டு தூணீரங்களின் மீதும் வைத்த ஆசையினுல் அவைகளைக் கூடவே எடுத்துக் கொண்டு வந்தான். அப்போது அவனெதிரில் அக்னி தேவன் ஒரு பெரிய புருஷ வடிவத்துடன் வழிமறித்து அருச்சுனனை நோக்கி, “இந்தக் காண்டீபமும் தூணீரமும் என்னுல் உனக்குக் கொடுக்கப்பட்டன. இனி இவற்ருல் ஒரு பிரயோசனமுமில்லை. எனவே, இவற்றைக் கடலில் போகட்டுவிட்டுச் செல். கிருஷ்ணனிடமிருந்த சிறந்தசக்கரமும் அவரைவிட்டுப் போய்விட்டது. ஆனுல் அது மறுபடியும் வேண்டிய காலத்து அவருடைய கையில் வரப்போகிறது. ஆனுல் உன் காண்டீபமோ நான் வருணனிடமிருந்துபெற்று உனக்குக்கொடுத்தேன். இனி, வருணனுக்கே கொடுக்கப்படட்டும்” என்று சொல்லி அவ்விடத் திலேயே மறைந்துவிட்டான். பிறகு பாண்டவர்கள் தென் திசையை நோக்கிச் சென்றனர். சமுத்திரத்தின்வடக்குக்கரையினு லேயே தென்மேற்றிசைக்குச் சென்ருர்கள். அவர்கள் அங்கிருந்து மறுபடியும் திரும்பி மேற்குத்திசை சென்று சமுத்திரத்தினுல் மூழ்கடிக்கப்பட்ட துவாரகையையும் பார்த்தார்கள். பிறகு பாண்ட வர்கள் பூமியைப் பிரதட்சிணம் செய்ய விருப்பங்கொண்டு, மறு படியும் திரும்பி வடதிசையையடைந்தார்கள்.

வடதிசைசென்ற பாண்டவர்கள் இமயமலையைப் பார்த்தார்கள். பிறகு மேருமலையையும் தரிசித்தனர். வேகமாகச்சென்றுகொண்டிருக் கும்போது திரௌபதி (யோகம் தவறியவளாகி) ஞானம் மேலிடப் பூமியில் விழுந்தாள். அவள் விழுந்ததைக் கண்ட பீமசேனன் தருமனைக்காரணம் கேட்க, அவன் “இவளுக்கு அருச்சுனன்மேல்

மிக அதிகமான விசுவாசம் உண்டு. அதனுடைய பயனுன இதை இவள் இப்போது அநுபவிக்கிருள்'' என்ருர். அவர் அவளைத் திரும்பிப் பார்க்காமல், மனத்தையடக்கிக்கொண்டு சென்ருர். பிறகு வித்வானுன சகதேவன் பூமியில் விழுந்தான். பீமன் தருமனைக் காரணம் வினவ, அவன் ''இவன் ஒருவனையும் தனக்குச் சமமான பண்டிதனுக நினைக்கவில்லை. அந்தத் தோஷத்தினுல் விழுந்தான்'' என்ருர். கொஞ்சதூரம் சென்றபின் நகுலன் விழுந்தான். பீமன் காரணம் வினவ, தருமன், ''இவன் அழகில் தனக்குச் சமானமான வன் ஒருவனுமில்லை என்ற அகங்காரத்தால் கீழே விழுந்தான்'' என்ருர். பிறகு அருச்சுனன் தன் சகோதரர்கள் விழுந்த சோகத்தால் வாட்டமுற்றுத்தானும் விழுந்துமரித்தான். பீமசேனன் காரணம் வினவ, தருமன் '' இவன் தான் ஒருவனுகவே பகைவர்களை எதிர்த்து விடுவேன் என்றும், தான்தான் சூரன் என்றும் எண்ணிக் கொண் டிருந்தான் : ஆனுல் அவன் அவ்வாறு செய்யவில்லை: எல்லா வில் லாளிகளையும் அவமதித்தான். எனவே விழுந்தான்'' என்று சொல்லி விட்டுச்சென்ருர், பிறகு பீமசேனன் விழுந்தான். அவன் 'நான் விழுந்ததற்கு என்ன காரணம்?' என்று கேட்க, தருமன் ''நீ பலத் தால் பிறரைமதியாமல் தற்புகழ்ச்சிசெய்துகொண்டாய். அதனுல் பூமியில் விழுந்தாய்'' என்று சொன்னுர். நாய் ஒன்றே தருமனை விடாது பின்சென்றது.

பிறகு இந்திரன் ரதத்தோடு தருமனருகில் வந்து அதனிலேறிக் கொள்ளச் சொன்னுன். அவனைநோக்கித்தருமன் ''என் தம்பியரெல் லாம்இங்கே விழுந்து விட்டார்கள் : அவர்கள் என்னுடன் வர வேண்டும். அவர்களின்றிச் சொர்க்கத்திற்குப்போக எனக்கு விருப்ப மில்லை. திரௌபதியும் எங்களுடன் வரவேண்டும். அதை நீ அங்கீ கரிக்கவேண்டும்'' என்று சொன்னுன். அதற்கு இந்திரன் ''திரௌபதி யுடன் உன் தம்பியர்கள் சொர்க்கம் சென்றிருக்கிருர்கள். நீ சொர்க் கத்தில் அவர்களைப் பார்ப்பாய் : துயரப்படவேண்டாம். அவர்கள் மானிட சரீரத்தைப் போட்டுவிட்டுச் சொர்க்கம் சென்ருர்கள். நீ மட்டும் இந்தச் சரீரத்துடனேயே சொர்க்கம் செல்வாய் : சந்தேக மில்லை'' என்று சொன்னுன். அப்போது தருமன் இந்திரனை நோக்கி, ''இந்த நாயானது எப்போதுமே என்னிடத்தில் பக்தியுள்ளது. இதுவும் என்னுடன் வரவேண்டும்'' என்ருன். அதற்கு இந்திரன், ''சொர்க்கலோகத்தில் நாய்களுக்கு இடமில்லை. ஆகையால் நாயை விட்டுவிடு. இதில் கொடுமை ஒன்றுமில்லை'' என்ருன். அதற்குத் தருமன், ''என்னை நம்பிவந்த நாயை - இந்தப் பக்தனை - விடவே மாட்டேன் : நான் உயிரை விடும்படி நேர்ந்தாலும் இதை விட

முயலவே மாட்டேன். இது எனக்கு நிச்சயமான விரதம்'' என்று சொன்னான். அதற்கு இந்திரன் நாயினால் பார்க்கப்பட்ட எந்த வஸ்துவையும் தொடமாட்டார்களே : ஆகையினால் இந்த நாயை விட்டுவிடு, நாயை விட்டுவிட்டால் சுவர்க்கமடைவாய்'' என்றான். அதற்குத் தருமன் ''இந்திர! சரணமடைந்தவனை ரட்சியாதிருத்தல், ஸ்திரீயைக் கொல்வது, பிராம்மணனுடைய பொருளை அபகரிப்பது, மித்ரனுக்குத்துரோகஞ்செய்வது, இந்த நான்கும் பக்தனைக் கை விடுதற்குச் சமமானவையென்பது என்னுடைய கொள்கை'' என்று சொன்னான். தருமனுடைய அந்தவார்த்தைகளைக்கேட்டுத் தரும சொரூபியான யமன் தோன்றி, தருமனைநோக்கிச்சொல்லத் தொடங்கினான். ''புத்திரனே! அன்று நச்சுப்பொய்கையில் உன்னுடைய தம்பியர்கள் இறந்துகிடந்தபொழுது நீ பரீட்சிக்கப்பட்டாய் : அப்போது நீ உன் இரண்டு தாயார்களும் சமமாகவிருக்க வேண்டுமென்று எண்ணி, பீமன் அருச்சுனன் என்னும் இரண்டு சகோதரர்களையும் விட்டு நகுலன் ஜீவிக்கவேண்டுமென்று விரும்பினாய். இப்போது இந்த நாயைப் பக்தனென்றெண்ணி நீ தேவரதத்தை யேறாது விட்டாய். ஆகையால் சொர்க்கத்தில் உனக்குச் சமமான அரசன் ஒருவனுமில்லை ; எனவே, உனக்கு உன்சரீரத்துடனேயே சொர்க்கலோகம் கிடைக்கட்டும்'' என்று சொல்லிப் போயினான். (**குறிப்பு:**நாயின் வடிவத்தைத் தரித்தவன் யமதேவனாவன்). தருமன் தேவரதத்திலேறிக்கொண்டு தேஜஸினால் ஆகாயத்தையும் பூமியையும் நிரப்பிக்கொண்டு வேகமாக மேலே சென்றான். போகும் போது கின்னரர், சித்தர், வித்தியாதரர் இவர்கள் வாழும் நகரங்களைக்காட்டத் தருமனும் மகிழ்ந்து கண்டான்.

உத்தரதிசையடைந்த சருக்கம் முற்றிற்று.

மகாபிரத்தானிக பருவம் முற்றிற்று.

பதினெட்டாவது

# சொர்க்காரோகண பருவம்.

தருமன் சுவர்க்கம் ஏறுதலைக் கூறும் பருவம் என்பது, சொர்க்கம் - ஸ்வர்க்கம்: ஆரோஹணம் - ஏறுதல் : (ascending) சொர்க்க + ஆரோகணம் = சொர்க்காரோகணம் - தீர்க்கசந்தி பெற்றவடமொழித்தொடர். நான்கனுருபு தொக்கது.

இந்தப்பருவம் நல்லாப்பிள்ளை பாரதத்தின்படி நான்குசருக்கங்களைக் கொண்டது, அவையாவன - (1)சொர்க்கதெரிசனச் சருக்கம், (2)நரகதெரிசனச் சருக்கம்(3)பரமபத தெரிசனச்சருக்கம் (4)முத்தியடைந்த சருக்கம் என்பன. இச்சருக்கங்களிற் கூறப் பட்டுள்ள விஷயம் உரைநடையில் சுருக்கமாகக் கொடுக்கப்படும்.

முதலாவது

# சொர்க்கதெரிசனச் சருக்கம்.

தருமன் சுவர்க்கலோகத்தைக் கண்டதைக்கூறுஞ் சருக்கம் இது. தெரிசனம் - தரிசனம் : முதற்போலியின்பாற்படும்.

இனி, இச்சருக்கத்தின் உரைநடைச்சுருக்கம் பெரும்பாலும் நல்லாப்பிள்ளை பாரதத்தைத் தழுவி வருமாறு:-

சூரியன் சந்திரன் சஞ்சரிக்கும் எல்லைகளையும், ஏனைய கிரகங்களின் முடிபையும், நட்சத்திரங்களின் கதியையும், துருவ மண்டலத்தையும் கண்டுகொண்டு தருமன் தேவர்தம் இருக்கை கண்டான். அங்கு இமையவர்நகரில் நான்குபுறத்திலும் வாயில்கள், அரதனமொளிவிளக்குகள், நூபுரமடமாதராடும் அரங்குகள், மேருவின் சிகரம்போன்ற நான்குகோபுரங்கள், கற்பகச்சோலை, காமதேனு, வேதிகைகள், மகரதோரணங்கள், கொடிகட்டிய மாடங்கள், தெளிமணித் தெற்றிகள்கொண்ட வீதிகள் பலவும் கண்டான்.

அசுவமேதங்கள் செய்தல், அன்னதானம் சொர்ணதானம் முதலியன நிகழ்த்துதல், மண்டபங்கள் நிறுவல், சாலைதோறும் மரங்களைவைத்து வளர்த்தல் முதலியன கண்டான்.

தீர்த்தங்களில் படிந்தோர், கங்கைமுதலியபுனித நதிகளில் தோய்ந்தோர், மூவாசைநீத்தோர், சத்தியம் தவறுதவர், போரிற் பகைவரைப் புறங்கண்டவர், புரந்தவர்கட்கு ஆருயிரளித்தோர். சுற்றம்புரந்தோர், செய்ந்நன்றிமறவாதோர், தீவினைக்கஞ்சினோர், பிறர்தீமைசொல்லாதவர், அழகு கல்வி செல்வத்திலுயர்ந்தவரை வெறுத்துப் பேசாதவர், புறங்கூறுதவர், நடுவு நிலையினின்றோர், தெய்வம் இகழாதவர் முதலாகப் பல்லோர் பலகோடி மண்டபங் களில் திகழக்கண்டான்.

தன்கணவன்மொழிகடவாது கடவுளெனக்கொண்டு, எதிர் பேசாது வழிபாடுகள் என்புருகச்செய்திருந்து அவர் மரணமெய் திடில் தாமும் உடன் எரிபுகும் கற்புடைமகளிர் உறையும் பதியருகி லிருப்பதைக்கண்டான்.

இவ்வாறு பலகோடிப்புதுமைகளைத் தேவர்கள் சுட்டிக்காட்ட தருமன் உளமகிழ்ந்து கண்டுகொண்டே இந்திரனது பேரவையை யடைந்தான். அங்கு நாரதர் வந்து தருமனைக் கண்டு ''மானிட சரீரத்தோடு இவ்வுலகு வந்த வேந்தர் நீரொருத்தவர் தவிர வேறொருவர்காணேன்: ஆகவே அத்தன் நீயானாய்: என்றும் தொலைவிலாப் புகழ் பெற்றாய்'' என்று கொண்டாடினார். அப் பொழுது தருமன் ''அரியபேறெனினும் என்மனத்து ஒரு கருத்து உளது. அது நான் என் தம்பியர் நால்வரையும் திரௌபதியையும் காணும் வரை உமது பாராட்டு தாங்கலன்'': என்றான்: அதனைக் கேட்ட இந்திரன்,, ''அனையவர் நின்னைநேரும் அறிவுடையவரோ? அவர்கள் இழிகதியிலாழ்ந்தார்: அவரொடு நீ சேர்வது எப்படி? அவர்களை நினையாதே'' என்றான். அதற்குத் தருமன் இந்திரனை நோக்கி, ''நீ என் மனத்துன்பம் தவிர்க்கவேண்டில், உரியஎன் தம்பியர் மைந்தர் மனைவி சுற்றம் போரில் வீந்த வேந்தர் ஆகிய அனைவரையும் என் கண்ணுற நோக்கும்படி செய்ய வேண்டும். அவர்களை நோக்காது அரும் பெறலின்பமொன்று என்னுளம் விரும்பாது: அன்னார் எக்கதியடைந்துற்றாலும் அவர்களைக் கண்ட பின் மீண்டுவருவேன். பின் நீ இங்குச் செய்யும் சிறப்புக்களையெல்

லாம் பெறுவேன்: அவரோடொன்றித் தழைப்பதிற்பேறுமுண்டோ? ஆதலால் அவரைக் காணும் ஆசையே என்பாலுளது: ஆகவே என்னை அவர்பால்விடுத்தி'' என்ன, இந்திரன் நகைத்து நாரதன் முதலானோரோடு சில பெரியோர்களையும் அழைத்துத் தருமனுக்குத் தம்பியர் முதலானோர் உறுமிடம் காட்டச் சொன்னான்: அங்ஙனமே தருமனையழைத்துப் போகும்போது ஓரிடத்தில் அவனை அணுகவுய்த் தார்.

அவ்விடத்து ஆடல் மகளிர் மலர்மாரி தூவ வீணை வல்லோர் கீதம்பாட, பொன்னரியாசனத்தில் துரியோதனன் தன் இளைய வரோடு வீற்றிருத்தலைக் கண்டு வியந்தான். வியந்து முனிவரை நோக்கிக் கூறலானான்:- ''காதகன்; துருபதன் யாகத்தில் வந்த மாதின் அகம்வெருவ வேந்தரவையினில் அவமானஞ்செய்த பாதகன்: இவனுக்கு என்னோ பாக்கியம் பலித்தது! பார்த்திபர் பலருங்காண பீமனுக்கு விடமிட்டான்: நீரில் வெங்கழுவிட்டான்; கயிற்றினால் பிணித்தான்: அரக்கு மாளிகையில் தீ வைத்தான்; இவ்வளவு தானோ இவன் செய்த தீமை: வில்லினால் வெல்ல முடியாதென்று வெகுண்டு வஞ்சவல்லினால் அடர்த்தான்: நாடு வௌவினான்: காடு புகுத்தினான்: பெரியோர் சொல் பிழைத்தான். அம்மட்டோ! காளமாமுனியைக் கொண்டு பூதத்தை எம்மேல் ஏவி, பின் அந்தப் பூதத்தைக் கொண்டே மாமுனியை விழுங்க வைத்தான். துரோணாசாரியரையும் பிதாமகன் வீடுமனையும் போரிட வைத்து மாளும்படி செய்த மாபாவி. இவனுக்கு இந்தச் சுவர்க்ககதியென்றால் என்சொல்வது! தருமத்தினியல்பு தேர்ந்த நீவிர் என்னைத் தெளிய வையுங்கள்'' என்றான்.

அதற்கு அம்முனிவர் ''கருமத்திற் கணக்கிலாத பாதகம் செய்தாரேனும், நிருமித்த போரில் மாய்ந்தால் சுவர்க்கம் நேர்தல் திண்ணம்,'' என்றார். உடனே தருமன் ''புல்லிய வாழ்வினாழ்ந்து தீமையே புரிந்த பாவி சுவர்க்கம் பெறுதல் இயற்கையாமென்னில், மிக்க அழகே! நான் அவனிடை ஒரு சேரத் துன்னி வாழேன். என்னைத் திரௌபதியிடத்தும் என் தம்பியரிடத்தும் கொண்டு விடுங்கள்'' என்ன, நாரதன் நகைத்து, ''பாரத வமரினூடுபற்றிய செயல்களெல்லாம் மனதுட்கொள்ளேல்: சீருதவிய துறக்கம் சேர்தும்'' என்ன, தருமன் ''கர்ணனைப் பார்க்க வேண்டுமென்று பற்றுளது'' என்ன, முனிவரர் ''உனது சுற்றம் துணைவர் இவர்கள்

பாலடைந்து கண்டு மீண்டு இந்திரநகர் வரும்படி இந்திரன் சொல்லி எங்களையனுப்பியுள்ளான்: ஆகவே நீ சென்று திரும்பி நற்புரமடைதி'' என்று கூறி, தேவதூதர்கள் சிலரைத் தருமனுக்கு விரைவின் இளைஞர்களைக் காட்டி வரும்படி ஏவினர். தருமனும் தூதர்பின் சார்ந்தான்.

சொர்க்க தெரிசனச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

# நரக தெரிசனச் சருக்கம்

தேவதூதர்முன்செல்லத் தருமன் பின்சென்ருன். பாபிகளின் வாசனைகள் எதிர்வீசின. தலைமயிர்களான பாசிக்கொத்துக்களும் மாமிசமும் உதிரமுமாகிற சேறுள்ளதுமான இடங்களையும், காகம் சிச்சிலி கூகை கழுகுகள் செம்பருந்துகள் இவைபறக்கும்சிறை யொலியிடங்களையும், கிருமிகீடம் உண்ணி கொசுகுகளால் சூழப் பட்டதும், முண்டகம் கைதை காரை முள்புதர்களோடு அட்டை முதலை முதலியவிலங்குப்பரப்புடன் உஷ்ணமானநீர்நிறைந்து அடை வதற்குச்சிறிதும்முடியாததுமான வைதரணிநதியையும்கண்டான். தீயசிந்தையும் செங்கனற்கண்களையும் கொடும்படைக்கையையும் உடைய கிங்கரர் பலர்எழுப்பும் ஆரவாரமும் கேட்டான். கிங்கரர்கள் பற்பலரைத் தண்டிருல் தாக்கலும், செக்கிற்சாய்த்தலும், அம்மி வைத்து அரைத்து வீசலும், அரத்திருற் பிளவுசெய்தலும், மூக்கிலும் கண்ணிலும் இரும்புச்சலாகையைப்பாய்ச்சலும், நாக்கினைத்தீய்த் தலும், குடலைவகிர்தலும், கைகளைத்தறித்தலும், நெருப்பினில் புரட்டித்தள்ளலும் ஆகிய வேதனைகளைக் கண்டான்.

மாதரை இருப்புலக்கைகளில் மாட்டலும், தூண்டிலிற்குத்தி வீக்கலும், சாதக நரகினிற்றள்ளியாழ்த்தலும் கண்டான். இவை களைக்கண்டதருமன் தேவதூதரை இவர்கள்செய்தபாபம் என் கொலோ? என்ன, அவர்கள் அவற்றைத்தெரிவிக்கலாயினர்.

அந்தணர்தம்பொருள்கவர்ந்தோர், மனையிலருந்தீயிட்டோர், உணவில் விஷமிட்டோர், வழியடித்துப்பறித்தோர், சந்ததியைக் கொன்ருேர், இல்லாளைவதைத்தோர், வேதியர்களுயிர்உண்டோர், கொலைபுரிந்தோர் இவர்களாவர்.

தெய்வமிகழ்ந்தோர், குரவர்களைநிந்தித்தோர், செய்ந்நன்றி போற்றுதுமறந்தோர், மன்றில் ஓரமுரைத்தோர், உண்மைபோலப் பொய்வசனம் எடுத்துரைத்தோர், புறங்கூறுதல்புரிந்தோர், வஞ்சனை செய்தோர், அடைந்தோரைக்கைவிட்டோர் இவர்களாவர்.

அக்னிசாட்சியாகவேட்ட மடக்கொடி தனியேபுழுங்கித்துஞ்ச பிறன்மனைதனை விரும்பியுழன்ற கொடும்பாவியிவன் : தாய்பசிக்கக் கண்டிருந்தும் உண்ட கொடும் பாவி யிவன் : இவன் தந்தைதாயர் தமையுதைத்தவன்.

பொய்ச்சாட்சி சொற்றவர், தேவலாயங்களில் பொருள்கவர்ந் தோர், விருந்திருக்கப்புசித்தோர், தங்கள் ஒக்கலுடன்மருவாதோர், கற்றோரையிகழ்ந்துரைக்கும் ஊற்றமிக்கோர், அரசனாணை கடந்தோர், துறந்தின்பந் துய்த்தோர், ஆன்கொன்றோர், வேசியராசையிலழிந் தோர் இவர்களாவர்.

இவ்வாறு பல பாதகத்தினியல்புகளைக்கூறிக்காட்டியபின், அத் தூதர் தருமனுக்குப் பெண்கள்துன்றுகுழுவினைக்காட்டி, அவரவர் செய்த கொடும்பாவந்தோன்றச்சொன்னார்.

கன்னிநிலைகைவிட்டாள், கணவனினும் பிறர்மேற்காதல்கூர்ந் தாள், கைம்மையில்விரதமாறியொருவரைப்புணர்ந்தாள், பிறனொரு வன் வனப்பை நோக்கியுன்னிமனதினிற்கவன்றாள், உரியவன் சொற் கெதிருரைத்தாள் இவர்களாவர்.

மாதுலனைமாமிதனை வைதாள், இளங்கருவழித்தாள், பூப் புடைதினமொழித்துக் கலந்தாள், அன்னம் ஆதுலர்க்கு அளித்தி என்று கணவன்சொல்ல அச்சொற்கடந்து ஒருவர்க்கும் அளித் திடாதாள் இவர்களாவர்,

இவ்வகையாகத் தூதர் எடுத்துவிளக்கிச் சொல்லுதலும், தருமன் கேட்டு இருகையாலும் தன்செவிபுதைத்து மறுமாற்றம் புகலாது இது எந்தஉலகமோ? என்ன, தூதர் இது யமபுரத்தின் தென்பால் என்றார். இதனைக்கேட்ட தருமன், நாம் புகும்நிலம் அணித்தோ தூரமோ என்று வினவ, இந்நிலம் கடந்து சிறிது புடைபெயர்ந்தால் நாம் போகவேண்டியஇடம் எதிருமென்ன, தருமன் தன்னால் வருமாற்றலில்லையெனக்கூறி விரைந்து திரும் பலானான்.

அப்போது, ''இன்னுஞ் சிலபோது இவண் இருப்பாயானால், நாங்கள் யமவாதனையிற்படியோம்''என்ற சொற்கள் தருமன் காதில் விழவே, அவன்''இவை கூறுபவர் யாவர், எனக்குச்

சொல்லும்'' என, உடனே ''கன்னன்யான், வீமன் யானே, அருச்சுனன்யானே, நகுலன்யானே, சகதேவன் யானே, பாஞ் சாலியானே, சுதர் ஐவர் யாமே, திட்டத்துய்மன் யானே, அபிமன் யானே'' எனக்குரல்கள் கேட்டன. இங்ஙன் தனித்தனி வேறுவேறெடுத்துக் கூறவே, தருமன் உருகிப்போய்க்கண்ணீர் பெருக்கி ''இவர் முன்னர்செய்த தீவினையென்றோ'' என்றுமாழ்கி மலர்முகம் வாடி நின்றான். பின்னர் தான்காண்பது மாயையோ கனவோ என்று கூறி, நன்மையாளராகிய இவர்களுக்கு இந்தக் கதியா? நன்மையேசெய்யாத பாவி துரியோதனனுக்கு உயர் கதியா? ''நன்மையுந்தீமைதானும் ஞாலமேற் பொய்த்ததேகொல்', என்று வருந்தித் தலைகவிழ்ந்திருந்தான்.

அதுகண்டு தூதர் 'மேலும் சில இடங்களைக்காணவாரும்' என்று சொல்ல,தருமன் ''என்தம்பியர்மனைவி சுற்றம் இனிய மைந்தர் இவர் களைக்காண இவ்விடம் இந்திரன் அருளினால் வந்தேன்; இனி இவர் களோடேயே இருப்பேன்; நீங்கள் போய் இந்திரனுக்குத்தெரிவியுங் கள்'' என்று தன்முடிவு கூற, சாரணர் ஓடி இந்திரனுக்குத்தெரி வித்தனர். அவன் நகைத்து ஐராவதத்தின்மேலேறிவந்தான். குபேரன் புட்பகவிமானத்தில் வந்தான். வருணன் அக்னி யமன் பதினெண்தேவகணங்கள், அட்டவசுக்கள், ஏகாதசருத்திரர், துவா தசாதித்தர், வசிட்டன் நாரதனாதிமுனிவர்கள் இவர்களனைவரும் தருமனைக்காண வேண்டிவந்தனர். அப்போது சூரியன்தோன்ற இருள் இரிவதுபோலத் தருமன் கண்ட நரகவாதனையெல்லாம் மறைந் தன. தேவர்கள் மாயையை என்சொல்வது! தருமன் அற்புத நீரனானான். அப்போது இந்திரன் தருமனைநோக்கி 'ஐய! நீ இங்கேயே இருப்பேன்'' என்று சொன்னதனாலே அனைவரும் பொறுக்கமுடியாத வராய் இங்கே திரண்டு வந்துள்ளனர். அவர்கள் உன்னை உன் குணவியற்கையாலே நற்கதியிலுய்ப்பவேண்டி வந்துள்ள னர். நீ பேர்பெற்ற அச்சுதானந்த பதம் பெற்றாய்: இது பெறற்கரிய செல்வம். நீ நரகதெரிசனம் செய்தது என்னை யெனில், ''ஒருதனிச் செங்கோலோச்சி யுலகெலாம் புரந்தோ ரேனும், திருநெறிதவறுராகிச்செயம் புகழ்செயலரேனும், அருநரகதனை நோக்காதின்பத்தையடையமாட்டார் : ஆகவேநீ துன்புறுதே'' : என்று சொன்னான்.மேலும் இந்திரன் ''சூட்சுமம் ஒன்றுண்டு அதனைக் கேள் : புண்யங்களும் பாவங்களும் இரண்டு வகைகளாக இருக் கின்றன. அவற்றுள் எவன்முந்திப் புண்யத்தை அனுபவிக்கிறானோ அவன் பிந்தி நரகத்தையடைகிறான் : எவன் முந்தி நரகத்தை

யடைகிருனே அவன் பிந்தி ஸ்வர்க்கத்தையடைகிருன். எவன் அதிகமான பாவத்தைச் செய்தவனே அவன் முதலில் ஸ்வர்க்கத்தை யடைகிருன் : நீ தர்மம் தவருதவன் : அதிகமான புண்ணியகர்மங் களைச்செய்தவன். எனினும், சிறிது பாவமுள்ளவன் : உன்னுல் துரோணர் வியாஜத்தால் வஞ்சிக்கப்பட்டாரன்ருே! ஆகையால் உமக்கு வியாஜத்தினுலேயே நரகம் காண்பிக்கப்பட்டது. நீ கண்ட புணர்ப்பனைத்தும் மாயை.உன் தம்பியரும் திரௌபதியும், கர்ணனும், உன் பக்ஷத்தைச் சார்ந்த அரசர்களும் மைந்தர்களும் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார்கள். நீ அவர்களை அங்கு இனிது காண்குவை'' என்று கூறிமுடித்தான். தருமனும் மகிழ்ந்து மேவியவிமானமூர்ந்து விண்ணவரோடு சென்ருன்.

நரகதெரிசனச் சருக்கம் முற்றிற்று.

மூன்றாவது

# பரமபத தெரிசனச் சருக்கம்.

தருமன் புண்ணியமானதும் மூவுலகங்களையும் பரிசுத்தப் படுத்துகின்றதுமான ஆகாச கங்கையென்னும் தேவநதியில் ஸ்நானஞ்செய்து மானிடத்தன்மை விலகி ஞானமணங்கமழும் பொற்பாக்கையோடு எழுந்தனன். சூரியனைப் போன்ற தேஜஸ் கொண்டு பாசங்கள் நீங்கி அக்னிபோல் ஜ்வலித்தான். வானவர் பூமழை பொழிந்தார். முனிவர்கள் ஆசி மொழிந்தனர்: தருமன் இந்திரனோடும் அவன் நகர் சென்று, பின் ஆயிரம் யோசனை சூழத் துளவு நாறும்படியுள்ளதும், மறையொலியெங்கும் கேட் பதும், சகஸ்ரநாமம் யாண்டும் ஒலிப்பதுமாகிய மாநகர் சென்று கிருஷ்ணனைத் தன் குறைதீரக்கண்டான்.

பச்சைப் புயலினிறத்தானை, பவளத்துவர்வாயிதழானை, நளினவிலஞ்சிப் பொகுட்டானை, உச்சிக்கதிர்மா முடியானை, பீதாம் பரத்தானை, செந்தாமரைக் கண்ணிணையானை, பஞ்சாயுத மேந்தியவனை, திருமாதும் புவிமாதும் இரு புறத்தும் பதம்வருடக் கண்டு முறுவல் விளைப்பானை, மார்பிற் பதுமராகமணியானை, தோள்மீது முப்புரிநூல் திகழ்ந்தானை, உத்தரிகம் கலந்து துளவங் கமழ்வானை, பேராயிரங்களுடையானை, ஆராவமுதா விருப்பானை, அடியார் குலத்தையளிப்பானை, நினைந்தார்க்களிக்குங்கரத்தானை, நாராயணனை அரியாதனத்தின் மேலிருப்பத் தருமன் கண்ணுற்றான்; கண்டு கவலைக் கடல் கடந்தான்; கழற்றாள் பணிந்தான்: மெய் புளகங்கொண்டான்: அப்போது கிருஷ்ணன் தண்தாமரைநேர் விழி புரட்டி நோக்கிச் சாலத்தளர்வகற்றிப் பண்டாதரத்திற் பதின்மடங்கு பரிந்தான். பின்பு இந்திரனிடம் பாங்காகச் செல்ல விடுப்ப, அம் மகவான் தருமனை நோக்கி, "புனிதனே! நுங்குலத்த வரைப் புகல்வேன்; காண்குதி" யென்று செங்கரம் நீட்டியே தெரிவித்தான். முதன்முதலில் அட்டவசுக்களில் ஒன்றாயிணைந்த வீடுமனையும், பின்னர் வேதியர் திலகமாய் அழகுறவிளங்கும் துரோணாசாரியனையும், கந்தருவர் நாயகனென நவிலும்படியுள்ள திருதராட்டிரனையும், அவனோடு காந்தாரியையும் விரல்கொடு சுட்டிக் காட்டினன்.

பின்னர் குந்தியும் மாத்திரியும் இருபுறத்து நின்றிருப்பச் சந்திரன் மரபு தழைக்க வந்துதித்த தந்தை பாண்டுவையும், இரவிதன் சுதனுய கர்ணனையும், துட்டர்குலத்தை வேரறுத்த வாயுவின் மதலை வீமனையும், காலகேயரை வதைத்த காண்டீபக் கரதலக்காளை அருச்சுனனையும், இளைய தம்பியராகிய நகுலசகதேவரையும், கமலையே கனலிற்றேன்றித் துய்யபாரதத்தை முடிக்குமாறு தனக்குத் துணைவியாயிருந்த துருபதன் பாவைதிரௌபதியையும், உபபாண்டவராகிய மைந்தர் ஐவரையும், பூதலம் புகழும் அபிமனையும் காட்டக்கண்டான் தருமன்.

பின்னர் இராவான் கடோற்கசன் ஏனைய மைந்தர்கள் யாதவ குலத்தோர் கிருதவன்மன், சாத்தகி முதலோர் விஞ்சையர் சித்தர் கணத்தில் விளங்குவதையும், கனலருகில் திட்டத்துய்மன் இருப்பதையும் இந்திரன் காட்டத் தருமன் கண்டான்.

இறுதியாக, துருபதன் விராடன் பாண்டியன் கேகயன், மற்றும் போரினில் மடிந்தவர்கள், இயக்கர் கந்தருவராதியர்மன்னு நல்லுலகங்களில் பேரின்பம் மாந்துவதையும் தருமன் கண்டான்.

பின்னர் இந்திரன் தருமனை ஆங்கணேர் மாமணிமண்டபத் திருத்தி, விடைபெற்று இமையவரொடும் மீண்டான், இவ்வாறு, "அச்சுதப்பெயரண்ணல் வாழ் ஆலயத்திடையிற் பொருந்தினன் தருமன்" என்று வைசம்பாயனன் சொல்லிமுடிக்க, கேட்ட ஜெனமேஜெயன் "அடியனுக்கு ஒரு சந்தேகம் உளது: அது யாதெனில் 'இப்பெரும் பேருகிய பரமபதத்தினையடைந்தோர் பல நாட்கள் இங்கே துன்னியிருந்து, பின்பு மீளவும் நிலம் தொடர்குவரோ, அன்றி மன்னித் தங்குவரோ என்பது: அதனைத் தெளிவிக்க வேண்டும்" என்ன வைசம்பாயனன் கூறலுற்றுன்.

பரமபததெரிசனச் சருக்கம் முற்றிற்று.

நான்காவது

# முத்தியடைந்த சருக்கம்.

வீடுமன் எட்டாம் வசுவானான் : துரோணன் பிருஹஸ்பதியினிடம் பிரவேசித்தான் : திருதராட்டிரனும் காந்தாரியும் குபேரனுடைய உலகங்களையடைந்தார்கள். பாண்டு இருபத்தினியருடன் இந்திரனுடைய ஆலயம் சென்றான். கர்ணன் சூரியனிடத்திற் பிரவேசித்தான் : வீமன் மருத்துக்களுடன் ஒன்றானான் : நரன் (அருச்சுனன்) திருமாலுடன் நீங்காதானான் : நகுலசகதேவர் அசுவினிதேவருடலிற் பிரவேசித்தனர். அபிமன் சந்திரனிடம் பிரவேசித்தான். பிரத்யும்நன் ஸனத்குமாரரிடம் பிரவேசித்தான். உருக்குமிணிமுதலாய பாவையர் இலக்குமியோடு ஒன்றானார், வாசுதேவருடைய [கிருஷ்ணனுடைய] மனைவியரான பதினாயிரம் ஸ்திரீகளும் சரசுவதி நதியில்மூழ்கி அதில்சரீரங்களை விட்டுவிட்டுச் சுவர்க்கம் சென்று அப்ஸரஸுகளாக மறுபடியும் வாஸுதேவரிடம் சென்றார்கள், விதுரனும் தருமனும் தருமராஜனாகிய யமனிடம் பிரவேசித்தார்கள் : திட்டத்துய்மனும் சிகண்டியும் அக்னியையடைந்தனர்: துரியோதனன் கலியுடலம் புகுந்தடைந்தான். சகுனி துவாபரத்தினுடற்கலந்தான். திருதராஷ்டிரனுடைய புத்திரர்களெல்லாரும் ராக்ஷஸர்களையடைந்தார்கள். பகதத்தன் அசுரரிற் சேர்ந்தான். துருபதன் விராடன் அவன்சுதர்கள், கடோற்கசன், பூரிசிரவசு, வசுதேவர் மற்றுள்ளோரும் விச்வேதேவர்களிடம் பிரவேசித்தார்கள், பலராமன் ஆதிசேடனானான் : யாதவர்கள் சுரர் குலத்தையடைந்தார்கள்.

இங்ஙனம் வைசம்பாயனன் கூறி ஜெனமேஜயனைத் தெளிவித்தான். பின்னர் "இந்த இதிகாசம் முழுவதையும் உனக்கெடுத்துரைத்தேன். வியாசனருளினால் இப்பாரதக்காதை முழுதும் நான் சொல்லக்கேட்டுணர்ந்தாய். அதனால் நீ பவித்திரனாயினை. இந்தப் பாரதம் ஐந்தாம் ஆரணம் எனப்படும் : இது அரிவையர்க்குக் கற்புவளர்கொழுகொம்பு : நிலத்தோர்க்கெல்லாம் அலைகடலிற்கரையேற்றும் அருந்தோணி : உலகுக்கிருளகற்றும் இரவி: புருடார்த்தம் நான்கையும் காட்டிய கண்ணாடி : தொடர்மிடிபோக்கிருநிதியம் : சுத்தர்களை முத்திமடத்துய்க்கும் ஏணி : அடர்பலபாதக அரவுக்கு

அசனி. அனைத்தினுக்கும் மேலாக "எத்தகைய நூலிடத்தும் இசைத்தபொருள் இதில் உள" இதனை நீ முன்செய்ததவத்தால் முழுதும் கேட்டுணர்ந்து செனனமரணாதிகளைவீட்டி முத்தனுபினாய்" என்று வைசம்பாயனன் ஜெனமேஜெயனுக்குக் கூறிமுடித்தார் —

என்று மகாபாரதத்தினியற்கையெலாம் சூதமாமுனி நைமிசாரணியத்தில் இருடியர்குழுவுக்குச் சொல்லிமுடிக்க அவர்கள் மிகநயந்து வீடடைந்தோரினும் விழைந்தார்.

முத்தியடைந்த சருக்கம் முற்றிற்று.

சொர்க்காரோகண பருவம் முற்றிற்று.

மகாபாரதச் சுருக்கம் முற்றிற்று.

சுபம்.

# அசுவமேத பருவத்தின்

# அபிதானசூசிகையகராதி


அருச்சுனன் — கிருஷ்ணனோடு இந்திரப்பிரத்தம் வரல், பரீ-2; கிருஷ்ணனைத்துதித்தல், 5; அத்தினபுரி வருதல், 7, அனைவரும் துக்கிக்கக் காரணம் வினவல், பரி-37; உலூபி,சித்திராங்கதை, பப்ருவாஹநனன் இவர்களை யாகத்திற்கு அழைத்தல், 42;மேகசந்தியை வென்று அவனையாகத்திற்கு அழைத்தல், 45; துவாரகை சென்று காந்தாரம் அடைதல், 47; சகுனி மகன் பணிய அவனை யாகத்திற்கு அழைத்தல், 49; பாஞ்சாலம் சேர்தல், 50; அத்தினபுரிக்கு அருகில் வருதல், 51; அத்தினபுரி புகுதல், வேள் - 6;

இந்திரன் — பிருஹஸ்பதியை யாகஞ்செய்யாதவாறு தடுத்தல், மருத்-10; மருத்தன் யாகத்தைக் கெடுக்க முயலுதல், 17.

உலூபி — பப்ருவாஹநனை உயிர் விடாதபடி தடுத்தல், பரி-34; ஸஞ்சீவனமணியைப் பப்ருவாஹநனனிடம் கொடுத்தல், 36; முழு விவரம் அருச்சுனனுக்குத் தெரிவித்தல், 38-41; சித்திராங்கதையுடன் தமிழ்நாட்டில் தங்கியிருத்தல், 43.

கிருஷ்ணன் — வாரணத்தின் தளர்வும், அருச்சுனனின் தளர்வும் தீர்த்தவன், மருத்-1: தருமனை அத்தினபுரிசென்று அரசேற்கச் சொல்லுதல்,3 தருமனை அசுவமேதம் செய்யச் சொல்லல், 6; அருச்சுனனோடு இந்திரப்பிரத்தம் வரல், பரீ-2; முன் உணர்த்திய தத்துவங்களை அருச்சுனனுக்கு மீண்டும் உணர்த்தல், 4; துவாரகை செல்ல எண்ணல், 6; அத்தினபுரிவரல், 7; துவாரகைக்குப் புறப்படல், 9; உதங்கனுசிரமத்திற்கு வரல், 10;

**சத்துப்பிரத்தன்** — குருக்ஷேத்திரத்தில் இல்லறம் பூண்ட அந்தணன், நகு-1; அதிதியின் பசி தீர்த்தமை, 8; தன் குடும்பத்தோடு பிரம லோகம் புகுதல், 9,

**சம்வர்த்தனர்** — பிருஹஸ்பதியின் தம்பி; மருத்-6; மருத் தனுக்கு யாகஞ் செய்து கொடுக்க உடன் படல், 14; சிவபெருமான் ஈந்த நிதி கொண்டு செய்துவிப்பேன் எனல், 15; யாகத்தினை நிறைவேற்றிக் கொடுத்தல், 18.

**தருமன்** — அரசவாழ்வு வேண்டேனெனல், மருத்-3; நிதி குறைந்தமைக்குக் காரணங் கூறல், 8; அத்தினபுரியில் செங்கோலோச்சுதல், பரீ-1; கிருஷ்ணனுக்குத் துவாரகை செல்ல விடை யீதல், 8; உபசாரம் பலவுஞ்செய்தல், வேள் - 4; மறையோர் கலசம் தாபிக்க மொழிதல்,8; திரௌபதியோடு யாகபீடத்தில மர்தல், 9; வேள்வி ஏழுநாள் செய்தல், 10; வேள்வியை முற்றுவித்தல்,11; தன்னிருக்கை சேர்தல், 12;

**நகுலம்** —ஒரு காதை சொல்லல்,வேள்,14;பாதிமேனி பொன்னிறம் பெறல், நகு-10; குரோதம் என்னுந் தெய்வதம் சமதக்கினி வைத்த பசும்பாலைச் சாய்த்தல், 12; அதனால் நகுல மாம்படிசாபம் பெறல், 13 ; சாபவிடைக்கு உபாயம் கூறியது, 14;

**நாரதன்** — மருத்தனுக்கு உபாயங் கூறல், மருத் - 11-13.

**பப்ருவாஹனன்** — பிதாவின் கொலைக்கு வருந்துதல், பரி - 34; உயிர்விடத்துணிதல், 35; ஸஞ்சீவன மணியால் அருச்சுனனை உயிர் பெற்றெழச் செய்தல், 36; தாய்மாரோடு அத்தினபுரி வருதல், வேள்-7:

**மருத்தன்** — வேள்வி செய்யப் பிருஹஸ்பதியை வரித் தல், மருத்-10; சிவபெருமானிடம் நிதி

பெற்று யாகம் தொடங்குதல் 16; சம்வர்த்தனரைக் கொண்டு யாகம் நிறைவேற்றிக் கொள்ளல்; 18

**யமன்** (அதிதியாக வந்தவன்) — பொரிமாவின் தானத்தால் சதுமுகனும் மகிழ்ந்தான் என்று சத்துப்பிரத்தனுக்குக் கூறுதல், நகு-9,

**வியாசன்** — தருமனிடம் தோஷமுனக்கில்லையெனல், மருத் - 4; அசுவமேதம் செய்ய அவனைப் பணித்தல், 5; தருமனுக்கு மருத்தன் கதை மூலம் நிதிபெறும் வகை கூறுதல், 9-19; மருத்தன் யாகத்தில் எஞ்சிய நிதியைக் கொண்டு தருமனை அசுவமேதம் செய்யக் கூறுதல், 19; கீரி பேச்சினது தர்ம சூட்சுமம் கூறுதல், நகு-11 மகத்தினும் மேலானது அன்னதானம் எனல், -15.

**வீடுமன்** — கங்கைமகன், மருத், 2, 3; யாகசாலையமைத்துச் சாரணரையேவி அனைவரையும் அழைத்தல், வேள்-1.

———

# அசுவமேத பருவத்தின்

# அரும்பதவகராதி முதலியன

அணைவித்தல் - கட்டுதல், வேள்-11

அத்தம் - கை, பாதி, வேள்-9

அதலம் - நாகலோகம், பரி-43

அம்புயம் - தாமரை, வேள்-12

அரவக்கொடி - உலூபி, பரி-43

அரா - பாம்பு, ஆதிசேடன், பரீ-5

அரியுயர்த்தோன் - வீமன். (அரி-சிங்கம்),வேள்-1

அருச்சுனன் நிறம்கருமை, பரீ-6

அறல் - நீர், பரி-38

அறைதல் - சொல்லுதல், பரி-39 ; வேள்-14

ஆகுலம் - துன்பம், பரி-37

இக்கு - கரும்பு, நகு-9

இகலோர் - பகைவர், மருத்-10

இந்து - சந்திரன், நகு-2

இயம் - வாச்சியம், பரீ-2, வேள்-6

இருபிறப்பாளன் - பிராம்மணன், நகு-3

ஈண்டுதல் - திரளுதல், பரீ-3

உதகம் - நீர், நகு-10

உபாக்கியானம் - கிளைக்கதை, பக்:64

உம்பர்-தேவர், பரீ-3

உம்பல்மாநகர் - அத்திநபுரி, பரீ-7.(உம்பல் - அத்தி,யானை)

உய்தல் - ஈடேறுதல், மருத்-13

உரம் - மார்பு, பரி-36

ஏமம் - பொன், நிதி,மருத்-16

ஐயை - தாய், பரீ-1

ஒழுகுதல் - மழுப்புதல், மருத்-14

ஓங்கல் - மலே, மருத்-15

கடிமுரசம் - அடிக்கப்படும் முரசம், வேள்-5

கந்தம் - கிழங்கு, நகு-2

கந்துகம் - குதிரை, பரீ-9 ; பரி-44; வேள்-6

கபாலம் - மண்டையோடு, பரி-34

கனிட்டர் - தம்பியர், வேள்-10

காண்டவப்பிரத்தம் - இந்திரப்பிரத்தம், பரீ-3 ;

(காண்டவன்-இந்திரன்)

காலுதல் - கக்குதல், வெளிவிடுதல், வேள்-10

குரோதம் - கோபம், நகு-12

குலிசம் - வச்சிரப்படை, மருத்-17

கொக்கு - மாமரம், வேள்-9

கோட்டுதல் - செய்தல், பரி-47

கோடு - தந்தம், மருத்-1

கோல் - அம்பு, பரீ-4

கோறுதல் - கொல்லுதல், மருத்-18

சந்தம் - அழகு, மருத்-10

சம்பு - சிவபெருமான், மருத்-15

சலதி - கடல், வேள்-6

சாரணர் - ஒற்றர், வேள்-1

சானவி - கங்கை, மருத்-2

சிலம்பு - மலே, மருத்-15

சிறுநகை - புன்சிரிப்பு, மருத்-7

சுஞ்சி - இந்திரன், மருத்-17

சூக்குமம் - சூட்சுமம், நுணுக்கம், நகு-1

செவ்வணம் - செவ்வியமுறை, பரீ-6

செறுதல் - கொல்லுதல், பரி-35

சோடசதானம் - பதினாறுவகை தானங்கள், மருத்-19

சோபப்புணரி - துயரக்கடல், பரீ-4

தடிதல் - கொல்லுதல், மருத்-4

தணந்திடல் - விடுதல், பரி-35

தபுதல் – பிழையுறுதல், மருத்-11

தவளம் - வெண்மை, மருத்-1

தவளவாரணம் - ஐராவதம், மருத்-1

தவிசு - ஆசனம், பரீ-3

தளம் - சேனை, பரி-37

திகம்பரன் - ஆடையிலாதவன், நிர்வாணன், மருத் - 12

துவ்ரை - துவாரகை, பரீ-6

தெக்கணை - தட்சிணை, மருத்-7

தென்புலத்தார் - பிதிரர், நகு-13

நகுலம் - கீரிப்பிள்ளை, வேள்-13

நந்தனன் - புத்திரன், மருத்-3

நளிளம் - தாமரை, பரி-41

நிணம் - தசை, பரீ-9

நிறம் - ஒளி, வேள்-10

நுதல் - நெற்றி, பரி 41

படர்தல் - வருதல், வேள்-5

படுதல் - கீழ்ப்படுதல், உண்டாதல், பரி-46

பதாதி - காலாள்,பரீ-2

பரவை - கடல், பரி-43 ; நகு-1

பரிதல் - இரங்குதல், பரீ-4

பவம் - பாவம், மருத்-5

பாரியர் - மனைவியர், பரி-37 (பாரி-மனைவி, நகு-1)

பான்மை - தன்மை, பரி-38

புரவி - குதிரை, வேள்-1

பெட்பு - விருப்பம், மருத்-19

பொன் - பிருஹஸ்பதி, வியாழன், மருத்-10

மகச்சேனி - திரௌபதி, வேள்-9

மகப்பரி - யாகதுதிரை,வேள்-11

மகம் - யாகம், மருத்-6

மடைப்பள்ளி - சமயலறை, வேள்-2

மந்தாகினி - கங்கை, பரி-39

மாமேதம் - அசுவமேதம், மருத்-5

மாயோன் - கிருஷ்ணன், பரீ-5,6

மாறு - பரிசு, விதம், பரி-40

முகமன் - உபசாரவார்த்தை, பரி-40

முப்பழம் - மா, பலா, வாழை, வேள்-3

முராரி - விட்டுணு, பரீ-5

முளரிச்செல்வி - இலக்குமி, வேள்-9 : (முளரி-தாமரை)

முன் - தமையன், மருத்-14, பரி-49

மூலம் - வேர், நகு-2

மை - கருநிறம் பரீ-6

வலாரி - இந்திரன் மருத்-17

வாதராயணன் - வியாசன், பரீ-1

வாய்பூசுதல் - வாயலம்புதல், நகு-8

வாரணம் - யானை கடல், சங்கு, மருத்-1

வாள் - ஒளி, பரி-41

வாளி - அம்பு, பரி-48

வாறு - விதம், காரணம், நகு-10

விப்பிரர் -அந்தணர், வேள்-2

விழைவு - விருப்பம், மருத்-8

வேதி - வேதிகை, யாகமேடை, வேள்-8

சுபம்.

# அசுவமேத பருவத்தின் செய்யுண்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அக்கலசம்பதிறுறுக்கலர் | 57 |
| அக்குருபான்மருத்தெய்தி | 9 |
| அங்கதுகேட்டுதிட்டிரன்மான் | 54 |
| அங்கதைகேட்டெம்போல்வா | 74 |
| அதனுலிவணீயெய்திடவறிந் | 39 |
| அந்தநாட்டினில்விராடன்சேய் | 46 |
| அந்தமனுதனக்கெட்டாம்பேர | 8 |
| அந்தமாமுனியுமில்லோடருண் | 65 |
| அம்மொழிகேட்டிருடிமகிழ்ந் | 14 |
| அரவக்கொடிசிந்தாமணியதலம் | 41 |
| அன்பாற்பெயமலர்வானவராவி | 36 |
| அன்னதுகேட்டகமகிழாநால்வரும் | 73 |
| அன்னவந்துய்த்தவாற்ருல்அத்தனைச் | 34 |
| ஆங்கதைவாங்கியீந்தானதிதி | 71 |
| ஆசிசொற்றவரைப்போற்றியடி | 27 |
| ஆதலாற்றருமன்பாற்போய் | 26 |
| ஆதலினுன்மகத்தினுமேலன்ன | 79 |
| இத்தராதலத்தியாரையுமினிதில் | 47 |
| இம்மகம்போலில்லையெனப்புகழத் | 60 |
| இருந்திடுநாளிலோர்நாளெந்தை | 23 |
| இவ்வணந்துதித்துப்பார்த்தன் இருள் | 26 |
| இறைவன்செய்கையீதெனக்கொளி | 4 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| ஈண்டனுகித்தோற்றியுருக் | 76 |
| ஈந்ததையேந்திமாந்தி | 69 |
| ஈராறுவருடமீன்ருேன்கபாலத் | 33 |
| உரகக்கொடிதனை நோக்கியிங் | 36 |
| எடுத்தவில்லொடுஇரதமும்வலிமையு | 42 |
| என்வினையாலிஃதடுத்ததடிக | 78 |
| என்றுவியாதனுமியம்பிட | 5 |
| என்னமன்னவனியம்பிட | 7 |
| என்னலுமீட்டுந்தந்தை | 70 |
| என்னவைசம்பாயனெடுத்திசைப்ப | 61 |
| ஒட்டகமுஞ்சகடும்வெங் | 15 |
| கங்கைநந்தனன்கதிபுகக் | 3 |
| கடிமுரசமிலக்கம்பேரருந்தி | 52 |
| கந்துகம்புககிரிவிரசப்பதி | 42 |
| கவளவாரணமுறுந்துதிக் | 1 |
| காண்டவப்பிரத்தமேவிக்கனக | 22 |
| கொஞ்சுங்கிளிமொழியாய்குரு | 40 |
| கொடுத்தல்முடியாதபலபொருளுஞ் | 59 |
| சகுனிமைந்தன்முற்பகைகொடு | 45 |
| சானவிச்சுதன்தருமனுக்கு | 2 |
| சிந்தித்திடுமுனமீன்றவன் | 35 |
| செய்தவத்தோரிருடிரப்போர் | 51 |
| தக்கவிம்மகந்தான்செயிற் | 6 |
| தத்துவநிலைகள்மாயோன் | 25 |
| தந்திமாநகரிற்சின்னுள்தங்கிபின் | 22 |
| தப்பின்மறைப்படிசிற்பம்வல்லோர் | 49 |
| தம்முன்வார்த்தைகொண்டருச்சுனன் | 45 |
| தன்பதிதுன்போர்ந்தில்லாடனது | 68 |

**செய்யுள்** **பக்கம்**


| | |
|---|---|
| தாயினும்மினிதாயமூதாதை | 4 |
| நிணங்கமழ்வேலானுய்ப்ப | 28 |
| நின்கருத்தியாஞேர்ந்திடவந் | 77 |
| பலவரைபோறண்டூலம்மேரு | 50 |
| பிரிவினுக்கிரங்கிநீங்காப்பின்வரு | 29 |
| புரசனர்கடனதுவலிபுகழ்ந்து | 55 |
| புரவிநகர்க்கருகாயதெனவந் | 48 |
| புலத்துநெல்லரிசியாக்கிப்பொரிமாவு | 66 |
| புறங்காப்பயாதவர்கள்கனிட்ட | 58 |
| பூவைநேர்பதந்தாழ்ந்தியான்செய் | 67 |
| பெருமுனிசத்துப்பிரத்தப்பெயரிஞ | 64 |
| மந்தாகினிதனைநோக்கிநின் | 37 |
| மருத்துமகந்தொடங்கல்குரு | 16 |
| மன்னனைக்கோறிடக்குலிசமெதிர் | 17 |
| மாதவருடனேவேதவாதரா | 21 |
| மாதவரைநோக்கியரசியற்றும் | 63 |
| மீட்டும்தென்றிசைபரிபுகுமிட | 44 |
| முகமன்சொலியடிதாழ்ந்துற | 38 |
| முற்படுஞ்சிசுபாலன்றன்பாலன் | 43 |
| முற்றிமகமுற்றவர்களுவப்பான் | 18 |
| மைக்கார்களிடித்தார்த்திவ்வுலக | 72 |
| வருசிறுவன்தொழுதைவர்மகிழ்வுற் | 56 |
| வருமாங்கிரசுமைந்தரிருவர் | 10 |
| வழுவாமலவைகளெலாமியற்றி | 13 |
| வெற்றிபெற்றிடும்விழைவிஞற் | 6 |
| வைதிடினும் அடித்திடினும்முனிந் | 12 |


சுபம்.

# ஆசிரமவாச பருவத்தின்
# அபிதான சூசிகையகராதி


**உயுச்சன்** — (யுயுத்ஸன்) — திருதராட்டிரனைக் காடு செல்லவேண்டாவெனல். திரு - 8 ; துறவு பூணுது தருமனுக்கு உதவிபுரிய இருத்தல்,18.

**காந்தாரி** — வீமனது நித்தையைக்கேட்டு வருந்துதல், முறை - 8 ; தருமனைத் தெளிவிக்க முயலுதல், திரு - 10 ; மரவுரியேற்றல், 15 ; வியாசனிடம் கூறியவை புத் - 9 ; நயனபடம்நீக்கிக் காணல், 14 ; சோபந்தீர்ந்து மகிழ்தல், 15.

**கிருபன்** — திருதராட்டிரனைக் காடுசெல்லாவேண்டாவெனல், திரு - 8 ; துறவுபூணுது தருமனுக்கு உதவிபுரியஇருத்தல், 18.

**கிருஷ்ணன்** — கழைகுழல் இசைப்பன்,முறை - 1 ; கருணைவாரிதி, 1; மழைவண்ணன், 1; யாதவர்களோடு துவாரகைசேர்தல், 2.

**குந்தி** — மரவுரியேற்றல், திரு-15 ; கர்ணனைக்காண விரும்புதல், புத் - 10 ; இறந்தவரைக்காணல், 14 ; சோபந்தீர்ந்துமகிழ்தல், 16.

**சஞ்சயன்** — திருதராட்டிரனைக் காடு செல்ல வேண்டாவெனல், திரு - 8 ; தவம்பூணல், 17; சதயூபனுச்சிரமத்தையடைதல், வன - 2; விதுரனது பான்மையும் செய்கையும் தருமனுக்குக் கூறல், 16 ; இறந்தோரைக் காணல், புத் - 14.

**சதயூபன்** திருதராட்டிரன் முதலியோரையுபசரித்தமுனிவன், வன - 2 ; நாரதனைவரவேற்றல், 5 ;

அவரவர் அடையப்போகும் பேற்றினை நாரதன்உணர்ந்தவகையினை வினவியது,10.

**தருமன்** — அவனது ஆட்சிச்சிறப்பு, முறை - 3 ; அவன் அரசுபுரிந்தவகை - 4 ; விருந்தோம்பல், 5 ; திருதராட்டிரனைத்தவஞ்செய்யக்காடு செல்லவேண்டாவெனல், திரு - 6 ; காடு சென்றால் அவனோடு தானும் உதவவருவேனெனல், 7 ; நாற்படைசூழக் காட்டுக்கு வருதல், வன - 12 ; சதயூபனுச்சிரமம் அடைதல், 13 ; தந்தைதாயரைவணங்கி அவர்ஆசிபெறல், 14 ; விதுரனைப்பற்றி வினவல், 15 ; திருதராட்டிரனோடு அளவளாவுதல், 18, - 19 ; விதுரனைக்காண அவன் இவனுடலில் பிரவேசித்து ஒன்றுதல், 21 ; திருதராட்டிரனுச்சிரமத்து ஒருமாதம்தங்கியிருத்தல், 23.

**திருதராட்டிரன்** — இறந்தோர்க்கெல்லாம் சிரார்த்தம் செய்தல், முறை - 6 ; தருமனைக்கொண்டு அரசு செய்வித்தல், 7; வீமனின் நிந்தையைக்கேட்டு வருந்துதல், 8, கானம் செல்ல எண்ணுதல் 10 ; தருமனிடம் தவஞ்செய்யப்போவதாகக் கூறுதல், திரு - 1-3; உண்ணமறுத்தல், 11 ; பின் உண்ணுதல், 14; தருமனுக்கு ராஜநீதியையுபதேசித்தல், 14 ; தவக்கோலம்பூண்டு புறப்படுதல், 15 ; கானஞ்செல்லல், 18 ; கங்கைக்கரையில் இரவுதங்கிக் காலை குருக்ஷேத்திரம் அடைதல், வன -; சதயூபனுச்சிரமம் அடைதல், 2; கடுந்தவஞ்செய்தல், 4 ; தவசியர்க்குத் தருமன்முதலியோரைத்தெரிவித்தல், 17 ; தருமனோடு அளவளாவுதல், 18-19 ; தன் மனவிருப்பத்தைத்தெரிவித்தல், புத்-7-8 ; ஞானக்கண்ணால் இறந்த சுற்றத்தாரைக்காணல், 14 ; சோபம்தீர்ந்து மகிழ்தல், 15.

**நாரதன்** — சதயூபஞச்சிரமம் வருதல், வன 5 - ; இவரது ஆச்சிரமத்துத் தவம்புரிவோர் உயர் கதிபெறுவரெனல், 6 ; அவரவர்எய்தும்பேறு இவையிவையெனவகுத்துக்கூறல், 9; இதனை இந்திரசபையில் ஓர்ந்ததாகக் கூறல், 10.

**பப்ருவாகனன்** — மதுரைசேர்தல், முறை - 2

**விதுரன்** —திருதராட்டிரனைக் காடுசெல்லவேண்டா மெனல், திரு - 8 ; தவம் பூணல், 17; சதயூபஞச்சிரமம் அடைதல், வன - 2; தருமனுடலில் பிரவேசித்து ஒன்றுதல், 21

**வியாசன்** — தருமனை மெலிவுக்குக்காரணம் வினவல் திரு - 12; தருமனுக்குத் தெளிவுண்டாக அறிவுறுத்துதல், 13 ; திருதராட்டிரனிடம் வருதல், புத்-1; அவனிடம் கூறியவை, 2-4; அவனது மனவிருப்பத்தை நிறைவேற்றி வைக்க உதவுவதாகக்கூறல், 6 ; போரில் இறந்தோரையழைக்கஅணை வரும் வருதல், 13 ; திருதராட்டிரனுக்கு ஞானக்கண் அருளல், 14 ; கணவனையிழந்த மகளிர் தத்தம் கணவரைச் சேர அருளல், 17.

**வீமன்** தனக்குத் தேவும் ஆருயிர்த்துணையும் தன் கதையே எனல், முறை-9.

சுபம்.

# ஆசிரமவாச பருவத்தின்
# அரும்பதவகராதி முதலியன

அந்தகன் - குருடன், முறை - 8

அம்பகம் - கண், முறை - 4

அயர்தல் - சோர்தல், வருந்துதல், திரு - 12

அயில் - வேல், வன - 9

அவம் - கேடு, வன - 19

அறைதல் - சொல்லுதல், புத் - 7

அனிலம் - சேனை, படை, வன - 12

ஆக்கினை - ஆணை, தண்டனை, திரு - 1

ஆலம் - விஷம், முறை - 10

இயக்கர் கோன் - குபேரன், வன - 9: (இயக்கர் - யக்ஷர்)

இறைஞ்சுதல் - வணங்குதல், திரு - 18

இனன் - சூரியன், வன - 1

ஈண்டுதல் - கூடுதல், புத் - 12

உசாவுதல் - ஆலோசித்தல், திரு - 11

உஞற்றுதல் - செய்தல், முறை - 9

உன்னுதல் - நினைத்தல், திரு - 1

ஊடு - நடு, வன - 14

ஊர்தி - வாகனம், புத் - 14

எவ்வம் - குறைவு, முறை - 6

ஏல்வை - சமயம், திரு - 12

ஒவ்வு - ஒப்பு, முறை - 6

ஒன்றுதல் - ஏகமாதல், இரண்டறக்கலத்தல், வன - 21

ஒன்னார் - பகைவர் முறை - 3

ஓம்புதல் - பாதுகாத்தல், திரு - 13

கம் - தலை, முறை - 4

கயவர் - பாபிகள், திரு - 1

கலுழ்தல் - வருந்துதல், திரு - 17

கழை - மூங்கில், முறை - 1

கறங்குதல் - காற்றுடிபோல்சுழலுதல், திரு - 2

கனிட்டர் - தம்பியர், முறை - 7; வன 14

காயம் - உடம்பு, வன - 7

கிலேசம் - துயரம், துக்கம், (grief), புத் - 1

குரகதம் - குதிரை, புத் - 16

கோட்டுதல் - செய்தல், வன - 20

சண்டன் - யமன், வன - 21

சந்ததம் - எக்காலத்திலும் இருப்பது, திரு - 10

சமாதி - இறந்ததுபோல அசையாதிருத்தல், வன - 22

சிந்து - கடல், புத் - 13

சிற்றத்தன் - சிறியதந்தை, வன - 15

சுதர் - மைந்தர், திரு - 18

சுவாகதம் - வரவேற்கும் மொழி, வன - 18

செச்சை - சந்தனம், வெட்சிமலர், திரு - 18

செறுதல் - ஒழித்தல், திரு - 2

சோபம் - துயரம், முறை - 7

தண்டம் - முக்கோல், திரு - 17

தணத்தல் - விட்டுநீங்குதல், முறை - 5

தராதலம் - பூமி, திரு - 7

தவிசு - ஆசனம், முறை - 7

தளர்தல் - சோர்தல், கவலைப்படுதல், திரு - 10

திகம்பரன் - [ஆடையின்றி] நிர்வாணமாயிருப்பவன், வன - 16

துணுக்கு - அச்சம், வன -4

துணை - இரண்டு, வன - 5

துய்த்தல் - உண்ணுதல், அநுபவித்தல், வன - 23

துன்னுதல் - செறிதல், புத் - 9

தூண்டுதல் - நினைப்பூட்டுதல், புத் - 3

தூலம் - பாரம், திரு - 1

தெரிவையர் - பெண்டிர், வன - 22

தேவு - தெய்வம், முறை - 9

தையலார் - பெண்கள், வன - 15

நடை - ஒழுக்கம், முறை - 3

நந்தனர் - மைந்தர், புத் - 7

நயனபடம் - கண்ணிற்கட்டும் பட்டை, புத் - 14

நவம் - புதுமை, புத் - 14

நவிறல் - சொல்லுதல், புத் - 8

நாப்பண் - நடு, முறை - 1

நிருபர் - அரசர், புத் -12

நுங்குதல் - உண்ணுதல், வன - 23

படர்தல் - போதல், திரு - 8

பரவை - கடல், வன - 12

பரிதி - சூரியன், புத் - 16

பவம் - பிறவி, வன - 19

பன்னி - பத்நீ, மனைவி, புத் - 2

பிறங்குதல் - விளங்குதல், திரு - 2

புரைதல் - பொருந்துதல், புத் - 17

பூபதி - அரசன், வன - 2

பொன்நகர் - அமராவதி, வன - 10

பொன்றுதல் - இறத்தல், புத் - 8

மடுத்திடல் - நெருங்கிச் சூழ்ந்து வரல், திரு - 14

மணாளர் - கணவர், புத் - 9

மந்தாகினி - கங்கை, புத் - 17

மயக்கு - மயக்கம், திரு - 13, அவிச்சை, வன - 9

மறலி - யமன், திரு - 1

முகிழ்த்தல் - சுருங்குதல், முறை - 9

முச்சகம் - மூன்றுலோகம், புத் - 5

மூவாசை - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகள், திரு - 2

மேவுதல் - விரும்புதல், முறை - 5

வற்கலை - மரவுரி, திரு - 15

வாஞ்சை - விருப்பம், புத் - 3

வாதராயணன் - வியாசன், திரு - 12

வாரிதி - கடல், முறை - 1

வான்நகர் - சுவர்க்கம், வன - 9

வீய்தல் - இறத்தல், திரு - 13

வெய்யவன் - சூரியன், புத் - 10

சுபம்.

# ஆசிரமவாச பருவத்தின்
# சில அருந்தொடர்கள்

மறையாசிரமம் பிறழாமல் வருணாசிரமம் வழுவாமல் புரந்தான்,
— முறை - 3

நாவினுக்கிதமாய் வேட்டநல்லமுது; முறை - 5

துர்க்குணமனிதர் வாழ்க்கை சுகமிலை துன்பம், திரு - 5

தந்தைமொழி மறையென்பர், திரு - 10

துன்னமரில் வீய்தலன்றித் துறவெய்தியிறத்தல் மன்னவருக்கு இயல்பு, திரு - 13

பொன்பயின்மார்பரியிவன் (வியாசன்) என்றுரைக்கும் பான்மை புரையும், புத் - 17

சுபம்.

# ஆசிரமவாச பருவத்தின்
# செய்யுண்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அகம்பரிந்தரசுக்கோராண் | 120 |
| அச்சமயத்துயுச்சநெடு | 107 |
| அச்செருமாண்டவரைவர் | 132 |
| அத்திநுபுரியாள்வேந்த | 117 |
| அந்தகன்மைந்தர்பேரால் | 88 |
| அந்தவாய்மைநாரதனுணர்ந் | 112 |
| அப்பொழுதுதப்பின்மறை | 137 |
| அம்பகமிலாதவேந்தன் அடி | 84 |
| அவைக்கிசைந்தான் அறன்மதலை | 102 |
| அன்பர்செலப்பிரிவாற்ரு | 142 |
| அன்னமொழிதனைக்கேளா | 100 |
| ஆங்கவர்மொழிகேட்டண்ணல் | 98 |
| ஆங்கொருத்திநஞ்சிலரொடு | 112 |
| ஆண்டிஃதுணர்ந்துபல்லருந் | 136 |
| ஆண்டுமாதவர்களனேகர்வந் | 121 |
| ஆதலாவிருத்தல்நன்ரும் | 96 |
| ஆதலாலுலகின்வாழ்க்கை | 93 |
| ஆதலாலெனக்குத்தேவும்ஆருயி | 89 |
| ஆயினுமொன்றுளதறைவன் | 133 |
| ஆரணவியாதனங்கணுகி | 129 |
| இயக்கர்கோனகரெய்துலவ | 114 |
| இவ்வணமருந்திநாளும் | 86 |
| இவரடைந்தாரிவரடையிலெனு | 138 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| ஈதலால்நின்மனத்தின்னமொன் | 132 |
| உன்னுடற்றவத்தினுக்குரனுண் | 130 |
| எங்கள்பாற்றவரேநண்ப | 93 |
| என்றுகூறலுமன்னவன்யாரு | 113 |
| என்னநாரதனிசைத்தவோர்ந் | 115 |
| ஐயநின்றனக்கிஃதரிதன் | 135 |
| கண்டருஞ்சூழலெய்திக்கனிட் | 118 |
| கண்டறன்மதலைவண்டணிகுழ | 125 |
| காயிலைகனியருந்தியேகுந்தி | 111 |
| காலத்தினேதுவோர்ந்து | 89 |
| குந்திதுறந்தமைவாய்மைக்குரிசிலு | 105 |
| குருநிலத்திடைதவம்புரிகைகயர் | 110 |
| கேட்டதைவாட்டமோடுகிளர்த்து | 95 |
| கொற்றவன்றன்மனைவியொடும் | 104 |
| தக்கவர்க்கருஞ்சற்கதியெளிதி | 114 |
| தண்டகமண்டலந்தாங்கிச்சஞ்ச | 106 |
| தந்தைமொழிமறையென்பர்தக்கவர் | 99 |
| தந்தையுடன்மைந்தர்சகோதரர் | 139 |
| தப்பில்செய்வேள்விக்குற்றசன | 82 |
| தருமன்மெய்பொலிவுற்றிஃது | 126 |
| தவந்தரமடவாருடல்பொறுத்தது | 123 |
| தழுவிசஞ்சயனைமற்றத்தைய | 119 |
| தழைபுதன்மேய்தலைத்தவிர்ந்தங் | 81 |
| தனையர்களிறந்தசோபந் | 87 |
| தாதையிவையுரைத்திடலாற் | 101 |
| துதித்திடும்புகழோயிந்தத் | 91 |
| துர்க்குணமனிதர்வாழ்க்கை | 94 |
| துன்றினன்சோபமுந்துறக்க | 134 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| துன்னமரில்வீய்தலின்றித் | 101 |
| தெரித்தலுமுனிவரற்புத | 127 |
| நற்றவச்சதயூபணைப்பெற் | 110 |
| நீங்கினுநீயனை நீங்கலாற்று | 131 |
| பாண்டவர்வாஞ்சையாற் | 131 |
| பாண்டவருந்தாயுமவர் | 141 |
| மறங்கிளர்மறலிபற்றவரு | 92 |
| மறையாசிரமம்பிறழாமல் | 83 |
| மன்னவனெண்ணமே மாதவத் | 134 |
| மாதவரஃதோர்ந்தகமகிழ்ந் | 122 |
| மீட்டுமந்தகனீதுரைத்திடும் | 124 |
| முரசுயர்த்தவனெருதினமுரசீனு | 117 |
| யாவர்க்கும்விடைதந்தேவி | 85 |
| வந்துளோரொடுமுனிசெல | 116 |
| வாட்டமுற்றிதைசுதன்மருகி | 136 |
| விதுரன்சஞ்சயன்வேதியர் | 109 |
| விருத்தனீதுரைப்பமைந்தன் | 97 |

சுபம்.

டாக்டர் ஐயரவர்கள் நூல்நிலைய வெளியீடு

# மகாபாரதச் சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆதி பருவம் | ... | 40.00 |
| 2. | சபா பருவம் | ... | 18.00 |
| 3. | ஆரணிய பருவம் | ... | 40.00 |
| 4. | விராட பருவம் | ... | 20.00 |
| 5. | உத்தியோக பருவம் | ... | 22.00 |
| 6. | பீஷ்ம பருவம் | ... | 15.00 |
| 7. | துரோண பருவம் | ... | 25.00 |
| 8. | கன்ன, சல்லிய, சௌப்திக பருவங்கள் | ... | 25.00 |
| 9. | ஸ்திரீ, சாந்தி, அனுசாசனிக பருவங்கள் | ... | 30.00 |
| 10. | அசுவமேத, ஆசிரமவாச பருவங்கள் | ... | 15.00 |

**குறிப்பு :** மௌசல, மகாபிரத்தானிக, சொர்க்காரோகண பருவங்களின் கதைச் சுருக்கம் நல்லாப்பிள்ளை பாரதத்தை ஒட்டி உரைநடையாகப் பதிப்பாசிரியரால் எழுதப்பட்டுள்ளது.